3 1761 11915312 0

Presented to the

LIBRARIES *of the*

UNIVERSITY OF TORONTO

by

François Gros

கணபதிதுணை.

அருணகிரியந்தாதி.

காப்பு.

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்குங் - கொத்தி
யரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்.

கார்கொண்ட மேனியனுங் கஞ்சனுங்கா ணுப்பெருமை
யார்கொண் டுரைசெய்வா ரம்புவியிற் - சீர்கொண்
டருணகிரி மேவுகின்ற வையாநீ வேண்டிக்
கருணைபுரி யாதிருத்தக் கால். (க)

காலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட விமலனே - மேலாய்
வாசிகனே கண்பலித்து வாழ்விக்குஞ் சோணகிரி
தேசிகனே நீகண்டாய் திக்கு. (உ)

திக்குவே றில்லை திருவுளமே யல்லாம
லிக்குவே ளைக்காய்ந்த வீசனே - மிக்கவிடந்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே நாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற் பேசு. (ஊ)

பேசுமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா - மாசிலா
வண்ண மலையானே யன்னைவயிற் றென்னையுருப்
பண்ணுமலையாகண் பார். (எ)

பாராம னீயிருந்தாற் பார்மீதி லுயேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே - தீராப்
பிறப்பை யகற்றுதற்கும் பிஞ்ஞகனே சூழ்ந்த
விறப்பை யகற்றுதற்கு மின்று. (நு)

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்றுதமி யேனை நெருக்காம - னன்றிதரு
மாரணனே சோணகிரி யத்தனே மாறேடுங்
காரணனே நீநினைந்தக் கால். (சு)

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
யால முகந்த வருணேச ன்- கோலத்தை
நேசமுற்று நீகருதி னீங்காம லின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன். (எ)

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
கரஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள் - வரங்கேட்ட
வென்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவா காணேன்கைம் மாறு. (அ)

மாறுகொண்ட தக்கன் மனோரதமெல் லாந்தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரி வித்தகா - வாறுகொண்ட
செஞ்சடையாய் நின்னைத் தெரிசித்தல் வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து. (கூ)

பரிந்தணிந்த வெண்ணீறும் பாம்புந்தீக் கண்ணு
மரிந்தசிர மாலை யழகுந் - தெரிந்து
நெருக்குமாம் வல்வினையை நீக்குமரு ணேசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து. (கo)

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிட்டுங் காணுத
கோலங் குருவடிவு கொண்டேதா - லுலகந்
தரித்தபிரான் சோணேசன் முன்முனிந்து வேலை
யெரித்தபிரான் வந்தா னினைதென். (கக)

என்ன தவப்பயனே வேழையேற் கென்றறியேன்
முன்னமறை காணுத முக்கண்ணு - நின்னையே
தேடுகைக்குஞ் சோணகிரி தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன். (கஉ)

பெற்றேம் பலனைப் பிறந்ததனு னெஞ்சமே
யற்றே மனத்தி னவரதம் - பற்றுவா
ருள்ளலைக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலைக்கொண் டாட வரம். (கஊ)

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு - முரம்பலிக்குஞ்
சோணை சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணுர் கருத்தென் கருத்து. (கச)

கருத்தி லருணேசன் கஞ்சமலர்த் தாளை
யிருத்தி நினைப்பாரை யென்றும் - வருத்துமோ
நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்தொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு. (கடு)

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரு
மென்புருக்கொள் பெண்ணு யிருக்குமே - யன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம். (கஎ)

பரமனரு ணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனல் கண்டோ - மருமந்த
கூட்டுத் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியிலே
யாட்டுத் தலையாகை யால். (கஏ)

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சாலவெருண் டோடுஞ் சமயத்தி - லோலமென
நின்ரு னுலகுய்ய நேசமடி யாரிடத்துக்
குன்ரு தசோணகிரிக் கோ. (கஅ

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண
னெடி வடவா லுறங்குமே - நாடுங்கா
லக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும். (கசு)

நகுமானை யேத்தருணை நம்பா பிறப்பிற்
புகுவேனைக் காக்கும்.புனிதா - தகுமேனைப்
பெற்றதுணை நீயல்லாற் பேருலகி னுயேனுக்
குற்றதுணை மற்றியாவ தோது. (உ0)

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணசலனை
யோதக் கடனெஞ்சே யோதினுற் - பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டுறலாங் கையேற லாம். (உக)

ஆமென்று நம்பி யனுதினமும் போற்றினு
ஞமென்று பற்றி நலமாகக் - காமித்துச்
சிட்டாகுஞ் சோணகிரி சித்தித்தா னெஞ்சமே
விட்டேகும் வெய்ய வினை. (உஉ)

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
யையரடி யார்பாட்டிற் கல்லாமற் - றுய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தண் வாரியிற் கன்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய். (உங)

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன் - காயம்பார்த்
தோடிநமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட. (உச)

நடக்குங் குலங்கல்வி நம்மவென்பா ராசை
யடக்கும் வகைசற் றறியார் - தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையைக்
கூட்டுமோ சொல்லீர் குலம். (உடு)

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராளுலு நன்றே - வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக்கா ளாவார்
பெரியவர்க்கு மேலான பேர். (உசு)

பேரும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவா
ராரும் பரவு மருணேசன் - சீரை
யுறக்கத் திலுமறக்க வொண்ணு ளாக்கிற்
பிறக்கக் கிடையாது பின். (உஎ)

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
யென்னறியேன் சோணகிரி யீசனே - நின்னருளைக்
கொண்டுளையா நிற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டுளையா தென்றன் கருத்து. (உஅ)

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
யெருத்தில்வருஞ் சோணகிரி யீசா - பருத்த
வலங்கார நால்வேத னேந்தலையு ளொன்றைக்
கலங்காம னீயறுத்தாய் கண்டு. (உக)

கண்டுமிண யென்பார் கருத்துநா வும்வாழி
யண்டர்கோ வேயருணை யண்ணலே - விண்டுவாஞ்
சங்கையெடுத் தோன்கண் சரணத்திற் சாற்றுமுன்றன்
செங்கையிலே வேதன் சிரம். (ஈ0)

சிரமாலை தானணிந்து சேவிலுகந் தேறி
யருமா மறைதேடி மண்ணல் - வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வனரு ணேச
னினிக்கூட்டான் றுன்பத் தெமை. (ஈக)

எமையாளுஞ் சோணகிரி யீசாநின் பாகத்
துமையாளு நீயு முகந்த - சமயத்
திருக்கின்ற கோலத்தை யாண்காண வேண்டி
யிருக்குங் கருணைசெய்வா யென்று. (ஈஉ)

என்றுமரு ணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற் - சென்று
திரிந்தேன் பலமருந்து தின்றுசில கால
மிருந்தே னிராமலிருந் தேன். (கூக)

ஏனமனந் தேட வினையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவா - ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணுர் கரு. (கூச)

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மா - னெருமான்
மழுவேற்குஞ் சோணகிரி மன்னனடி யாரைத்
தொழுவேற்கு மூண்டோ துயர். (கூஞ)

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பி
லயர்கின்ற நாயேற்கு மாமோ - வுயர்தவத்தோ
ராரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேரும் கருத்தொருக்காற் செப்பு. (கூசு)

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
வப்பரிய சோணகிரி யப்பனே - யெப்பொழுதும்
பெண்ணினவிட்டு நீங்காகின் பேரழகு சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண். (கூஎ)

காணு ரிபிரமர் கஞ்சமலர்த் தாளிணையை
நாணுமற் றுன்காண நாடியே - சேணுட
ராயும் புகழருணை யண்ணு மலையானே
மாயுந் தமியேன் மனம். (கூஅ)

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமா - னனத்தனரு
டக்கன் றலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றனைமனமே நம்பு. (கூகூ)

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
யும்பர்கோ னன்றுரைத்த வுண்மையை - நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கேடுபடா தெம்மை
யெடுத்தாலுஞ் சோணேச னென்று. (சஅ)

என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெறுவ தெந்தநா
ளின்று தமியேற் கியம்பிடாய் - நன்றிதரு
மேகனே சோணகிரி யீசனே சேவேறும்
வாகனே சாகா வரம். (சக)

சாகா வரம்பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்ரு ணுடியே - யேகாந்த
நண்ணுமக்க மாலிகொடு நாவார வைந்தெழுத்தை
யெண்ணு மறவா தெடித்து. (சஉ)

எடுத்த பயனை யிருவினையை யெண்ணு
ரடுத்தசிவ பூசை யறியார் - தொடுத்த
நெறியாருஞ் சோணகிரி நித்தரடி யாரை
யறியாத மானிடவ ரச்சு. (சங)

அச்செல்லா மொன்ரு வதிலே யிருவகையா
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே - யிச்சையிலே
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான். (சச)

தானே புலகுடையோன் றன்னசைவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாததாய் - தானே
யனைத்துயிருங் காக்கு மருணேச னென்ரன்
மனத்துயரம் போவதே மாண்டு. (சடு)

மாண்டு பிறந்தழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்தனக்கு வேண்டிலை - லீண்டுலகில்
வீணேசர் சொல்லை விரும்பாம னெஞ்சமே
சோணேச னென்ரெருக்காற் சொல். (சசு)

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகருதி
நில்லரிய பூசையிலே நேசமா - வெல்லரிய
நஞ்சே தரித்தருளு நாதாடித் தாமரையை
நெஞ்சே மறவாம னீ. (சள)

நீயே வரல்வேண்டு கின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற் - ரூயகமா
மண்ணு மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணு மலையகற்றும் போது. (சஅ)

போதுமதி சூடும் புனிதர் புவியின்ற
மாதுபங்க ரண்ணு மலைநாதர் - பாத
மிறுகப் பிடிமனமே யெங்காளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று. (சக)

கூற்றிருக்கு மூன்காலிற் கூறு புறங்காலி
லேற்றிருக்கு மாயவன்க ணெப்பொழுதுஞ் - சாற்றுகையி
லம்புயத்தோன் கம்மிருக்கு மண்ணு மலைநாதன்
செம்புயத்திற் காரிணையாஞ் செப்பு. (ரூ0)

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரோ சோணகிரி
யப்பனே நன்னூ லறிந்தாலு - மிப்புவியிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார் பயனேது
கண்டவெல்லாம் வீணிலே கற்று. (ரூக)

கற்றதனற் ரெல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனற் போமோ பிறவிநோ - யுற்றகட
னஞ்சுகந்து கொண்டருணை நாதாடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி. (ரூஉ)

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ் - செறிவுண்டா
மாதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை
யோதிமட நெஞ்சமே யுன். (ரூரு)

உன்னக் கருத்துண் டொப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவதூல் பலவுண்டு - முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிரு தாள்பணிய
வொட்டாது பாவ முயர்ந்து. (நுச)

உயர்ந்தவர்க்கு மெல்லா முயர்ந்திருக்குங் கோவே
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா - பயந்தமர
ருண்ணப்படா நஞ்சை யுண்டவன்னைச் சாமவரோ
டெண்ணப் படுவா ரிதென். (நுரு)

என்ன சனன மெடுத்தார் புவிமீதி
லன்னமிடா ரின்சொல் லறிகிலார் - முன்னமே
யொன்னூர் புரமெரித்த வண்ணு முலைபாக
வென்னூர் திருவீ திடார். (நுசு)

நீறிடே னந்தெழுத்தை நேசமுடனே கருதிக்
கூறிடே னென்னையுமாட் கொள்வதனுக் - காறணிந்த
வேணியார் சோணகிரி வித்தகனூர் வெற்றிமழுப்
பாணியார்க் கன்றே பரம். (நுள)

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக் கரத்தைப்
பரபரப்ப வெண்ணுத பாவ - நரகப்
பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா
விறப்பிற்கு மீட்டாயினேன். (நுஅ)

ஏனிருந்து நெஞ்சே யிரவுபக லாயுடலைத்
தானுறுப்பாய் சோணகிரித தாணுவா - மானுகந்த
வெந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ்
சிந்தையால் வேறென் செயல். (நுக)

என்செயலாஞ் சோணேச ரிட்டபடி யேயொழிய
நெஞ்சையெலாம் புண்ணு நினைந்தாலும் - விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோநம் பேராசை தான். (சூ0)

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனுய்த்
தானே யெனக்கன்னே தாதையாய்த் - தானென்னேச்
செப்பரிய நின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி
யப்பனே நீயேறு மான். (சுக)

ஆனவர நல்குகதி யாயிரஞ்சென் முடுகிலென்
முனம்பதினுறும் தான்செயினென் - ஞனவங்க
ளஞ்சுடையான் சோணகிரி யண்ணறனே யெண்ணுத
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று. (சுஉ)

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்திடாய் - வென்றிதரு
மம்மான் கரத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல். (சுங)

சும்மா கிடைக்குமோ சோணு சலன்பாத
மம்மால் விரிஞ்ச னறிகிலார் - நம்மா
லிருந்துகதை சொன்னக்கா லென்னுகு நெஞ்சே
பொருந்த நினையாத போது. (சுச)

போதை"ரு பல்லுகுத்துப் புண்டரிகன் றேவியெனு
மாதையன்று மூக்கரிந்த மாவீரன் - மூதை
விருப்பா மதிசூடி வெண்டலேபோ டேந்தி
யிருப்பா னருணேச னின்று. (சுஞ)

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந்துயர
மென்றைக்குப் போமருணே யீசனே - கொன்றைமதி
புன்னே யெருக்கும் புனையுஞ் சடாடவியா
யென்னே நெருக்கு மிவை. (சுசு)

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
யிருக்கும் பலபிணிகோ யெல்லா - முருக்கும்வகை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக்கென் குறை. (சுஎ)

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாஞ் சோணேசற் கென்று - மறைபுகுதேம்
பற்றி நமன்றொடரான் பார்க்குங்கா னெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல். (சுஅ)

வேலைவிட முண்ட விமலரரு ணேசர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை - மேலமரர்
பண்ணினர் பூசையறம் பண்ணிப் பரகதியி
னண்ணினரு ரெல்லா நலம். (சுக)

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேச - ரில்லிற்
பிறந்ததை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்ததை யுங்கேட்டி லேம். (எ0)

ஏமாந்த சோணகிரி யீசரடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்றுதார் - தாமென்றும்
வெஞ்ச மனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார். (எக)

வஞ்சநம னுக்கஞ்சி வாடுந் தமியேனை
யஞ்சலென்ற சோணகிரி யண்ணலே - நெஞ்சறிய
வாண்டகுரு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமரத் திற்கணேத்த மண். (எஉ)

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணே யீசனே - விண்ணப்ப
மொன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
வென்று தருவா யெனக்கு. (எங)

தருவா யெனக்குகந்துன் றன்னிருதா டன்னை
மருவார் புரமெரித்த மன்னு - குருவாகி
மூன்னே வினையகற்றி மூர்த்தி யருணேச
வென்னைப் பொருளா வெடுத்து. (எச)

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும் - விடப்பானம்
பண்ணி யனேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே நீகாணிப் போது. (எடு)

இப்போது பின்னைக் கிலேயென் றிரப்போரை
யெப்போதுந் தள்ளா திரங்கியே - மூப்போதும்
பூசிப்ப தெந்நாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தெந்நா ணினைந்து. (எசு)

நினையேன் றிருக்கோல நின்றுகண்ணீர் சோர
நனையேன் பிறப்பறுக்க நாடேன் - புனையேனின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றி யருணேச
பின்னடிக்கிங் காருதவும் பேர். (எஎ)

பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல் - வாராது
நீது நலமுந் தெரியுங்கா னெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு. (எஅ)

இருத்தினைப் பார்த்த மிருவினையை நீக்கும்
பொருத்துமிடி யிம்மையிலே போக்கு - மருந்தன்றே
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தாணு வருணகிரி
யெம்பிரா னேரஞ் செழுத்து. (எகூ)

அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றுஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே - யஞ்சுதலைக்
கொன்றறுத்து காலா வொருகுறையா நின்றதலை
யின்றறுப்பான் சோணேச னென்று. (அ0)

என்றுகமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ் சோணகிரி நித்தனுர்க் - கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான். (அக)

புத்திதருஞ் சோணேசன் பொன்னடியை வாழ்த்துகர்க்குப்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கு - முத்திதரும்
மாற்றரிய தீவினையை மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப்
போற்றரிய நெஞ்சமே பூண்டு. (அஉ)

பூண்டவகைக் கெல்லாம் பொருந்துமணி முத்திருக்க
வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத் - தீண்டாமற்
பொங்கரவுந் தோலெலும்பும் பூண்டாயி தென்னருணைச்
சங்கரா கங்கா தரா. (அங)

கங்கா தரனே கடையேனை யெந்தாய்
எங்கா தரவா வழைக்குநா - ணங்காதல்
பார்க்குநாள் சோணேச பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்தநாள் செப்பு. (அச)

செப்பரிய வானவத்தைச் சேதமுறு மும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினே - னிப்போ
தருவாகி நின்ற வருணகிரி யானைக்
குருவாக வென்னுளத்தே கொண்டு. (அடு)

கொண்டகெறி சற்றுங் குலையார் மனத்திருக்கு
மண்டர்கோ வேயருணை யண்ணலே - தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்று
மடையா தெழுபிறப்பா மல். (அசு)

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலு
நல்லதென்று நெஞ்சகத்தி னுடேன்யான் - சொல்லரிய
வண்ணு மலைமேவு மண்ணலையு மண்ணலிடத்
துண்ணு முலையாளை யும். (அஎ)

உம்மை நினைந்தே யுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லா - லிம்மையிலே
யெல்லாருங் காண வெளிதோ புவிமீதி
னல்லார் தமக்கு நடம். (அஅ)

நடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லா
ருடலையொறுத் தாலாவ துண்டோ - வடலைதா
லோதினும் பாச மொழியுமோ புற்றிலே
மோதினுற் பாம்புசா மோ. (அக)

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தின்
முகமறே னின்பெருமை தானறியேன் - காகளாய்
தம்மிதன்னுங் காயத்தைத் தானெடுத்துத் தாரணியி
னம்மதென்னுங் கண்டாய் நரி. (கூ0)

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தே
னரிக்கு மரிதா மரனே - தெரிக்குமறை
காணுத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணுத நாயேன் பிறந்து. (கூக)

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக்கொண் டாடே
னறந்தழைக்குஞ் சோணகிரி யாரோ - பிறந்திறவா
வும்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் முன். (கூஉ)

தானவர்கண் மூப்புரத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காப் சோணகிரி வள்ளலே - யேனம்
விருப்பா மலர்சூடி வேண்டினு னீண்ட
நெருப்பா விருந்ததென்ன நீர். (கூங)

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
யாரா வமுதேயென் னையனே - பாராளுந்
தாதையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின். (கூச)

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
வன்னந் தருமருணை யையனே - யென்னை
யெடுப்பதற்குங் காப்பதற்கு மென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீனே கெடீர். (கூடு)

நீர்கொண் ட வேணி ந திமலாவென் னீள்பிறப்பை
யார்தொ லைப்பார் நீய ல்லா தாயுங்காற் - பார்மீதிற்
பொய்யா வரங்கொடு க்கும் புண்ணியனே சோணகிரி
யையா கடை நுணுல யா.

(கசு)

கருணை ய ாகின் கழல்ட ணிய மாட்டே
னருணை ச லாவென் றழ ழையேன் - மரணந்த
காலத்தி லாதுங் கருத் தறியேன் கண்ணியுன்றன்
கோலத்தி ல் வையேன் ம றித்து.

(கஎ)

குறியே னி ருபதத்தைக் கூறும் வகைசற்
றறியே னதி ந்தவர்க்கொ ன் றுற்றேன் - சிறியேனின்
றுயுமறை தி டாய் வண் ணை மலையானே
மாயும்ருக தையா மனம்.

(கஅ)

ஐயா மரப்ப ாவை யாடுவத ஞ் சுத்திரிதன்
கைவாசி யே ாபாவை கற்ற தோ - வெய்யவினை
யென்னீச்சை யோவருணை யீசா படைத்தளிக்கு
மூன்னிச்சை ன்றே வுளை.

(கக)

உரைக்கு மடி ா ருயிர்ப்பயி ர்வா டாமற்
றரைக்குளா ந்தவெள்ளந் தன்னை - நிரைக்குமே
யெண்ணூர் புர மெரித்த வெங் தை யருணகிரிக்
கண்ணு ரமுத மெனுங் கார்.

(கஂ)

மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே
செய்து வருகிறேனென்று தன் குருவி
ண்டு சஞ்சரிக்கும்போது தன் குருவுரு
அண்ணுமலையார் அநுக்கிரகப்படி தி
கையினிடத்து மகிமையுடனிருந்த க
குகைநமசிவாயதேவர் அவ்வண்ணம
தினுலே அவரைத் தோத்திரஞ்செய்த
றுப்பெற்றது.

முற்றிற்

தி.

சிவஸ்தல
னனுமதிபெ
வாக வெழு
ருவண்ணுமலை
ன்னடசரமூர்த்
லையார் வரப்
அருணகிரியந்

று.

ாத்திரை
ற்றுக்கொ
ந்தருளிய
லயிலே கு
த்தியாகிய
பிரசாதத்
தாதி முற்

உ

கணபதிதுணை.

திருக்கருவைக்
கலித்துறையந்தாதி
மூலபாடம்.

அதிவீரராமபாண்டியர்
அருளிச்செய்தது.

இஃது

சென்னபட்டணம்:

ஹ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம்என்னும்

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

1884.

கணபதிதுணை.

திருக்கருவைக்
கலித்துறையந்தாதி.

காப்பு.

தீட்டும் பனுவற் கருவையந் தாதித் தெரியலெந்தை
சூட்டும் படிக்குத் துணைசெய்த வாசுடர் சூழ்பிறங்க
லேட்டின் புறத்து முனிமொழி பாரத மென்றுநிற்கக்
கோட்டுந் தவளப் பிறைக்கோட்டு மும்மத குஞ்சரமே.

சீரணி கொன்றைச் சடைக்காடு முக்கண்ணுஞ் செம்முகமுங்
காரணி கண்டமு நான்கு தின் டோளுங் கருவைப்பிரான்
வாரணி மென்முலை யொப்பனை பாகமும் வண்கமலத் [வே.
தேரணி செம்பொற் றுணைத்தாளு மென்னெஞ் சிடங்கொண்ட

இடங்கொண்ட சென்னி நிலனுறத் தேவ ரிறைஞ்சமன்றி
னடங்கொண்டிடப்பண்டு நான்செய்த தெத்தவ நாண்மலர்சேர்
தடங்கொண்ட வாவிப் புடைசூழ் கருவைத் தனிமுதலே
வடங்கொண்ட பூண்முலை யொப்பனை கேள்வவிவ் வையகத்தே.

வையந் தொறுங்கலிக் கோடையில் வாடி வருந்துமுயி
ருய்யும் படிக்கோ ருறுதிகண் டேனுமை பாகம்வைத்த
மெய்யன் கருவைப் பிரான்செழு மாணிக்க வெற்பனைய
செய்யன் கனைகழற் றுமராப் போதின் திருநிழலே. (ஈ)

திருவுங் குலனு மனையுஞ் சிறாருஞ் சிறந்தசெவ்வி
யுருவுந் தவமுங் கடிதெய்த லாமுமை மாதுகொங்கை
மருவும் புயத்தர் களாநிழ லார்செக்கர் வானிறம்
பொருவுஞ்சடிலர் திருத்தொண்டின்மேலன்புபூண்டவர்க்கே. ()

பூண்ட வராவும் புலித்தோ லுடையும் புவனமுட்ட
நீண்டவ ராலு மறியாச் சரணமு நீண்முடியுந்
தாண்டவ ராயர் முகலிங்க நாதர் தமியனுக்கோ
ராண்டவ ராகிவந் தேதிருக் காட்சி யளித்தனரே. (ரு)

அளியு மளிதரு மானந்த மாகி யளவிறந்த
களியு மிரண்டற்ற காட்சியுங் காட்டிக் கருணைசெய்தார்
வெளியும் பவனமுந் தீயுந்தண் ணீரும் வியனிலமு
மொளியொன் றியவரு வக்கள வீச ருளத்திருந்தே. (சு)

உள்ளக் கமலத் தினிற்கள வீசனொன் னெப்பனேயோ
டெள்ளத் தனேயு மகலாக் குடிகொண் டிருளறுத்துக்
கள்ளக் கலரொடுங் கூடா தெளியனைக் காத்தளித்த
வள்ளற் குணத்தின் றகுதியை யேதென்று வாழ்த்துவனே. ()

வாழ்த்திட நாவுண்டு பாவிக்க நீயுண்டு மண்ணிலுறத்
தாழ்த்திடச் சென்னியு முண்டுகண் டாய்தண் களவின்மல
ரூழ்த்திடீழ லுறைவா ரடியுண் டுனை நிரயம்
வீழ்த்திடு வாருமுண் டோநெஞ்ச மேயென் மெலிவதுவே. (அ)

மெலிவிக்கு நோய்க்கு மடவா ரிழைத்த வினைக்குமுயிர்
நலிவிக்குங் கால படர்க்குமஞ் சேன்றமிழ் நாவலரான்
மலிவிக்குங் கீர்த்திக் களவீசர் கூன்பிறை வாணிலவாற்
பொலிவிக்குஞ் செஞ்சடை யார்தடுத் தாளப் புகுந்தபின்னே.

புகுவது மூப்பு வன்பேர் டிளமையும் போயதினி
மிகுவது நோயுந் துயருமென் மூலடன் மேவலரூர்
நகுவதன் முன்னெரித் தோர்கள வீசனை நாம்பணியத்
தகுவது காணெஞ்ச மேயிது போலுஞ் சதுரில்லையே. (கo)

சதுரா ணனனுந் திருநெடு மாலுஞ் சதமகனுங்
கதிரா யிரம்விரிக் குஞ்சட ரோனுங் கலாதரனு
மதிரார் கலிக்கிறை யுந்தொழு தேத்த வருள்புரிந்தோன்
முதிரா முகிழ்மூலை யொப்பனே சேள்வன் முகலிங்கனே. (கக)

மூகலிங்கன் றென்கரு வைக்கள வீசன் முதல்வனன்பர்
புகலிங் குலிகச் சடிலப் பிரான்புழைக் கையுரிநல்
லகலிங்க மாக வுடுத்தோ னடியர்க் கடிமைசெய்யா
திகலிங் கெவனெஞ்ச மேமுத்தி சார்த லெளிதல்லவே. (கஉ)

அல்லும் பகலு மொழியாது தம்புக ழாதரித்துச்
சொல்லும் படிக்குக் கவிஈ வளித்தெனைத் தொண்டுகொண்
வல்லுங் குழைமூலை யொப்பனை பாகர் வரிசிலையாக [டார்
கல்லுங் குழைத்த புயத்தர் களாகிழற் கண்ணுதலே. (கஙி)

கண்கொண்டு பார்த்த விடந்தோறுந் தோன்றுங் கருவைப்
பிரான், விண்கொண்ட திங்கள் குடிகொண்ட வேணியும் வெ
ண்ணகையும், பண்கொண்ட வேதப் பவளச் செவ் வாயும்
பணைப்புயமும், தண்கொண்ட கொன்றைத் திருமார்புந் தாம
ரைத் தாள்களுமே. (கச)

தாளா லுதைத்தது கூற்றுவன் மார்பத் தடக்கையுகிர்
வாளா லறுத்தது நான்முகன் சென்னி மணிவலயத்
தோளால் வளைத்தது மாமேரு நெற்றிச் சுடர்விழியால்
வேளாடல் செற்ற கருவா புரியுறை விண்ணவனே. (கரு)

விண்ணிடு வில்லும்புனன்மேற் குமிழியுமின்னுமென்ன
மண்ணிடைத் தோன்றியழியுமிக் காயத்தை மாய்விலதென்
றெண்ணிடு மெண்ணந் தவிர்த்தழி யாமுத்தி யேறுதற்குப்
பண்ணிடு மேனிகண் டீர்கள வீசர்பொற் பாதங்களே. (கசு)

பாதார விந்தமுஞ் செஞ்சடைக் காடும் பஞ்சாயுதனும்
வேதாவு மின்னமுங் காண்பரி யானெனென் மெய்த்தவத்தா
னுதாவென் றேத்திக் கருவைக் களாவி னறுநிழற்கிழ்க்
காதார் வரிவிழி யொப்பனை யாளொடுங் கண்டனனே. (களி)

கண்டேன் கருவைப் பெருமான் திருவடி கண்டுபற்றிக்
கொண்டேன் பரசம யங்குறு கேன்புல்லர் கூட்டநண்ணிப்
பண்டே புரிந்த பழவினை யாவையும் பற்றறுத்துத்
தொண்டே புரிவதல் லாற்பின்னை வேறு தொழிலில்லையே. ()

இல்லாமை துன்ப மிரவுகல் லாமை யிழிவுமிடி
பொல்லாத நோய்முத லானவெல் லாமன்று போர்விசயன்
வில்லா லடியுண்ட பால்வண்ண நாதர் வியன்புகழைச்
சொல்லா தவனையன் றேபிறப் பேழுந் துயர்செய்யுமே. (கக)

செய்யன் கரிய மிடற்றன்வெண் ணீற்றன் செம்பாதிப்பச்சை
மெய்யன் செழும்பொற் சடாடவி யான்வெவ் வனலெடுத்த
கையன் கருவைப் பெருமா னிருவினை கட்டறுக்கு
மையன் சரணஞ் சரணமென் றேது மருமறையே. (உ0)

அருமறை யோதியென் பல்வேள்வி மூற்றியென் ஞதரவா
னருமதை கங்கை முதற்புனன் மூழ்கியென் ஞண்மலர்சேர்
மருமலி சோலைக் கருவைப்பி ரான்றிரு மந்திரத்தை
யொருமுறை யோதித் துறக்கம்பு காத வுணர்விலரோ. (உக)

உணங்குந் தவத்தர் கருத்திலும் வேதத்தி னுச்சியிலு
மணங்கொண்ட சோலைக் கயிலாய வெற்பிலு மாமறையோர்
கணங்கொண்டு போற்றிசெய் பொன்னம்பலத்துங்கருவையி
லு, மிணங்கும் பொருளென் னிதயார விந்தத் திருக்கின்றதே.

இருக்கும் புராணமு மாகம கோடியு மென்றுலகிற்
பெருக்குங் கொழுகொம்பு மீதேறி மூத்திப் பிரசமலர்
குருக்கு மெய்ஞ்ஞான மணம் வீசுந்தேனுண்டு கொள்ளவண்டு
செருக்குங் களவி னிழற்கீழ் மூளைத்த சிவக்கொழுந்தே. (உங)

கொழுந்தும்பை வேணி முடிக்கள வீச குறித்து நெஞ்சிற்
றெழுந்தொண் டருக்கரு ளுங்கருவேச தொனிவிளக்குஞ்
செழுந்தொண்டை வாய்ச்சியர்காமானுராகத்திற்சிந்தையழி
ந், தழுந்தும் பொழுதிலும் யான்மற வேனுன் னடியிணையே. ()

அடியே னினைவுக் கடங்கா வறிவை யளித்துநெஞ்சிற்
குடியே புகுந்தென்னை யாளுகின் றான்கொண்டன்மேனியனும்
படியேழுந் தேடியுங் காணு முழுமுதற் பானிறவெண்
பொடியேறு மேனியன் றென்கரு வாபுரிப் புண்ணியனே.(உடு)

புண்ணிய னெப்பனே பாகன் புராதனன் பூங்கடுக்கைக்
கண்ணிய னெங்கள் கருவைப்பி ரான்கள வீசனன்பர்க்
கண்ணியன் றன்னடி யாருடன் கூட வதிவொன்றிலாத்
தண்ணிய வென்னைத் தடுத்தாட் கொளகின்ற தற்பரனே. (உசு)

பரகதிக் கேவைப்பை யோவறி யேன்பெரும் பாதகர்போ
நரகதிக் கேவைப்பை யோவறி யேனெங்கு நானுறினுஞ்
சரகதிக் கேசெல் விடையாய் களாவுறை சங்கரனே
வரகதிக் கேற்றநின் பாதார விந்தம் வழுத்துவனே. (உஎ)

வழுத்துதல் போற்றல் வணங்கல் குழைதன் மகிழ்தனெஞ்சிற்
பழுத்தவன் புற்றுப் பலகா லுருகுதல் பாவனைபோய்
மூழுத்தவின் பக்கடன் மூழ்கிக் களித்தன் முகலிங்கன்ற
ளழுத்தவென் சென்னி கொடுத்தபின் பெற்ற தசியமே. (உஅ)

பெற்றே னெருவர் பெறுப்பெரும் பேறு பிறவித்துன்ப
மற்றே னினிமற் றடைவதுண் டோவரண் மூன்றெரியச்
சற்றே முறுவல்செய் தோர்கள வீசர்பொற் றுளிணைக்குக்
குற்றேவல் செய்யத் தமியே னிதயங் கொடுத்தவன்றே. (உக)

கொடுங்கால பாசத்தை வீசிவெங் கூற்றுக் கொதித்துமுனிந்
தடுங்கா லமுநின் னடிமற வேனலை யாழிவெம்பப்
படுங்கால கூட விடமுண்டு தேவர் பயங்கெடுத்து
விடுங்கால கால கருவா புரியுறை வேதியனே. (ஙo)

வேதிய னேயென்றுஞ் சீதர னேயென்று மேனியுமைப்
பாதிய னேயென்றும் பால்வண்ண னேயென்றும் பானிறவெண்
பூதிய னேயென்று நாத்தழும் பேறப் புகழ்ந்துபுகழ்ந்
தோதிய நேரமெல் லாந்தமி யேனெஞ் சுருகியதே. (ஙக)

உருவா யுருவி னெளியா யொளியி னெளிகடந்த
வருவா யனைத்துயி ராகிநின் றுய்குண் டகமூடுத்த
கருவா புரேச விறுதியிற் கூற்றுவன் கைப்படநாள்
வெருவா தழைத்திடி வேன்வரல் வேண்டும் விடுவிக்கவே. (ஙஉ)

விடத்தக்க திந்த விடக்குட ஞனெனல் வேர்களோந்து
சுடத்தக்க தென்று மொழியா வெகுளி துருசகற்றி
யடத்தக் கதுமனச் சங்கற்ப நெஞ்சத் தகவயலி
னடத்தக் கதுகள வீசர்பொற் ருளென்னு நாற்றினையே. (கூ)

நாற்றடங் தோடிசை யெட்டிலுந் தட்ட நரகளிக்குங்
கூற்றடுங் தாளெழு பாதலம் போய்ப்புகக் கொன்றைநரு
வூற்றெழும் பொன்முடி யண்ட கடாக மொளிக்கநின்று
பாற்திரு மேனிக் களவீச ராடும் பவுரிகொண்டே. (கூ)

கொண்டாளப் பெற்றவர் தம்மடி யார்கள் குறைசெயினுங்
தண்டா மூனிவுற் றிகழ்தல்செய் யார்தமி யேன்பிழைநூ
றுண்டா யினும்பொறுத் தாளுங் தகைமை யுனதுகடன்
கண்டார் நகைப்பர் களவீச நீயென்னைக் கைவிடினே. (கூ)

கைவிட்டுக் கால்விட்டுக் கண்கள் பஞ்சிட்டுக் கலங்கியுயிர்
மெய்விட்டுப் போம்பொழு தஞ்சேலஞ்சே லென்று வேலைவென்
மைவிட் டெறிக்குங்கண் ணெப்பனை யோடு மழவிடைமே [று
னெய்விட்ட சூலப் படையண்ண லேவந்து நின்றுகொள்ளே. ()

நின்ருள் வழுத்த நினைவுதந் துள்ளி னிலேதிறம்பிக்
குன்ரு வகையென்னை யாட்கொண்ட தாற்கொடி யேன்புரித
னன்ருகக் கொள்வதல் லாற்பிழை நாடலை நாடினருக்
கொன்ருய்ப் பலவுரு வாங்கரு வாபுரி யுத்தமனே. (கூ)

உத்திப் புயங்க முடிக்கள வீச வுனதுபத
பத்திக் குரிய பழவடி யார்தம்மைப் பாமகளுஞ்
சுத்தக் கமலையு நல்லிந் திராணியுந் தோய்வதற்குச்
சித்தத்து மால்கொண்டு சேர்விடந் தேடியுஞ் செல்குவரே. ()

செல்வச் செருக்கர் தலைவாயி லேறுந் திரிந்துதிரிந்
தல்லற் றுயர்கொண் டிளைத்துவிட் டேனடி யேனினியப்
புல்லர்க் களிமை புகலாமற் காத்தருள் பூத்தடமு
மல்லற் பழனமுஞ் சூழ்கரு வாபுரி வானவனே. (கூ)

வானவ ரிந்திர னிந்திரை கேள்வன் மறைவிரிஞ்சன்
ரூனவ ரென்று புகல்வதுண் டோசம ரிற்சிலையாற்
கானவ னெற்றுங் களவீச ரன்று கடல்விடத்தைப்
போனக மாக வமுதுசெய் யாவிடிற் பூதலத்தே. (சஅ)

பூத கணத்தொடு வேதாவுந் தாளம் புடைக்கவொரு
பாத மெடுத்துப் பவுரிகொள் வோய்பண்டை யாகமத்தும்
வேத சிரத்தும் பொலிக ளவீச மெலியவரு
மேத மகற்றுவ துன்கட னென்கட னேத்துவதே. (சக)

ஏத்திய மூவர் தமிழ்மா லிசாத்து மிணையடிக்கென்
னுத்தரும் புன்சொற்றொ டைபுனைவாய் செம்பொ னுட்டிலங்து
காத்தரு ணாண்மலர் சூடும் புரிசடைக் காட்டெருக்கம்
பூத்தரு மாலை புனைகள வீச புராந்தகனே. (சஉ)

புரந்தரன் பண்டைப் பழிதீரப் பொன்னிதழ்ப் பூங்கமல
நிரந்தரஞ் சாத்த வருள்புரிந் தோர்நில வோடணிந்த
கரந்தையஞ் செஞ்சடைப் பால்வண்ணநா தர் கருணைபொங்கி
வரந்தரு மோவறி யேனளி யேனிட்ட மாமலர்க்கே. (சஙு)

மாமல ரன்றிக் குருதிக்கண் சாத்திய மாயனுக்குன்
றீமல ராழிப் படையளித் தாய்செழுந் தேறல்வளப்
பூமலர் கொண்டுன் திருமேனி முற்றும் பொதிந்தவந்தக்
காமனை யேனெரித் தாய்கரு வாபுரிக் காரணனே. (சச)

காரண னேதென் கருவா புரியிற் களாகிழற்கீழ்ப்
பூரண னேயென்பு பூண்டவ னேபொற் பொருப்புவில்லா
நாரண னேகணை யாப்புர மூன்றெய்த நாயகனே
யாரண னேயப்ப னேயடி யேனுன் னடைக்கலமே. (சசு)

அடைக்கில னாந்து புலனைபு நெஞ்சத் தழுக்ககலத்
துடைக்கிலர் தொண்டு புரியத் துணிகிலர் தூயபத்தி
படைக்கிலர் நின்புகழ் பாடிலர் கால படர்பிடித்துப்
புடைக்கினென் செய்திடு வார்கள வீச பொறியிலரே. (சஎ)

பொறியும் புலனுங் கலங்கியைம் மேலிட்டுப் புத்திகெட்டு
மறியும் பொழுதிலும் யான்மற வேன்மறி யோடுமழுச்
செறியுங் கராம்புய முஞ்செய்ய வாயுந் திலகதுதற்
குறியுங் கருவைப் பெருமான் திருமணக் கோலமுமே. (சஎ)

கோல மெடுத்து நடிப்பவர் போலப்பொய்க் கூடுபல
கால மெடுத்துக் கழித்துவிட் டேன்கருப் புச்சிலேமே
னீல மெடுத்துப் பொரவந்த காமனை நீறுசெய்யப்
பால மெடுத்த விழியழ லேவிய பால்வண்ணனே. (சஅ)

பால்வண்ணஞ் சொல்லென்றும் பங்கே ருகவண்ணம் பாத
மென்றுஞ், செல்வண்ணங் கண்ணென்று மிவ்வண்ணமாதர் இ
றம்புகழ்ந்து, நூல்வண்ண துண்ணிடை யொப்பனே பாகநொந்
தேனினியுன், கால்வண்ண நான்மலர்க் கோரளி யாகக் கருத்த
கருத்துறு மாயை யிருளுக்குத் தீபங் கழிபிறவிப் [ளியே.
பெருத்தெழு நோவுக் கமிர்தசஞ் சீவினி பேதித்துள்ளம்
வருத்திடு துன்பத் திரைவா ரிதிக்கு வடவைமன்றத்
தருத்தியு டுங் கருவைப் பிரான்றிரு வஞ்செழுத்தே. (ரு0)

அஞ்செழுத் தோதித் திருநீ றணிந்துன் னடிக்கமல
நெஞ்சழுத் தித்தொண்டுசெய்வதல் லாற்றண் ணிலாமதியின்
பிஞ்சழுத் துஞ்சடை யாரிய நாத பிறிதுசெப்யேன்
பஞ்சழுத் தும்பதத் தாரின்ப வாரி படியினுமே. (ருக)

படியிற் பிறந்து விழுந்திட்ட யாக்கை பலகுவிந்தால்
வடிவிற் பெரிய வடவரை போலுமற் றிப்பிறப்பி
லடியிற் கெளிய களவீச நின்னரு ளாக்கம்பெற்றேன்
முடிவிற் பழவடி யேன்பிற வாவண்ண முத்திகல்கே. (ருஉ)

நல்கா தொழியினு நல்கினு நின்னடி நாயடியேன்
பல்காலு மேத்திப் பணிதல்செய் வேனென் பருவரல்கண்
டொல்கா தளித்துப் புரந்திடல் வேண்டு முயர்விசும்பிற்
செல்காறிலைக்கும் பொழிற்கரு வாபுரித் தேசிகனே. (ருங)

தேசிக னுகக் கனவில்வந் தாண்டருள் செய்தவட
காசிய னெங்கள் கருவைப் பிரான்கவைக் கோட்டுவிடை
வாசிய னெப்பனை பாகனென் றேத்தியென் வாய்திறந்து
பேசிய போதுள்ள மானந்த வாரி பெருகியதே. (ருச)

பெருங்கா லெறிய நடுங்குங் கொடியினிற் பீழையுற்றுக்
கருங்கால னுதரிற் றீயோர் நலியக் கருத்தழிந்தேன்
வருங்கால நஞ்சண் டமரரைக் காத்த வரதமுத்தி
தருங்கால தண்டமிழ்த் தென்கரு வாபுரிச் சங்கரனே. (ருரு)

சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித் தாணுவைவான்
கங்கைச் சடையனைப் பாடல்செய் யாது கவிப்புலவீ
ரங்கச் சுமைகொண் டெழுநான்கு கோடி யழிநரகப்
பங்கத்தில் வீழவென் னேபொன்று வார்தமைப் பாடுவிரோ. ()

பாடுவ துன்றிரு நாமங்க ணுடொறும் பத்திசெய்து
சூடுவ துன்பொற் றிருவடித் தாமரை தொண்டுசெய்து
கூடுவ துன்னடி யார்திருக் கூட்டமக் கூட்டத்துட
னாடுவ துன்னிலை காண்கரு வாபுரி நாயகனே. (ருள)

நாயினுங் தீய பிறவியெல் லாஞ்சென்று நான்பிறந்து
மாயினுந் தேவர் பதவியில் வாழினும் வஞ்சமில்லாத்
தாயினு மன்புடை யொப்பனை பாகனின் ரூளிணைக்கீழ்
மேயினு மன்பொன்று மேயடி யேன்பெற வேண்டுவதே. (ருஅ)

வேண்டிய வேண்டிய வெல்லா மெதிரும் வினையகலு
மீண்டிய முத்திப் பெருவாழ்வு சேரு மிடரொழியும்
பாண்டிய சேத்தக் கருவா புரிநின்ற பால்வண்ணனைப்
பூண்டிகழ் மென்முலை யொப்பனை பாகனைப் போற்றினர்க்கே.

போற்றிப் பணியு மடியார் பழவினை போகவெறி
காற்றிற் சருகென மாற்றும் பிரான்கள வீசற்கன்பா
யாற்றுப் புனல்கொண்மி மஞ்சன மாட்டி யலர்சொரியார்
கூற்றுக் கொதித்து வருநாளென் செய்வர் கொடியவரே. (சு0)

கொடியாடும் வெள்விடை கொன்றையி லாடுங்குலச் சுரும்பர்
மூடியாடுங் கங்கை முகமாடு முச்சுடர் முற்றும்வெள்ளோப்
பொடியாடு மேனி யரவாடுஞ் சோரிப் புலவுகமழ்
வடியாடுஞ் சூலக் கருவேச ராடிய மன்றிடத்தே. (சுக)

மன்றிடத் தேநின்று தாண்டவ மாடுவன் வானகயிலைக்
குன்றிடத் தேயண்டர் போற்றிட நிற்பன் குறித்துமன
மொன்றிடத் தேதன்னைத் தாளுகப் பாவிப்ப வுள்ளடியார்
கன்றிடத் தேயுத வுங்கரு வேசன் கனல்வண்ணனே. (சுஉ)

வண்ணங் கரிய திருமால் கழியென்பு மாலிகையுக்
தண்ணங் கமலத் தயன்றலை மாலையுஞ் சாத்திமண்ணும்
விண்ணும் பொதிந்த வுகாந்த பிரளய மேவிநின்று
பண்ணென்று வீணை பயிலுங் களாவிற் பரஞ்சுடரே. (சுங)

பரஞ்சுடர் முக்கட் பரமன் சதானந்தன் பற்றலர்முப், புரஞ்
சுடவாங்கு பொருப்புவில் லான்பொருந்தாததக்கன், சிரஞ்சுட
க்கொய்து முத்தீயிட்ட பால்வண்ணன் றென்றிசைக்கோ, ஐர
ஞ்சுடத் தாளுதைத் தோன்றிரு நாமங்க ளோதுமினே. (சுச)

மீன்கொண்ட பொன்முடி யாயிரமாயிர மெய்த்தொழில்கள்
பொன்கொண்ட சேவடி யாயிர மாயிரம் பூந்தடங்கண்
மூன்கொண்ட நாமங்க ளாயிர மாயிர மூரித்திண்டோள்
கொன்கொண்ட சூலப் படைக்கரு வாபுரிக் கொற்றவற்கே. ()

கொற்றக் கவிகை நிழற்றப் பொதுவறக் கோனடத்தி
மூற்றப் புவனம் புரப்பவனோ முகலிங்கர் தாஞ்
சற்றுத் திருவருள் கோடின சோலத் தகுதிகெட்டுப்
பற்றற்ற கூழுங் கிடையா திரப்பரிப் பாரிடத்தே. (சுசு)

பாரிடஞ் சூழ்வரத் தான்பலி கொண்டுந்தன் பாதமலர்
சேரடி யார்க்குப் பெருவாழ் வளிப்பன் றிரைக்கடலிற்
கார்விடந் தாணுண்டும் போற்றும்புத் தேளிர் கடும்பசிநோய்க்
காரமு தூட்டுவன் றென் கருவாபுரி யாரியனே. (சுஎ)

ஆரியன் வேண்டத் திருமேனி பூரித் தறமெலிந்த
சீரியன் செல்வக் கருவைப்பி ரான்றிருத் தொண்டுசெய்யாப்
பூரியர் கூட்டம் புகாதன்பர் கூட்டம் புகுத்தியது
காரியங் காணெஞ்ச மேபிறப் பேழுங் கடப்பதற்கே. (சுஅ)

கடல்விட முண்டி புறங்கா டரங்கு கனலுருவ
மடல்விடை பூர்தி புலியத ளாடை யழலுமிழ்வாய்ப்
படவர வாரங் கழிதலை தாளொனிற் பால்வண்ணனே
மடவர லொப்பனை யெவ்வாறு சேரு மனமகிழ்ந்தே. (சுசு)

மனப்பகை யாகிய வைவரை மாய்த்துன் வழியடியா
ரினத்துட னென்னையு மாட்கொள்வை யோபண் டிகல்புரிந்த
புனத்துள வோனுங் கமலத்து வேதனும் போற்றிசெய்யுங்
கனற்றிரு மேனிக் கருவா புரியிற் கறைக் கண்டனே. (எ0)

கறைகொண்ட சூலத் தலையிலுங் கையிற் கபாலத்திலு
நறைகொண்ட பங்கயப்பொற் முளிணையிலு நாங்கள் கண்டோ
மறைகொண்ட தென்கரு வைப்பெரு மானுக்கு மாயவனுர்
நிறைகொண்ட பேருட லும்பசுஞ் சோரியு நீள்கண்ணுமே. ()

நீள மடித்த தடந்தோ டிசையை நெருங்கச்சக்ர
வாள மடித்துச் சடைக்காடு சூழ்வர மாதுமையா
டாள மடிப்பச் சதுமறை போற்றச் சரணமண்ட
கோள மடிப்ப நடிக்குங் கருவைக் கொழுஞ்சுடரே. (எஉ)

சுடர்கின்ற மண்டல மென்னு முக்கோணமுந் தொல்விசும்பும்
படர்கின்ற சோதிக் கருவைப் பிரான்பொற் பதம்பணிந்தார்
குடரும் தசையுங் குருதியு மென்புங் குவிந்தவிந்த
வுடலென்ற பாரஞ் சுமவார்கண் மீண்டிவ் வுலகில்வந்தே.(எங)

உலகத்தி லுள்ள மனைவாழ்வு சுற்ற முறுபுதல்வ
ரலகற்ற செல்வந் தொலையாத நீணிதி யாயவெல்லா
மிலகுற்ற மின்னென நில்லாதுபோய்விடு மென்டதெண்ணித்
திலகத் திருநுத லொப்பனை பாகனைச் சிந்தியுமே. (எச)

சிந்தித் துருகி யுருகியெப் போதுநின் சேவடியை
வந்தித் திருப்பதோர் வாழ்வளித் தாய்மறை வேதனுக்குஞ்
சந்தித் திடற்கெளி தோவிந்த வாழ்வு தழைக்குஞ்செவ்வா
னந்திப் பிறைமுடி யோய்கரு வாபுரி யாள்பவனே. (எடு)

பவக்கடல் வீழ்ந்து தடுமாறி வேறொரு பற்றுமின்றி
யவத்தினி னீந்தித் தளர்கின்ற தீயனுக் கம்பியெனத்
தவத்துறைவோர் தொழுந்தாள் காட்டி முத்தித் தடங்கையே
றுவக்கற வேற்றுவை யோகரு வாபுரித் தூயவனே. (எசு)

தூயபங் கேருகன் செவ்வா யுனது துரகபந்தி
பாயொலிப் பாற்கட லம்புபெய் தூணிவன் பாதலங்கள்
சேயொளி மாமணிப் பொற்பணிப் பெட்டகந் தென்கருவை
நாயக நின்புக ழாரோ யறிந்து நவிலுவரோ. (எஎ)

உவராழி வையத் திழிகுலத் தேவந் துதித்தவருஞ்
சிவசா தனம்பெறிற் றேவர்கண் டூர்தென் கருவைப்பிரான்
றுவர்வாய் மணிநகை பங்கன்பொற் றூளித் தொழாதிருப்போ
ரெவரா யினுமற் றவரோ குலத்தி னிழிந்தவரோ. (எஅ)

இழியும் பிறவிப் படுகுழிக் கேவிழுந் தெய்த்தவென்மேற்
பொழியுங் கருணை விழித்திருப் பார்வை புரிந்தனையேன்
மொழியுங் கவலை மனமா சறுத்தின்ப மூழ்கிமுத்தி
வழியும் புகப்பெறு வேன்கரு வாபுரி வாழ்பவனே. (எக)

வாழ்விப்பர் தம்மை மறவா தவரை மறந்தவரை
வீழ்விப்பர் தீய நரகத்து ளேயெனு மெய்மையெண்ணிச்
சூழ்வித்த கொன்றை முடிக்கள வீசர் துணையடிக்கீழ்
தாழ்விக்குஞ் செஞ்சடை யாரல்லரோமுத்தி சார்பவரே. (அ0)

முத்திக் கொருவித்து மோகா டவிக்கு முழங்குசெந்தீ
சித்தக் கவலைப் பிணிக்கோர் மருந்து சிவதவஞ்சேர்
புத்திக் கொடிக்கும் படருங் கொழுகொம்பு போலுங்கண்டீர்
தத்திப் பணியணி யுங்கள வீசர் துணையடியே. (அக)

துணைக்கோல வாசிகை வேணியிற் சாத்தித் துலங்குதிரு
மணக்கோலத் தோடிம வான்மக ளோடு மழவிடைமே
லிணர்க்கோலச் சோலைக் கருவேச வென்மு னெழுந்தருளக்
கணக்கோ கணக்கல்ல வோவதி யேனுன் கருத்தினையே. (அஉ)

உன்கருத் தேதென் றறியேன் கருவையி னுத்தமனே
மின்கருக் குஞ்சடை யும்பிறைக் கீற்றும் விழிமலரும்
பொன்கருக் குங்கொன்றை மாலிகை மார்புநின் பொற்கழலு
மென்கருத் தாடுவைத் தெப்போ தும்வந்தித் திறைஞ்சுவனே.

இறையவ னேயெனக் குன்னடி போற்ற வியல்பளித்த
மறையவ னேயென் மனத்தவ னேவரி வார்ந்தகண்டக்
கறையவ னேதென் கருவேச னேசடைக் காடணிந்த
பிறையவ னேயடி யேன்பிற வாவண்ணம் பேறருளே. (அச)

அருவிப் புனலிற் குமிழியிற் றோன்றி யழிந்தனன்யான்
கருவைப் பரமன் கவிஞனுக் காக்கம லாலயத்திற்
பரவைக் கிரவிற் றிருத்தூது சென்ற பதம்படவத்
தெருவிற் சிறுதுக ளாய்க்கிடந் தேனில்லை தீவினையே. (அரு)

தீவினை செய்து சிவதவங் கைவிட்டுச் சில்பகலிற்
சாவினை மேற்கொள் சழக்கினை நீதண் டமிழ்க்கருவைக்
கோவினை நாவினிற்கொண்டேத்திச் செம்பொற் குரைகழலிற்
பூவினை யிட்டிறைஞ் சீரென்கொ லாமுங்கள் புல்லறிவே. ()

புல்லியர் தீய புணர்ப்பின ராவுரி போர்த்துவரும்
வல்லிய மென்னத் தவறிழைப் போர்புரி வஞ்சகத்தா
லெல்லையிற் றுன்பக் கடலழுந் தாம லெடுத்தருள்வாய்
மெல்லியல் பாக தமிழ்க்கரு வாபுரி வித்தகனே. (அஎ)

தகனம் படுத்திப் பகிரண்ட கூடமுஞ் சாம்பர்செய்து
ககனம் பதத்தினின் றூடும் பிரானைக் கமலமன்ன
முகமைந் துடைய கருவா புரியின் மூதல்வனையா
னகமைந் திராப்பக லேத்தி வேனெஞ் சழுக்கறவே. (அஅ)

அழுக்கற்ற நெஞ்சிலும் பொன்னம் பலத்து மமர்ந்துநின்ற
மூழுக்கற்றை யஞ்சடி லக்கள வீசனை முன்னியன்பு
பழுக்கத் திருத்தொண்டு செய்யார்கள் கால படர்நரகுக்
கிழுக்கக் கழுத்திற் கயிறிடும் போதுமற் றென்செய்வரோ. (அக)

என்செய லாவதி யாதொன்று மில்லைமற் றியான்புரித
னின்செய லாக நினைவளித் தாயுன்னி னீக்கமற்றேன்
புன்செய லீதென்று நன்செய லீதென்றும் புத்திசெய்யே
னுன்செயல் யாவுமென் றேகரு வேச வுளந்தெளிந்தே. (கூ0)

உளந்தெளி யும்படி யெப்படி வேதமு முண்மைநிலை
யளந்தறி யாத கருவைப் பிரானம் பவளமென்ன
வளந்தரு வேணியுஞ் சங்கக் குழையு மதிமுகமுங்
களந்தரு நீலமும் பாவித் திடாத கயவருக்கே. (கக)

கயங்கொண்ட நீரின் மதிநிழல் போலக் கலங்கிநின்று
மயங்குங் கவலை மடநெஞ்ச மேமலை மங்கைகொங்கை
முயங்குங் கருவைப் பெருமானென் னுட்பகை மூன்றும்வென்று
சயங்கொண் டிருக்கி னுனக்கொரு காலுந் தளர்வில்லையே. ()

தளர்வுவந் தெய்தின் விதியினை நோவர் தழைக்குஞ்செல்வக்
களிர்வுவந் தெய்திற் றமைத்தாம் புகழ்வர் கிளைத்தபசுங்
குளவுவந் தோனு முளரிவந் தோனுந் துதித்துநிற்பக்
களவுவந் தோன்செய்த கற்பனை யீதென்று காண்கிலரோ. ()

காணப்பெற் றேன்கரு வைப்பெரு மானைக் களாநிழற்கீழ்ப்
பூணப்பெற் றேன்செய்ய பொன்னடித் தாமரை பூணுமன்பு
பேணப்பெற் றேனவன் பேரா யிரங்களும் பேசப்பெற்றே
னுணப் பெற்றேன் கொடும்பாவ மென்பால் வந்துநண்ணுதற்கே.

நண்ணலர் மூப்புரம் விற்காமன் றன்புர நன்னகைத்தீக்
கண்ணன லேவிச் சுடுகள வீசர் கடலினஞ்சம்
விண்ணவர் வாழ வருந்திய காலையு மெய்யில்வைக்கும்
பெண்ணவ ளங்கு விலகா தொழிந்ததென் பேதைமையே. ()

பேதாதி பேதப் பிறவிகடோறும் பிறந்திளைத்தேன்
மாதாவும் பெற்று வளர்த்திளைத் தாள்கொடு மாமறலி
தூதாளுங் கொன்றிளைத் தான்கள வீசவித் துன்பத்துக்கோ
ராதார நின்னிரு பாதார விந்தத் தடைவதுவே. (கூசு)

அடையும் படிக்கோ ருறுதிகிட் டாம லகலிடத்தே
மிடையுஞ் சமயப் படுகுழி வீழ்ந்து மெலிந்துமன
மிடையும் பருவத்து மெய்ஞ்ஞானக் கண்டந் தெளிப்புரந்த
கடையும் படைவிழி யொப்பனை யாண்மனக் காதலனே. (கூள)

காதல் விளைத்துத் துணைசெய்த வேளுடல் கட்டழித்த
கோத மனத்திற் குறித்துக்கொ லோகுல வெற்புதவு
மாதுமை யொப்பனை பால்வண்ண னேநின் வடிவிலொரு
பாதி தனக்கு வடிவிருப் பாகப் பறித்ததுவே. (கூஅ)

பறியா வினையைப் பறித்திலன் மாற்றிநின் பாதமன்றி
யறியா வறிவளித் தாண்டவ னேயடி யேனுக்குன்னைப்
பிறியா வரமன்றி வேண்டுவ தில்லை பிரசமலர்
வெறியார் களாவி னிழற்கீழ் நிலைபெற்ற மெய்ப்பொருளே. ()

பொருள காட்டி மாசற்ற போதமுங் காட்டியப் போதநல்கு
மருள் காட்டிச் சந்தத மானந்தங் காட்டி யடர்ந்தகங்கு
லிருள்காட்டும் பூங்குழ லொப்பனை பாக விருளறுத்துத்
தெருள்காட்டிப் பாத மலர்சூட்ட வென்றலை சீர்பெற்றதே. ()

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருக்கருவைப்

பதிற்றுப்பத்தந்தாதி.

மூலபாடம்.

அதிவீராமபாண்டியராஜன்

அருளிச்செய்தது.

இஃது

சென்னபட்டணம்:

ஊ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1884.

உ

கணபதிதுணை.

திருக்கருவைப்

பதிற்றுப்பத்தந்தாதி.

காப்பு.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆனகருவைப்பதிற்றுப்பத்தந்தாதிச்சொல்லலங்கன்மூற்று
ஞானவுருவாங்களவீசனளினசரணமிசைச்சாத்தத்
தானவருவிபொழிதடக்கைத்தறுகட்சிறுகட்புகர்முகத்துக் [ம்
கூனலிளவெண்பிறைக்கோட்டுக்குணகுஞ்சரத்தினடிதொழுவா

இதுவுமது.

நூல்.

சீரார்கமலச்சேவடியென்சிந்தையிருத்தியுனதுதிருப்
பேராயிரமுமெடுத்தோதிப்பெம்மான்கருவையெம்மானென்
ரூராவமுதமுண்டவர்போலனந்தானந்தத்தகெழிழ
வாராவின்பமறிவித்தாயறியேனிதற்கோர்வரலாறே. (க)

ஆறுக்காமக்கொடியகனலேவர்மூட்டவவலமன
நீறுய்வெந்துகிடப்பேனினின்ரூள்வழுத்தநினைவுதந்து
மாறுநேயத்திரவுபகன்மறவாதிருக்கவரமளித்தாய்
சீறுடரவமுடித்தசடைக்கருவைவாழுஞ்செழுஞ்சுடரே. (உ)

சுடரேவலியத்தடுத்தாண்டதுணையேபிறவித்தொடுகுழிவீ
ழிடரேயகலக்களாநீழலிருத்தகோவேயெம்பெருமா
ஜுடலேயோம்பித்திரியுமெனையுன்னைநினைக்கப்பணித்தவருட்
கடலேயுனையன்றெருதெய்வங்காணவழுத்தக்கடவேனே. (ங)

வேனிற்சிலேவேடொடுகணைக்கும்விளங்குமகளிருளங்கவற்றும்
பானற்கொடியவிழிவலைக்கும்பற்றுய்வருந்தியனுதினமு
மீனத்துயரக்கடலழுந்துமெனையும்பொருளாவடிமைகொண்ட
ஞானத்துருவேதமிழ்க்கருவைநம்பாபொதுவினடித்தோனே. ()

நடித்தேன்பொய்க்கூடெடுத்தவமேநன்னுள்கழியவிந்நாளிற்
படித்தேனுனதுதிருநாமம்பண்டைவினையைப்பற்றறுத்தேன்
பிடித்தேன்பிறவிக்கடனீக்கப்பெரியபுணையாவுனதடியை [னே.
மூடித்தேனுள்ளத்தெண்ணமெல்லாங்கருவைவாழுமுன்னே

மூன்னேப்பிறவித்தவப்பயனேமுழுதுமறியாமூடனிவ
னென்னக்கருத்திலிரங்கியோயாதோவறியேனிரவுபகல்
கன்னற்பாகிற்கோற்றேனிற்கனியிற்கனிந்தகவிபாட
வன்னத்தொகுதிவயற்கருவையாண்டானென்னே யாண்டதுவே.

ஆண்டகுரவனுவானேயல்லற்பிறவியறுப்பானே
வேண்டும்பதவிதருவானேவெளிவீட்டின்பமளிப்பானேத், தூண்ட
ல்செய்யாமணிவிளக்கைத்தொழின்மூன்றியற்றுந் தொல்லோனே
க், காண்டற்கரியபேரொளியைக்களாவினிழற்கீழ்க்கண்டேனே.

கண்டகண்கள்புனல்பாயக்களிப்பாயுள்ளங்கையழிய
விண்டமொழியுதாக்குழறவிம்மிமேனிமயிர்பொடிப்பப்
பண்டைவசம்போய்ப்பரவசமாய்ப்பரமானந்தத்தெளிதறவ
முண்டுதெவிட்டாவருள்புரிந்தான்கருவைவாழுமுரவோனே. ()

உரகாபரணத்திருமார்புமுமையொப்பனையாளிடப்புறமுஞ்
சிரமாலிகையும்புரிசடையுஞ்செய்யவாயுங்கறைமிடறும்
வரதாபயமுமழுமானும்வயங்குகரமுமலரடியுங்
கருவாபுரியான்வெளிப்படுத்திக்காட்சிகொடுத்துநின்றனே. (கூ)

நின்றநிலையுஞ்செய்தொழிலுநினைத்தகுறியும்வழிபாடு
மொன்றுபதமும்பதங்கடந்தவுண்மைப்பொருளுமறியேனை
யின்றுன்னடியாருடன்கூடவெண்ணம்புரிந்தவினியவரு
ணன்றுநன்றுதமிழ்க்கருவைநம்பாவும்பர்நாயகனே. (கo)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நாயகன்முருந்தன் சததளப்பொகுட்டி னுன்முகனென்னவீற் றிருக்குந், தூயவன்கருவைக் களாகிழலமர்ந்தோன் றுணையடி ப்புகழினவழுத்தி, மாயிருஞால மெடுத்தெடுத்தேத்த வரம்பெ றுமதுரகா வலர்கள், சேயிருவிசும்பிற் கற்பகநீழற் செல்வமும் வேண்டுவதிலையே. (கக)

வேண்டுவதொன்றுதமியனெப்பிறப்பும்வெந்தழனரகிடைவி ழினுங், காண்டகுசிறப்பினரம்பையர்சூழக் கற்பகநிழல்வைகி டினுங், தூண்டகுசுடரோகளாகிழலமர்ந்த சோதியேகருவைநாய கனே, யாண்டகாய்ந்தனதிருவடிக்கமலத் தன்பெனுமழிவிலா ப்பொருளே. (கஉ)

அழிவிலாப்பொருளேபழமறைக்கொழுந்தே யலையெறியமுத வாரிதியே, யொழிவிலாதருளுங்கற்பகக்கனியே யொப்பிலைமை ப்பரந்தெறிக்கும், விழியினலுருகியொருபுறமளித்த விமலனேக ருவையம்பரனே, யிழிவிலாப்புணையாப்பிறவியங்கடனின் றேற நான்பெற்றதுன்பதமே. (கங)

உன்பதமேத்தித்துன்பவேரறுக்க வுலகினிற்றிருவுடன்வாழு, மன்பதைக்கெல்லாமெய்திடுந்தரமோ வலியவந்தெனைத்தடுத்தா ண்டுள், ளன்புவந்தொருவரறிந்திடாவறிவு மறிவுறுத்தருளினைய தற்கு, முன்பெதுபுரிந்தேன்கருவையம்பதிவாழ் முதல்வனேமு க்கண்வானவனே. (கச)

வானெரியறல்கான் மண்ணெனப்பகுக்க வரும்பெரும்பூத மோனைந்து, மானமுக்குணமுங் காரணமோர்நான்கு மீனைத்து மாயாதியீறின்றி, யூனுறையுடலுக்குயிருமாயுயிருக் குணர்வுமா யொன்றினுந்தோயா, ஞானநாயகனே கருவையம்பரனே நான றிந்துரைக்குமாறெவனே. (கரு)

எவனுயிர்க்குயிரா யெள்ளுமெண்ணெயும்போ லெங்கணுமி டையுருகின்று, னெவனனைத்துலகு மீன்றுகாத்தழிக்க விறை

மைசான்மூவுருவெடுத்தா, னெவன்முதலிடையீ றின்றியெஞ்
ஞான்று மீறிலாமறைமுடியிருப்பா, னவனெனைப்புரக்கத் திரு
க்களாகீழ லமர்ந்தருள்புரிந்தகாரணனே. (கசு)

காரணமேதென் றறிகிலேன் றமியேன் கற்றலமனத்தினைக்
காத்து, வாரணிமுலையா ளொப்பனையோடு மழவிடைமேலெ
ழுந்தருளி, காரணனறியாத் திருவுருக்காட்டி நல்லருள்சுரந்து
வாழ்வித்தான், பூரணன்கருவைக்களாகிழலமர்ந்த புண்ணியன்
விண்ணவர்க்கிறையே. (கள)

விண்ணவர்மகுடகோடிவீழ்ந்திறைஞ்சும் விரைமலர்ச்சேவடி
மிசையே, புண்ணிறைகாதலன்புரிந்துருக வுலையிடுமெழுகென
வுருக்கிக், கண்ணினீர்வாரக்கருவையம்பரனே கடவுளேயென்
றெடுத்தேத்தப், புண்ணியம்புரிந்தேனிப்பெரும்பேறு பூதலத்
தெவர்பெறுவாரே. (கஅ)

பெறுவதுநினதுதிருவடிக்கமலம்பேசுவதுன்றிருநாம, முறுவது
நினதுதிருவுருவெளியாமுணர்வதுன்னருளலாதுண்டோ
மறுவறுசிறப்பின்மாசிலாமணியேவரதனேசிவபெருமானே
குறுமுனிபரவக்களாகிழலமர்ந்தகொடிமதிற்கருவையாதிபனே.

ஆதவன்மதிபாரனல்வெளிபுனல்காலருமறையெச்சனென்றெ
ட்டுப், பேதமாமூருவாயருவமாய்நிறைந்த பெற்றியாலுற்றுநா
னுன்னை, யேதிலுலுனர்வேனுனருமாறருளா யிளகிலாப்பசுங்
கொழுந்தணித்த, சோதியேகருவையொப்பனைகளபத் துணைமு
லைதழுவுகாதலனே. (உ0)

அருணிர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

காதலுற்றிடமனகிலேபெற்றிடக்கனிந்திடக்களிகூரப்
போதமுற்றிடயானெனதென்றிடும்புலேச்செருக்கறமாற
நாதன்முத்தமிழ்க்கருவையம்பரனெனநாத்தழும்புறவோதி
யோதிமற்றுநான்பெற்றதையிற்றெனவுரைத்திடமுடியாதே.

மூடிகடந்தகனகோளகைநெடுமுகட்டினுக்கப்பாலு
மடிகடந்தபாதலமேழினுக்கப்புறத்தனலோடுங்
துடிகடந்தகைகடந்தனதிகந்தமாறெல்புகழ்க்களாவீசன்
பொடிகட்டந்தபான்மேனியன்றிருநடம்புகலுதற்கெளிதாமோ. ()

எளியன்புன்றெழிற்பாதகன்மாதரா ரிளமூலைவளம்வேட்ட,
களியன்றீக்குணவஞ்சகநெஞ்செனுங் கருங்கலைக்கைவித்து,வெ
ளியில்வந்துநின் பொன்னடிசென்னியின் மிலைந்தெனையாட்கொ
ண்ட, வளிகனிந்தநின்னருட்குணமுளைப்பதா ரருங்களாவமர்ந்
தோனே. (உக)

அமரர்மாதவர்முனிவரர்திரண்டுநின்றனுதினந்தொழுதேத்துந்
தமரநூபுரப்பொற்சரணேத்திடத்தமியனுக்கருள்செய்தான்
குமரனுலடுஞ்சூர்ப்பகைதடிந்தவன்கொள்ளவண்டினமார்க்குங்
கமலவாவியும்பொங்கருஞ்சூழ்திருக்கருவையம்பெருமானே. ()

கருவையம்பரனம்பரமேனியன்கடவுளர்காணுத
வுருவையம்பிகைபெறப்பகுந்தளித்தவனென்னலர்புரமீற்றுப்
பெருவையம்பெனக்கண்ணனேயுடையனென் பிழைபொறுத்தழி
யாத, திருவையம்புவிச்சிறப்பொடுமளித்தவன் றிருக்களாவுடை
யோனே. (உடு)

உடையமென்றுதம்மக்களாவினவியை யொக்கலிற்பெருவாழ்
வை, யடையவல்குசீர்ச்செழும்பொருண்முதலிய வினத்தையு
நினைப்பாரோ, விடையின்மேல்வருதிருக்களாநாயகன் விமைமல
ர்ச்செழுங்கொன்றைத், தொடையல்வேணியா னடியவர்க்கன்
பொடு தொண்டுசெய்மனத்தாரே. (உசு)

மனத்தையான்றினம்வணங்குவன்மின்னெனவைகலுநிலையற்ற
தனத்தைவாழ்வினைநிலையெனமதித்துழலாசையிற்றளராமே
புனத்தழாய்முகில்போற்றிடுங்கருவைவாழ் புண்ணியன்பாலற்
காச், சினத்தகாலனையுதைத்தவன்பங்கயச் சேவடிவணங்கென்
றே. (உஎ)

வணங்கெனத்தலையளித்தனையென்புகழ் வாழ்த்தெனநாத்தந்
தா, யிணங்கெனத்திருக்கூட்டமுங்காட்டினை யினிப்பெறும்பே
றுண்டோ, துணங்கையிட்டுவெம்பேய்க்கணங்குதித்திடச் சுட
லையாடரங்காகக், கணங்கள்போற்றநின்றாடியகுழகனே கரு
வையம்பெருமானே. (உஅ)

பெருமைசான்றநின்திருவெழுத்தைந்துமே பெரும்புணையெ
னப்பற்றி, யருமைசான்றவிப்பவக்கடல்கடக்குமா ருசையிற்
றுணிகின்றே, னிருமையின்பமுமடியவர்க்கூட்டமு மிறைவனே
யெம்மானே, தருமமூர்த்தியேயொப்பனைவனமூலை தழுவுதிண்
புயத்தானே. (உக)

தானையெண்டிசைமுக்கணுமுச்சுடர்தழைசடைகதிர்க்கற்றை
மேனிவெங்கனலாடிடமுலகெலாம்வெந்தொழிபுறங்காடு, சேனை
வெங்கொலைப்பேய்க்கணமென்னினத்திருக்களாவமர்ந்தோனை
வானநாடரும்பூதலத்தடியரும்வணங்குவதெவ்வாறே. (உ0)

கலிவிருத்தம்.

எவ்வமுற்றதிரிமலமிற்றது
செவ்விஞானத்திருக்கண்டிறந்தது
கொவ்வைவாயுமைகொண்கன்கருவையான்
பௌவநஞ்சமுண்டான்கழல்பாடவே. (உக)

பாடினேன்புகழ்ப்பங்கயச்சேவடி
சூடினேன்கருவாபுரிச்சோதியை
நாடினேனவனெனும்வேறறக்
கூடினேனடியார்திருக்கூட்டமே. (உஉ)

கூட்டமிட்டகருவிகுலைந்துடற்
சேட்டையற்றுள்ளறிவுசிதையுமூ
னூட்டமூன்றுடைநாதன்முகலிங்கன்
றூட்டுணக்கமலந்தலைக்கொண்மினே. (உஊ)

தலைக்கொள் வெண்டலைமாலையன்றண்ணிலா
மிலைக்குந்தென்கருவாபுரிவேதியன்
புலைக்குரம்பையுடம்பிற்குடிபுகுந்
தலைக்குநெஞ்சமொழித்தெனையாள்வனே. (கச)

என்னையாள்பவனென்னுள்ளிருப்பவன்
றன்னையான்றொழத்தண்ணளிதந்தவன்
பொன்னையாளும்புயன்றொழின்றவன்
கன்னிபாகன்கருவைக்கிறைவனே. (கரு)

இறைவனெங்கணும்யாவையுமானவன்
பிறையணிந்தசடிலன்பெருந்தகை
கறையிலங்குமிடற்றன்கருவையான்
மறையநின்றெனையாண்டதெம்மாயமே. (கசு)

மாயவல்லிருணீங்கமனத்திடைத்
தூயஞானச்சுடர்விளக்கேற்றிய
நாயகன்களவீசனைமையிர்
பாயமால்விடையான்பரமேட்டியே. (கள)

பரமெனக்குனையன்றியோர்பற்றிலேன்
சரமமூற்றியபோதிற்றருவையோ
கருவைநிற்குங்களாமுதலேமறைச்
சிரமிருக்குந்திருவடிச்செல்வமே. (கஅ)

செல்வமீயுஞ்சிறப்புமளித்துளத்
தல்லதீர்க்குமறிவையுதவிடுங்
கல்விநல்குங்கதிதரும்பொற்கிரி
வல்விலான்களவீசனேவாழ்த்தவே. (கக)

வாழ்வைநம்பிமதிகெட்டுக்கும்பியில்
வீழ்புன்மாந்தர்க்குறுதிவிளம்புவேன்
ஞழ்சடைக்களவீசன்றனுலயஞ்
சூழ்தல்சூழிற்றுறக்கங்கிடைக்குமே. (சஅ)

இதுவுமது. வேறு.

கிடைத்தபொருள்கரத்திருக்கக்கிடைத்திலவென்றயர்வார்போற்
படைத்தகினதருள்பெற்றும்பெற்றிலர்போற்பரிவுற்றேன்
மூடைத்தலையிற்பலிகொள்ளுமுகிலங்காமுகிழ்த்தகிலாச்
சடைத்தலையாய்கின்மாயம்யானுணருந்தரத்ததோ. (சக)

உணராதகின்னிலையைநீயுணர்த்தவுணர்ந்ததற்பின்
புணராததாடலையிற்புணர்ந்ததெனப்புகழோங்கத்
தணவாமலெனையுனக்குத்தந்துருகியிரண்டற்றேன்
பணராசச்சிலம்பணிந்தபழமறையெம்பெருமானே. (சஉ)

பழமையாம்வாதனையிற்படிந்தமனப்பந்தத்தின்
விழைவினுற்றலைமயங்கிவேறுவேறுருவெடுத்துச்
சுழல்குயவன்றிகிரியைப்போற்பவக்கடலிற்சுழல்வேனை
மழவிடையாய்பால்வண்ணுவானவர்தங்கோமானே. (சங)

கோமானேகருவைவருகுணக்குன்றேமலரிதழித்
தேமாலையுனைந்தசடைச்செழுஞ்சுடரேயென்றென்று
பாமாலைவாய்பாடிக்கைகொட்டிப்பதம்பெயர்த்து
நாமாடவம்மின்காடொண்டராய்நமரங்காள். (சச)

தொண்டுசெய்துவழிபட்டுச்சுருதிபுகழ்களாவீசன்
புண்டரிகமலர்த்தாளைப்போற்றிமுதற்பேறுபெற்ரு
ரண்டர்பிரானுன்முகத்தோனுழியானிவனென்ருன்
மண்டனின்ஞாலத்தெளியமானிடரோவழுத்துவார். (சரு)

வழுத்திடுவேனுவாரமலரிடுவேன்கரங்கொண்டு
தொழத்தருவேன்முடிதாழ்த்திச்சூழ்வருவேன்றுணைத்தாளா
லழுத்திடுவேன்மனத்துன்னையகம்புறமொன்ருயுருகிப்
பழுத்திடுவேனருள்கனியப்பால்வண்ணநம்பரனே. (சசு)

நம்பியுனதருள்வேட்டுநடுக்கடலுட்கலங்கவிழ்ந்து
வெம்புதுயர்மனத்தார்போன்மெலிகின்றேனெடுநாளாக்

கும்பமுனிக்கருள்புரியுங்கொற்றவனேமுகலிங்கா
அம்பைமுடித்தோய்புரக்கவிரக்கமின்னந்தோன்றுதோ (சள)

தோன்றியபோதுடன்றோன்றித்தோன்றுமறைத்தென்னை
யான்றசெழுஞ்செம்பிலுறைகளிம்புபோலகலாம
லான்றமலத்துகளகற்றியுன்னருளும்பெறுவேனே
மூன்றுலகுந்தொழுதேத்துமுகலிங்காமுதற்பொருளே. (சஅ)

பொருள்வேட்டுநிலம்வேட்டும்பூவையர்தம்புணர்கலவி
மருள்வேட்டுநாடோறுமனவலிகெட்டயர்கின்றே
னருள்வேட்டுன்சந்நிதிப்பட்டருந்துயர்போயுய்வேனே
தெருள்வேட்டார்க்கருள்புரியுந்திருக்களவிலுறைவோனே. ()

உறைவாய்நன்மனத்தன்பருடரேறுமுயிராகி
நிறைவாயெவ்வுலகினைத்துநீக்கமிலாதுணர்ந்தோர்க்கு
மறைவாயுய்த்துணரார்க்குமறைபயிலுங்கருவையில்வா
ழிறைவாகின்றிருவிளையாட்டியான்வழுத்தவடங்காதே. (ஙo)

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

காதற்பெருக்குமொருகோடிகோடிகவலைப்பெருக்குமிகலாய்
வாதைப்படுத்தவலைமாறுபோலமனமாலுழன்றுவிடவோ
வேதப்பெருக்குமுழவோசைவிம்முவிழவிற்பெருக்குமியல்கூர்
நாதப்பெருக்குமொழியாதுமல்குகருவேசஞான வுருவே. (ஙக)

உருவாகிநிற்றியருவாகிநிற்றியுயிரோடெவர்க்குமுறவாய்
மருவாகிநிற்றிமலராகிநிற்றிமறையாகிநிற்றிமறையின்
பொருளாகிநிற்றியுனையானறிந்துபுகழ்கின்றவாறுமறியேன்
கருவாபுரிக்குளுறைதேவதேவகதியேதெனக்குமொழியே. (ஙஉ)

மொழிகின்றவாறுசமயங்கடோறுமுழுதுஞ்சுழன்றுகிலையற்
றழிகின்றசிந்தையவலங்கெடுத்துன்னடிகண்டுநாடியறியும்
விழியுங்கொடுத்தமுகலிங்கநாதமிகுமன்பர்தேடுபொருளே
பொழியுங்கடைக்கணருளாலளித்திடுவையற்றமுத்திநிலையே. ()

முத்திக்குவித்து னடியார்கள்சிந்தை மூளரிக்கருக்கன் மொ
ழியெண், சித்திக்குமூலந்தவயோகிகட்குத் தெளிகன்னலூறுமி
ரதம், டத்திக்குரித்தமருள்வீசுகொண்டல் களவீசனெங்கள்ப
ரம, னத்திக்குமுன்னம்வரமேயளித்த கருவேசனம்பொனடியே.

அடியாரிழைத்தபிழைகோடிநெஞ்சினறியாதவாதிமுதல்வன்
கொடியார்புரத்தையழன்மூடவன்றுகுறுமூரல்கொண்டகுழக
னெடியோன்வழுத்துகளவீசனென்றுநினோதோறுமுள்ளநெகிழ
முடியேறுமங்கைபுளகிக்குமேனிமுகுளிக்குமென்கணினையே. ()

என்கண்ணிடத்தினகலாதசெல்வனெழிலார்களாவின்முதல்வன்
வன்கண்ணர்நெஞ்சுபுகுகாதநம்பன்மனமாசறுத்தபெருமான்
புன்கண்ணகற்றியடியாரைவீடுபுகுவித்துநின்றபுனிதன்
றன்கண்ணெனக்குமுடியாதவன்புதரவென்கொல்செய்ததவமே

தவமுந்தவத்தினுறுபேறுமானதலைவாகளாவின்முதலே
புவனங்களாவையுயிர்வர்க்கமாவைறுகர்போகமாவைபுகலுந்
திவசங்களாதிவருகாலமாவைதெளிவார்தெளிந்தவமயத்
திவையன்றிநிற்பையெனினையநெஞ்சினெவரோமதிப்பருனையே()

உன்னுமமோதி யுனையேவணங்கி யுறுபூசைபேணுமுரவோர்,
பொன்னுடளிக்க வரநல்குமாதி புனிதாகளாவி லுறைவோய்,
முன்னேயுனக்கியா னடியானுமல்லேன் முழுஞானியல்லனெளி
யே, னென்னேபிழைத்த பிழைகோடியுள்ள வெனினும்புரத்த
ல்கடனே. (நிஅ)

கடவாரணத்தி னுரிபோர்வைகொண்ட கருவேசவாதி முதல்
வா, சடவாதனைக்கு ளவமேகிடந்து தடுமாறுநெஞ்ச முடையே,
னடைவாய்வழுத்தி வழிபாடுசெய்து னடிபேணவொன்று மறி
யேன், மடமாலகற்றி யிடுமாறளிக்கும் வரமீகொடுக்கும்வரமே.

வரையாதியற்றியிடுபாவகாரிமறமன்றிவேறுபுரியேன்
விரைமாலைசற்றுகுழலாரிடத்துமிகவாசைவைத்துமெலிவேன்

கரையா திருக்குமனநீகளைத்தனடிபாடவைத்தகதைநா
னுரையானிறைக்கமுடியாதுமுக்கணுடையாய்களாவிளுளியே.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்,

ஒளிமதிமுடித்தவேணியொருவனேகருவையானே
தெளிவுறுசெஞ்சந்தன்னேத்தெருட்டிநின்னிலையைக்காட்டி
யளியினுளென்னேயாண்டவருட்குன்றேயுன்னேயின்னு
மெளியனேன்பிறவிவேட்டோவேத்திடாதிருக்கின்றேனே. ()

இருக்கினுகிற்கும்போதுமிரவுகண்டுயிலும்போதும்
பொருக்கெனநடக்கும்போதும்பொருந்தியுண்டுய்க்கும்போது
முருக்கிதழ்க்கனிவாயாளைமுயங்கிநெஞ்சழியும்போதுந்
திருக்களாவுடையநம்பாசிந்தையுன்பாலதாமே. (சுஉ)

சிந்தனேயுனக்குத்தந்தேன்றிருவருளெனக்குத்தந்தாய்
வந்தனேயுனக்குத்தந்தேன்மலரடியெனக்குத்தந்தாய்
பைந்துணருனக்குத்தந்தேன்பரகதியெனக்குத்தந்தாய்
கந்தனேப்பயந்தநாதாகருவையிலிருக்குந்தேவே. (சுஊ)

தேவனேநின்னேயல்லாற்பிறிதொருதேவையெண்ணேன்
பாவனேநின்னினல்லாற்பிறிதொருபற்றுமில்லேன்
யாவையுங்காட்டக்கண்டேனென்னுளேநின்னேக்கண்டேன்
காவலாகருவையானேயினிமற்றேர்காட்சியுண்டோ. (சுசு)

உண்டெனமறைகளோதுமொருதனிமுதலேநாளு
மண்டருமுனிவர்தாமுங்காண்கிலரடியேனுன்னேத்
தெண்டிரைவளாகமுற்றுந்தேடினேன்றேடித்தேடிக்
கண்டனன்களாவினீழல்கருவைமாநகரத்தானே. (சுருு)

தானெனவுருவமாகிச்சங்கற்பவிகற்பங்கொண்டு
வானகமாகிமண்ணுய்க்கடல்களாய்மலேகளாகி
யீனமாமனப்பேய்செய்தவிந்திரசாலந்தன்னு
ளுனேயுணரமாட்டேன்களாகிழனண்ணுவானே. (சுசுு)

நண்ணருந்தவங்கள்செய்துநானுடல்வருந்தமாட்டே
னெண்ணுமைம்புலனுஞ்செற்றங்கிருவினையறுக்கமாட்டேன்
கண்ணகன்ஞாலம்போற்றக்களாநிழலமர்ந்துவாழு
மண்ணலேயினியெவ்வாறேவடியனேனுய்யுமாறே. (சுஎ)

உய்யவோருறுதிநாடாவுலகினிற்சமயமெண்ணும்
வெய்யவார்கலியில்வீழ்ந்துவெந்துயருழக்கின்றேற்குத்
தையலோர்பாகம்வைத்துத்தண்டமிழ்க்கருவைவாழு
மையன்வந்தாண்டுகொண்டதிசயம்விளக்குமாறே. (சுஅ)

அதிசயமுளத்திற்காட்டியகம்புறந்தானுக்காட்டித்
துதிசெயக்கவிநாக்காட்டித்தொடக்கருநேயங்காட்டி
மதியினிற்களிப்புங்காட்டிவந்தெனையாண்டுகொண்டான்
கதியெனவுலகம்போற்றக்களாநிழலமர்ந்தநாதன். (சுக)

நாதனேகவிஞனேவநள்ளிருட்போதிற்சென்ற
தூதனேயிமயவல்லிதுணைவனேகருவையானே
போதநேயத்தினுன்பொலன்கழற்றுண்டுபூண்டு
மேதகீயகற்றிடாமலிருப்பதுமிசையதாமோ. (எ0)

கலிவிருத்தம்.

இசையுஞ்செல்வமுந்திருவுமின்பமு
மசைவிலாதபேரறிவுமுத்தியும்
விசையமுந்தருங்கருவைமேவினேன்
றிசையுடுத்தவன்சீர்படிக்கவே. (எக)

படியளந்தவன்பதுமவேதிய
னடிமுடித்தலமறியொணதவன்
கடிகொண்மாமலர்க்களவினீழலான்
குடியிருக்கவென்னெஞ்சுகோயிலே. (எஉ)

கோயில்சூழவுங்குடங்கைகொட்டவும்
வாயிற்பாடவும்வணங்கியாடவு

மாயிரம்பெயர்க்கருவையாதிப
னேயமுற்றுவாழ்தொண்டர்நேர்வரோ. (எஙூ)

நேர்ந்தநெஞ்சமேநெடிதுவாடிநீ
சோர்ந்ததுன்பமுந்துயரும்போக்குவான்
வார்ந்தசெஞ்சடைக்கருவைவானவ
னர்ந்தபேரருளருவியாடவே. (எச)

ஆமமட்கலத்திகிரியொத்தலைக்
தோடுநெஞ்சமுங்கவலையோர்ந்துனை
நாடுமோதமிழ்க்கருவைநம்பனே
யேடுசேர்மலர்க்களவிலீசனே. (எடு)

ஈசனேயிடத்திமயவல்லியி
னேசனேயியற்கருவைநித்தனே
பூசியேனுனைப்புனிதவாகமம்
வாசியேன்பிறப்பென்றுமாயுமே. (எசு)

பிறவிமாயவுமருள்பெருக்கவுங்
துறவியாய்வனந்துன்னல்வேண்டுமோ
விறைவனெம்பிரான்களவிலீசனென்
றறையுமுன்னமேயனைத்துமெய்துமே. (எஎ)

எய்தியென்செயுங்கருவையெம்பிரான்
கொய்யுநாண்மலர்க்கொன்றைவேணியான்
செய்யபாதமென்சென்னிவைக்கவே
வெய்யகூற்றுவன்வீசுபாசமே. (எஅ)

பாசநீக்கிமூவகைப்பசுக்களை
மாசின்முத்தியாம்வனத்தின்மேய்த்திடு
மீசன்மின்னைநேரிடைச்சிகாதல
னுசில்பால்வணத்தண்டர்நாதனே. (எகூ)

அண்டகோளமுமகிலலோகமு
மண்டுசெந்தழல்வடிவமானவன்
முண்டகக்கழற்கருவைமூர்த்தியைக்
கண்டகண்ணிணைகளிதுளங்குமே. (அ0)

கவிநிலத்துறை.

துளங்குநெஞ்சமேதுயருறுவகையொன்றுசொல்வேன்
வளங்கொள்செந்தமிழ்க்கருவையம்பெரும்பதிமருவி
விளங்குபானிறமேனியன்றிருவடிதொழுதா
ளுளந்துகாண்பருந்துறக்கவாழ்விம்மையினளிப்பான். (அக)

இம்மையின்பமுமிறுதியின்முத்தியுமளிக்கு
நம்மையாளுடைநாயகன்கருவைநன்னகரிற்
கொம்மைவெம்மூலக்கொடியொடுமினிதுவீற்றிருக்க
விம்மிமானிடர்வெந்துயருழப்பதென்விரகே. (அஉ)

விரகினுற்சிலர்செய்திடும்வினைகளுமுண்டோ
மருவியம்பரமறைந்துநின்றுட்டுவான்போல
வுரககங்கணக்கருவையாளுருவனின்றுட்டப்
பரவைசூழ்நிலமன்பதைப்பரப்பெலாநடிக்கும். (அங)

நடித்ததாள்களுநகைமணிமுறுவலுமுகமும்
பொடித்தவேர்வெழும்புருவமுமருள்விலோசனமு
முடித்ததண்பிறைவேணியுமுகலிங்கன்மமுமான
பிடித்தசெங்கையுங்காண்பவர்புவியிடைப்பிறவார். (அசு)

பிறந்தயாக்கைகளளப்பிலபெருங்கடற்புவிக்கு
ளிறந்துபோயவல்லாலவற்றெய்தியதுண்டோ
கறந்தபானிறவண்ணனேக்கருத்துறவிருத்திச்
சிறந்தயாக்கையீதிதற்குநான்செய்வதுமுளதோ. (அரு)

உள்ளதில்லதென்றுரைத்திடும்பொருளையுய்த்துணராக்
கள்ளர்நாவினிலிருந்திடாக்களாநறுங்கனியைத்

தெள்ளுசெந்தமிழ்க்கருவையிற்சினகரம்புகுந்து
மெள்ளநான்சென்றுகாண்டலுந்தீர்ந்ததுவிடாயே. (அசு)

விடக்கைமும்மலக்குழிசியைவிளித்தபின்றீண்டாத்
துடக்கைநோய்க்கணந்துணங்கையிட்டாடுமரங்கை
நடக்குஞ்சூத்திரப்பாவையைநான்சுமந்துழலல்
கடக்கநீக்கியென்றருளுவைகருவையுத்தமனே. (அள)

உத்திவாளராமுடித்தபால்வண்ணனேயுனது
பத்திவேண்டுவதன்றியேஞரகிடைப்படினு
மூத்திவேண்டிலேன்றுறக்கமும்வேண்டிலேன்முனிவர்
சித்திவேண்டிலேன்வேண்டிலேன்றிசாதிபர்சிறப்பே. (அஅ)

சிறக்கத்தக்கதுகருவையான்றிருவடிநேய
மறக்கத்தக்கதுமற்றுளசமயத்தின்மயக்கந்
துறக்கத்தக்கதிவ்வுடம்பையானென்றுறுதொடர்பு
பிறக்கத்தக்கதுசிவானந்தவாரியின்பெருக்கே. (அக)

பெருகுகாதல்கொண்டனுதினம்பேதைநெஞ்சடியே
னுருகிநாடவும்வெளிப்படாவுனையுளத்துணர்ந்தே
னிருகணூரவுங்காண்பதற்கென்றெதிர்ந்திடுவாய்
கருகுகண்டனேகருவையிற்களாநறுங்கனியே. (கூ0)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கனிவுறுமனங்கனியனின்பெருங் கருணைதந்தவாபோற்றி நாயி
னே, னினியபாடலாற்களவிலீசனென் றேத்தநாத்தருமிறைவ
போற்றிவான், பனிநிலாவுடன்கங்கைதன்றுசெம் பவளவார்ச
டைப்பரமபோற்றிவிற், குனிவுறுமூனம்புரமெரித்திடக் குருத்த
வாணகைக்குழகபோற்றியே. (கூக)

குழலிவெண்ணிலாவனையவெண்ணகைக் கொடியிடத்துவா
ழ்குருசில்போற்றியென், பழையதீவினைப் பகைதொலைத்திடும்
பாவநாசனேபோற்றிகாய்சினத், தழுவையின்வரித்தோலிசை

த்தபட் டைமருங்கிளெய்போற்றிசெந்தமிழ்க், கழுமலப்பதிக் கவுணியன்புகழ் களவினீழலிற்கடவுள்போற்றியே. (கக)

கடையுகத்தினிற் பொழில்களேழையுங் கனல்கொளுத்திய சுடலையம்பலத், தடலேறுசியென் னம்மைகாணநின் ருடுமைய னே போற்றி போற்றிநெஞ், சிடைவிடாமலுன் சரணபங்கயத் திருக்கமல்கிய விறைவபோற்றிமால், விடையின்மேவியே கரு வைமாநகர் வீதிவாய்வரும் விமலபோற்றியே. (கஉ)

விமலபோற்றிநின் பெருமைநாரணன் விரிஞ்சனுதியோ ரறி யகிற்கிலா, வமலபோற்றிநா னறியும்வண்ணமுன் னறிவுதந்தரு ளறிவபோற்றிதண், கமலவாவிசூழ் கருவைமாநகர்க் களவினீ முல்வாழ் காலகாலனே, யிமயமால்வரைக் குமரியொப்பனைக் கினியகாதலா போற்றி யெந்தையே. (கங)

எந்தையாயினுய் சூரவனுயினு யிறைவனுயினுய் போற்றியெ ன்மனப், பந்தமாயினுய் வீடுமாயினுப் பரமுமாயினுய் போற்றி தென்புலச், சந்தமால்வரைத் தமிழ்முனிக்குமை தனமணந்த மெய்க் கோலங்காட்டினுய், சுந்தரப்புயத் தழகுபோற்றிநற் சோதிபால்வணத் தாதிபோற்றியே. (கஙி)

ஆதிநின்றிருத் தொண்டுகாதலித் தறிவுசென்றமட் டாகநின் புக, ழோதுசெய்யுளிற் குறையுரைத்ததிங் கொன்றுநின்செவிக் குற்றதில்லையோ, காதனண்புடைக் கவிஞனேவலுங் கங்குலிற் கழற் கால்சிவப்புறத், தூதுசென்றவா போற்றி நாடொறுந் தொழுமவர்க்கருள் கருவையையனே. (கசு)

ஐயனேசரண் போற்றியென்னையா ளப்பனேசரண் போற்றி பொய்யிலா, மெய்யனேசரண் போற்றிவானவர் வேந்தனேசர ண்போற்றி மான்மழுக், கையனேசரண் போற்றிகாலனைக் கா ய்ந்தவாசரண் போற்றி தீநிறச், செய்யனேசரண் போற்றிகா மனைச் செற்றவாசரண் போற்றிதேவனே. (கஎ)

தேவனேபிறர்க் கடிமையுற்றிலேன் சிந்தைதின்வசந் தந்தத
ன்றியு, நாவினுற்றினம் பரவிவாழ்த்துவே னுளுமென்குறை தீர்
ப்பதார்கொலோ, காவன்மூவரண் கனல்கொளுத்திடக் கருணை
செய்திடுங் கடவுள் போற்றியான், பாவகாரியே யெனினுமென்
னைநீ பாதுகாப்பதுன் பண்பதாகுமே. (கூஅ)

பண்பயிற்றிவண் டாடுகொன்றையம் படலைமார்பனே போற்
றியம்பிகை, கண்களித்திடத் தில்லைமன்றினிற் கடிநடம்புரி கட
வுள்போற்றிபூஞ், சண்பகச்செழுங் காவின்வேரிசூழ் தன்களா
வனத் தடிகள்போற்றிமீ, விண்பரிப்பவன் றெழுதநம்பனே
வெள்ளைமேனியாய் போற்றி போற்றியே. (கூக)

வெள்ளைமேனியாய் போற்றியொப்பனே மேவுமார்பனே போ
ற்றிபோற்றிபூங், கள்ளலம்புதண் களவினீழலிற் கருணையங்க
டற் கடவுள்போற்றிநா, னுள்ளமொன்றிநின் றடிவழுத்திட
வுதவிசெய்தவா போற்றியின்புறத், தெள்ளுசெந்தமிழ்க் கரு
வைமாநகர்ச் செல்வபோற்றிநின் சீர்கள்போற்றியே. (க00)

திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

அதிவீராமபாண்டியராசன்

அருளிச்செய்த

திருக்கருவை

வெண்பாவந்தாதி.

மூலபாடம்.

இஃது

சென்னபட்டணம்:

ஊ-புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1886.

உ

கணபதிதுணை.

திருக்கருவை

வெண்பாவந்தாதி.

நண்பான தென்கருவை நாதனூர் தன்பேரில்
வெண்பாவந் தாதி விளம்பவே – பண்பாக
மைம்மலியு மெய்ம்மலியு மாற்று புகழ்படைத்த
கைம்மலியு மாமுகத்தோன் காப்பு.

சீரணிந்த தென்கருவைச் செல்வனே யொப்பனையாள்
வாரணிந்த கொங்கை மணந்தோனே – காரணிந்த
கண்டனே நின்பொற் கழலல்லாற் காதலித்த
தொண்டனேற் குண்டோ துணை. (க)

துணைவியொடு மால்விடைமேற் றோன்றிவினை நீக்கி
யிணைமலர்த்தா ளென்சிரத்தி லேற்றிப் – பணிவிடைக்கு
வேண்டாத வென்னை வலியவிலை கொண்டதடுத்
தாண்டான் கருவை யரன். (உ)

அரவணிந்த தென்கருவை யாளுடையான் வேதம்
பரவுங் களவிற் பரமன் – திருவடியை
நேர்ந்தார்க் கணித்தாகு நோ துளமயக்கஞ்
சேர்ந்தார்க்கு முத்தியது சேண். (ங)

சேணிற் கொடிநுடங்குந் தென்கருவை யம்மானே
கோணப் பிறையணியுங் கோமானே – வேணித்
தொடுக்குங் கவிதைத் தொழும்பனுக்கு வந்த
விடுக்கண் களையாத தென். (ச)

என்னெஞ்சில் வைத்தற் கினியதவம் யாதுசெய்தேன்
பொன்னஞ் சிலையாற் புரமெரித்த – முன்னவனே
பன்னம் பயில்கருவை யானே யரவுதொழப்
பொன்னம் பலத்தாடும் பூ. (ரு)

பூமருவு வேதன் புயல்வண்ணன் கண்டறியாத்
தாமமணி முடியுந் தாளிணையும் – யாமறிய
வாழுங் கருவை வளநகரில் வந்துநின்றான்
றாழுஞ் சடைக்களவீ சன். (சு)

ஈசனே யென்று மிமயமயி லொப்பனையா
ணேசனே யென்று நினைந்துருகிப் – டேசினே
னல்வினையைக் கண்டே னவையற்றேன் வாழ்வுற்றேன்
வல்வினையைக் கண்டிலேன் மற்று. (எ)

மற்றுமொரு தெய்வத்தை வாழ்த்தேன் முழுக்காதல்
பற்றி யுளத்துவைத்துப் பாவியேன் – சிற்றடியே
னும்பருமா லும்போற் றெருவன் கருவைநகர்
நம்பெருமா னல்லாது நான். (அ)

நானிலத்தோர் முன்னே நலனழிந்து நானிருந்தாற்
கான நறும்பூங் களவீச – வீனமுரைத்
தென்னைச் சிரிப்பாரென் றெண்ணுதே யெம்பெருமா
னுன்னைச் சிரிப்பாரு முண்டு. (கூ)

உண்டுபல குற்ற முனையடைந்தே னுதலினற்
கண்டு பொறுத்தல் கடன்கண்டாய் – பண்டுதிரஞ்
சிந்த வடித்தவனைச் சீறுது பாசுபதந்
தந்தமுக லிங்கநா தா. (கo)

நாதா தமிழ்க்கருவை நம்பா வெனக்கினிய
தாதா வெனவுன் சரணடைந்துங் – காதுசின

வெவ்விடையின் வீதி விடங்கனே ஈடோறு
மிவ்விடரின் வாடுவதென் யான். (கக)

யாவ னமர ரிடர்தீர நஞ்சுண்டான்
யாவன் கருவை யினிதுறைந்தான் - யாவன்
றவநேர்மை கண்டு தனக்கடிமை கொள்வா
னவனே யெனையாண் டவன். (கஉ)

ஆண்டவனே தென்கருவை யாதியே யாடரவம்
பூண்டவனே யென்றுதினம் போற்றிடவு - மீண்டதுயர்
போகா திருக்குமோ பொங்கிருளு நிற்குமோ
மாகா தவன்றேர் வரின். (கங)

வரந்தருமிப் பார்புரக்கும் வாழ்வுதரும் விண்ணோர்
தரந்தரும்பே ரின்பந் தருமால் - பரந்து
துளவீசன் றேடுந் துணைத்தாட் கருவைக்
களவீச னென்றுரைத்துக் கால். (கச)

காலத்தாற் கால பட்டாற் கருமறலி
சூலத்தா லாவி தொலைவனே - ஞாலத்துட்
டேன்பற்றும் பூங்களவிற் செல்வன் றிருவடியைத்
தான்பற்றும் பற்றுடையான் முன். (கரு)

தானேவந் தென்னைத் தடுத்தடிமை கொண்டானே
யானே பிறக்கு மெழுபிறப்பும் - வானிற்
சிறந்திருக்குந் தென்கருவைச் செல்வனையெண் ணுமன்
மறந்திருக்கு மோவென் மனம். (கசு)

மனமொழிந்து காம மயக்கொழிந்து மாறுச்
சினமொழிந்து வாதனையுந் தேய்ந்தா - லினிய
குருக்களாய் வந்தடிமை கொண்டுவீ டுய்க்குங்
திருக்களா வாழுஞ் சிவம். (கஎ)

சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்
தவநிலையாஞ் சைவநெறி சாரா - ரவனிதனிற்
கான்பரந்த பச்சைக் களாகிழலைக் கைதொழா
ரோன்பிறந்தார் மானிடரா யின்று. (கஅ)

இன்று வருந்துயரந் தீர்ந்தோ மினிச்சிலநாள்
சென்று வருந்துயரந் தீர்ப்பாரா – ரென்று
வருந்தாதே நெஞ்சே மலர்க்களவி னீழ
லிருந்தா ளெழிப்பா னிடர். (கக)

இடர்க்கடலுக் கோட மிதயவிருட்கிரவி
யுடற்பகையை வேரறுக்கு மொள்வா - ளிடப்புறத்தைச்
சூல்வண்ண மேகச் சுரிகுழலுக் கீந்தருளும்
பால்வண்ண நாதன் பதம். (உ0)

பதமறிந்து வாய்பார்த்துப் பற்றுத புல்ல
ரிதமறிந்தாங் கின்சொ லியம்பி - மதிகலங்கி
நன்னுள் கழித்துவிட்டே னுதமுக லிங்கவுனை
யெந்நா ணினைப்பே னினி. (உக)

இனிய வமுதை யிருங்களா வின்கட்
கனியைவளர் மூக்கட் கரும்பைப் - பனியிமயக்
கொம்பினெடுங் கண்டேன் கொடும்பாவ மோகவிடாய்
வெம்புதுயர் கண்டிலேன் மேல். (உஉ)

மேலாம் பதத்தில் விடுவையோ வன்றியெனை
யேலா நரகத் திடுவையோ – சீலமிலா
வன்சித்த ருள்ள மருவாக் களவீச
வுன்சித்த மேதோ வுரை. (உங)

உரைகடந்த வேதத் துயர்வெற்பை யுள்ளங்
கரைகடந்த ஞானக் கடலை - விரிபூ

மருக்கோல வண்டுதுகர் வண்களா மீழற்
திருக்கோயி லிற்கண்டேன் சென்று. (உச)

சென்றது காலஞ் சிதைந்த திளமைநல
நின்றதுசா வென்று நினைந்துருகி - மன்றி
னடிக்கின்ற பால்வண்ணர் நாமமென்ணு மாந்தர்
படிக்கின்ற மூலெல்லாம் பாழ். (உடு)

பாழிற் சமயப் படுகுழியில் வீழாம
லூழி லெனைக்காத் துதவினுய் - காழி
வருமதலைச் சொற்கா மலர்ந்தமுக லிங்கா
பெரும தலையாய பேறு. (உசு)

பேறுபெற்றேன் வாழ்ந்தேன் பிறருக் கினியஞ்சே
ணுறபெற்ற வேணியனுக் காட்பட்டே - னூறுவட்டஞ்
சித்தித்தே னெஞ்சிற் றிருக்களவைக் கைகூப்பி
வந்தித்தேன் தீர்ந்தேன் மயல். (உஎ)

மயக்கமொழி நெஞ்சே மதிமுகமு மூன்று
கயக்கமல மன்னதிருக் கண்ணும் - வியக்குநடை
யன்ன வயற்கருவை யாரியன் ருடொழுதாற்
பின்னைமக் குண்டோ பிறப்பு. (உஅ)

பிறந்த பிறப்பிற் பெரும்பயனே யோரா
றிறந்தவுட லெண்ணிறந்த தென்ப - தமிழ்த்திருந்துங்
கானடரும் பச்சைக் களவீச வெண்ணமன்
மானிடரா யேன்பிறந்தார் வந்து. (உக)

வந்து மனமறுக்க மாற்ருமல் வல்வினையேன்
வெந்துயரம் பார்த்திருக்க வேண்டினைகொல் - கொந்துமல
ரம்பினன் மேனி யழித்தமுக லிங்கவனே
நம்பினர்க் கீதோ நலன். (கூ0)

திருக்கருவை வெண்பாவந்தாதி.

கலனழிந்து மூப்படைந்து நாணழிந்து நோயாற்
புலனழிந்து கண்புதையும் போதி - லுலக
விறைவியொடும் பால்வண்ணு வென்றென் றுனையே
மறுகியழைப் பேனுடி வா. (கக)

ஓடிஞ் சகட்டி னுருளேபோல் வட்டமிட்டுக்
கூடும் பதத்திலெனைக் கூட்டாம - னுடியருள்
பூமலர்க்காச் சூழ்கருவைப் புண்ணியனே பூந்துளவன்
ரூமரைக்கண் வைத்த சரண். (கஉ)

சரண கமலந் தலைமேல்வைத் தாண்டு
மரண பவமிரண்டு மாற்றிக் - கருணைசெய்து
பேரூன தென்கருவைப் பெம்மா னளித்தானே
மாரு விதயமன மால். (கங)

மாலுண்டி நெஞ்சே வருந்துவதென் பால்வண்ணன்
காலுண் டலர்சொரியக் கையுண்டு - நூலுண்டு
வாழ்த்திடநா வுண்டு வாதன் களாவுண்டு
தாழ்த்திடவு முண்டே தலை. (கச)

தலையாய தென்கருவைத் தாணுவே மேருச்
சிலையாற் புரமெரித்த தேவே - யுலகி
லடியவராந் தேவ ரமுதுண்ண நீதான்
கொடியவிட முண்டதென்ன கூறு. (கஞ)

கூறு படுமகியக் கோடரம் விண்ணுடைக்க
நாறுமலர்த் தாளுரக நாடுடைக்கப் - பேறுபெற்ற
மாயவனுர் போற்ற வளருந் தமிழ்க்கருவை
நாயகனு ராடு நடம். (கசு)

நடம்புரிதாள் போற்றிநின்ற நன்முனிய தென்னூர்
விடங்கொ டமிழ்க்கருவை யீசா - வடுங்கூற்றை

வேலினுற் போர்மழுவால் வெல்லாமற் செங்கமலக்
காலினுல் வென்ற கருத்து. (ஈ)

கருத்தழிந்து கன்மக் கலைமறந்து கண்டார்
விருத்தனிவ னென்று வெறுத்துச் - சிரிக்குமுது
காடுகுடி யேற்றுமற் காத்துமுக லிங்காவுன்
னூடுகுடி யேற்றுவதே ஈன்று. (ஊ)

ஈன்கவிஞ ஞகவிய ஞவளித்து நாடோறுந்
தன்கழலே பாடுந் தரமளித்தா - னன்கவைத்த
சூலத்தான் றென்பொதியத் தொல்லோன் றிருமுதமணக்
கோலத்தான் றென்கருவைக் கோ. (ஊ)

கோவா யமரர் குழாம் போற்ற வாழ்ந்தாலுங்
தீவாய் நரகிடைப்போய்ச் சேர்ந்தாலும் - பாவையிடத்
தாண்டகையே தென்கருவை யையா வடியேற்கு
வேண்டுவதுன் பேரே மிக. (ச0)

மிகத்தேடுஞ் செம்பொன்னும் வேட்டமனை யாளு
மகப்பேறு மங்குதவ வாரா - பகைத்துறுக்கிக்
கையாற் கதையேந்திக் காலன் வரிற்கருவை
யையாவென் றோதா தவர்க்கு. (சக)

அவல விடக்கை யழியுமலக் கூட்டைக்
கவலை நிறைத்த கடத்தைப் - புவனிதொறும்
வாளாச் சுமக்கும் வருத்தமொழி பால்வண்ணர்
தாளா வயித்தியநா தா. (சஉ)

நாதனென வந்துன்னை நானடைந்தே னீயுமெனை
யாதரித்தெ னுள்ளுருக்கி யாட்கொண்டாய் - போதித்
திடைபோகத் தள்ளா தியற்கருவை நாதா
கடைபோகக் காத்தல் கடன். (சஊ)

கடலுலக மண்டாண்டங் காயழலி னீற்றி
யடலேயுடன் முற்று மணிந்து – சுடலேதனிற்
றுழ்சடிலத் தென்கருவைத் தாணு தமியனு
யேழிசையாழ் வாசித் திடும். (சச)

வாசித்தே னில்லே வரதன் சிவாகமத்தைப்
பூசித்தே னில்லேயவன் பொன்னடியை – நேசித்தே
யெரப்பனேயாள் கேள்வனென வோதித் துதிக்கிலே
னெப்படியா னீடேறு வேன். (சரு)

ஏறுவது கொல்லே றெரிசுடலே யாடரங்கு
கூறைபுலித் தோன்மணிப்பூண் கோளரா – ஈறு
கரந்தையணி கருவைக் காபாலிக் கென்பால்
வரந்தரவே றுண்டோ வகை. (சசு)

வகிர்மதியக் கண்ணியான் வாணுதல்பா கத்தான்
புகர்முகக்கைம் மாவுரியைப் போர்த்தான் – முகரித்துத்
தென்னு தெனுவென்று வண்டிசைக்குந் தென்கருவை
யென்னுதன் வானேர்க் கிறை. (சள)

இறைப்பொழுது நீங்கா திருகண்ணு நெஞ்சுங்
கறைக்களமுஞ் செஞ்சடிலக் காடும் – பிறைக்கொழுந்தும்
புண்டரிக வான்முகமும்பூ ங்கள்வி னீழலோ
ணெண்டளரப் புன்மூர லும். (சஅ)

மூரலாற் ருளான் முளரித் திருக்கண்ணுற்
காருலாஞ் சோலைக் கருவேசர் – நேரலரூர்
சுட்டார்வெங் கூற்றை யுதைத்தார்தொல் வேளையெய்ய
வொட்டா தெரித்தா ருடல். (சகூ)

உடலி லுயிரா யுயிர்க்குயிரா ணீனைக்
கடலுலகெல் லாந்தேடிக் காணேன் – கொடியதொரு

புன்கருவை மாற்றிப் புரந்தவனைப் புண்ணியனை
நன்கருவை யிற்கண்டே னுன். (நிo)

நானே யறிந்தவனை நாடற் கெளிதாமோ
கானேர் பசிய களாவனத்தான் – ரூனேயென்
னுள்ளச் சிலையை யுலைவாய் மெழுகெனவே
மெள்ளக் கரைக்கா விடின். (நிக)

விட்டேன் பரசமய மேவாது வேர்களைந்து
சுட்டேன் பொய்க்காமத் தொடர்பெல்லாம் – பட்டநுதற்
கைம்மா வுரித்த களவீச னைக்கருவைப்
பெம்மானை யான்பணிந்த பின். (நிஉ)

பின்னை தழுவுங் கணையேன் பெரும்பாந்தண்
மன்னு நெடுநாண் மலைவில்லே – னென்னே
பகைத்தவர்த முப்புரமோ பால்வண்ணா நீயே
சகைத்தெரிக்கப் போமே நமக்கு. (நிங)

நமரங்கா டென்கருவை நாதவடு வெஞ்சூர்க்
குமரனுக்கா ளாய்ப்பணிந்த கோமான் – றமரக்
கருங்கடனஞ் சுண்ட களவீச னென்றுன்
மருங்கடரு மோதுயரும் வந்து. (நிச)

வந்தடர மாட்டாய் பிரிவை மனக்கொண்டு
நைந்து துயருழக்கு நல்குரவே – பைந்துதலை
நாக்கவைத்த பாம்பணியு நாதன்பால் வண்ணனமை
நீக்கவைத்தா லென்செய்வாய் நீ. (நிஎ)

நீயேவந் துற்ற நெடுந்துயரந் தீர்த்திலையே
னுயேனை யார்புரந்து நாட்டுவார் – போயிருவ
ராங்களவா வண்ண மழலுருவாய் நீண்டுவளர்
பூங்களவி னுதா புகல். (நிசு)

புகழ்ந்திடுவேன் யானே புவியேழு மாய
னகழ்ந்திடவுங் காண வடிக – ளுகந்தோறுந்
தோற்றுமுக நான்காற் சுருதிக் கவிவிரிஞ்சன்
சாற்றுமுக லிங்கநாதா. (நுஎ)

முகலிங்க நாதா முழுதுங்காத் தோம்பும்
புகலிங் கடியனுக்குன் போலச் - சகதலத்திற்
காருண்ட சோலைக் கருவேச னீயன்றி
யாருண்டு சொல்வா யறிந்து. (நுஅ)

அறியேன்மற் றொன்று மரும்பொருளே யென்றுங்
குறியே னெழுத்தைந்துங் கூறேன் – வறிதே
பிறந்தலுத்தேன் றென்கருமைப் பெம்மானே மீள
விறந்தலுத்தே னென்செய்தே னியான். (நுக)

என்செயலுன் ரூளி னியமலர் சாத்துவதே
யுன்செயலென் றுன்ப மொழிப்பதே - மின்புரையும்
வேணியாய் தென்கருவை வேந்தே யனலேந்தும்
பாணியாய் வேதாதி பா. (சூo)

பாகம் பழுத்த பவளக் குணக்குன்றே
மோகங் கடந்த முதல்வனே – யாகமஞ்
ஞாய்கருவை யானே யமலா வடியேனைத்
தாய்கருவை யானே சரண். (சூக)

சரணம் விதியின் றலையழிவாக் கந்தீர்
பரம கதியருட்கண் பார்க்கிற் – றிருவடியார்
வன்பிறவித் துன்பமெல்லா மாற்றுமுக லிங்காவென்
புன்பிறவித் துன்பமெல்லாம் போம். (சூஉ)

போத மறியேன் புகன்றகவி விண்ணப்ப
மேதுந் திருச்செவியி லேறுமோ - சீதநிலாத்

திங்க ளணியுந் திருச்சடைமேற் புன்பூளை
தங்கவணி யுங்கருவே சா. (கூஙு)

சாதன் மூடுகிற் றனைமறந்து நாவிறங்கு
மாதுயரிற் சற்றும் வழுத்தறியே – னுதலினு
லப்பொழுதைக் கிப்பொழுதே யன்பால் வழுத்துகின்றே
னெப்பனியாள் பாகா வுனை. (கூச)

உனைத்துதித்த நாவா லுறுதியென்றேர் தெய்வந்
தனைத்துதியேன் சென்னியுறத் தாழ்ந்தே – னினைத்துணையுஞ்
சிந்தியேன் வாழ்த்தேன் றிருக்களவி னுயகனே
வந்தியேன் பற்றேன் மனம். (கூடு)

பற்று தழற்சுடலை மன்றிற் பதமெடித்துச்
சுற்று பவுரிகொளுந் தூயோனே – தொற்றவனே
மட்டொழுகும் பூங்களா வள்ளலே யென்றுனைக்கின்
விட்டொழிந்து போமே வினை. (கூசு)

வினைவிலங்கை வெட்டுமருள் வீட்டின்பங் காட்டு
நினையுனை வெல்லா நிரப்புங் – கனவிதழிப்
பூமாலை யெண்டோட் புனிதன் களாவனத்துக்
காமாரி பொன்னங் கழல். (கூள)

கழலாப் பிறவிக் கடற்சுழியிற் பட்டுச்
சுழலா வறிவு தொலைந்தே – னிழல்சுவித்துக்
குன்றதிர்க்கு மாவுரிவைக் கோமானே பால்வண்ணு
வென்றழைப்பேன் வேறறியே னே. (கூஅ)

ஏத மகற்றி யிருமை பெருமையெனும்
வாத மகற்றியெனை வாழ்வித்தர்ன் – காதுபுலித்
தோலுடையான் பைங்களவின் றூறுடையான் கூற்றுதைத்த
காலுடையான் பஞ்சாக் கரன். (கூகூ)

கரங்கொண் டலர்தூவார் கண்கொண்டு பாரார்
சிரங்கொண் டடியிறைஞ்சல் செய்யா - ருரங்கொண்ட
வேற்றில்வருந் தென்கருவை யீசனுக்காட் செய்யாமற்
கூற்றுவற்காட் செய்வார் குணம். (எ0)

குணக்குன்றே தென்கருவைக் கோவே நறும்பூ
மணக்குங் களாவனத்து வாழ்வே - கணப்பொழுது
மன்னே மறந்த வருங்குழவி யுய்ந்தாலு
முன்னேமறந் துய்யா துயிர். (எக)

உயிரிறந்த பொய்க்கூட்டை யுற்ற தொடுத்து
வயிரவிற லிற்றீ மடித்துப் - பெயரழியச்
சுட்டுநீ ருக்குமுன்னஞ் சொல்லீர் கருவைமன்றி
னட்டமிடுங் காலி னலம். (எஉ)

நலனழிந்து நல்வினைபோய் நாணழிந்து நல்ல
குலனழிந்து நல்சுரவு கூர்ந்து - பலரிகழ
நிற்ப ரினைத்துயிராய் நின்றினைத் தென்கருவைத்
தற்பரனைத் தான்றுதியா தார். (எங)

தாரமனை மட்டுந் தனையறிந்தோ ரூர்மட்டுஞ்
சேருமுற வவ்வூர்த் தெருமட்டுஞ் - சார்வதன்றி
நங்கருவை யானென்ற நல்வினைபோற் செல்கதியி
னெங்குமுத வாரோ யிவர். (எச)

இவருறவ ரொன்ப ரிவர்பகைஞ ரொன்ப
ரவரவராற் செய்வதொன்றுங் காமோ - வெவனோதுந்
தேனெழுகும் பூங்களவார் செய்விப்ப தன்றியிந்த
மானிடரா லுண்டோ வசம். (எடு)

வசமறுகித் துன்பம் வருத்தமெலிந் தாலு
மசையுறுநோய் கொண்டா லுமையா - விசையளிசேர்

தாமமரு வேணித் தமிழ்க்கருவை நாதாவுன்
னுமமற வாதடியே னு. (எசு)

நாவுக் கழகுனது நாம நயந்துரைக்கும்
பாவுக் கழகுனையே பாடுவது - தாவில்
கலைக்கழகு ஞானங் கருவையா னேயென்
றலைக்கழகு நின்கமலத் தாள். (எஎ)

தாளா லெனது தலையெழுத்தை யுஞ்சிதைத்து
மீளா வடிமை விலையெழுதி - யாளா
யுளவருத்தந் தீர வுவந்தெனவந் தாண்டான்
களவனத்தி லொப்பனேபா கன். (எஅ)

கன்னற் சிலேவளையக் காள்வளைய நேர்வுருவ
வன்னமனை யார்கலவிக் காளாகி - முன்னித்
திரிந்ததெல்லாம் போதுமப்பா தென்கருவை வேந்தே
பரிந்தடிமை கொள்வாயிப் பால். (எக)

பாலன் பசிக்கிரங்கிப் பாற்கடலை யீந்தருளு
நீல மணிமிடற்ற னீயன்றே - சோலைதொறுந்
தேனிரங்குந் தென்கருவைச் செல்வா கொடுந்துயரால்
யானிரங்க நீயிரங்கா யென். (அ0)

இரங்கா யெனினு மிரங்கினும்யான் வேண்டும்
பரங்கான் கருவைப் பரனே - நிரந்தரமு
மிற்கணவ னீத்தாலு நீங்கா திருக்குமொரு
பொற்புடைய கற்புடையாள் போல். (அக)

கற்பங் கடந்து கடவுளராய் வாழ்வரோ
பொற்பங் கயன்முதலாம் புத்தேளி - ரற்புதமே
தெவ்வடக்கு சூலத்தார் தென்கருவை நாதனுர்
வெவ்விடத்தை யுண்ணு விடின். (அஉ)

விடக்குடலிற் புக்கு விரித்தவிருண் மாயைத்
தூடக்கறுத்த ஞானச் சுடரை – ஈடத்திற்
றலைமைபெற்ற தென்கருவைத் தாணுவைக்கண் டெள்ள
நிலைமைபெற்றே னீடேறி னேன். (அங)

ஏறுபட்டுக் கல்லா லிருஞ்சிலையா லெற்றுண்டு
மாறுகட்ட மாற்ற லடியுண்டு – மூறுபட்ட
வாதையா லோகருவை வாணனே பொன்மேனி
பாதியாய்த் தேய்ந்தாய் பகர். (அச)

பகர வருமெழுத்திற் பால்வண்ணு நின்னை
யகரமுத லெம்பத்தொன் றுக்கிப் – புகலாதே
யஞ்செழுத்தா னென்பதென் ஞதி மறைமுதனூ
னெஞ்செழுத்தி வாழு நிலம். (அந)

நிலத்திற் பிறந்துடனே நீர்தோய் பசுமட்
கலத்திற் சிதையுமிந்தக் காய – நலத்திற்
கடியேறு பூங்களவிற் கண்ணுதலே மீள
வடியேன் சுமவா தருள். (அசு)

அருளுதவுந் துன்ப மகற்றியறி வாக்குந்
தெருளுதவும் வீட்டின்பஞ் சேர்க்கு – மருவார்
புனக்களவைக் கோயில்கொண்ட புண்ணியனென் றோத
மனக்களவைத் தீர்க்கு மருந்து. (அள)

மருந்தா லொழியா மனத்துன்ப நோயா
யிருந்தா லுனையெவ்வா றேத்தித் – திருந்துபுகழ்ச்
சொன்மாலை சாத்துவேன் சொற்கருவை யாய்கடுக்கைப்
பொன்மாலை மார்பா புகல். (அஅ)

புகையுந் தழல்கண்ணிற் பொங்குசினத் தாலே
புகைகொண்டு காலபடர் பற்றி – மிகவுந்

தணவாத் துயர்தருமுன் றண்களா வீசன்
கணநா தனேமனமே காண். (அசு)

காவென்றுஞ் சங்கென்றுங் கார்முகிலென் றங்கவர்மேற்
பாவென்றும் பாடப் பதந்தெரிந்த - நாவென்றுந்
தன்னேப்பா விக்கத் தமிழ்க்கருவை நாதனு
மென்னேப்பா வித்தாரிப் பால். (கூ0)

பருவ மழைத்துளியைப் பார்ப்பதுபோ னுயே
னுருகி யுணங்கி யுடைந்தே - னரிவையுமை
வல்லவனே தென்கருவை வள்ளலே நீயுதவு
நல்லருளைப் பார்த்திருந்து நான். (கூக)

இருக்குக் திருக்கோயி லேழையே னெஞ்சோ
மருக்கொள் கயிலே வாையோ - திருக்களவோ
சோதிமணி மன்றே சுடர்விசும்போ பால்வண்ணு
வோது மறையோ வுனக்கு. (கூஉ)

உனக்கடிமை நானல்லா துண்டுபல ரோனு
மெனக்குநீ யல்லாமல் யாரோ - நினைக்கனிவா
னுனைழைத்தே னென்னுனு நற்கருவை யானேநீ
தானழைத்தா லன்றே தரம். (கூங)

தரம்பிரித்துக் கொள்ளுந் தமிழ்ப்பாடல் கொண்டு
வரம்பிரித்து வாழ்வு வழங்கின் - விரிந்தநிலா
வேணிவைத்த தென்கருவை வெள்ளவள்ள லேயுனக்கு
நீணிலத்தி லுண்டோ நிகர். (கூச)

நிகரற்ற தென்கருவை நித்தனெனே யாளுந்
தகரக் குழலி தலேவன் - சகமடித்த
வெள்வடிவ னெந்தை விளங்கியுறை யுங்கோயிற்
கள்வடியுந் தண்பூங் களா. (கூநி)

களவிட்ட நெஞ்சாற் கருவையாய் நின்சீ
ரளவிட் டுணைத்துதிப்பே னல்லே - னுளவிட்டம்
பெற்றதன்றி நாயேனும் பித்தாய்ப் பிதற்றுபுன்சொல்
குற்றமின்றி நன்றிதெனக் கொள். (கசு)

கொள்பவனு னீயே கொடுக்குமவன் கொள்பொருட்டால்
விள்வதென் கைம்மாறு வேண்டுமோ - வுள்வதென்கொ
றேனிறைகொன் றைச்சடிலச் செல்வக் களவீச
பானிறமெய் கொண்டாயிப் பார். (கள)

பார்முதலாய் வானப் பரப்பா யனேத்தினுக்குங்
கார்முதலா யுண்டியருள் காப்பாகிச் - சீர்முதலா
யார்க்குந் துணையாங் களவீச நின்னையன்றிப்
பார்க்கினுண்டோ வின்பம் பகர். (கஅ)

கங்கந் தொடருங் கழுமுட் படையுடைய
மங்கையுமை யொப்பனையாள் வாரணிந்த - கொங்கை
தழுவுந் திருமார்புந் தானுணரா நாயேன்
மூழுவெந் துயரமும்போ மோ. (கக)

மோன விரத முனிவர் விழித்துறங்கு
ஞான துரியமுத னண்ணுவோர் - மானதத்தி
னுள்ளுவதுந் தன்னைமறந் தொன்றுவதும் பால்வண்ணஞ்
தெள்ளுவது நின்மலர்த்தாட் சீர். (கஂ)

திருக்கருவை வெண்பாவந்தாதி
மூற்றிற்று.

உ

சிவமயம்.

மதுரைப்

பதிற்றுப்பத்தந்தாதி

சுத்தசைவராகிய

பரஞ்சோதிமாமுனிவர்

அருளிச்செய்தது.

இஃது,

ஸ்ரீ - புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

தாரணஸ்ரீ ஆடிமீ.

கணபதிதுணை.

மதுரைப்
பதிற்றுப்பத்தந்தாதி.

காப்பு.

பைந்தொடிபாற்சொக்கர்பதிற்றுப்பத்தந்தாதிச்
செந்தமிழைப்பாடச்செயலளிக்குஞ் - சந்ததமுஞ்
சிந்தாவளமதுரைச்சித்திவிநாயகனுந்
தந்தாவளமதுரைதந்து.

மேகம்வரக்கண்டுளங்களித்துவிரிக்குந்தோகைமயிலாடப்
பூகமினத்தும்வெண்டாளம்பொழியுமதுரைக்கயற்கண்ணுள்
பாகமிருக்குஞ்சொக்கர்பசுபதியாயண்டப்பரப்பாகி
ஏகமெனக்கொண்டிருப்பாரொன்னிதயத்தலத்துமிருப்பாரோ.

இருக்குந்திருக்கோலமு முமையாளிடப் பாகமுஞ லிலங்
குகின்ற, மருக்குங்கும மார்பமும்புயமும் வரதாபயமு மா
ன்மழுவுந், திருக்குண்டலமு மதுரேசர் சின்மூரலுமென் கன்
மனத்தை, யுருக்கும்வதனும் புயமுமெனக் குவகைவிளக்கு
முயிராமே. (உ)

விளக்குமுயிரிற் பிறக்தொடுங்கி மேவுமவத்தை தனைப்
போலக், இளக்குமுலக கின்பால்வந் தடங்கக்கிடந்த கீர்த்தி
யெல்லாம், விளக்குமிடமோ சிற்றகிலமதுரைக் கயற்கண
மடந்தைமுலை, திளக்குமணியே தெவிட்டாத தேனேமுக்
கட் செழுங்கனியெ. (ஊ)

கனியுங்கிழங்குங்கருக்காயுங்காற்றுஞ்சருகுமருந்தியிரு
பனியுமழையும்வெயிலுநின்றுபடிவந்திரிந்துபுலனைந்தும்
முனியும்படிவீணருந்தவஞ்செய்முனிகாண்மதுரைபுகுவீரோல்
இனியுங்களுக்குமதுசோசெல்லாப்பதமுந்தருவாரே. (ச)

தருவேவறிஞர்க் கிருநிதியே சனகாதியர்க்குப் பொருளு
ரைத்த, குருவேகுருமா மணிச்சுடரே கோதிலாத செழுந்தே
னே, யருவேயுருவே யருவுருவே யகிலாண்டமும்வந் தடங்கு
தற்கோர், கருவேமதுரை வருகடப்பங் காட்டாயுனை நீகாட்
டாயே. (ரு)

காட்டத் தெரிபோற்கலத்தநெறி காட்டத்தெரியு மேங்கு
மனக், கோட்டத்தெனது சிற்றறிவாற் குறிக்கப்படுமோ கூ
றுய்நீ, ஈட்டக்களிவண் டடைகிடக்கு மிதழிக்கினம்போல்
வேப்பலங்கல், சூட்டப்பசும் பொன்முடிசூடுஞ் சொக்கே
மதுரைத் தூயோனே. (சு)

தூயகயற்கண் மடக்கொடிசேர் சொக்கேமுக்கட் சுடர்க்
கொழுந்தே, சேயபவளக் கிரியேயென் சிந்தாமணியே தெள்
ளமுதே, காயமுதலாங் கடைச்சரக்குன் கருவூலத்தி லிருந்து
வரும், மாயமறியே னிச்சரக்கு மாறுச்சரக்கோ கூறுயே. ()

கூறென்றுளதாஞ் சத்தியொரு கூறுஞ்சிவமே கூறுங்கா
ல், வேறென்றுளதோ மெய்யுனக்குமெய் கண்டவர்க்கு வெ
ளியாமால், ஏறென்றுடைய பசுபதியே யெழுவாரியு மழை
த்தவையை, ஆறென்றழைத்த வருட்கடலே யாலவாயி லம
ர்த்தானே. (அ)

அமரர்க்கிறைவா மும்மூலப்பெண் ணனகுமரிக் கழகா
தென், குமரித்துறைவா வென்றுனித்தங் கூடற்சிவனைப் பா
டாமல், தமருக்கெனினும் பசிதணிக்கத் தறுகட்கொடியர்
தமைப்பாடிக், கமருக்கிறைப்பார்க் கினமான கலிவாணரு
நெஞ் சுலைவாரே. (கூ)

உலமேன் மெழுகொத்துறுபிணியா லுருகவிதிசற் றுருகா தென், தலைமேலெழுதுந் தீயெழுத்தைத் தண்ணீரெழுத்தாத் தணிப்பாயோ, மூலமேல்விளங்கு முத்தெனவெண் முறுவ லரும்பு மோட்டிமய, மலைமேன்மருந்து கலந்தமுக்கண் மரு ந்தேயாலவாயானே. (கo)

வேறு.

வாயினும்புலியுடம்பினுமனத்தினுமறத்துறைபடிந்தாடு காயினுங்கடையேன்கிடைநோயொடுகல்குரவொழிக்காயோ தீயினுங்கொடியார்புரம்பொருதனிச்சிங்கமேயென்கோவே தாயினுந்துணையேமதுரேசனேதத்துவங்கடந்தோனே. (கக)

தத்துவப்பெரு ஈடகசாலையுஞ் சமைத்தவி ரயங்காட்டி, அத்தலத்தெனை யாட்டுவிப்பானு மென்னுடலைக் காண்பானு ம், எய்த்திடப்பெரு தெழுதிரைநீச்சிவந் தெடுத்தென தினை ப்பாற, வைத்துமெய்ப் பதந்தருவள்ளலு மதுரைவெள் வி டையானே. (கஉ)

வெள்விடைக் கொடியுயர்த்தசொக்கேயைந்துவிடயமென் றெடுத்தோதுங், கள்வருக்கென தறிவறைபோன தென்கரு த்தைநீ யறியாயோ, உள்ளுருத்தமும் பிறவுமேகண்டிருக் தொளித்தனை யெனையுய்யக், கொள்வதற் கிதுபருவமென் றேயினிக் கூப்பிடக் கடவேனே. (கஙூ)

கடவதொன்றிலை யுரைசெய மனமுதற்கரணமுஞ் செய லாதி, அடவருக்குய ரின்பழநீயெனை யருத்தத லறியேனு ன், மடவனம்பெடைக் குருகொடு மணஞ்செய மணஞ்செறி மலர்க்காவிற், குடவலம்புரி முழங்கவான் முழவதிர் கூடல ம்பதியானே. (கச)

கூடலாதியை யணங்கொருபாகனைக் குணங்குறி யில்லா னை, வீடலாவெளி வீட்டிருந்திமையிலா விழியினற் கண்டோ

ர்கள், ஓடலாதபொற்கலத் துண்டுபெண்ணலா ரொண்ண லத் துறையாடிப், பாடலாடலிற் பயிலினுமிருவயிற் பற்ற றுத் திருப்பாரே. (கரு)

பற்றுக்கோடுநின் பதமன்றியிலே நெடும்பாய்மரக் கொடி போலச், சுற்றுக்கோடியுஞ் சுழன்றுமெய்த் தேனினித்துன் புறுந் தகையென்னே, சுற்றுக்கோதறத்தெளிந்தவர்க் கமுத மே கயற்கண்மா திடப்பாகம், பெற்றுக்கோயில்கொண் டமர்ந்தருளாலவாய்ப் பிறையணி சடையானே. (கசு)

சடைக்கிசைந்த வெண்டிங்களுங் கங்கையுஞ்சங்கவெண் குழைக்காதும், படைக்கணிச்சியுஞ் சூலமுஞ்செங் கையும் பங்கயத் திருத்தாளுங், கடைக்கணித் தருள்சுரந்தகண்களு மணிக்கண்டமு மதுரேசர், அடைக்கலப்பொருள் காக்குநன் னேறியும் யானயர்ப்பனே வயரோனே. (கள)

அயர்க்கிலேனுனை நீனைக்கிலேன் பிறரைநின்னல வாயகம் விட்டுப், பெயர்க்கிலேன்பதி மென்னவும்பெறுவ னேற்பெற றற்கரும் பொருள்யாதோ, துயர்க்கிலேசமற் றுனதுபொன் னுலயஞ் சூழ்ந்துகை தொழுதேமெய், வெயர்க்கிலேனையும் புரந்தருள் வள்ளலேவெள்ளியம் பலத்தானே. (சஅ)

வெள்ளியம்பல வாணனைப் பாணனுல் விறகுவிற்றுழல்வா னைப், புள்ளியம்புலித் தோலுடையாளனைப் புந்தியாற்றொழு தோர்கள், பள்ளியந்துலா வேறுவர்மணிமுடி பரிப்பர்பார் முழு தாள்வர், தெள்ளிருங்கலை நன்மகப்பெறுவர்பின் சிவ கதி யடைவாரே. (கக)

அடைந்தவர்க்கருள் வெள்ளிமன்றுடல் செயானந்தக் கட லூடு, குடைந்தவர்க்கமு தெழுமதிலெழுபவக் குரைகடற் சுரை காண்பார், மிடைந்தவர்க்கவெண் சூடவீழ்முழக்கரு விரிகடல் கிடந்தார்ப்பக், கடைந்தவர்க் கமுதெழுமதிற்ப வக் கடல்கடப்பரோ கடவாரே. (உ0)

(வேறு,)

கடவுளாயுரிவைபோர்த்துக்கதம்பகாந்தாரத்தாடும்
வடவரைவளைத்தசெந்தேன்வான்மகன்முடிக்குமேலாந்
தடவரைச்சென்னிதாங்குதண்ணருத்தையின்வேட்ட
முடவரைநிகர்ப்பநானுமுகந்துணத்தொடங்கினேனே. (உக)

தொடங்குமைந்தொழிலுமோயப்பெயர்த்துமோ தொடங்கு
தடங்குவதெந்தக்காலமாருனக்கயிக்கமையா [வாயீ
முடங்குபைங்குலையிற்பூந்தேன்முரிதிரைப்பரவைக்கேழு
மடங்குதண்கதலிசாய்க்குமதுரையிற்சிவபிரானே. (உஉ)

சிவமொடுசத்தியாகிச்செகமெலாநிறைந்தநீயே
நவவடிவெடுத்தாயிந்திரஞாலமோகோலமேயோ
பவமறத்தவஞ்செயாதபழவினைக்கொடியேற்கின்று
தவமெனப்பொலியுங்கூடற்சயம்புவேயியம்புவாயே. (உங)

இயம்பிடுமிருளைநீக்கியெனைவெளிப்படுத்தல்வேண்டும்
கயம்படுதுறையில்வீழ்ந்தகண்ணிலிக்குதவுவான்போற்
பயம்படவெண்பொற்சோதிபடருமன்றத்தினூடு
நயம்படுமறைகள்பாடநாடகஞவிற்றுவானே. (உச)

நாடகத்தொழில்வராதநட்டுவக்குறையோநாளும்
பாடகப்பதமம்பூத்தபாத்திரக்குறையோசொல்லாய்
சூடகத்தளிர்க்கைபாகாசோமசுந்தரனேகூடல்
ஆடகக்குன்றேயென்னையாட்டுவித்தனைநன்றுயே. (உரு)

நன்றுளேனல்லேன்யார்க்குநல்லறம்புரியேனன்றிக்
கொன்றுளேனற்றம்பார்க்குங்கூற்றுவன்விடுவானல்லன்
இன்றுளேனுளேயில்லேனியமன்வரும்போதுன்வெள்ளி
மன்றுளேயிருந்தசொக்கேவழக்குரீயென்சொல்வாயே. ()

என்சொல்வே னென்சொல்வே னென்னேழைமை யிருந்
தபாவம், புன்சொலாற் பாடிப்பாடிப் புகழ்பெற விரும்பா

கின்றேன், வன்சொலார் முன்செலாத மதுரையிற் சொக் கேவேதம், உன்சொலா லுன்னேவாழ்த்தி யுன்னேயுமுணரா தன்றே. (உஎ)

உன்னேயே பொருளென்பார் மற்றெருவரைப் பொருளென்பாரோ, பொன்னேயே பொதியப்பார்ப்பார் புழுதியைப் பொதிவார் கொல்லோ, அன்னேயே தந்தையே தென்னுல வாய்ச் சொக்கேதஞ்சம், பின்னேயே துணேயலாமற் பிறந்திறந்துழலு வோர்க்கே. (உஅ)

பிறந்திறந்துழல்வீர்நீங்கள்பிறதெய்வந்தொழுதோவுய்வீர் கறந்தருந்தினருமுண்டோகற்பசுமுலேயைக்கையால் அறந்துறந்தவர்க்கெய்தாதவாலவாய்ச்சொக்கர்தாளே மறந்திருந்தினிக்கெடாமல்வணங்குவீர்வணங்குவீரே. (உகூ)

வணங்கினர்க் கிதஞ்செய்யாமல் மறலிவாய்க் கிரையாய் வாழும், பிணங்களேப் பின்செல்வீர்நும் பேதைமைதவிர வேண்டில், அணங்கினுக் கணங்குகூட லங்கயற்கண்ணுள் பாகன், குணங்களேப் பரவியன்னேன் கோயிலே வலஞ்செய்வீரே.

வேறு.

செய்வானுஞ்செய்விப்பவனுஞ்செயும்பொருளும் பைவாளரவப்பணிதரித்தசொக்கேசீ யுய்வாரஃதறிவாருன்னருளென்றுன்னியவர் வைவாளநோவார்மதிப்பாளாவாழ்த்தாரே. (ஙக)

வாழ்வார்க்கியற்கைமதுரேசர்கோயில்வலஞ் சூழ்வார்க்குத்தொண்டுசெயுந்துன்பமிலாப்பேர்வாழ்க்கை வீழ்வார்க்கடையாளம்வீணரொடுங்கூடிவெறுங் கூழ்வார்ப்பவர்தமக்குக்குற்றேவல்செய்வதுவே. (ஙஉ)

குற்றேவல்செய்பரைக்கும்பிடேன்கோயில்வலஞ் சுற்றேன்மெழுகேன்சுடர்த்திரியுந்தூண்டுகிலேன்

கற்றேனுமல்லேன்கடம்பவனச்சொக்கேசான்
மற்றேதினியுரைக்கேன்வன்கூற்றுக்கென்கூற்றே. (கக)

கூற்றுக்கோல்கோட்டான்கொடியவனென்றென்னையனல்
ஆற்றுக்கோழிப்படுத்தியண்ணத்தல்செய்யாத
சேற்றுக்கோவீழ்த்தத்திரிகின்றுன்வீழாமல்
ஊற்றுக்கோல்சொக்கேயுனதருளென்றுன்னேனே. (கச)

உன்னர்பிறப்பருடையாய்கயற்கணமூ
தன்னுளுரியுமகலாதவீற்றிருப்புந்
தென்னுலவாயுந்திருமதிலுங்கோபுரமும்
பொன்னுலயச்சிறப்பும்பொற்கமலவாவியுமே. (கஞ)

வாவியார்கூடன்மணிகண்டத்தானையின்னே
சேவியாநாட்குறித்துச்சேவிப்போமென்பதென்னே
ஆவியார்போம்போதவரைமறித்தாணையிட்டுக்
கூவியார்மீட்பார்குடிபோனவீட்டிடே. (கசு)

வீடுகட்டிமாடுகட்டிமெய்யிறுகக்கட்டும்வினை
பூடுகட்டிவிட்டுப்புறப்படமாட்டாதுலண்டு
கூடுகட்டியாங்கேயென்கோட்டைகட்டினேன்கடப்பங்
காடுகட்டியாளுமுக்கட்கட்டித்திரவியமே. (கஎ)

கட்டுக்கிடையாமென்கன்மவித்திலேருருத்து
விட்டுப்படருமிந்தவேலிகட்டாவேளாண்மை
தட்டுப்படாதாய்த்தலையானடப்பதென்று
மட்டுப்படுமோமதுரைச்சிவக்கொழுந்தே. (கஅ)

கொழுந்துமதியணியுங்கூடலிலெங்கோவே
யுழுந்துருளும்போதெனினுமுள்ளுவகையுள்ளுறச்
செழுந்துளவநாறுந்திருவடிக்கீழ்நெஞ்சம்
அழுந்துவதொன்றல்லாலமருலகும்வேண்டேனே. (கக)

வேண்டார்புரமெரியவில்வளைத்தசேவகனே
தூண்டாமணிவிளக்கேசொக்கப்பெருமானே
ஆண்டார்பெருமையடிச்சேரிக்காகாதோ
தீண்டாவினையேன்சிறுமையென்றுதீர்ப்பாயே. (சஅ)

வேறு.

பாயிருக்கத்தறைகிடத்தும் வினையின்பான்மை பழமிருக்க
க்காயுதிர்க்கும் பழுத்திடாத, காயிருக்கப்பழமுதிர்க்கு மெ
னவொண்ணுத கழிமடனுமடுபிணியுங் கலியுரீக்காய், சேயிரு
க்குங்கொன்றை யணிசொக்கேமிக்க திலகநுதற்கயற்கணெ
னுமூலகமீன்ற, தாயிருக்கரீயிருக்கத் துணையிலார்போற்றள
ர்ந்திருக்க நீதியுண்டோசரண் புக்கேனே. (சக)

சரணமலர்கண்டிறைஞ்சு மெதிகள்யோகர்தவ முனிவர்
முதலோர்க்குச்சகளமாகி, அரணமலிதமிழ்க்கூட லாலவாயி
லம்மையொடு மூலலிங்கத் தமர்ந்தகோவே, கரணமறியாது
யிரு மறியாதென்றுகட வுளருட்கண்காட்டக் காண்கின்றேர்
க்கு, மரணமுதல்வன்பிணிகள் வரவொட்டாத வயித்தியனீ
யுனதருளே மருந்துதானே. (சஉ)

தான்விளக்குங்கருஞ் சேற்றைக்கழுவிநீக்குந் தண்புனல்
போலிருவினைக்குந் தனுவாய்நின்ற, ஊன்விளக்குமொழிக்கு
மெனுமுறையாலிந்தவுட லிருந்தன்றேவுறுதி பயக்கவேண்
டும், நான்விளக்குமிதன்றெழிலுக் கெனையுங்காட்டி நடத்து
விக்குமதிகாரி நானன்றேசெந், தேன்விளக்குங்கடம்பவன
நாதாதெய்வத்திரு வாலவாயமர்ந்த தேவதேவே. (சங)

தேவியாத்திருக்கழுத்தி லமரர்பூட்டுந்திரு நாண்மங்கல
நிலையிற் றிரியாவண்ணம், மேவியமைக்கடல்விடத்தை மிட
ற்றேவைத்து விரிஞ்சன்மாலாதியந்த விண்ணோர்க்கெல்லாம்,
ஆவியுறச்செய்தருளென் னப்பாகூடலாலவா யருமருந்தே

யடியனேனைப், பாவியெனத்திருவுளத்தி லடைத்தன்றே வெ
ன்பழவினையைத் தீர்த்தருட்கண்பார்க்கிலாயே. (சச)

பாரறியுமறிவினுமிப் பார்மேனின்ற பசுஞானத்தாலுமெ
ட்டிப் பார்க்கொணாத, பேரறிவேசிற்றறிவேற் கிருளோக்கும்
பேரொளியே யங்கயற்கண் பிரியாதானே, யாரறிவார்தமி
ழருமை யென்கின்றேனென் னறிவீனமன்றேவுன் மது
ரைமூதூர், நீரறியுநெருப்பறியு மறிவுண்டாக்கி நீயறிவித்தா
லறியு நிலமுந்தானே. (சடு)

நிலத்தூடுநிலத்தினுயிர்ப் பயிர்களூடு நெடுவிறகிற்றீயூடு ம
டுபாலின்பத், திலத்தூடுதயிலமென வுறைவாயிந்தச் சீவன்
மூத்திபுரமென்னுந் துவாதசாந்தத், தலத்தூடன்றிருவருளை
ன் னிடத்தேவைத்துத் தருவாகிப்புதலாகித் தரியென்றுலும்,
மலத்தூடுபுழுவடிவாய்ப் பிறவென்றுலு மறித்துமொழியே
ன்சென்ன மனக்கொள்வேனே. (சஎ)

கொள்ளிவட்டங்கறங்குதினை சகடக்கால்வெண் குறுந்
தொடியார்தயிர்மத்து நெடுந்தாளுஞ்சல், எள்ளிவிட்டதொ
ழிற்பிறவித் தண்டல்போக்கி யிறைவாங்குமன் குடிகாளி
ன்றுமீர்தாந், தெள்ளியிட்டவெள்ளநிலாத் தெளித்தல்போ
லுந் திருவாலவாயிறைவன் றிருவெண்ணீற்றை, அள்ளியிட்
டாற்புள்ளியிட்ட கணக்குமாற்றியமருலகிற் கணக்கனெழுத்
தழிக்கலாமே. (சஅ)

அழித்தபடிபடைத்து விளையாடுவானே யாலவாயானே யட
லரிமானேற்றைக், கிழித்தவதளுடுத்துவெள்ளி மன்றுளாடுங்
கேடிலியைத் தொழுதிருக்கக் கிடைத்தமேலோர், பழித்த
லும்வாழ்த்தலுமெறிவாட் படையுஞ்சாந்தும் பாத்திரப்பா
லடிசிலுங்கை வார்த்தகூழும், மழித்தலுநீட்டலுந் தமர்சூழ்
வளமைநாடும் வறுங்காடுமொருபடித்தாய் மதிப்பர்தாமே.()

மதியிலேனிதுவரையும் வரையாதீட்டும் வன்பாவச்சரக்க
ளேத்து மனவாக்காயப், பொதியிலேகொடுதிரிந்தும் பழுது
போகாப் பொழுதுபோகாதசில புசித்தேனெங்குங், கதியி
லேபழவடியார் தம்மைக்கூட்டுங் கயற்கணுமை கலந்தறை
யுங்கடவுள்கூடற், பதியிலேபுகுந்தளவில் வதிதேதீயு பழஞ்
சரக்கும்புதுச்சரக்கும் பணியற்றேனே. (சகூ)

பணிவிடைசெய்பவர்க் கருள்கூர்பரனே செங்கைப்பசுங்
கிளியுந் தவளநகைப்பவளவாயுந், தணிவிடையும்பணிமுலையு
முடையாள்பங்கிற் சங்கரனேதென்கூடற் சயம்புவேகேள்,
அணிவிடயம் பொறிகலங்கி யைம்மேலுந்து மன்றையில் வி
ண்ணப்பமின்றே யடியிட்டேனுன், மணிவிடையின் மணியோ
சைமறலியூர்தி மணிநாவையடக்கும் வகைவருதிநீயே. (சடு)

வேறு.

நீயும்பசுபதி யாருஞ்சிவமய நின்பாலனுதின மன்பான,
தாயுந்திருவரு ளுகளந்தருமொரு சகளம்பொலிவது தானாக
டேன், வாயுண்மைசெய மனமுண்டுருகிட மயல்கொண்ட
வனென மருள்வேனே, தேயும்பிறைநதி தோயுஞ்சடைபூனை
தென்கூடலில்வரு மெங்கோவே. (டுக)

கோவேதமிழ்பூனை தேவேவளமலிகூடற் பதிபொலிகுளிர்
நீழற், காவேயுயரிய மலையேயருணிறை கடலேயிமையவ ரட
லேறே, நீவேறுயிர்களு மூவேறியலென நின்றுய்விதிமுறை
நில்லாவென், நாவேமுதலிய கரணங்களுமூனை நன்றுய்வழி
பட நல்காயே. (டுஉ)

நல்குஞ்சுழிமூனை யிடைபிங்கலையெனு நாடித்திரியமதை
நாடாமே, மல்குங்கனலியில் வளிசென்றுருகிய மதிவெண்
கலைய முதயிலாமே, பல்குந்திருவருள் விழிகொண்டுனை திரு
பதபங்கய மலர்பாராமே, யல்கும்பொழு தலம்விடுவேனரு
ள்புரி யாயேமதுரையி லையாவே. (டுங)

ஐயப்படுபொரு ளையப்படுமவரறியத் தகும்வகை யறிவித்
தே, குய்யப்பிறவியை விடுவித்தருள்புரி கூடற்புதிவரு முமை
பாகா, பையத்திருவருள் செய்யப்பெறிலதி பாவப்பிணிதனி
பான்மைத்தே, யுய்யப்புகலிட மினிவேறிலையெனை யுடையா
யுறவினை துடையாயே. (நிச)

துடையாலிழைபுனை யிடையாலிடைபுனை துகிலால்வனி
தையர் நகிலான்மைப், படையான்மடவன நடையாலினியி
டர் படவேநிலமிசை கடவேனை, விடையார்பிறையணி ச
டையார்மதுரையில் விளையேன்வழிபட விலையோலை, யுடை
யாரடியரோ டெனையாள்பவ ரெனதுள்ளேயுறை பவர்தள்
ளாரே. (நிந)

தள்ளுண்டவரொடு தள்ளுண்டறிவழி தமியற்குறுகதி த
ருவானைத், தெள்ளுந்தமிழுயர் மதுராபுரிவரு திரிசூலப்ப
டையுடையானை, யுள்ளும்புறமு மொளிவெளியென் றுணர்பவ
ரானந்தவிர்பர மானந்தக், கள்ளுண்டிருகுவருணரார் நமன்
வலை கட்டுண்டிழலுவர் கருதுடே. (நிசு)

கருவிதளர்ந்தொரு விகிர்திபிறந்திரு காலைகுறைந்திரு
கண்பஞ்சிட், டிருவினையின்பய னெனவுயர்கொம்பி லிசைத்
தகுடம்பை தனித்தெழியக், குருவிபறந்தென வுயிர்செ
லுமன்றிகல்கொடிய நமன்றமர் கொடுபோமுன், வருவிகண
ங்களை யடிகளைநம்பினன் மறையோய்மதுரையி லிறையோ
யே. (நிள)

இறைவர்பரம்பரர் மதுரையுகந்தவ ரிருகைவெண்டிரை
பொருவையைத், துறைவரசஞ்சலர் கிமலர்கிரஞ்சனர் சொ
க்கர்பதத்துணை துதிசெய்தாற், பிறைநுதல்வஞ்சிய ரனுபவ
மூண்டு பிழைப்பினுமங்கது பிழையன்றே, யுறையொடுமந்தி
ர மூடையவர்நஞ்சென லொழிவதுகண்டன முலகுடே. ()

உலகமடக்கொடி மங்கலநாணென வோலைக்குழைபொரு
நயனமெனத், திலகமெனப்பொலி கூடலினுண்டொரு தேட
ருமாமணி செப்புமதோ, பலகலைகற்றவர் தாமறியாதொரு
பச்சைபழுத்த புரத்தூடே, இலகொளிவிட்டொரு கோடிதி
வாகர னென்னவிளங்கி யிருப்பதுவே. (நிக)

இருவருமன்று வெளிகினமும்வன்றெழி லேனமுமாகியு
மெய்தாத, திருவடியும்புரிசடை முடியுங்கொடு தென்கூடலி
ல்வரு சிவனேகேள், ஒருவரும்வந்தனை யறிகிலனென்கினு மு
டல்பொருவெண்டிரை யுலகெல்லாம், வெருவருமன்பர்கள்
வழிபடுபண்பினில் வெளிபடநின்றனை யொளியாயே. (சுo)

வேறு.

ஒளிமணிச்சுடிகையணை கொள்பாற்கடலு மூற்றிருந்தள
றுவொழுகு, களினமண்டபமுங் கற்பகநாடு நாடரும்பொ
ருளென நாடேன், தெளிதமிழ்க்கூட லாலவாயமர்ந்த தெய்
வமேபுகலெனச் சேர்ந்த, எளியனேனுனதின் னருளேயே
பொருளென் றென்னுளேயெழுதி வைத்தனனே. (சுக)

எழுதியகடத்திங் கிருகிலமிருத்திட் டென்பெலாம் வெ
ள்ளெனத்தெரியக், கழுவினுங்கழுவாத் தகைத்தலாலகத்திற்
களங்கம்விட் டொழியுமோகருதீர், முழுமதிற்கூடற் சொக்
கர்பொற் சரணமுண்டகங் கண்டகன்வழியே, யழுதழுது
ருகு மானந்தவெள்ளத் தாடினேமல ராகுவரே. (சுஉ)

ஆகமப்பொருளே யாரணத்தெளிவே யாலவாய்ச்சூல வே
லரசே, நாகணைக்கணையா யுனதருளன்றே நாயைக்கதியி
லுய்த்ததுவுஞ், சூகரக்குழவிக்கன்னையாய் முலைப்பால் சுரந்
தளித்தது முபதேசங், காகம்விட்டிரியச் சிறைபுடைத்தலைக்
குங் கரிக்குருவிக்கும் வைத்ததுமே. (சுங)

வைத்ததென்னிடத் தோர்வைப்புளததனை மதுரையிற்க
ண்டனன்மாதோ, கைத்தலத்திலங்கு முத்தலைவேற்றுக் கய

ல்விழிக் கரும்பொருபாற்றுப், பைத்தலைப்பூட்டுப் பணைத்த வெண்டோட்டென்பாட்டினுக் கிரங்குபூந்தாட்டு, முத்தாயளந்தவிடையுயர் கொடித்துமூன்று கட்டிளம்பிறை முடித்தே. (சுச)

முடித்தலையிமையோர் வடித்தமிழ்க்கூடன் முதலவர்பொன்னடித் தலத்திறைஞ்சப், படித்தலத்தடைய நெருக்கலுந் திருக்கண் பார்த்திடகந்தி சென்றடித்த, தொடித்தலைப் பிரம்புகமழ்வன கமலத்தொடையலுஞ் சுரும்புணுதரும்பு, பிடித்தலர்துளவுங் கற்பகம்பூத்த பெருவிரைக்குழங்கன் மாலையுமே. (சுரு)

மாலையம்பொழுது மாலைகண்டரவின் வடிவெனமயங்குவோன் மயக்காய், வேலையம்புவனமாய வாழ்வினைத்துமெய்யென வினையனேன் மெலிகோ, காலையம்புயம்போன் முகத்தொளிர் கயற்கட்கரும்பொடி மதுரைமூதூரில், ஆலயங்குடிகொளமுதவாரிதியே யாரணங்கடந்த பூரணனே. (சுசு)

பூரணமழியா மதியமேபிறையைப் புனையுமீராயிர மருப்பு, வாரணமிசையூர் மாணிக்கமலையே. மதுரையம்பதியில் வாழ்வரதா, காரணமூலகுக் குதவுகின்னடியார் கையெழுத்திட்ட தீட்டன்றே, நாரணன்முதலோர் தோரணமசைத்து நகொலாமுறை நடத்துவதே. (சுள)

நடம்புரிமதுரை நம்பரீசிலர்க்கு நல்கியஞான நற்பயனுங், குடம்புரைசெருத்த லானினம்பரந்து கொண்டிடுமண்டு தீம்புனல்போல், மடம்படுசிலர்க்குத் தினைப்பயனும் வளராப்பருகு பானியம்போல், கடம்பமாவனத்தாயினைய வாவினையேன் கடவுளேநோவ தென்கருத்தே. (சுஅ)

கருத்தனேபாச விருத்தனேதுரியங் கடந்துநின்றுலகெலாங் கடந்து, ஒருத்தனே கயற்கணெருத்தி பங்கினனேயுயரிய வெள்ளிமன்றிடு, நிருத்தனேயெனக் கெந்நேரமுமுதர

நெருப்பவித்திருக்க நேரமுங்கண், பொருத்தநேரமு நோய் வருத்தநேரமு மேற்புகழ்ந்துனைத் தொழுவதெப்பொழுதே.

பொழுதறிந்தேத்து முழுவலன்புடையோர் புன்கியங்கோ யில் வீற்றிருப்போன், முழுதொருங்குணர்ந்தோ னகண்டித னகம்பன் முத்தமிழ்மதுரை வாழ்முதல்வன், எழுதருங்கடவு ளனைத்தையுங் காட்டியெவற்றினுந் தோய்வதொன்றில்லா ன், பழுதகன்றடித்த துணர்த்துவெண்படிகம் பத்திபாயாத வாறெனவே. (எ0)

வேறு.

எனக்குன்சேவையைநல்கிடவென்மனம்
உனக்கிடந்திறையுன்வசங்கைவிடேல்
கனக்கும்வஞ்சமுங்கள்ளமுமுள்ளவன்
மனக்குறும்பெறிவாய்மதுரேசனே. (எக)

மதுரையாளும்வழிதிக்கலனைக்
கூதிரையாகக்கொடுவந்தகொற்றவா
அதிருநான்மறையந்தணனேயுனக்
கெதிரிலாயெனக்கென்னிரங்காததே. (எஉ)

இரங்குநீயினியென்னுடைச்சுற்றமுன்
பரங்கள்கூடற்பழியஞ்சியப்பனே
வரங்கண்மூன்றுளவாக்குனைவாழ்த்தவென்
கரங்கள்கூப்பிடக்கட்புலன்காணவே. (எங)

காணவந்தகடம்பவனேசர்தாள்
பூணவந்ததுபுந்தியென்றுலைமை
யாணவந்தொடுத்தஞ்சுமிங்கஞ்சுமே
நாணவந்தமன்சின்மாறுமே. (எச)

ஆறடைத்தவழகியசொக்கனை
மாறெடுத்துவழுதியடித்தநாள்

ஊறுபட்டவுடம்புமக்கில்லையோ
வேறினித்தெய்வமென்கின்றவீணரோ. (எஞ)

வீணளந்தவிரதமில்லாமலெண்
சாணளந்தசரீரந்தளர்வனே
சேணளந்தவெண்டிங்களோச்செம்மணித்
தூணளந்தமதுரையிற்சோதியே. (எசு)

சோதிவெண்பிறைசூடியகூடலான்
ஆதியந்தமிலானெழுத்தஞ்சுடன்
பூதிகண்டிகையைப்பொருட்கொண்டிடாச்
சாதியன்றியுண்டோபுலைச்சாதியே. (எஎ)

சாதிக்கின்றசமாதிவிட்டப்புறம்
போதிக்கின்றபொருளையெங்கேயெனப்
பேதிக்கின்றனபேதைநெஞ்சேயினிச்
சோதிக்கின்றதென்சொக்கரிருக்கவே. (எஅ)

சொக்கருண்டுதுணையென்றிராயவர்
பக்கமன்புபழுத்ததென்றேர்கிலாய்
மக்களென்றுமனையென்றும்வாழ்வென்றும்
ஒக்கலென்றுமுருகுமென்னெஞ்சமே. (எக)

நெஞ்சமாலயநெல்லிருகாழிநந்
தஞ்சமானதமிழ்ச்சொக்கர்தங்கொடை
கஞ்சமாதுகயற்கட்பிராட்டிக்கு
மஞ்சமார்புமணவறைவாமமே. (அ0)

வேறு.

வாமாவுயர்ந்தரவாகனமதமாவொடுதிண்டேர்
தாமாமவைகொடுவந்திவைதாமென்பவர்தம்போற்
போமாகமுநாமென்றுரைபொய்யேயினிமெய்யே
ஆமாறருண்மதுராபுரியணிமால்விடையானே. (அக)

ஆனென்பதுதருமைந்தையுமாடும்பெருமானே
வானென்பதுமுதலாகியமதுரேசனேவாழ்த்தி
யானென்பதுமெனதென்பதுமிபமுண்டவிளாநேர்
தானென்பதுகுறியானதுதவமென்பதுமவமே. (அஉ)

அவமேபொழுதொழியாதினியழியாநீலவரவும்
பவமேமுதல்வினைநீடியபாசத்தளைவிடவும்
உவமையமுமுவமானமுமோன்றுகியமதுரைச்
சிவமேயருள்செயுநீயொருசெயலற்றிருமனமே. (அங)

மனவூசலிலுழல்வேனையுமதுராபுரியீசன்
கனவூடொருபொருளாயிருநயனங்களுநின்றன்
கனவூடுமெனினைவூகெலந்தானெனிலிதன்மேல்
வினவூதியமூளதோகொடுவினைசூழ்வதுமிலையே. (அச)

இலையென்றுமனவஞ்சகரிடமன்பொடுசெலுமா
புலையன்றவர்புகலும்பொருள்பொருளென்றறிவேனே
கலையென்றிலசருகொண்டிருள்கடிகின்றவெனிலவே
மலையென்பதுசிலைகொண்டருண்மதுராபுரியரனே. (அடு)

அரவம்புலிபணியும்பதமருளுஞ்சடையுடையாய்
சுரவங்கமழ்குழல்பங்கமர்கூடற்பெருமானே
பரவஞ்சியர்கமனங்கொலைபழிவஞ்சமொருருவாய்
வரவந்தவென்வினைதீரவரந்தந்தருளினியே. (அசு)

இனிக்குந்தமிழ்மதுரேசனையிருபோதினுநினைவீர்
பனிக்குந்திரைகடற்கும்பமபடர்க்குந்தெறுசுடர்க்குந்
தொனிக்கும்புயலிடிக்கும்புவிதொலைக்குங்கடையனற்குந்
தனிக்குந்தனிவழிக்கும்பிணிதனச்குந்தளரீரே. (அள)

தளவத்தீருகைபங்கினர்தக்கோர்பணிசொக்கர்
துளவைப்பொதியிரூசேவடிதுதியாரருள்பதியார்
களவைப்புரிகயனத்தியர்கலவித்தொழில்பொருளின்
அளவைக்களவெனவிற்பவரழகைப்புகழ்வாரே. (அஅ)

புகழுந்தமிழ்மதுரேசர்பொலன்சேவடிபணியத்
திகழுங்கடல்வையந்தொழுதெய்வந்தனிநிகர்வார்
நிகழுங்குலமிலராயினுநிலைகோடினரெனினு
மிகழுந்தொழிலினராயினுமெவராயினுமவரோ. (அக)

ஏகத்திருவுருவத்தினனெங்கோனுமைபங்கன்
பாகத்தமிழ்பகரும்பசுபதிமேவியகோவில்
பூகக்குலமேகத்திரள்பொரவிண்டபசுந்தேன்
மாகப்பெருநதிபோல்வருமதுரைத்திருநகரே. (கூ)

வே று.

நகைகொண்டுதுட்டர் புரமன்றுசுட்ட நடனேசர்நாத முடி
யோர், பகைகொண்டசித்த சனவென்றசொக்கர் பவளம்பழு
த்த சடையார், முகைகொண்டவட்ட முலையங்கயற்கண் முத்
தானகேள்வ ரொருநால், வகைகொண்டிருக்கு மறைநம்பர்
பெற்றி வறியேனையாளு நெறியே. (கூக)

நெறிநின்றடங்கி நிலையானஞான நேயத்தழுந்த வருநாள்,
அறிவென்றறிந்த மதுரேசர்தம்மை யாராயவல்ல ருளரோ,
பொறியெங்குமுந்து புலனுங்கடந்துபுவியுங்கடந்து புவிமேற்
குறியுங்கடந்து குணமுங்கடந்து குறியாதுநின்ற குறியே. ()

ஏழைக்குகந்தபாகத்துமண்பரிளநீர்சுமந்தகூலிசூழ்
தாழைப்பொதும்பர்மதுரைக்குளாடுசரணரவிந்தநினைவார் [ம்
பேழைத்தனங்கண்மூடித்திறந்து பெருமைத்தனங்கள்சிறிதா
வாழைக்குறங்கின்மாழைக்கருங்கண்மடவார்தமாயமிலரே. ()

மாயாவிகாரிபூபாரமானமாபாவிமூடன்வறியோர்க்
கீயாதலோபிநோயாளனானவெளியேனுமுய்வதுளதோ
பாயாடைமூடுசமணக்குறும்பர்பகைவாதுவென்றகனிவாய்ச்
சேயானவர்க்கொர்தாயாயளித்ததிருவாலவாயிலரசே. (கூ)

திருவாலவாயர்திருநீலகண்டர்திருவாதவூரின்முனிவர்
குருவாகிவந்தசிவஞானபோதர்குடியாகிவாழுமடியார்

உருவானமாயவடிவோடுகூடியுடைப்பாய்கழிப்பமுடைப்பாய்
கருவாசலூடுவருவார்களல்லர்காணுதபாவகதியே. (கூடு)

கதியேதுமின்றியுனைவந்தடைந்தகடன்ஞாலமீதுபிறரை
மதியேனைமூடுமிருளேத்துறக்கில்வசமாய்மறித்துவருமோ
துதியேதுமின்றிகீரிற்பிரித்ததொய்யிற்குழம்பதலவோ
நதியேடெதிர்ந்தபுகழ்மேவுகூடனகர்வாழுஞானமுதலே. ()

முதலேக்கொடுங்கு சிறுமீனிகர்ப்ப முடியக்கிடந்துனடியே
ன், விதலேக்கிடங்கொள் பிணியாலொடுங்கு மெலிவைத்தவிர்
ப்ப தெதுகாள், மதலேப்பசும்பொன் மலர்வேணிகம்பர் மார்பி
ற்கரும்பு வளர்பூங், குதலேக்கரும்பி னிடமேவிகின்ற கூடற்
பதிக்கு ளமுதே. (கூள)

தேடித்திரிந்துமகிலாகமங்கள்சிந்தித்துமன்புதிரியா
தாடித்திரிந்துமாடாதபாவையசையாதிருக்குமணிகா
கீடித்திரிந்தநிலேபெற்றிருந்துனேபோதிலன்றிமறைநூல்
பாடித்திரிந்துன்மதுரோசர்தாள்கள்பதியக்கிடப்பதரிதே. ()

அரியாசனத்தி னடுவேகயற்க ணருள்சேர்துரைப்பெ ணெ
ருபாற், பிரியாதிருக்கு மதுரோசர்நித்தர் பிறைவேணிமுத்தர்
புகழைப், புரியாதிருக்கி னுயர்சீவன்முத்தி புரமேவுதற்கெளி
யதோ, முரியாதகற்ப தருவானிடத்தர் முனிவோர்முதற் பிற
ருமே. (கூஉ)

பிறவாததெய்வமிறவாதவாழ்வுபேரின்பவெள்ளமுனிவோர்
துறவாதஞானமுமைமாதுபாகர்சொக்கேசர்முக்கண்முதல்வ
நறவார்கடம்பவனநாதர்நீதிஞாலம்புரக்குமதனுன் [ர்
மறவாதுதிக்கண்மும்மாரிபெய்யமலிகின்றமேகம்வருமே.

மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி
முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஔவையார்

திருவாய்மலர்ந்தருளிய

பந்தனந்தாதி.

இஃது,

ஊ - புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

சாரணஞ ஆடிமீ.

உ

சிவமயம்.

வைசியகுலதிலகராகிய

பந்தன் என்பவர் சரித்திரம்.

காவேரி தீரமாகிய சோழவளநாட்டிலே, மதுநெறிவழாது செங்கோல் நடாத்திய சோழமகாராஜாக்களுக்கு உரியனவாகிய நகரங்களுள்ளதனுள் செல்வச் சிறப்பின் மிக்கு விளங்கியது காவிரிப்பூம் பட்டினம். அது பொன்னுலகத்தினு மேம்பட்டுச் சுவர்க்கவாசிகளின் இருதயத்தைக் கவரத்தக்கதாய்ச் சுவர்ணமயமான மாடமாளிகைகள் நிறைந்துள்ளதாய்த் தோரண முதலிய பல அலங்காரஞ் செய்யப்பெற்றதாய் விளங்கும். அப்பட்டணத்தில் பந்தனென்னும் வைசியகுலதிலகர் ஒருவர் இருந்தார். அவர் சிவபூசாதுரந்தரர். மிக்கதனிகர். தம்மையடைந்தவர்களுக்கு மகிழ்ச்சியோடு அவர்கள் வேண்டிவற்றை வரையாதுகொடுத்து உபசரித்து வருபவர். அவர் குபேரசம்பத்துடையரா யிருந்தும் தமது குலத்தொழிலாகிய வாணிபத்தை மேன்மேலும் அபிவிருத்தி செய்வது இன்றியமையாச் செயலெனத் துணிந்து பல பண்டங்கொண்டு கப்பல்களிலேற்றித் தீவாந்தரங்கட்குத் தாமும் கப்பலேறிச்

செல்லுகையில், ஆதிசேஷன் இந்தப் பந்தனென் னும் வைசியகுலதிலகனைக் காணவேண்டுமென்று எண்ணியிருந்த எண்ணம் நிறைவேறத்தக்க சமயம் இதுவெனத் தேர்ந்து, நடுக்கடலிற் கப்பல் செல்லும்போழ்தில் தனது கரங்கள் மாத்திரம் அவர்க்குத் தோன்றக் காட்டி நின்றனன். இவ் வற்புதத்தைக் கண்ட வணிகசிரோமணியார் தமது கப்பலில் உள்ள பண்டங்களி லொன்றை அக்கரங்களி லிடும்படி கட்டளையிட்டனர். மீண்டும் அக்கரங்கள் தோன்றக்கண்டு கப்பல்களிலிருந்த பண்டங்களெல்லாம் ஒன்றின்பி னொன்றாக அக்கைகளில் பெய்யப்பட்டன. பின்னரும் அக்கைகள் தோன்றாநிற்க, செட்டியார் இன்னும் இவ்வற்புதத்தைச் சோதிக்கவேண்டுமென்னும் ஆசையால் தாமே அக்காதலத்தில் உற்றிருந்தனர். ஆதிசேஷன் மகிழ்வடைந்து பந்தனென்பவனைத் தன் உலகத்திற்கு அநாயாசமாய்த் தாங்கிப்போய்த் தன் குமாரத்தியை அவருக்கு மணம்புரிவித்தான். செட்டியார் நாககன்னிகையுடன் இன்பநுகர்ந்துகொண்டு அவ்வுலகத்திலேயே வெகுகாலம் இருந்தனர். இதுநிற்க, கப்பற்றொழிலாளர்கள் தங்கள் தலைவருக்கு நேர்ந்ததுகண்டு கவலையுற்று, மரக்கலங்களைத் திருப்பிக்கொண்டுவந்து காவிரிப்பூம் பட்டினத்துறையடைந்து செட்டியார் வீட்டிற்குப் போய் அவர் சகோதரைக்கண்டு நடந்த சமாச்சாரத்தைத் தெரிவித்தால் தங்களுக்குத் தீங்கு நேரிடுமென் றஞ்சி, செட்டியார் தாம் சென்றிருக்குந்

தேயத்திற் சவுளி வியாபாரம் விசேஷமாய் நடக்கி றதென்றும், அதற்கு வேண்டுந் திரவியங்களை மிகு தியாய்ச் சேர்த்துக்கொண்டு வரச் சொன்னதொன் றுஞ் சொல்லி ஊரைவிட்டு நீங்கிப்போயினர். தம் பியார் அவ்வேலைக்காரர் வாய்மொழியை நிசமென் றெண்ணிச் சவுளிகளைச் சேகரித்துக்கொண்டு கம்மி யரைத் தேடுகையில் அவர்களில்லாமையால் கிஞ்சி த்துக் கலக்க மடைந்து பின்பு ஒருவாறு தெளிந்து வேறு தொழில்செய்வோரைக்கொண்டு கப்பல்களி ல் சரக்குகளை ஏற்றிக்கொண்டு தீவாந்தரங் களுக்கு ச்சென்று தமையனுரைத் தேட, அவர் செய்தியொ ன்றும் தெரியாமையாற் கிலேசமுற்றுத் திரும்பித் தமது பட்டினஞ்சேர்ந்து சோதிடர்களை வரவழை த்துச் செட்டியார் சென் றுறையுமிடத்தைத் தெரி விக்கும்படி வினவினர். அச்சோதிடர்களிற் சிலர் செட்டியார் இவ்வுலகத்தில்லை இறந்தனரென்றும், சிலர் இவ்வுலகத்தில்லையாயினும் இறந்திலரென்றும் கூறினர். அதனல் சகோதரர் வெகுகாலம் அவர் வரவை எதிர்பார்த்திருந்தனர். செட்டியாரோ பன் னிரண்டு வருஷங் கழிந்தும் வரப்பெற்றிலர். ஆத லால் சகோதரர் டங்துக்கள் முதலாயினோரோடு ஆ லோசித்து மேல் நடத்தவேண்டிய கிரியைகளை ஸா ஸ்திரிகள் மூலமாய்த் தெரிந்துகொண்டு ஓர்தினங் குறித்து அத்தினத்தில் செய்யத் தீர்மானித்தனர். ஆதிசேஷன் இச்செய்தி அறிந்து பந்தனை நோக் கிப் பூவுலகில் அவரில்லின்கணடக்கும் கிரியைகளை

எல்லாம் சவிஸ்தாரமாகத் தெரிவித்து அவருக்கு அளவிறந்த நாகரத்தினங்களும் பூஷணங்களும் போர்த்துக்கொள்ளின் இளமைப்பருவ மாறுதிருக்கும்படி செய்யத்தக்கதொரு பொற்படாமும், உண்டால் நீடிகாலம் உயிர்வாழத்தக்க தொரு கருநெல்லிக்கனியும் கொடுத்து அவனை நன்றாக ஆசீர்வதித்துக் காவிரிப்பூம் பட்டினம் கொண்டுவந்து சேர்த்துப் பாதாள லோகத்திற்குச் சென்றனன்.

பந்தனுர் பட்டினம்வந்து சேர்ந்தசெய்தி கேள்வியுற்ற பந்து மித்திரர்கள் யாவரும்வந்து கண்டுகளித்தனர். ஊராள்வோன் செட்டியார் வரவை நன்கறிந்து, அவனைத் தமது சபைக்குவருவித்துத் தக்க மரியாதைசெய்து அவர் சென்றநாண்முதல் இதுகாறும் நடந்த சமாச்சாரங்களைச் சொல்லக்கேட்டு மிக்க ஆச்சரிய மடைந்தான். பின்பு செட்டியார் தமக்கு அருமையாகக் கிடைத்த கருநெல்லிக்கனியிற் பாதி அரசனுக்குக்கொடுக்க அரசன் மகிழ்ந்து செட்டியாரின் உதாரகுணத்தைப் பலவாய்ப் புகழ்ந்து அநேகவித பரிசுகளும் விருதுகளுங்கொடுத்துபசரித் தனுப்பினன்.

பின்பு செட்டியார் வழக்கப்படி தம்மை அடைந்தவரை யாதொரு குறைவுமின்றிப் பாதுகாத்து வாழ்ந்துவருங்காலத்து, ஔவையார் தம்மேல் நவமணிமாலையும் அந்தாதியும் ஆகிய இரண்டு பிரபந்தங்கள் பாடக்கேட்டு மகிழ்வெய்தித் தம்மிடத்துள்ள அற்புதக் கருநெல்லிக்கனியின் மற்றைப்பாதி

யும் பொற்படாமும், ஔவையாருக்குத் தந்து களித்தனர். ஔவையார் அக்கனியை அருந்தி வெகுகாலஞ் சீவித்திருந்தார்.

பந்தகுப்தன் என்னும் செட்டியாருக்கு நாகந்தை குப்தன் என்று மற்றொரு பெயருமுண்டு. அது கோத்திரப்பெயர் என்கிறார்கள். மூன்றாவது வருணத்தாராகிய வைசியருக்கு ஆதியில் குப்தர் என்றும் இக்காலத்தில் செட்டியார் என்றும் பட்டப்பெயர் வழங்குகின்றது. (சீரேஷ்ட்டர் என்பது செட்டியார் என மருவியது.) இக்காலத்தில் பலசாதியார் அப் பட்டப்பெயர் வகித்தாராயினும் சாதிகளின் வரன்முறை யறிந்தவர்கள் அதன் உண்மை அறிவர்.

பந்தன் என்பவர் சரித்திரம் முற்றிற்று.

வைசியர்களுக்குரியனவாகிய தசாங்கங்கள்.

கிட்கிந்தமலை.
பம்பையாறு.
கருடக்கொடி.
காந்தண்மலர்.
பைங்காகமுரசம்.
கலிமாருதப்புரவி.
கமலகண்டிகைத்தேர்.
உபலாபுரிபட்டணம்.
வைகுந்தவளநாடு.
ஜயவாரணம்.

கணபதிதுணை.

பந்தனந்தாதி.

காப்பு.

நேரிசை வெண்பா.

காரார்பொழில்புடைசூழ்காவிரிப்பூம்பட்டினத்துப்
பாரோர்புகழ்வணிகன்பந்தனெனுஞ்—சீரார
காகந்தையைக்காக்குநால்வாயோனைந்துகரத்
தேகந்தைக்கொம்பனிருதாள்.

சீர்மடந்தைகேள்வன்றிருமடந்தைதன்கொழுநன்
போர்மடந்தைநாதனருட்போதையர்கோன்—பார்மடந்தை
மைந்தன்கடற்புகார்மாநாகன்றருன்றியந்தா
னெந்தையுளானெங்கட்கிடம். (க)

இடங்கொண்டநாவலர்களெம்மன்னர்வாசற்
படங்கொண்டுநிற்பதுவும்பாவங்—கடங்கொண்ட
வாரணக்கோன்மாநிதிக்கோன்பந்தன்மலர்மகள்கோ
னேரணக்கோனென்னுமொத்து. (உ)

எடுத்தமனைகடொறுமேகவிழிசெல்வங்
கடுத்தவுளைவாராமற்காத்தோன்—றொடுத்த
வலிமாருதப்புரவிமாநாகன்பந்தன்
கலிமாருதப்புரவிக்கால். (ங)

காலம்வையாதுகடனீர்முகவாது
ஞாலத்திரவலர்க்குநன்கிழைக்குங்—கோலஞ்சேர்
காப்பந்தன்மாநாகன்காவிரிப்பூம்பட்டினத்து
மாப்பந்தனென்னுமழை. (ச)

மழையுந்தருவும்வளர்சங்குநாணு
மிழைகொண்டமாமூலையார்க்கின்பன் — பழையதமிழ்ப்
பாவலர்கள்போற்றும்பகர்புகார்ப்பந்தனெனுங்
கோவணிகன்செங்கைக்கொடை. (நி)

கொடையாலுலகங்குளிர்வித்தபந்த
னடையாநெடுங்கடையதாகும் — தொடையான
தோன்றியந்தார்வெட்சியந்தார்சோரவரிவளைகை
தோன்றியந்தார்நெஞ்சத்தொடை. (சு)

தொடர்ந்தகடலோடுந்தூணிமொன்றுய்
நடந்தபுகழ்ப்பம்பைநகர்நாட — னடங்கலரை
மாப்பந்தமிட்டதிறன்மாநாகன்வாழ்வணிக
னேப்பந்தமிட்டானெமக்கு. (எ)

எமக்குமியல்வாணர்தங்களுக்குமேனோர்
தமக்குமிரவலர்க்குந்தாங்கு — மமைத்தபுகழ்
வண்டிசைக்குந்தோன்றியந்தார்மாநாகன்வாழ்வணிகன்
பண்டிசைக்கும்பந்தனேபற்று. (அ)

பற்றலர்க்குமற்றவர்க்கும்பாவலர்க்குநாவலர்க்கும்
வைத்தபுகழ்ப்பூம்புகார்வாழ்வணிகன் — மொய்த்தமலர்ப்
பூமாம்பொழிலடர்ந்தபொன்னளகைப்பந்தனுக்கு
யாமாரையேத்துவோமீங்கு. (கூ)

ஈங்கிசைந்தஞாலத்திரவலருக்கீந்தற்றுத்
தாங்குந்தருமாபுரித்தலைவன் — றேங்கொளிசீ
ரோவாதபூம்புகாரோங்குபுகழ்ச்சீர்ப்பந்தன்
கோவாணிபனளகைக்கோன். (கo)

கோமன்னர்தங்கள்குடிப்பின்புவந்துதித்தோன்
மாமண்டலம்புகழுமாநாகன் — பூமன்னு
புண்டரிகமங்கைபொருந்தும்புகார்வணிக
னெண்டிசைக்குந்தன்புகழேயேத்து. (கக)

ஏந்துகோட்டானையெமக்குத்தந்தெங்கவியை
வேந்தன்கொளப்படுவதேன்கொலோ—வாய்ந்தசீர்
நற்பந்தன்மாநாகனுகந்தைகொண்டானென்
சொற்பந்தமெல்லாந்தொகுத்து. (கஉ)

தொகுத்ததமிழ்மூன்றினுக்குந்தொன்மறைகணன்கால்
வகுத்தகுடிமூன்றும்வகைக்கு—மிகுத்தவிழி
மானேயனையமதிநுதலாய்மாப்பந்தன்
றனேயெவர்க்குந்தலே. (கங)

தலேமிசைக்கோவீட்டத்துத்தையனல்லார்தங்கண்
மூலேமிசைச்சாந்தத்தின்மூழ்கி—யலேமலிக
ளந்தண்புகாரிலகிற்புகைகீர்காறிற்றே
பந்தரீபோர்த்தபடாம். (கச)

போர்த்தபடாமாநாகனுகபதிபுக்கதற்பின்
வாய்த்தபெருங்கீர்த்திபெற்றவாழ்வணிக—னேத்தரிய
நற்கவிசொலவ்வைக்கருள்புரிந்தநாகந்தை
மற்பொலிதோட்பந்தன்வலி. (கரு)

வலிதீண்டவானேத்திசைமுற்றியதா
லொலிதீண்டபூம்புகாரோடைக்—கலிவண்டு
தேனருந்தோன்றியந்தார்ச்சீர்க்கமலேவைகுந்தன்
மாநாகன்பந்தனுடைவாழ்வு. (கசு)

வாழ்வணிகருள்ளார்நமாநாகன்பந்தனேப்போல்
வாழ்வார்தமக்குமதியுளதோ—வாழத்
தனம்புதைப்பாரீயுந்தரமறியார்கோ
மனம்புதைப்பார்மற்றேதோவல். (கள)

வல்லென்றகெஞ்சினைவாழ்த்தியவருரைத்த
வில்லென்றவார்த்தையினிக்கேளே—னல்ல
மடற்குலாந்தோன்றியந்தார்மாநாகனென்னுங்
கடற்றுலாநானிட்டேன்கட்டு. (கஅ)

கட்டுங்கருடக்கொடிகமலகண்டிகைத்தேர்
மட்டமர்தார்தோன்றிமலிகிட்கிந்தை—நட்ட
குடிகெழுசீர்ப்பூம்புகார்க்கோவணிகன்பந்தன்
வடிகெழுசீர்வேலோன்றன்மாறு. (கக)

மாறுமொருவருளரோமறுபோரிற்
கிறியெறியுங்கருடகேதனமே—தாறு
வடிகொண்டவேல்வணிகன்மாநாகன்பந்தன்
குடிகொண்டசீராங்கொடி. (உ0)

கொடியிலகுகோற்றூனைக்கோமன்னென்றுங்
கொடியிலகுகோவணிகர்கோமான்—படியிலகு
பல்பூம்பொழிற்புகார்ப்பந்தீனையேயல்லாதார்
நல்கூர்ந்தாரென்றிருப்பேனுன். (உக)

நானவ்வையென்றிரங்கிவாழ்த்தினேன்மற்றவனு
மேனவ்வையேயென்றிறைஞ்சினு—னுனுங்கேண்
மன்னும்புகார்வணிகன்மாநாகன்பந்தனெனும்
பொன்னைச்சேமித்தேன்பொதித்து. (உஉ)

பொதியின்முனியுரைத்தபொய்யாத்தமிழின்
விதியின்வழியால்விதித்தேன்—மதிதவழு
மாமாடமீமதிற்புகார்ப்பந்தனெனுந்
தேமாம்பொழிலளகைச்சே. (உங)

சேணிலங்குமாடச்செழும்புகாவெய்தியசீர்
வாணிபர்கோனுகந்தைமாநாக—னீணிலமேற்
பந்தனேயபாடாமற்பாவிகளைப்பாடுவார்
தந்தமரும்பாவிகளேதாம். (உச)

தாமொன்றுமீயாதார்தங்கடையினிற்குமது
வாமென்பதின்றேயறிந்தொழிந்தேன்—கோமன்னர்
பின்னென்றும்பந்தன்றன்பேர்சொல்லிப்பேருலகின்
முன்னென்றுமுன்னிற்பார். (உரு)

மூன்றீருலகமுழுதாண்டமன்னவன்றன்
பின்னேயனுமந்தப்பேர்விளங்க—நன்னியஞ்
சூழும்புகார்ப்பந்தனுகந்ததோன்றுதலால்
வாழுங்கலிமண்டலம். (உசு)

மண்டலங்கடொண்ணூற்றேடெட்டுடையமாநாகன்
றெண்டிசைசூழும்புகார்ச்சீர்வணிகன்—றுண்டப்
பிறைநுதலாய்பந்தன்பெரும்புகழெப்போது
மறைகளினும்வேறுளதோமற்று. (உஎ)

மற்றுமொருவனையுமாநாகன்பந்தனேப்போ
லுற்றபுவியிற்படைக்குமோ—நிற்றந்
திலதம்படைத்தநிருநுதலாய்கேளா
யுலகம்படைத்தானுலத்து. (உஅ)

உலுத்தர்தமக்கிங்கொருபாகமெல்லாஞ்
சலித்துமுகம்பாராச்சமர்த்தர்—செலுத்துநடை
கற்றுன்புகார்ப்பந்தன்கந்தனேயேயொக்குமதி
செற்றுன்செலுச்செய்தசீர். (உக)

சீதமதிவெண்கவிகைத்தேர்வேந்தர்பின்னென்றும்
போதிவணிகேசன்புகார்ப்பந்தன்—சாதிபோ
லெண்ணுஞ்சமயமுளதோவெதிராக
மண்ணில்வருஞ்சமயமற்று. (கூ0)

சமையநாராயணன்பொற்றூர்வணிகர்கோமா
னுமையொருபாகற்குரியோ—னமையி
லிகழ்விலாத்தோளானெழிற்புகார்ப்பந்தன்
புகழலாதுண்டோபுவிக்கு. (கூக)

புவிமன்னரொண்ணிவரும்போதிவணிகேசன்
செவிமன்னுஞ்செஞ்சொற்சிறந்தோன்—கவிமன்னர்
நண்ணுங்கொடைப்பந்தனுகந்ததன்னுடனே
யெண்ணுங்குடிபதினூறே. (கூஉ)

நூறெறுகோடியிருநூறுகோடியாய்
மாறிவரும்பண்டமரக்கலங்க—ளேறுங்
கடற்புகார்ப்பத்தன்கடைத்தலையைக்கண்டோ
ரிடர்ப்புகாரிப்பாரினில். (கூக)

இப்பாரிடத்திலியல்வணிகன்பந்தனேப்போ
லொப்பாரோசொல்லீருலகுதனின்—மெய்ப்புலவீர்
கெல்லிக்கனியளித்தகீள்கவிகைக்கோமானென்
சொல்லுக்கவனேதுரை. (கூச)

துன்னாவில்வேள்வல்லோன்சுரர்குருவின்றோழ
னுரைசெய்துரைநூலுரைப்போ—னுரகர்கோன்
றன்னேப்பணத்தின்மணிபறித்தகாகந்தை
யென்னேப்பறித்தானிடர். (கூஞ)

இடருளதோமுற்காலமிக்காலம்பந்தன்
கடையினிடர்வாராமற்காத்தோன்—சுடரிலகு
தோன்றியந்தார்மாகாகன்றுய்யபுகழ்காகந்தை
யென்றுகொண்டானெந்தையெனக்கு. (கூசு)

என்னகுறையென்றெவரிடத்துஞ்சென்றறியேன்
மன்னவர்மன்னென்னுமாகாகன்—மின்னுருவ
மாகங்கொண்மாடமதிற்புகார்ப்பந்தனெனு
காகந்தையைக்கண்டகான். (கூஎ)

கண்டுகொண்டேன்பந்தன்கருணைத்திருமுகமுங்
கண்டுகொண்டேன்செய்யகலிமாருதமுங் — கண்டுகொண்
றேர்கமலகண்டிகையுந்தெய்வச்செயக்களிறும் [டேன்
வார்கமலமென்மூலையாய்வந்து. (கூஅ)

வந்தகலங்கள்சொரிந்தமதகளிறு
வந்துதடந்தேருயர்பரிக்கு—மூந்தும்
படிவேந்தன்மாகாகன்பந்தன்பொன்வாசன்
மூடிவேந்தர்நிற்குமுறை. (கூசு)

முறைவிடாமாமறையோர்முன்னென்றுஞ்செங்கோன்
முறைவிடாமூன்றுங்குடிக்கோன்—முறைவிடாப்
பூம்புகார்பாடிப்புகழ்ப்பந்தன்சீர்பாடித்
தாம்புகாரோரூர்தனில். (சஅ)

தனிக்குடியென்றேதுபுகழ்த்தார்வணிகர்கோமான்
மூனிக்குடியாமூன்றுங்குடிக்கோ—னினிக்குடிதா
னெண்ணுதுதான்போகாதேயேந்துபுகழ்ச்சீர்ப்பந்தன்
மண்ணுக்குண்மேலாமரபு. (சக)

மரபுநிலைமைபொறைமானமுடன்கல்வி
யொருமைதரவுமொழியுண்மை—யிரவிதலஞ்
சென்றணுகுஞ்சோலிதிகழ்புகார்நாகந்தைப்
பந்தன்போற்குள்ளபடி. (சஉ)

உள்ளபடிசொன்னேனுலகத்தோர்கேண்மின்க
டெள்ளுடையசீரான்றிகழ்பந்தன்—றள்ளி
நிதிதருமாநாகந்தைநீடுபுகார்ப்பந்தன்
பதிதருமாம்போதிப்பதி. (சங)

பதிக்குமேலானபதிபட்டினமேகங்கை
நதிக்குமேற்பம்பைநதியா—மதிக்கும்
வடித்தவேணுகந்தைமாநாகன்பந்தன்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. (உக)

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய்கொண்ட தல்ல
நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுள் [வென்கை
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. (கூ)

உமையு முமையொரு பாகனு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே. ()

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனினின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. ()

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க [ம்
அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லா
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னை யேயன்னையேயென்பனெஞ்சிடவந்தே.

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுமுகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே. (சு)

திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறத்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே. ()

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செ
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத் [ய்யும்
திருளே தும்மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்றன்
அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே. (சூ)

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டித்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே. (எ)

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. (அ)

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று மூப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே. ()

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு [சால்
பூணுதற்கெண்ணியவெண்ணமன்றோமுன்செய்புண்ணியமே.

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தால்
நண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. ()

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து [சை
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. ()

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனிய டமைநெஞ்சில்
புரிபுர வஞ்சனை யஞ்சக் குணிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே. (சங)

தவளே யிவளெங்கள் சங்கர னுர்மனை மங்கலமாம்
அவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினுல்
இவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாம் [தே.
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கைநன் றேவைவெறுக்கையன்றே.

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றுனிடப்பாகங் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மன தத்தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகல்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. (சஎ)

சுடருங் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே.(சஅ)

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வலைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே (சகூ)

நாயகி நான்முக நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
தாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே. (நூ0)

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. (நூக)

வையக் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
ஐயன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. (நூஉ)

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய மூலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. (நிஈ)

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி னோனித்த நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலும்
செல்லாமை வைத்த திருபுரை பாதங்கள் சேர்மின்களே. ()

மின்னு யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னு ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னுய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னு தொழியினு முன்னினும் வேண்டிவ தொன்றிலையே. ()

ஒன்று யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்று ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றுது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவார்
அன்று லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. (நிசு)

ஐய னளந்த படியிரு ஞாழிகொண் டண்டமெல்லாம்
உய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே. ()

அருணும் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்கும்
தருணும் புயமுலைத் தையனல் லாடகை சேர்தயனக்
கருணும் புயமும் வதனும் புயமுங் காராம்புயமும்
சரணும் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. (நிஅ)

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனெற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு மிக்கல ராகநின் றுயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே. (நிகூ)

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றேன்கொன்றைவார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சால நன்றேவடி யேன்முடை நாய்த்தலையே. ()

நாயே னேயுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய் நின்னையுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மாறிருத் தங்கைச்சியே. (சுக)

தங்கச் சிலைகொண்டு தானவர் மூப்புரஞ் சாய்த்தமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. ()

தேறும் படிசில வேதவுங் காட்டிமூன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமயம்
ஆறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. ()

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில மும்திசை நான்கு கனமுமே. (சுச)

கனமும் வானும் புவனமுங் கானலிற் காமனங்கம்
தனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுங் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றேவல்லி நீசெய்த வல்லபமே. (சுடு)

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே. (சுசு)

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின்றேற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்லை யாதவர் வண்மைகுலம்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. (சுஎ)

பாரும் புனலுங் கனலுமெங் காலும் படர்விசும்பும்
ஊரு முருகு சுவையொளி யூறெலி யொன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே. (சுஅ)

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. (சுஈ)

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றேன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. ()

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே. ()

என்குறை தீரநின் றேத்துநின் றேனினி யான்பிறக்கில்
நின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. ()

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக ணன்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றே டிரண்டு நயனங்களே. (எஈ)

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினிற் றங்குவரே. (எச)

தங்குவர் கற்பக தாருவி னீழலிற் ரூயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே. (எடு)

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி [ய்யில்
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப்பி ராஞெரு கூற்றைமெ
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. (எசு)

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணு மூயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. (எஎ)

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே. (எஅ)

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. ()

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
ஓட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணங்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
ஆட்டிய வாடு மாடகத் தாமரை யாரணங்கே. (அ0)

அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினுல்
வணங்கே னெருவரை வாழ்த்துகி லேனெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே.

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுகின்
ஒளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதொறும்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் களைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே. ()

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியும்
உரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே. (அஙூ)

உடையாளை யொல்குசெம் பட்டுடையாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குதுண்ணூல்
இடையாளை யெங்கள்பெம் மானிடையாளையிங் கென்னையினி
படையாளை யுங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே. [ப்
பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாம்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே. (அடு)

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங்காலனென்மேல்விடும்போதுவெளிநில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. ()

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
அழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. ()

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன் றிவனென்று தள்ளப் பெறுத் தரியாதவுணர்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. ()

சிறக்குங் கமலத் திருவேகின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருகின் றுணைவரு நீயுந் துரியமற்ற
உறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே.

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. (கo)

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்மூலப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாளைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டேரும் பதந்தருமே. (கக)

பதத்தே யுருகிகின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யாளெருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே. ()

நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்மூலி மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலமக ளென்பதுநா
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே. (கங)

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தருமம்பித்த ராவதொன் றுலபி ராமி சமயமன்றே. (கச)

நன்றே வருகினும் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுளக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. (கூநி)

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாஎ யெழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயி றன்னைத் தம்மால்
ஆமள வுந்தொழு வாரொழு பாருக்கு மாதிபரே. (கூசு)

ஆதித்த [illegible]புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரிமு ராரி பொதியமுனி
காதிப் பெருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே. ()

தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே. (கூஅ)

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே .(கூக)

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கை
வல்லி, கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்
லும், விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ண
கையும், உழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப் போது மூரி
க்கின்றவே. (கஂ)

ஆத்தாளே யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம், பூத்தாளே மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக், காத்தாளே யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை, சேர்த்தாளே மூக்க ண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே. (கoக)

மூற்றிற்று.

உ

கணபதிதுணை.

சௌந்தரியலகரி

மூலபாடம்.

வீரையிலிருந்த

கவிராசபண்டிதர்

அருளிச்செய்தது.

இஃது

திருத்தணிகைச்

சரவணப்பெருமாளையர்

பிரதிக்கிணங்கப்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னபட்டணம்:

ஸ-புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

விஷ- பங்குனிமீ.

☞ இந்நூலுள் மூன்சு0 - பாடல் ஆசிரிய
லகரி என்றும், மற்றவைகள் சௌந்தரிய
லகரி என்றுஞ் சொல்லப்படும்.

கணபதிதுணை.

செளந்தரியலகரி.

பாயிரம்.

விநாயகர் வணக்கம்.

மொழிந்தமறை நூலியற்று முகபடா மணிக்து
முது ஞான தானம், பொழிந்துதன திணைமணியென்
றிருசுடரும் புனைகளித்தைப் போற்றல் செய்வாம், வழிந்துபெரும் புனல்பரந்து வடவனையிற்
றுலகேழு மேழுமொக்க, வழிந்திடினு மழியாத வ
பிராமி பாடல்வள மளிக்க வென்றே. (க)

இந்தநூல் செய்தற்குக் காரணம்.

இத்தனைநா ணீயிருக்க வாயிருக்க வியலிருக்க வ
ருள்பா டாமன், மத்தனையா ளுங்கொடியை யிப்
போதென் வழுத்துகின்ற வாறென் பீரேற், பித்த
னையா ரேவல் கொள்வார் பித்தொழிந்தா லுரியவர்
க ளடிமையோலைக், கொத்தனையா ரேவல் கொள்
ளார் கொள்ளும்போ தெவனுலே குழப்பலாமே.!()

அவையடக்கம்.

யாமளைதன் பெரும்புகழை யாதிமறை நாலின்வ
டித் தெடுத்த நூலை, நாமகடன் பாடலிதென் றரளு
ர்க்கு நவிலவவர் நகைசெய் தன்றே, பாமகளை யரு
கழைத்துப் பருப்பதத்திற் பொறித்திருந்த பரிசு
காட்டுஞ், சேமநிதிப் பாடலியென் புன்கவியாற்
கொள்வதவ டிறமையன்றே. (ங)

முன் னிந்நூலை வடமொழியிற் செய்தவரைப் புகழ்தல்.

அரன்கைலைப் புறத்தெழுதப் படுநூலை யருந்தவ
த்துப் புட்ப தந்தன், பரந்தவட வரையழுத்த வ
தைக்கௌட பாதருளம் பதித்து முற்றும், தரம்பெ
றுசொல் லழுதெனப்பின் சங்கரமா முனிக்கருள
வந்த மேகஞ், சுரந்துலகில் வாடுமுயிர்ப் பயிர்தழை
ப்பச் சொரிந்ததெனச் சொல்வர் நல்லோர். (ச)

இந்நூலைத் தமிழ்செய்தவர் பெயர்.

இன்ன தன்மையி னூலி னைக்கவி ராசராசவரோ
தய, மன்ன னெம்பிர மாத ராயன் வடித்த ரும்பொ
ருள் கூறவே, கன்ன லஞ்சிலை வேளெனுங்கவி ராச
பண்டிதன் வீரையான், சொன்ன யம்பெறு காவி
யக்கவி சொல்வலென்று தொடங்குவான். (ரு)

தேவி சரித்திரத்திறம்.

வடமொழி யெனும்பழைய விரிகடல் பிறந்திறை
வர் மனையிடை யிருந்து சிலமே, லிடமொடு தவழ்
ந்துதன திடுபெயர் செளந்தரிய லகரியென நின்று
வளர்மா, தடலரசு முன்பினுள பலமதப்ப பந்தமெ
னு மடபகை துரந்தென் மணிகா, டமிடு பெருங்
கவிதை மதகரி யொடும்புவியை நகரிவலம் வந்த
திதுவே. (சு)

பாயிரமுற்றுப்பெற்றது.

நூல்.

சத்தியையன்றிச் சிவத்துக்கோர் செயலில்லையெனல்.

சிவமெ னும்பொருளு மாதி சத்தியொடு சேரி
னெத்தொழிலும் வல்லதா, மிவள்பி ரிந்திடினி யங்
குதற்குமரி தரிதெ னுமறை யிசைக்குமா, னவபெ

ரும்புவன மெவ்வ கைத்தொழி னடத்தி யாவரும் வழுத்துதா, ளவனி யின்கணொரு தவமி லார்பணி ய லாவதோபரவ லாவதோ. (க)

தேவிபாததூளியே முத்தொழிற்குங் காரணமெனல்.

பாத தாமரையி னுண்டு கட்பரம வணுவி னிற்ப ல வியற்றினுல், வேத நான்முகன் விதிக்க வேறுபடு விரித லேப்புவன மடையமான், மூத ராவடி வெடுத் த னந்தன்முது கணப ணடவி பரிப்பமே, ஞத னுர் பொடி படுத்து நீறணியு நாமுனைத் தெனவள் பா ன்மையே. (உ)

எல்லாநன்மைக்கும் தேவியே காரணமெனல்.

அறிவி லார்க்கிதய திமிர மீருமள் வற்றவரதவ ரள ப்பிலா, வெறிக திர்ப் ப்ரபை குழைத் திழைத்தனை ய தீவியாமலை நினைப்பிலார், செறிம திக்கிணறி னை ழுகு தேனருவி தெறுக லிக்கருண் மணிக்குழாம், பிறவி மைக்கடல் விழாதெ டுப்பதொரு பெருவ ராகவெண் மருப்பரோ. (ஊ)

தேவிபாதமே யாவையுங் கொடுக்குமெனல்.

தேவெ னப்புகழ வதினி மிர்ந்துநிகர் செப்பு வார பய வரதமாம், பாவ கத்தபின் யத்தொடுற்றகை பர ப்பி யென்பய மொறுக்குமே, யாவ ருக்குமஃ தரிது நிற்பத மிரப்ப யாவையு மளிக்குமான், மூவ ருக்கு மொரு தாவ ரப்பொருளின் மூல மேதழையு ஞால மே. (எ)

தேவியருளின் செய்கை.

தொடுக ரச்சிலை தொடப்பொ ருமலர் சுருப்பு நாணிடுவ தைந்துகோ, லடுப டைத்தலைவ னர்வ சந்தமலி தென்ற றேருருவ மருவமா, மூடுகு கொ

ற்றமத னெருவ னிப்புவன முற்றும் வெற்றிகொள
முடிவிலா, நெடிம லர்க்கணருள் சிறித ளித்தனை
கொ னீலி யேகரக பாலியே. (ருு)

தேவியை வந்தித்துப் பெற்றேர்பயன்.

மாயன் வணங்கியுன் மால்வடி வங்கொள வாடி ம
ரன்றுயர் போதாதோ, தூய மதன்றொழ வாண்வடி
வம்புனர் தோகைகண் வண்டயி றேனேபோன்,
மேய வழங்குமு ரூபம தென்சொல மேலிது கண்ட
வர் வாழ்வாரோ, நீயதி ரஞ்சகி மோகன வஞ்சகி நீ
செய்வ தொன்றல மாதாவே. (சூ)

தேவியை யென்முன் வந்தருளெனல்.

மேகலே பொங்கம தாசல கும்பமெ னுமுலே கண்
டிடை சோராநீர், மாக வளங்கெழு நாணிறை யம்
புலி வாண்முக மம்புவி லேடார்போ, தேக நெடுங்
கழை பாசமொ டங்குச மேர்பெற வந்தருள் காபா
லி, நீகமலந்திகழ் தாள்வருடென்றர னீர்மையின்
விஞ்சிய கோமாதே. (எ)

தேவி யோகநித்திரைகொள்ளுந் தானம்.

ஆரமு தின்கடல் வேலி செழுந்தரு வாய்மணி ப
ம்பிய தீவூடே, பார கடம்படர் கானி லருங்கொ
டை பாய்மணி மண்டப வீடேடே, கோரசி வன்பர
மேசனு மஞ்சமொர் கூர்பரி யங்கமெ னுமேலே, சீர
ட ரும்பர ஞானமு றுங்களி தேவர ருந்துவர் பூமா
தே. (அ)

குண்டலிசத்தி தன்னிடம்விட்டுச் செல்லுமாறு.

மூல மணி பூரகத்தோ டிலிங்க மார்பு முதுகளம்
விற் புருவநடு மொழிவதாறு, ஞாலமுமென் புனலு

மனற் பிழம்புங் காலு நாதமுறு பெருவெளியு மன முமாக, மேலணுகிக் குளபதத்தைப் பின்னிட் டப் பான் மென்கமலத் தாயிரந்தோட் டருணபீடத், தாலவிடம் பருகியதன் மகிழ்நரோடு மானந்த முறு ம்பொருளே யறியலாமே. (கூ)

குண்டலிசத்தி தன்னிடத்தை மீண்டடையுமாறு.

தாளிணைக் கமல மூறித் தருமமிழ் துடலமூழ்க, மீளவப் பதங்கள் யாவும் விட்டுமுற் பழைய மூலம், வாளர வென்ன வாகம் வளைத்துயர் பணத்தி னோடு, நாளுமைக் கயற்கண்டுஞ்சு ஞானவா னந்த மின்னே.

தேவி யிருக்குஞ் சக்கரம்.

சிவகோண முற்பகர்வ தொருநாலு சத்திநெறி செறிகோண மத்தொடொரு மருவுகோ, ணவகோ ண முட்படுவ தெழுமூ விரட்டியொரு நவில்கோ ண முற்றதுவும் வலயமா, யிவரா நினைத்ததள மிரு நாலு மெட்டிணையு மெழிலாய வட்டமொடு சதுர மா, யுவமான மற்றதனி தனிமூ வகைக்கணுமெ னு மைபாத முற்றசிறு வரைகளே. (கக)

தேவியினது திருவழகை வியந்துசொல்லல்.

ஆதி சுந்தரி வடிவினை யயன்முதற் புலவோ, சோது கண்டள விடுவது தமையிக ழிமையோர், மாத ரிங் கிவண் மகிழ்நரொ டுறைகுவ மெனினோ, பேதை கொங்கைகள் பெறுகுவ மெனமறு குவரால். (கஉ)

தேவியினது கருணையை வியந்து சொல்லுதல்.

அறக்கிழவன் மனிதன்விர கில்லாக் கொச்சை ய முகிருந்த வூரிலிருந் தறியானேனு, முறக்கருணை

கொழிக்குமுன தமுத வாரி யூடனுகி னவனேயர ம
களி செல்லா, நறைக்குழலுஞ் சரிந்திடவுத் தரீயஞ்
சோர நாணழிய வளேசிதற வுடுத்த வாடை, புறத்து
விழ மயலொடும்பின் றொடர்வ சென்றூற் பொற்
கொடிநின் புதுமையெவர் புகல வல்லார். (கஈ)

தேவிபாதஞ் சடாதாரகிரணங்களின்மே லிருக்குமெனல்.

பணேபார் புனற்கனலி வளிவான் மனத்திலறு பதி
ஞ லொழித்ததுமுன் னடைவிலே, யிணேநா ளொ
ழித்ததிரு கதிறோற வுற்றதுமூ வினேபோய தெட்டி
னெடு கதிர்கணு, லணேயா நிசைத்ததுறு கதிர்நா ல
டுத்ததத னளவா யிலக்கமறு வகையினு, லுணரா
வுரைத்தகதிர் களின்மே லிருக்குமென துமைபாத
செக்கர்விரி கமலமே. (கச)

மதுரகவியாக வேண்டினேர் தியானிக்குமியல்பு.

உனதுசரற் காலமதி யனேய மெய்யு முடல்குழை
த்த பிறைச்சடையுங் காங்க ணுன்கு, மனவரத மு
றுமப்ய வரதஞான வருட்பளிங்கு வடமொடுபுத் த
கமுமாக, நினேகிலர்முன் வழுத்திலர்பின் வணங்கா
செங்க னிறைத்தபசுங் தேனுமடு பாலுந்தூய, கனி
யுமென மதுரம்விளேங் தொழுகுபாடற் கவிதை
பொழி வதுகைலைக் கடவுள் வாழ்வே. (கடு)

இன்பக்கவிதை பாடவேண்டினேர் தியானிக்குமுறை.

வாரின்ப முலேலேலே மடந்தைகவி நாவலர் மனக்க
மல வனமலராடீ, டேரின்ப விளவெயி றழைக்கும்
ப்ரபைச் செய்ய செவ்விநிற முணரு முரவோர், தா
ரின்ப நறவொழுகு சுருளோதி யிருள்விரவு தவள
நிற வாணிகலேதோர், பேரின்ப மதுரமலே யெறியமு
த கவிதைகொடு பேருலகை மகிழ்விப்பரே. (கசு)

காவியஞ் செய்யவேண்டினோர் தியானிக்குமியல்பு.

இந்துசிலை யைப்பிளந் துண்ணிறம் வகுத்தனைய
வெழில்வசனி யாதிமடவா, சந்தவிணை நால்வர்பு
டைசூழுமலை மங்கைதன கருணவடி வுனர வறி
வோர், கொந்தவிழ விரிதவள மலர்மங்கை முககம
ல கோலபரி மள கவிதையாற், செந்தமிழின் வட
கலையின் முதுமொழிக் காவியத் தெளிபாடல் செய்
யுமவரே. (கள)

வசியம்வேண்டினோர் தியானிக்குமியல்பு.

உனதுநிற மெனுமிளைய கதிரிரவி வெயின் முழு
கு முலகடைய வெனநி னைகுவோர், வினைகெழுமு
கொலைமறலி யனையவிழி யுருவசிமுன் விரவுமர மக
ளிர் விழைவரோ, ரனவரத மெனதமுது பொழிகவி
யு முனதருளு மெனதுடலு முயிரு முயிர்சூழ், மன
முமதி லுணர்வும்வரு களியுமென நினைவுருக மலைய
ர யுதவுமயிலே. (கஅ)

மோகிப்பிக்கவேண்டினோர் தியானிக்குமியல்பு.

ஆதி விந்துவை முகமென வினைமூல கீழிரண்ட
தன் வடிவென வருகுதாழ், கோத றுஞ்சுட ரொழ
வழ கொழுகுதி கோண மொன்றென வுனதெழி
லிரதிதோய், காத லன்கலை தமதிட நினைபவர் காணு
மங்கையர் கலைகொள லரியதோ, வோதி லிங்கிரு
சுடர்மூல யனையவு லோக மங்கையை மயல்செய்
வர் கமலையே. (கக)

விஷமுஞ்சுரமும் தீர்க்கவேண்டினோர் தியானிக்குமியல்பு.

ஆடலம்பிகை யிமகர சிலைவடி வாளு நெஞ்சினு
ள் வழிவுறு கிரணமே, லோடி யெங்கணு முடல்பெ
ரு கமிழ்தென வூடெ மும்ப்ரபை தமதிட முணர்கு

வோர், நாடவுங்கொடு விடமொருகலுழனை நாடும் வெங்கொலை யரவென முறியுமேன், மூடருஞ்சுரம் விழிபொழி யமுதினின் மூழ்க வென்பொடு மழலு டல் குளிருமே. (உo)

சமாதியுங்கிட்டையுமுடையோர் தெரிசிக்குமியல்பு.

ஆன மின்கொடி போலுமென் முண்டக மாறின் மண்டல மூவகை யின்கணேர், பானு வம்புலி தீயி னிறங்களர் பான்மை கொண்டித ழாயிர கஞ்சகீள், கானிலுன்களி ஞான முறுங்கலை காழ்ம லங்களின் மூவகை பொன்றியே, போன சிந்தையின் மாயை யொழிந்தவர் போத மின்புறு மாதியொ டந்தமே() தேவி விளைந்து வரங்கொடுத்தல்.

பேரு றுங்கயி லாயன்ம கன்பெறு பேர னன்புறு பேரனெ னுஞ்சொலால், வார மன்பொடு பார்வை வழங்கென வாய்தி றந்திட வோடி வழங்கினுய், வே ரிமுண்டகன் மான்மகு டங்களின் வீச ரும்ப்ரபை தீபமுவந்ததாள், சேரு நன்பெரு வாழ்வும்வ ழங்கு வைதேட ருஞ்சிவ மாயம தங்கியே. (உஉ)

அர்த்தபாகமாயிராத தேவியைச்சிறப்பித்தல்.

ஆதி சங்கரர் பாதியு டம்பினி தாளு மம்பிகை பாதியும் விஞ்சுமோ, நீதி யன்றென நாயகர் பங்கை யு நீகவர்ந்தனை யாலவ னெங்குளார், சோதி செங் கதிர் மேனி நிறைந்தது தூய கண்களு மூவகை கொங்கையோ, வீதி ரண்டுடல் கூனுமிளம்பிறை யேர்பொ ழிந்தது நீண்முடி யெங்குமே. (உங)

தேவிபுருவத்தா லேவுதலே வியத்துசொல்லல்.

ஆதி முண்டகன் மால்சிவ னண்டர்ம கேசனந்த சதாசிவ னேந்துபேர், மேத குந்தொழில் போலவ

னேந்தருள் வீறு மங்கத னூறலு முண்டெனு, யாது
மின்றியு மேனியொ டெங்கணு மாய்கை தந்தது
ஞானமி ரங்குமோர், நீதி யுந்திரு வேபுரு வங்கொடு
நீசொ லிங்கித வேவல்புரிந்ததே. (உச)

தேவிபாதபூசைமகிமை.

மூவ ருக்கு முதற்பி றப்புநின் முக்கு ணக்கட
லென்றுமுன், சேவ டிக்க ணிருப்பர் சென்னி சூவி
த்தசெங்கை விரிக்கிலார், பூவெ டுத்தவர் சென்னி
வைத்திடு போத முற்றவ ரம்மைநின், காவ லர்ப்
பொதி தாளில் வைக்கவு மூவர் சென்னிக ளிக்கு
மே. (உடு)

தேவிமங்கலகாண்சிறப்பு.

வேத ரஞ்சகன் மால்பு ரந்தரன் வேக சண்டகு
பேரனே, டாதி யெண்டிசை பாலர் பொன்றவு மா
தி யந்தமி லாததோர், நாதர் பொன்றில சேதுன்
மங்கல நாணு றுந்திற மாதலா, னீதழைந்தது யோ
க மம்பிகை நீலியென்பது பாவமே. (உசு)

என்னையளித்தல்வேண்டுமெனல்.

மொழிவ துன்செப முத்திரை பாணியின் முயல்
வ தெங்கு நடப்பன கோயில்சூழ், தொழிலருந்துவ
மூற்றுமு னுகுதி துயில்வணங்கல் களிப்பன யாவுநீ,
யொழிவ துங்களி யென்செயல்யாவையு முனது நன்
செய் பரிச்செய லாகவே, யழிவ தும்பதம் வைத்த
ருள் பேரொளி யளிவிளைந்துக ளிப்பெழு நாதமே.

தேவியினதுதோட்டின்சிறப்பு.

பிரம னிந்திரன் முற்பிற தேவர்க ளுனைலா,
நரைபெ ருந்திரை யற்றநல் லாரமு தேகொலா,
மொருவர் தங்கிலர் நிற்சிவ னுண்விடம் வாழ்வன்

மா, திருபெருங்குழை யிட்டபொன் ஞேலியின் வாசியே. (உஅ)

ஏவலாளர்மங்கலமொழி.

முதுமறைசொ லிளவனிதை யயனெடரி குலிச னுனே முறைபணியு நெறியி னிடையே, பதறியுன தருகுவரு மானெயெதிர் கொளவுனது பரிசனமு னடிவ ளமைபா, லிதுபிரமன் மகுடமரி மகுடமிது குலிசன்முடி யிதுகடின மிடறு மிருதாள், கதியமர வமரவழி விலகிவர வரவெமது கடவுளெனு மொழி தழைகவே. (உக)

தேவிவித்தைவந்தவாறு.

பசுபதிதன் நிதிகொண் டறுபத்து நாலுபல கலைஞா னமுங்க ருணையால், வசுவற நெடும்புவன மாயை யின் மயக்கியதன் வழிவரு பெரும் பயனெலா, மி சைபெற வினைத்ததும் பின்னுமுன தேவலா லினை யிலுன தாகமமெலாம், விசைபெற வினைத்தெவை யு மிதுதர வளித்ததுவும் விமலியுன துரிமை யல வோ. (ஙo)

தேவியினதுமூலமந்திரம்.

அரியதா குஞ்சிவஞ் சத்திமத னவனிபின் பாதித் தன் மதிம தனவேள், பெருகுவா னிந்திரன் பின்பு பரை மதனன்மால் பேசின்முக் கண்ட மடைவே, யுரியதா மந்தத்தின் மாயையும் முறையமைத் துறு மெழுத்தடைய வுணர்வாற், றெரியினு மத்திலெடு முனதுறுப் பாமென்று செப்புநான் மறைக ளுமை யே. (ஙக)

அம்மந்திரத்துடனெழுத்துகள் கூட்டிச்செபிக்குமுறை.

மோக போக விழைவி னருன் மூல வித்தை தன் னின் முன், னைக மாரன் யோனிபொன் னணங்க மைத்து நெய்யினல், யோக மார்சி வத்தழற்கு

ளோம முற்று விமலையே, தியாக மாமணிக்கொ டக்
க வலயமுட்செ விப்பரே. (கூஉ)

சத்திவடிவுஞ் சிவன்வடிவு மொன்றெனல்.

இருசுடர் முலைத்துணைச் சிவன்வடிவு நீயதனை யா
னுநவ மாக நினைவே, னுருவுநிறை தன்னிலள வொ
த்தபர மானந்த முடையபர னெடுப ரையுமாய், ம
ருவுமினி தாமுங்கள் கூட்டமது சேடமு மறுத்தத
னை யுடைய துவுமா, யருகிலிரு வர்க்குமொரு பொ
துவாகி நிற்குங்கொ லழிவற்ற ஞானமுதலே. (கூக)

இது அதன்கருத்தை வெளிப்படுத்தல்.

மனமுநீ வெளியுநீ வளியுநீ கனலுநீ மறிபுனலுநீ
புவியுநீ, நினையினீ பரமற வளர்ந்தொளி பரந்துவிடி
னீயன்றி யொன்று முளதோ, வுனதுமா ஞானவா
னந்தவுரு வைப்புவன வுருவென வகுத்த ருளவோ,
வனையுமாய் மகவுமா மாறுபோ னீசத்தி யருணவடி
வாயதுமையே. (கூச)

ஆக்கினையிலே தெரிசிக்குமியல்பு.

அருளுமுன தாக்கினைத் திகிரிக்கு ளுட்பட் டரு
க்கன்மதி யனைய வடிவாய்ப், பருவமுதிர் பரசின் ம
யத்தொடுறு பான்மையாம் பரமசிவனைப்பணிகுவா,
மொருபொழுதி லிப்பரம சிவனையெழு கதிர்மதிய
வொளிகடந் தொளிரு மொருபாற், பெருகுபர மா
னந்த விழைவொளி நினைப்பதுகொல் பெறுமுத்தி
சத்தியொளியே. (கூடு)

விசுத்தியிலே தெரிசிக்குமியல்பு.

இறைவிநின் விசுத்தித் தலத்திடை பளிங்குநிற
வெழிலொடுல கருடங் தையா, யுறையுமொரு சிவ
னையு மவன்போலு மாரம்ப முடையநினை யும்ப ணி

குவா, நிறைமதி யொளிக் கொத்த நெறியேகு மும தொளியி னிலவுண்டு பசிக ளேவதோர், முறைபெ ருச கோரமென வுலகுபா தகவிருண் முடித்துக் க ளித்து றையுமே. (கசு)

அனுகதத்திலே தெரிசிக்குமியல்பு.

முன்னைத் தபோதனர் தமிதயமா னதவாவி முது ஞான முளரி நறவார்ந், தன்னத்தின் வடமொழிப் பெயர்பெற்று மொழிபயிலு மறுமூன்று விஞ்சை வி ரிவாற், பன்னப் பொதிந்ததீ வினைநீரி னற்குணப் பா ல்பிரித்துண்டு களியா, மன்னப் படுஞ்சிறைப் புள்ளி ணையை நாடொறும் வழுத்துது மலர்க்க மலையே.()

மணிபூரகத்திலே தெரிசிக்குமியல்பு.

விரித்தவிருள் விழுங்குசத்தி மின்னெடும்பன் ம ணியிந்த்ர வில்லினேடுந், தரித்தமறை பரவுசிவ தப னகதி தொறிப்பவதிற் றழன்று தீயிற், புரித்துலகங் கு ளிரவொளி தழைத்தொளிரப் பொழியமுத தாரை மாரி, பரித்தமணி பூரகத்துன் பச்சைமுகில் பணிவ னருள் பழுத்த கொம்பே. (கஅ)

சுவாதிட்டானத்திலே தெரிசிக்குமியல்பு.

நிலைபெறு சுவாதிட்டான நிற்சிவனலு நீயு, மில கிய தன்மை நெஞ்சத் திறைஞ்சுவ முரைக்க மாட் டே, முலகமப் பார்வை செந்தீக் குருகிநின் கருணை பொங்கி, யலையெறிய முதப்பார்வை யளித்தினி தரு ளுமம்மே. (கசு)

மூலாதாரத்திலே தெரிசிக்குமியல்பு.

நீநந்து மூலவா தாரத்தி லானந்த நிர்த்தமிடு மி றைவி நின்னே, டானந்த தாண்டவம் விளைத்துசவ வடிவுபெறு மாதிசிவ னேப்பரவுவாம், வானந் தொ

டுத்துலக மடையப் படைத்திடுமிவ் வகையின் புண
ர்ச்சியலவோ, ஞானங்கொ டனைதந்தை யெனவுலகு
தெளிவுற நடத்துவது ஞானவொளியே. (சo)

கூந்தற்புகழ்ச்சி.

அந்தர மணித்தபனர் பலமணியின் வடிவெடுத் த
மருமுன தம்பொன் முடிமே, லிந்துகலை கவமணியி
னெழுகுபல நிறமடைந் திலகுமதி சயவடிவினுற்,
சந்திரகலை நன்றுகன் றென்பர்சில ரன்றன்று சந்த்ர
கலை யிந்தநிறமோ, விந்திரசிலை யிந்திரசிலை யென்பர்
சில ராதலால் யாதென வழுத்த வுமையே. (சக)

இதுவுமது.

அலர்ந்தகரு நெய்தலங் காடெனக் கடைகுழன் ற
றநெய்த் திருண்டு செறிவோ, டிலங்குறு மியற்கை
மண மெண்டிசை யளப்பவதி லிதழ்மூழ்கு நறைவி
ழைவினுற், பொலன் கொண்முடி யாகண்ட லேசர்
பொற் றுணர்விரி பொதும்பர்மது மலர்படிவ தோர்,
சிலம்பளி பரந்தவுன தோதியென் மனத்திருட் செ
றிவுதெற வருள்க மலையே. (சஉ)

இதுவுமது.

மோதிய வெங்கதிர் மீளவெ ருண்டிருண் மூட
வொதுங்கிய வாறேயோ, சோதி முகங்கவி னேறிவ
ழிந்தன சோரவி டுங்கவர் காலேயோ, வோதி பிணை
ந்துபின் வீழவகிர்ந்தக னூடெழு தும்பரை யாதே
யோ, கோதறு சிந்துர சோகை வளம்பிறர் கூறுவ த
ன்றிது மாதாவே. (சங)

முகப்புகழ்ச்சி.

கூரெயிற்றி னகவிதழுங் கொண்கர்விழி வரிவண்
டெங் குழற்படிந்த மதுகரத்தின் குழாமுங் கூடிப்,

பேரியற்கை மணம்பொதிந்து புன்மூரன் முகையவி
ழப் பிறழுமுன தருணமுக கமலமென்ரு, லோரிய
ற்கை வாடுமிதில் பொறிவண்டே படிவதுமற் ரோரி
யற்கை செயற்கைமணம் போது செய்யு, நீரியற்கை
மலர்க்கமல மிதற்குடைந்து பங்கமுற னீதியென்ப
தியார றியார் நிகரின்மாதே. (சச)

திருநுதற்புகழ்ச்சி.

கோதை நீண்முடி கொண்டொளிர் திங்கள்சேர்
பாதி வாணுத லென்று படிந்ததோ
வீதுகூடி யிரண்டு நிறைந்ததோ
சீத பூரணத் திங்கள் சிறந்ததே. (சடு)

திருப்புருவப்புகழ்ச்சி.

கருவிழிச் சுருப்பு நாணுன் கண்மல ரம்புகன்னற்,
புருவவி னடுவொ ழித்தல் போன்றது வளைத்துப்
போர்மேல், வருமதன் பிடித்த கைக்குண் மறைந்
தது போலு மென்ரும், றிருமகள் பரவு மம்மே சிலை
யிது புருவமன்றே. (சசு)

திருவிழிப்புகழ்ச்சி.

ஒருமலர்க்க ணிரவிவலத் துதித்தருளு நன்பகலு,
மொருமலர்க்கண் மதியமிடத் துதித்தருளும் பேரி
ரவும், திருநுதற்கட் பொற்கமலச் செந்நிறத்தீ விளை
த்தருளும், விரவுசெக்கர் மாலையுமுன் விழைவகலா
விழுப்பொருளே. (சஎ)

இதுவுமது.

கோலநகர் விசாலையாய் நிரந்தரகல் யாணியாய்க்
குவலயத்தா லயோத்தியாய்க் குலமதுரை தானுய்
ச், சாலவொளிர் போகவதி யாயமுத தாரையாய்த்

தண்ணளியா லவந்தியாய்ச் சகவிசையை யெனலா
ய், நீலவிழி புடைபரந்து நெடுநகரப் பெயர்கவர்ந்
து நீண்டுசேந் தரிபரந்து நிகரொழிக்கு மென்ரு,
லாலவிட மமுதெனக்கொண் டருந்தியவுன் மத்தர்
புர மதனிலொரு புறங்கவர்த லதிசயமோ தாயே()

இதுவுமது.

இருசெவியுண் பலகவிதை யிணரொழுகு பசுந்
தேனிற், பெருகுரவ ரதமருந்திப் பிறழ்ந்திடுமுன்
பிணைவிழியாங், கருநிறவண் டிணைகளிப்பக் கண்டு
பொரு தென்னேயோ, வரிதுதற்க ணளிசிவந்த வள
ம்பாராய் மலர்க்கொடியே. (சசு)

இதுவுமது.

அரனிடத்திற் பேரின்ப மருளுமவ னல்லார்பா
லருவருக்கு மவன்முடிமே லணிநதியைச் சீறும்,
பரவுதுதல் விழியழன்முன் பார்த்திலபோ லதிசயி
க்கும் பணியாய பணிவெகுளப் பயந்தனபோ லொ
டுங்கும், விரைமுளரிப் பகைதடிந்து வீரரதம் ப
டைக்கும் வினவுதுணைச் சேடியர்க்கு விருந்துநகை
விளைக்கு, மிரவுபக லடிபரவு மெளியனைக்கண் டரு
ள்புரியு மித்தனேயோ படித்தனவுன் னிணைவிழிக
டாயே. (சூ0)

இதுவுமது.

இகல்பொரக் குழையை முட்டு மிமைமயி லொழு
ங்கிற் றூவ, னிகரறு நித்தர் யோக நீக்கிவெம் போ
கநல்குஞ், சிகரவெற் பரசன் மெல்லெத் திருமா பெ
ன்னுந் தெய்வ, மகுடமா மணிநின் கண்கள் வயமத
ன்வாளி தானே. (சுக)

இதுவுமது.

வரிவிழிச் செம்மை வெண்மை வனப்புறு கரு
மைமூன்று, மெரிதெறு கற்ப காலத் திறந்தமுப்

பொருளுந் தோன்றும், கருவெனக் குணங்கண் மூன்றின்காரண மென்னப் பெற்ற, லருமறைப் பொருளே யுன்ற னருளலா துலக முண்டோ. ()

இதுவுமது.

அம்மைநின் கருணை பொங்கி யலையெறி நயன வேலை, மும்மணி கெழுமுன் றிண்டர் மும்மலங் களைய மூழ்கச், செம்மைநன் சோனை யாறு தெளி கங்கை யமுனை மூன்றுந், தம்மயத் தொடும்வந் துற்ற தன்மையீ தென்பர் மிக்கோர். (நுஈ)

இதுவுமது.

இடம்படர் கொடியே நின்க ணிருசெவிக் குளைப்பதேதென், றடர்ந்தெழு சேலின் கண்க ளடைப்பில பயப்பட் டம்மா, கடும்பகற் கமல வீடுங் கங்குல்வாய் நெய்தல் வீடு, மடைந்தனள் கமலை யொன்றுன் றடைப்பன கண்டு கண்டாய். (நுச)

இதுவுமது.

இணைவிழி யிமையா நாட்ட மெய்திய தலரத் தோன்றும், பணைநெடும் புவன மிந்தப் பார்வைசற் றிமைக்கு மாயிற், றுணையிழந் தழிவ தெண்ணித் துணிந்தநின் கருணை யென்றும், கணையினுங் கொடிய தென்னக் கடவதோ கடவுண் மாதே. (நுடு)

இதுவுமது.

நெடியகட் கரிய நெய்த னிறையருட் சலதி யெய்தாக், கொடியனென் பிறவித்துன்பக் குளைகடல் கடந்து மூழ்க, விடினதிற் குறைவுண்டோ மெய்த்தவர்கொழிந்து ரூதோ, கடிநகர் நிலவு காட்டிற் காயுமே கருணை வாழ்வே. (நுசு)

இதுவுமது.

கருங்குழ லுதற்கட் பின்னற் கவின்கடைக் கபோ
லந் தாழ்ந்த, வருங்குழை கடந்த கண்ணி னயிற்க
டையனங்க சாப, நெருங்குறத் தொடுத்த வேவி னி
மிர்தலை யேய்க்கு மென்ரூன், மருங்கில்பொற் றிரு
வே யாருன் மதர்விழி பாவவல்லார். (ருள)

திருச்செவிப்புகழ்ச்சி.

தோகைநின் கபோலஞ் சார்ந்த துணைநிழற் சுவடு
ந்தோடு, மாகவிவ் வுருளை நான்கி னனை விரதம்
வாய்த்தோ, வேகநன் புடவி வட்டத் திருசுட ராழி
க் திண்டேர்ப், பாகரைப் பொருது மாரன் பழம்ப
கை தீரப்பெற்ரூன். (ருஅ)

இதுவுமது.

வேரிநாண் மலர்க்குள்வாணி வீலையில்பாட லமு
தெலாஞ், சேரமாம டந்தைநின்செ விக்குணவ ருத்
தவே, ளாரமாலை முடியசைப்ப வாடியெற்று குண்
டலம், பூரைபூரை யென்றசொற் பொலிந்தவோசை
பெற்றதே. (ருக)

திருநாசிப் புகழ்ச்சி.

இமயமன்னன் மரபில்வெற்றி யிடுபதாகை யனைய
வென், னமலையுன்றன் வதனதுண்ட வணிசிறந்த ம
ணியையோ, விமலமன்னு கவிஞர்முத்தை வெற்
பில்வல்லி யலர்வதோர், கமலமன்னு குமிழளித்தல்
ண்டதல்ல வென்பதே. (கூ0)

திருவிதழ்ப் புகழ்ச்சி.

இறைவிநின்னி தழ்ச்சிவப்பி யற்கையித்தொ டி
ணைசொனு, னிறைகொள் கொவ்வை யிந்நிறத்தி னீ
ல்பெற்று விம்பமா, யுறைதல்கொண்டு நாணுமற்

ரை ருவமையில்லை யுண்டெனு, வறைகடற் றுகிர்ப்
பழுக்கி னன்றுசொல்வ னளியனே. (சுக)

திருநகைப் புகழ்ச்சி.

அன்புமுற்றிவடி வாயவம்மைநின தானனத்துமதி
நகைநிலா, நன்புறத்தமுத மொழுகுமாமதுர நறை
கொள்சிதள மயின்றவா, யின்புளிப்பலது வட்டுரை
தினி யெனத்தெவிட்டியச கோரம்வான், முன்பரப்
புநில வுண்ணுமாலுனது மூரலுக்குநிகர் மூரலே. (

திருவாய்ப் புகழ்ச்சி.

விள்ளநாவுரை பெறுந்தொறுந்தலைவர் வீரமும்
புகழு மழகுமே, தெள்ளுபாடன்மது ரம்பழுத்த
னைய செய்யகேழொளிவ னப்பினு, லள்ளன்மாமல
ரை விட்டுவாணியுன தருணநாவுறைய வெள்ளையா
யுள்ளமேனியுமெ னம்மைநீயருள வுன்னிறம்பெற
வ தொத்ததே. (சுங)

இதுவுமது.

அற்றையருட் சிவசேடஞ் சண்டனுண வதுபெ
ரு தாவ நீரக், கற்றைமலர்க் குழலுமைநின் கருப்பூ
கலசமதிக் கலசம் போல, வுற்றதிருத் தம்பலத்தி
னெருகலச மேனுமினி துண்டு வாழப், பெற்றிலமே
லமரனெனும் பெயர்பெறவு மிருந்தனமோ பிழை
பில் விண்ணோர். (சுச

இதுவுமது.

பசுத்தமலர்க் கொடிகருணை பழுத்தனைய கொ
பேநின் பரமர் பொற்றிரள், விசைத்தொழிலை
கலைவாணி தனிற்பாடிப் பாடியவண் மெலிவ த
லா, லசைத்திலர்பொன் முடியுனது மதுரமொழி
கசைத்தனனென் றதற்குநாணி, யிசைத்தொழிலை

கைவிட்டா ளெழில்வீணை யுறையிலிட்டா ளேது செய்வாள். (சுடு)

திருச்சிபுகப் புகழ்ச்சி.

மகவாசை யாலிமய மலையரையன் மலர்க்கைதொ டமனத்து ளன்பு, புகவாசை யாலிறைவன் கரத்தே ந்தப் பொலிவுறுகின் சிபுகம் போற்றின், முகவாசி யான்படிமக் கலம்பார்க்க விட்டமுகிழ்க் காம்புபோ லுஞ், சகவாழ்வை யிகழ்ந்திதயந் தனித்தவர்தந் தவ க்கொழுந்து தழைத்த கொம்பே. (சுசு)

திருக்கழுத்தின் புகழ்ச்சி.

வயங்குறுகின்ற ளவட மான்மதச்சே றணையமது மத்தர் மேனி, முயங்குதொறு மெழுபுளக முட் பொதிந்த பசுங்கழுத்து முகமுங் கண்டா, லியங்கு புனற் கருஞ்சேற்றி னெழும்வலய மூள்ளைத்தா ளீன்ற கஞ்சம், பயம்புகுதல் கடனென்றே மாற்றிலா ப் பசுமையொளி பழுத்த பொன்னே. (சுஎ)

இதுவுமது.

செந்திரு[illegible]வே. ருமணத்திற் சேர்ந்தசா மூன்றழு ந்தித் திகழ்வ [illegible]தன்கோ, மந்தரமத் திமதார மூவ கை நாதமுமெல்லை வகுத்த தென்கோ, கொந்தை யுந் துணர்பூகங் கொழுத்தபசுங் கழுத்தின்வரைக் குறிகண்மூன்று, மிந்தியுஞ் சயமகளுங் கலைமாது ம் புகழ்வதல்லால் யானென் சொல்வேன். (சுஅ)

திருத்தோட் புகழ்ச்சி.

முன்னமொரு தலைசினவன் முதல்வரா லிழந்தவ யன் முகங்க ணான்கா, லுன்னழகுக் கேற்றபசுங் கழை மணித்தோ ளொருநான்கும் வழுத்து கின்று, னின் னமொரு சீற்றமெழுந் தரிதலையை யெனினுமிவ ட

டமென் றேஞ்சேச், சொன்னதலைக் கழிவிலையென் றதிற்றுணிந்த துணிவன்றே சுருதிவாழ்வே. (சுசு)

திருக்கைப் புகழ்ச்சி.

திருமகடன் சீறடியாற் றுவண்டுமதிற் செம்பஞ் சாற் செங்கேழ் பெற்று, மருமுளரி யெழில்படைத் த திதுவோநம் மியற்கையெதிர் மலர்வ தென்றே, யி ருகரமு நகைத்த நகை யொளியையுன தெழிலுகி ரென் றிறைஞ்சி நாளு, மருமறைகள் வழுத்துகின்ற தசியமோ பேதைமையோ வன்போ வம்மே. ()

திருமூலைப் புகழ்ச்சி.

நித்தமொரு பக்கமயி னிற்களிறுன் வட்டமுலைநிற் குமெழி லிற்றனதுசீர், மத்தகமெ னத்தனில யிர்த் தொருக ரத்தைமுடி வைத்துறவு றத்தடவுமான், மு த்தமுலை செப்புவதெ னக்களிறு பிற்குமரன் முற்பு தல்வர் துய்த்த வமுதா, லத்தலைமை பெற்றனர திற் றிவலை கிட்டினுமெ னற்பவுயிர் முத்திபெறுமே. ()

இதுவுமது.

மூக்கணிறை வர்க்குமயன் முற்றலையின் முற்று முலை முட்டியசு ரப்பொழுகுபாலுமைநீகளிரு வர் க்கருள வக்களிறு மிக்குகனு மட்டிதிமை முற்றுகில ரா, லக்கடலு நித்தவமு தத்தினையெ டுத்தகில டை த்திருகண் முத்திரையின்வாழ், செக்கர்மணி மெய் க்கலச மத்தனையுன் வட்டமுலை செப்பலம லைப்புத ல்வியே. (எஉ)

இதுவுமது.

கொற்றவாரண முகமகன்பொரு குஞ்சரானன நிரு தனு, ரிற்றகோடுதி ராரமாலிகை யிதழ்மணிப்ர பை தழையவே, பெற்றபாகபி னுகபாணிப்ர தாப மோடணை புகழெனு, வுற்றவாயினு முனதுபொற்றன முனைபடாநிறை செல்வியே. (எசு)

இதுவுமது.

தருணமங்கலை யுனதுசிந்தித்த முழைந்தபாலமு தூ
றினு, லருணகொங்கையி லதுபெருங்கவி யலெநெடு
ங்கட லாகுமே, வருணநன்குறு கவுணியன்சிறு மத
லையம்புயல் பருகியே, பொருண யம்பெறு கவிதை
யென்றிரு புனிதமாரிபொ ழிந்ததே. (எச)

உரோமரோகைப் புகழ்ச்சி.

மூலமேகின் மகிழ்நர்கோப முதுகனற்பொ ருது
வேள், கோலநாபி மடிவினிற்கு ளிப்பவந்த வெம்
மையான், மேலவாவு தூமரோகை வேரொழுங்கொ
மூந்தையோ, நீலரோம ரோகையென்று நீணிலங்கு
றிப்பதே. (எடு)

இதுவுமது.

முளரிமாதுன் முலையிணைடு முலைநெருக்க விடை
யில்வான், வெளியினீல மோடியுந்தி வியன்முழைக்
கு ணுழையவே, தெளியுநீரில் யமுனைவு சிறுதரங்
க மனையபே, ரொளியின்ஞால மருளுமீது ரோமரே
கை யென்னவே. (எசு)

நாபிப் புகழ்ச்சி.

தூயகங்கை நிலைபடைத்த சுழிதனத்து முகையி
ல, லாயதுங்க ரோமவல்லி யாலவாலம் விரகவே,
டீயரும்பு மோமகுண்ட மிறைவர்செங்க ணிடைவி
டா, மேயகஞ்ச மடிவினுந்தி வேறுளாத்தென் விம
லையே. (எஎ)

திருவிடைப் புகழ்ச்சி.

தாமடந்தை பரவுமங்கை தனதடம்பொ ருது
நின், மிருமருங்கு லறவளைந்து சிறுகிமூவி ரேகை
யாய், வரைபிளந்தொ ரிடிகளைக்குள் வாழ்மரத்தொ

டக மனேயதோ, கமலமென்பது பனியில் வெந்திதழ் கரியகங்குலின் முகுளமாய், விமலேயின்றிரு மனேயெனும்பெயர் விளேவதொன்றல முதல்வியே. ()

இதுவுமது.

பஞ்சமூத்தினும் வாடுநின்பத பங்கயத்தினே யொப்பெனு, விஞ்சைகற்றவர் வன்புறக்கம டத்தைவீணில்வி யப்பரா, லஞ்சனப்புய றங்கைகின்வர ரம்மி மீதிலும் வைப்பரால், வஞ்சகக்கொடு நெஞ்சரத்தனே வல்லரல்லர்நி னேக்கினே. (அள)

இதுவுமது.

அற்றவர்க்கருள் செய்யும்மம்மைநி னற்புதப்பத மம்பொனு, டிற்றவர்க்கருள் பொற்றருத்தர வூடறிந்திலமென்னவே, முற்றுபொற்பர மாதர்கைத்தல முண்டகங்குவி வெண்ணிலா, நற்றிறத்தொடு நாடி நாடிந கைக்கவாளுகி னென்பரே. (அஅ)

இதுவுமது.

செய்யபஞ்சுரு ழம்பெழும்புனல் செல்விநின்பத நல்கவே, துய்யபங்கய வாணிதம்பல வூறறுத்தசொல் வாணர்போன், மையனெஞ்சுறு மூமருங்கவி வாணராகிம லிந்ததான், மெய்யடங்கலு மூழ்கு முன்கவி வீறுநாவில டங்குமோ. (அக)

இதுவுமது.

நாடியுன தற்புத நடைத்தொழில் படிக்கும்
பேடைமட வன்னமொரு பேதநடை கூறு
மாடகம ணிப்பரிபு ரத்தரவ மம்மே
யேடவிழ்ம லர்ப்பதமி னைக்குமறை போலும்(கo)

இதுவுமது.

தோகைநின் மலர்ப்பத சுடர்க்குடையும் வெய்யோ
னுகமணி செய்வதொர்க ணடிவடி வாகு
மோகமதி தானுமது வாகிய[illegible]சேர்
கோகனக மென்னிதய [illegible]ன்னும். (கூக)

[illegible]

அன்பினரி ரப்பதினி [illegible]
நின்பதத ருத்துணர்நி றைந்தொ[illegible]ளப்பா
மின்பமுறு தேன்முழுகு மென்னிதய வண்டின்
றன்புளக மெய்க்களித ழைக்கவரு டாயே. (கூஉ)

பலவவயவங்களின் மேலு மெழுமுள்ளன்பு.

ஓதியிருண் மூரலொளி யுற்றகுழை வாக
மோதுமுலை யற்பவிடை முற்றுமு னிதம்ப
மாதிபர னின்னருடி ரண்டருண மாகு
மாதுநின் மலர்ப்பத மனத்தெழுதி வைத்தேன். ()

செல்வப் புசழ்ச்சி.

தூயமதி மாகதச்செப் பொளிர்கலையுங் களங்கமு
நேர் சொல்லுங் காலைக், காயுமதி தவளகருப் பூர
கலசத்தொடு கத்தூரி போலு, நீயருந்த வருந்த
வவை குறைதொறுமவ் விரண்டுமய னிறைத்தல்
போலுந், தேயுமது வளருமது திங்களெளி தோவு
னது செல்வ மம்மே. (கூச)

இதுவுமன.

தேவியு னில்லஞ் சிவனுறை யந்தப் புரமானுல்
யாவ ருனைக்கண் டெய்துவ ரிமையோர் முதலாலே
ராவல்கொ டெய்த்துன் வாயிலி லணிமா திகளாலே
மேவிய சித்திப் பேறெடு மீள்வா ரானரோ. (கூஙி)

நாடோறுந் தியானித்துப் பணியுமாறு.

மூவர்ம கேசன் முடிகொளு மஞ்சத் தொழிலாயு
மேவிய படிகத் தனதொளி வெளிசூழ் திரையாயு
மோவறு செந்[illegible] விம்பம தின்பத் துருவாயும்
பாவைனினகல[illegible]டு நின்னைப் பணிவாமே.

[illegible]ச்சி.

கலிமகளும் [illegible] மலியுமற் றவளே
மலிமகணீ [illegible]தியெனப் பகருங்
குலமறைக [illegible]காடுநின் குரவினையு மணையா
மூலிகுழையப் புணர்வதுநின் முதல்வரலதிலியால்.

சத்திவடிவெல்லாந் தேவிவடிவெனல்.

வேதியர்க ளயனுவில் விஞ்சைமக ளென்றுஞ்
சீதரன்றன் மணிமார்பிற் செழுங்கமலி யென்று
நாதரிடத் தரிவையென்று நாட்டுவொண் ணடங்கா
வாதிபரன் மூலபரை யாமளையுன் மயக்கால். (கூஅ)

தியானிப்போரடையுந் தன்மை.

அம்மேநின் மெய்ப்பிரிவா மணிமாதி தொழுமழி
யா, விம்மேனி தம்மேனி யெனத்தெளிந்து பாவிப்
பார், செம்மேனி யரன்வாழ்வுஞ் சிதைவதெனப்
புறக்கணித்து, வெம்மேனி யூழியனற் றீபமிட விள
ங்குவார். (கூகூ)

இதுவுமது.

தாமாக வுனைநினைவோர் தவமிறுகத் தனமிறுகி
மாமோகப்புன்முறுவன் மனங்கவரக் கடைவிழியாற்
காமாதி பலருதிப்பக் கடம்பலர்க்கே மூறச்சிவனீ
யாமாமென்றயிர்ப்பமய லளிப்பராலரும்பொருளே.

அடியார்பெறு மிருமைப்பயன்கள்.

சுந்தரிநின் றிருண்டர்தமைத் தோய்வதற்கு நாம
களுரு, மிந்திரையு மலரயன்மா லிடருழப்ப விரதியி

ன்க, ணந்தமில்பே ரழகொடுகற் பழித்துநெடு நாள் கழியாச், சிந்தையுறு பாசம்போய்ச் சிவமயத்தைச் சார்குவரால். (கoக)

இப்பனுவலை யேற்பித்தல்.

சேமநிதி யேயமுதே தேனேநற் குணக்கடலே, யாமளையே யன்பர்மனத் திருந்துமுளைக் கடங்காத, கோமளமே யம்மேநின் கோகனகத் தாள்வழுத்து, மாமறைபோ லென்பாடல் வண்டமிழுங் கொள்வா யால். (கoஉ)

இதுவுமது.

ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக்கொண் டா லத்தி சுழற்ற லென்கோ, சீதமதிக் கவனிலவி னெ ழுகுசிலைப் புனல்கொடுப சரிப்ப தென்கோ, மோ தியமைக் கடல்வேந்தை யவன்புனலான் முழுக்கா ட்டு முறைமை யென்கோ, நீதருஞ்சொற் கவிகொ டுனைப் பாடியுன தருள்பெறுமென் னீதி யம்மே. ()

இதுவுமது.

வேதநுண்பொரு ளாதிசுந்தரி வீறடங்கலு மாய மே, யீதறிந்துவி டாகொளுங்கவி ராசபண்டிதன் வீயாயா, னுதரஞ்சகி தாள்பெறுந்திரு நாமமொன் பது நூறுமே, யோதினன்பர போகமுஞ்சிவ லோ கமும்பெறு வார்களே. (கoச)

முற்றுப் பெற்றது.

உ

சிவமயம்.

காசிக்கலம்பகம்

மூலபாடம்.



குமாரகுருபாசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

சென்னபட்டணம்:

ஊ. புஷ்பாதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1885.

கணபதிதுணை.

காசிக்கலம்பகம்.

காப்பு.

நேரிசைவெண்பா:

பாசத்தளையறுத்துப்பாவக்கடல்கலக்கி
நேசத்தளைப்பட்டுநிற்குமே – மாசற்ற
காரார்வளையீன்றகன்னிப்பிடியளித்த
ஓரானைவந்தெனுளத்து.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

[இவை இரண்டும் ஆறடித்தரவு.]

நீர்கொண்ட கடலாடை நிலமகளுக் கணியான
கார்கொண்ட பொழிற்காசிக் கடிநகரங் குளிர்தூங்க
இடமருங்கிற் சிறுமருங்குற் பெருந்தடங்க ணின்னமிர்தஞ்
சடைமருங்கி னெடுந்நிலைக்கைப் பெண்ணமிர்தந் தலைசிறப்ப
கன்கதுவு கடவுண்மணி தெரிந்தமரர் கம்மியன்செய்
விண்கதுவு பொலங்குடுமி விமானத்தின் மிசைப்பொலிந்தோய்
நிற்பனவுந் தவழ்வனவு நடப்பனவு மாய்நிலத்துக்
கற்பமளவிலகண்டு மூறுகளைகண் காணுமே
பழங்கணுறு முயிர்கடுயர்க் கடனீத்துப் பரங்கருணை
வழங்குபர மாநந்த மாக்கடலிற் றினைத்தாட
உரையாத பழமறையின் முதலெழுத்தி னெண்பொருளை
வரையாது கொடுத்திடுநின் வள்ளன்மை வாழ்த்துதுமே.

[இவையாறும் ஈரடித்தாழிசைகள்.]

நீரொழுத்துக்கொத்தவுடனீத்தார்க்குநீரவில்வ
தோரொழுத்தேதமுழுதுமவரெவ்வண்ணமுணர்வதுவே
என்பணிவதுடுப்பதுதோலெம்பிரான்றமர்களவர்
முன்பணியும்பேறுடையார்திசைமுகனுமுகுந்தனுமே
செடிகொண்முடைப்புழுக்கூடேசிற்றடியோமிடுதிறைமற்
றடிகளடியார்க்களிப்பதாகந்தப்பெருவாழ்வே
பற்பகனேற்றருந்தவரும்பெறற்கரியபரந்தாமம
ளற்புடல்விற்றளியேமுங்கொளப்பெறுவதிறம்பூதே
நிணம்புணர்வெண்டலைக்கலன்கொனேரிழைமுத்தித்திருவை
மணம்புணர்வார்க்கையனருண்மணவாளக்கோலமே
முடைத்தலையிற்பலிகொள்வான்மூவுலகுமவரவர்தம்
கடைத்தலையிற்றிரிவதுகொல்யாம்பெறுகின்காணியே.

[இவைநான்கும் ஈரடி அராகங்கள்.]

உளதெனவிலதெனவொருவரொராளவையின்
அளவினிலளவிடலரியதொருருவினை.

இதுவெனலருமையினெழுதருமொழிகளும்
அதுவலவெனுமெனிலெவருனையறிபவர்.

அவனவளதுவெனுமவைகளினுளனலன்
எவனவனிவனெனவெதிர்தருதகைமையை.

அறிபவரறிவினுளறிவுகொடறிவுறு
நெறியலதொருவருமறிவருநிலைமையை.

[இவைநான்கும் நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்.]

ஆணெடுபெண்ணுருவமைந்துகின்றனை
பூண்முலைகலந்துமைம்புலனும்வென்றனை
எண்வகையுறுப்பினேருருவெடுத்தனை
தொன்மறைப்பனுவலின்முடைதொடுத்தனை.

[இவை எட்டும் முச்சீரோரடி அம்போதரங்கம்.]

வடவரைகுழைய வளைத்தனை
மலைமகண்முலைக டிளைத்தனை
விடமமிர்தமர விளைத்தனை
விசயனெடமர்செய் திளைத்தனை
வரிசிலைமதனை யெரித்தனை
மதகரியுரிவை தரித்தனை
அருமறைதெரிய விரித்தனை
அலகில்பல்கலைக டெரித்தனை.

[இவைபதினறும் இருசீரோரடி அம்போதரங்கம்.]

அழல்விழித்தனை அலகிறந்தனை
பவமொழித்தனை தலைசிறந்தனை
ஆறணிந்தனை அருள்சுரந்தனை
மாறணிந்தனை இருடரந்தனை
மழுவலத்தினை உலகளித்தனை
முழுநலத்தினை தமிழ்தெளித்தனை
மானடத்தினை ஒன்றுமாயினை
மானிடத்தினை பலவுமாயினை.

[இவைநான்கும் ஈரடித்தாழிசைகள்.]

அலகில்பலபுவனங்களடங்கலுமுண்டொழிப்பாய்க்குக்
கொலைவிடமுண்டனையென்றுகூறுவதோர்வீறுமே
பயின்மூன்றுபுவனமுங்கட்பொறிக்கிளையாப்பாலிப்பாய்க்
கெயின்மூன்றுமெரிமடுத்தாயென்பதுமோரிசையாமே
அடியவரேமுக்குறும்புமறவெறிந்தாளொளிமடிகள்
விடுகணைவிற்காமனைநீவென்றதுமோர்வியப்பாமே
இக்கூற்றின்றிருநாமத்தொருகூற்றுக்கிலக்கென்றல்
அக்கூற்றங்குமைத்தனையென்றிசைப்பதுமோரற்புதமே.

[இது தனிச்சொல்.]

எனவாங்கு.

[இதுபத்தடி நேரிசை யாசிரியச்சுரிதகம்.]

உலகுசூற்கொண்டதலைவியுநீயும்
மலைபகலெறிந்தமழவிளங்குழவியை
அமிர்தமூற்றிருக்குங்குமுதவாய்த்தேறல்
வண்டுகினனேப்பமடித்தலத்திருத்திக்
கண்களிற்பருகியக்காமருகுழவி
எழுதாக்கிளவியின்சுவைபழுத்த
மழலைநாறமிர்தம்வாய்மடுத்துண்ணச்
செஞ்செவிநிறைத்தநும்மஞ்செவிக்கடிகளென்
புன்மொழிக்கடுக்கொளப்புகட்டினன்
இன்னருள்விழைகுவாயிறும்பூதுடைத்தே.

[நேரிசைவெண்பா.]

உடையாளகிலேசர்க்கோங்குமூலக்கோட்டின்
அடையாளமிட்டுவையாளானல் - கடையிலவர்
செவ்வண்ணம்பெற்றூர்திரளொடுநிற்கின்றூரை
எவ்வண்ணங்கண்டிறைஞ்சுவேம்.

[கட்டளைக்கலித்துறை.]

இறைவளைக்காகம் பரிந்தளித் தார்கி லேசர்கொ
ன்றை, நறைவளைக் கும்முடியாரடிக் கேகங்கை நன்
னதியின், துறைவளைக் குங்குரு கீருரு கீரொன்று தூ
மொழிகைக், குறைவளைக் கும்முங்கள் பேரிட்டதா
ற்சென்று கூறிடுமே.

[புயவகுப்பு, இரட்டைஆசிரியச் சந்தவிருத்தம்.]

(இது முதலடி.)

இடமறமிடைதருகடவுளர்மடவிய
றொறிதருகவரிநிழற்கட்டியின்றன

இனவளை கொடுமதனிசெயவிருதென
விறையவளெழுதுசுவட்டுக்கிசைந்தன
இருவருங்கொனவரிசிலைவிசயனெ
டெதிர்பொருசமரினிளைப்புற்றிருந்தன
இணையடிபரவியமலடிமுனுதவிய
விடியலினுணவொருதட்டைப்பரிந்தன,

(இது இரண்டாமடி.)

படவரவுமிழ்தருமணிவெயில்விடவளர்
பரிதியொடெழுமுதயத்திற்பொலிந்தன'
பருகுமினமிர்தெனவுருகிருகவிஞர்கள்
பனுவலின்மதுரவிசைக்குக்குழைந்தன
படரொளிவிடுசுடர்வலயமதெனவொரு
பருவமாநெடுவிலெடுத்துச்சுமந்தன
பரர்புரமெரியொடுபுகையெழுமலர்மகள்
பணைமுலைதழுவுசரத்தைத்துரந்தன,

(இது மூன்றாமடி.)

மடலவிழ்தடமலரிதழியினிழிதரு
மதுமழையருவிகுளித்துக்கிளர்ந்தன
வழிதரவுதிரமுநிணமொடுகுடர்களும்
வருநரகரியின்மதத்தைத்தடிந்தன
மதகரியுரியதள்குலகிரிமுதுகினின்
மழைமுகிறவழ்வதெனப்பொற்பமைந்தன
மலியுமிழ்நிலவொடுமெதிதிறல்வெயிலெழ
மதிகதிர்வலம்வருவெற்பொத்துநின்றன,

(இது நான்காமடி.)

குடவளை துறைதொறுமுடுநிரையெனவிரி
குளிர்நிலவெழவுமிழ்முத்தத்தடங்கரை
குலவியபடர்சிறைமடவனமொடுசில
குருகுகள்சினையொடணைத்துத்துயின்றன

குரைபுனல்வரைதிசுரர்தருமுருகவிழ்
கொழுமலர்சிதறவிமுத்தத்துவிண்டொடு
குலகிரியுதவியவளரிளவனமுலை
கொழுஞர்தமழகியகொற்றப்புயங்களே. (சு)

[நேரிசைவெண்பா.]

புயலார் பொழிற்காசிப் பூங்கோயின் மேய
கயலார் தடங்கணுள் காந்தன் - செயலாவி
உய்யத் துதியா ருதிப்பார் துதிப்பாமேல்
வையத் துதியார் மறுத்து. (சூ)

[கட்டளைக்கலித்துறை.]

மறைக்கோலங் கொண்ட வகிலேச ரோயின்று மா
தர்முன்னே, பிறைக்கோலங் கொண்டு புறப்பட்ட
வாமுன் பிறைமுடித்த, இறைக்கோல மோலமென
த்தேவ ரோல மிடவிருண்ட, கறைக்கோலங் கொ
ண்டுணுங் கண்டத் தொளித்த கனல்விடமே. (சூ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

விடுத்த வாளிக்கும் விரகிலாக் கருப்புவில்
வீணன்மீள வும்வாளாத்
தொடுத்த வாளிக்கு மேபகை மூண்டதித்
தூயநன் மொழிக்கென்னும்
அடுத்த நான்மறை முனிவரர் நால்வர்க்கு
மம்மறைப் பொருள்கூற
எடுத்த கோலமா யாநந்த வனத்துமெம்
மிதயத்து மிருந்தோனே. (எ)

[கட்டளைக்கலித்துறை.]

இருப்பா ரவிமுத்தத் தெங்கேகண் மூடுவரென்
றும்வெள்ளிப், பொருப்பாளரோடித் திரிவதெல்
லாமிப் புவனங்களே, உருப்பா தியிற்படைத் தோர்

பாதி யிற்றுடைத் தூழிதொறும், விருப்பா ருயிர்
களின் மேல்வைத்துத் தாஞ்செயும் வேலைகண்டே.

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

கண்ணெனன்றுதிருநுதலிற்கனலுருவ
மாப்படைத்தகாசிநாதா
தண்ணெனன்றுகறையிதழித்தாரொன்று
ணைட்டுயிர்த்தாடனைமேல்வீழ்ந்தாள்
எண்ணென்றுமுணராமேகிடக்கின்று
ளிதுகண்டாலெழுத்தொன்றேதத்
துண்ணென்றுவருவதொனத்துணிந்தனளோ
வறியேனித்தோகைதானே. (கூ)

[நேரிசைவெண்பா.]

தோகையுயிர்முடிப்பான்றும்பைமுடித்தான்மதவே
வாகைமுடித்திடவும்வல்லனே - ஆகெடுவீர் [ள்
காமாந்தகர்காசிக்கண்ணுதலார்க்கோதீர்மற்
றேமாந்திராமலெடுத்து. (கo)

[கட்டளைக்கலித்துறை.]

எடுக்கச் சிவந்த சிலம்படி யாரகி லேசர்நறைக்,
கடுக்கைச் சடைமுடி யாரடி யார்க்குக் கலைகள்கொ
ய்து, கொடுக்கக் கொடுக்க வளர்கின்ற வாவெறுங்
கூட்டிலெரி, மடுக்கக் குறையுயிர் மாதனைத் தேடு
மதிக்கொழுந்தே. (கக)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

கொழுதி வரிவண் டுழுதுழக்குங்
குழலீர்நறுங்கட் கோதையிவள்
அழுத விழிநீர் முங்நீரை யுவர்நீ
ராக்கு மதுகூறீர்

எழுத வரிய திருமார்பி லிளஞ்சேய்
சிறுசே வடிச்சுவடும்
முழுது முடையாண் முலைச் சுவடு
முடையார்காசி முதல்வர்க்கே. (கஉ)

[நேரிசைவெண்பா.]

வாைவளைக்கும்பொற்றடந்தோண்மைந்தர்க்கிவரார்
நிாைவளைக்கையார்நகைக்குநேராக் - கையில்
குவிமுத்தம்வெண்ணிலவுகொப்புளிக்குங்கங்கை
அவிமுத்தஞ்சென்றிறைஞ்சாதார். (கஊ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

ஆர்க்கும் படைவே ளரசிருப்பென்
றஞ்சாதடிக ளருட்காசி
ஊர்க்கும் புதுத்தோ ரணம்வைத்தா
லுமக்கிங் கிவள்பேச் சுரைப்பாரார்
வார்க்குங் குமப்பூண் முலைச்சுவட்டை
வளையென்றோடி வளைந்துசுற்றிப்
பார்க்குந் தொளைமுள் ளெயிற்றுரகப்
பணியீர் மோகந் தணியீரோ. (கச)

[பிச்சியார், கட்டளைக்கலிப்பா.]

தண்ணுலாம்பொழிற்காசித்தெருவினீர்
தரித்திடுந்தவக்கோலமுஞ்சூலமும்
பெண்ணெடாடுமெப்பிச்சனுக்கொத்தலாற்
பிச்சியாெனும்பேர்தரித்தாடுவீர்
வெண்ணிலாமுகிழ்க்குங்குறுமூரலால்
வீணிலேயெம்புரத்தெரியிட்டீர்
கண்ணினுலுமிக்காமனைக்காய்ந்திடிற்
கடவுணீென்றிறைஞ்சுதுங்காணுமே. (கடு)

[கட்டளைக்கலிப்பா.]

காணுங்காணுந்திகளெல்லாம்புனற்
கங்கையேயங்குளதெய்வம்யாவையும்
தாணுவெங்களகிலேசரோமற்றைத்
தலங்கள்யாவுந்தடமதிற்காசியே
பூணுமாசைமற்றொன்றேயுடல்விடும்
போதுநன்மணிகர்ணிகைப்பூந்துறை
பேணுமாறுபெறவேண்டுமப்புறம்
பேயொடாடினுமாடிப்பெறுதுமே. (கசு)

[இதுவுமது.]

பெற்றமூர்வதும்வெண்டலையோட்டினிற்
பிச்சையேற்றுத்திரிவதும்பேய்களே
சுற்றமாகச்சுடலையில்வாழ்வதுந்
தோலுடுப்பதுந்தொண்டர்க்கரிதென்றுல்
கற்றைவார்சடைக்காசிப்பதியுளீர்
கற்பகத்தோறுங்கடைநாளுலகெலாம்
செற்றுமீளப்படைக்கவும்வேண்டுமே
தேவரீர்பதஞ்சிந்திப்பதில்லையே. (களு)

[நேரிசைவெண்பா.]

இல்லாளேமுப்பத்திரண்டறமுஞ்செய்திருப்பச்
செல்லார்பொழிற்காசிச்செல்வனுர் - மெல்லப்
பரக்கின்றபுண்ணீர்படுதலைகொண்டையம்
இரக்கின்றவாறென்சொல்கேன். (கஅ)

[கொச்சகக்கலிப்பா.]

சொல்லாவதுமறையேசொல்லுவதுநல்லறமே
இல்லாவதுமுத்திக்கேதுவாமித்தலமே
அல்லார்குழலளவுமாகொன்மனம்வயிரக்
கல்லாயிருந்தவாகாசிப்பிரானுர்க்கே. (கக)

[கட்டளைக்கலித்துறை.]

பிரானென் றவர்க்கொரு பெண்ணெடு மோடிப் பெருங்கருணை, தராநின்ற காசித் தடம்பதியார் வந் தென் றன்னகத்தே, இராநின் றனைநாம் புலக்கள்வர் கொள்ளையிட் டேகுதற்கே, வராநின்ற போதுள்ள மாதனங் காத்து வழங்குதற்கே.

[கொற்றியார், அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

வழுத்துமவர்க் காநந்த வாழ்வையருள் வார்காசி
வளமை யெல்லாம்
கொழுத்ததமி ழாற்பாடித் துளசிமணி தரித்தாடுங்
கொற்றி யாரே
பழுத்ததவக் கோலமுங்கைச் சங்கமுமா ழியுங்கண்
டு பணிந்தே மாகில்
முழுத்ததவத் தால்யாமு மாலாயி னேங்கூடி
முயங்கு வீரே. (உக)

[கட்டளைக்கலித்துறை.]

முயலாம லேதவ முத்தித் திருவை முயங்கநல்கு
ம், கயலார் பெருந்தடங் கண்ணிபங் காரருட் காசி
யிலே, செயலாவ தொன்றிலே வாளா நெடுந்துயில்
செய்யுமுங்கள், பயலாக வேபணி செய்வார் புவனம்
படைப்பவரே. (உஉ)

[கட்டளைக்கலிப்பா.]

படித்தபாயுடனேபிணிமூழ்கினும்
பல்விழுந்துநரைத்தறமூப்பினும்
அடுத்ததிங்கிவர்க்கேபெருவாழ்வெனு
மப்பெரும்பதியெப்பதியென்பிரேல்
விடுத்துவிட்டிங்திரதிருவும்புவி
வெண்குடைக்குளிடுமரசாட்சியும்

கடுத்ததும்புகளத்தனைத்தேடுவார்
காதலித்துவருந்திருக்காசியே. (உஈ)

[கட்டளைக்கலித்துறை.]

திருக்கோலங் கொண்டநற் றேன்மொழி யாளெண் டிசையினுங்கின், உருக்கோல மேகண்டுங் கண்டிலள்போலு மொழுகுநறை, மருக்கோலநீலக் குழல்சே ரவிமுத்த வாணதொல்லை, இருக்கோல மிட்டுணை ராயெங்கு மாகி யிருப்பதுவே. (உச)

[இதுவுமது.]

இருகுங் குமக்குன்றும் பீர்பூப்பக் காமவெரியினினின், றுருகும்பசும்பொன்னுக் கோர்மாற்றுண் டேலுரை யாய்தொடுத்துச், செருகு நறுங்கொன்றை தேன்பிழிந்தூற்றச் சிறைச்சுரும்பர், பருகும்பொலஞ்சடை யாய்காசிவாழ்முக்கட் பண்ணவனே. ()

[கலிநிலைத்துறை.]

பண்ணேர்வேதம்பாடியகாசிப்பதியாயிப்
பெண்ணேரொருவனெய்கணையைந்தும்பெய்தானல்
உண்ணேர்நின்றுயின்னருளாலென்னுயிரன்னுள்
கண்ணேர்நிற்றற்கொல்கியொழிந்தகழுநீரே. (உசு)

[கட்டளைக்கலித்துறை.]

கழியுந் தலைக்கலன் பூண்டாடுங் காசிக் கடவுணுதல், விழியு மிடக்கண்ணும் வெண்ணெருப் பேயவ் விழியிரண்டில், பொழியுங் கனல்விழி காமனைக் காய்ந்ததப் போரிலுடைந், தொழியும் படைகளென் ரூவெமைக்காயுமற் றேர்விழியே. (உஎ)

[மடக்கு, அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

விழைகுவதன்பர கஞ்சுகமே வெங்கரி யின்னுரி கஞ்சுகமே, தொழிலடி கட்குளமாலயமே தூமுனி

வோருள மாலயமே, அழகமரும்பணி யென்பணி யே யாட்கொள மேற்கொள்வ தென்பணியே, மழ களிறீன்ற வளம்பதியே வாழ்வதுகாசி வளம்பதியே.

[மடக்கு, கட்டளைக்கலிப்பா.]

வண்ணமேனியரும்புவனங்களே
வாசம்வாசமரும்புவனங்களே
நண்ணுமாலயமாதவரங்களே
ஞாலமேழ்தருமாதவரங்களே
தண்ணென்மாலைதருமருக்கொன்றையே
தருவதையர்தருமருக்கொன்றையே
கண்ணினிற்பர்மனத்திருக்கோயிலே
காசியேயவர்க்கோர்திருக்கோயிலே. (உகூ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

திருகுசினக்கூற்றினையிற்றிடைக்கிடந்துங்
கடைநாளிற்றிரையேழொன்றுய்ப்
பெருகுமுழுநீத்தத்திற்றிளைத்தாடப்
புனைதேதும்பேதைநெஞ்சே
உருகிலெநக்குடைந்திலெமொண்டாநந்த
வனத்தேனேயோடியோடிப்
பருகிலெகண்ணரும்பிலெமெய்பொடித்திலெமற்
றினக்கென்னபாவந்தானே. (கூ0)

[நேரிசைவெண்பா.]

பாவலரு நாவலரும் பண்மலரக் கண்மலரும்
காவலரு மேடவிழ்க்குங் காசியே - தீவளரும்
கஞ்சக் கரத்தான் கலைமறைக்கு நாயகமாம்
அஞ்சக் கரத்தா னகம். (கூக)

[இதுவுமது.]

அகமே யவிமுத்த மையரிவர்க் காகம்
சகமேழுமீன்றெடுத்த தாயே - மிகமேவும்

எண்ணம்பரமேயெமக்களித்தன்முச்சுடரும்
கண்ணம்பரமே கலை. (கூஉ)

[அம்மானை, மடக்குத்தாழிசை.]

கலைமதியின்கீற்றணிந்தகாசியகிலேசர்
சிலைமதனைக்கண்ணழலாற்செற்றனர்காணம்மானே
சிலைமதனைக்கண்ணழலாற்செற்றனரோயாமாகில்
மலைமகட்குப்பாகம்வழங்குவதேனம்மானே
வழங்காரோவப்பாலுமாலாலைம்மானே. (கூங)

[கட்டளைக்கலித்துறை.]

அம்மனைதம்மனையாத்திருக்கோயிலவிமுத்தமா
எம்மனையாய்த்தந்தையா யிருந்தாரடிக்கீழிறைஞ்சீர்
நம்மனைமக்களென்றேக்கறப்பீருங்கணுலகந்தால்
சொம்மனைவைத்தெப்படிநடப்பீர்யமன்றூதொடே.

[கட்டளைக்கலிப்பா.]

தூதுகொண்டுந்தமைத்தோழமைகொண்ட
தொண்டர்தண்டமிழ்ச்சொற்கொண்டகுண்டலக்
காதுகொண்டெங்கவிதைகொண்டாட்கொண்ட
காசிநாதர்கருத்தேததறிகிலேம்
போதுகொண்டொருபச்சிலைகொண்டுதான்
பூசைசெய்திலர்புண்டரிகப்பதம்
ஏதுகொண்டுகொடுப்பர்கொடுப்பரோ
லிருவருக்குமற்றென்படுநெஞ்சமே. (கூரு)

[சித்து, நேரிசைவெண்பா.]

ஏடவிழ்பொற்கொன்றையகிலேசரன்பர்க்கேயிருட்பை
ஆடகமாக்கிக்கொடுத்தோமவ்வளவோ – நீடுதிறல்
காட்டுமிமையோர்க்கிருப்புகற்கனகமாக்கியண்ட
ஓட்டினையும்பொன்னுக்கிணேம். (கூசு)

[நேரிசையாசிரியப்பா.]

பொன்னுருக்கன்ன பூந்துணர்க்கொன்றையும்
வெள்ளிமுளையன்ன விரிநிலாக்கொழுந்தும்
காந்தண்மலர்ந்தன்ன பாந்தளினிரையும்
திரைசுழித்தெறியும் பொருபுனற்கங்கையில்
வெள்ளிதழ்க்கமலம் வள்ளவாய்விரித்தென
முழுநகைமுகிழ்க்குங் கழிமுடைவெண்டலை
தோலடிச்செங்காற் பால்புரைவரிச்சிறைக்
கிஞ்சுகமலர்ந்தசெஞ்சூட்டெனத்
துருவெடித்தகல்வான் றுருவியுங்காணாத்
தொன்மறைக்கிழவ சென்னிமற்றியானே
கண்டுகொண்டனனிக்கடவுண்மாமுடியெனப்
பெருமகிழ்சிறப்பக்குரவையிட்டார்த்து
வெள்ளெயிறிலங்கவிரைவிற்சிரித்தெனப்
பெருவியப்பிழைக்குமெரிபுரைசடையோய்
ஆள்வழக்கறுக்கும்வாளமர்தடங்கண்
மின்னிழைமருங்குற் சின்மொழிமகளிர்
ஓழுகொளிமிடற்றி னழகுகவர்ந்துண்டெனக்
கயிறுகொண்டார்க்குங் காட்சித்தென்ன
மரகதங்காய்த்துப் பவளம்பழுக்கும்
கமஞ்சூற்கமுகின் கழுத்திறயாத்து
வீசொளிப்பசும்பொ னுசலாட்டயல்வரப்
பருமணிக்கமுகின் பசுங்கழுத்துடைந்து
நுரைபடுகுருதித் திரடெறித்தென்ன
முழுக்குலைமுரிந்து பழுக்காய்சிதறு
மங்குல்கண்படுக்கு மதுமலர்ப்பொதும்பர்
கங்கைசூழ்கிடந்த காசிவாண
ரெவளிப்பித்தெனு மவைதலையெடுப்ப
மெய்விட்டைவருங் கைவிடுமெல்வையின்
மாமுதறடிந்த காமருகுழவியும்

பொழிமதங்களையு மழவிளங்களிறும்
மூண்டெழுமானம் பூண்டழுக்கறுப்ப
இடக்கையினணைத்துநின் மடித்தலத்திருத்தி
உலகமோரேழும்பலமுறைபயந்தும்
முதிராவிளமுலைமுற்றிழைமடந்தை
ஒண்டொடித்தடக்கையின் வீசுதுண்டுகில்
தோகையிற்பிறந்த நாகிளந்தென்றல்
மோகமுந்தளர்ச்சியுந் தாகமுந்தணிப்ப
மறைமுதற்பொருளி னிறைசுவையமுதினே
அஞ்செவி மடித்துணவூட்டிநின்
குஞ்சிதவடிக்கீழ்க் குடியிருத்துகவே. (கூஎ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

குடியிருக்கும்புன்குரம்பைகுலைந்திடுநாட்
கொலைக்கூற்றங்குமைத்தசெம்பொன்
அடியிருக்கும்பரந்தாமப்புக்கில்புகுந்
தாநந்தவமுதமாந்திக்
கடியிருக்குரைக்குழன்முத்தித்திருவை
முயங்கிடவுங்கடவேன்கொல்லோ
துடியிருக்குமிடையவளோடவிமுத்தத்
திருந்தபரஞ்சோதியானே. (கூஅ)

[களி, சந்தத்தாழிசை.]

சோதியொன்றிலொரு பாதிசத்தியொருபாதியும்
பரமசிவமெனத், தொகுத்துவைத்தவவி முத்தநாய
கர்துணைப்பதம்பரவுகளியாமே, ஒதியோதியிளைப்
பர்வேதமுணர்த்துதத்துவமுணர்கிலார், உணரும்
வண்ணமநுபவத்தில்வந்திடுமொ ருண்மைவாசகமு
னர்த்துகேம், ஏதிலுலறமனைத்தினும்பசு வினைப்ப
டுத்தனல்வளர்த்திடும், யாகமேயதிகமென்பதன்பர்

தமிறைச்சிமிச் சிலதிச்சையார், ஆதியார்றிவரது கிடக்கவது வருந்தி லப்பொழுதிலேபெறற், கரிய தோர்பரம சுகம்விளைந்திடுவ்ததுமறுத்தவிரவில்லை யே. (சுக)

[கட்டளைக்கலித்துறை.]

இல்வாழ்வைவிட்டுக் கதிவேட்டடைபவர்க் கேழைபங்கன், நல்வாழ்வையேதருங் காசிப்பிரானறும் பூங்கடிக்கை, வல்வார்முலைக்கொம்ப னுய்த்தந்தைதாண்மழு வாலெறிந்து, கொல்வா ரொருவருக் கல்லா தெவர்க்கும் கொளற்கரிதே. (சம)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

கொள்ளையிடச் சிலர்க்குமுத்திச் சரக்கறையைத் திறந்துகொடுத் தனந்த கோடிப், பிள்ளைகள்பெற் றுடையபெரு மனைக்கிழத்திக் கேகுடும்பம் பேணு கென்ன, உள்ளபடி யிருஞாழி கொடுத்ததிலெண் ணுன்கறமு மோம்பு கென்றூர், அள்ளல்வள வயற் காசி யாண்டகையார் பெருந்தகைமை யழகிதாமே.

[குறம், அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

அழகு துயில்குங் குமக்கொங்கை
யணங்கே யெங்க ளருட்காசிக்
குழகர் மகற்கு மகட்கொடுத்த
குடியிற் பிறந்த குறமகள்யான்
ஒழுகு தொடிக்கைக் குறியுமுகக்
குறியுந் தருமொள் வளைக்குறியும்
புழுகு முழுகு முலைக்குறியு
முடையா ரவர்பொற் புயந்தானே. (சஉ)

[கட்டளைக்கலித்துறை.]

புயல்வண்ணக் கண்ணற் கொளித்தவக்கள்வன் பு னர்ப்பையெண்ணுள், கயல்வண்ணக்கண்ணிதன்

கண்ணினுட்புக்கது கண்டிருந்தும், செயல்வண்ண
ங்கண்டிலள் வாளாப்புறத்தெங்குந் தேடுகின்றாள்,
வயல்வண்ணப்பண்ணை யவிழுத்தத்தானைமனத்துள்
வைத்தே. (சஉ)

[மறம், அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

வையமுழுதொருங் கீன்றவிடப்பாகராநந்த வன
த்தில்வாழும், வெய்யதறு கண்மறவர்குலக்கொடி
யை வேட்டரசன்விடுத்ததூதா, கையிலவன்றிருமு
கமோகாட்டிருக்கண்டொட்டு முட்டைகதையிற்றுக்
கிச், செய்யகொடிறுடைத்தகல்வாய் கிழித்தரிவோ
நாசியொடு செவியுந்தானே. (சச)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

தாக்குபடைவேள் கணைமழைக்குத் தரியாதிருக
ண்மழையருவி, தேக்குமிவட்கா நந்தவனத்திருந்தா
ருள்ளந் திருந்தார்கொல், காக்கவரிய விளவாடைக்
காற்றுக்குடைந்து கரந்துவச்சை, மாக்களெனவே
முடவலவன் வளைவாயடைக்கு மழைநாளே. (சடு)

[கட்டளைக்கலித்துறை.]

மழைவளைக்கும்பொழிற் காசிப்பிரான்வெற்பில்
வண்டறைபூந், தழைவளைக்கைக்கொடுத்தேன்கண்
ணிலொற்றித் தளரிடைதன், இழைவளைக்குங்கொங்
கையூடணைத் தாளித்தழையினுள்ளே, கழைவளைக்
குஞ்சிலேவளனேயா யிதைக்கண்டுகொள்ளே.(சசு)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

கண்ணிருக்குந்திருதுதலுங் கனலிருக்குந்திருக்க
ரமுங் கலந்தோர்பேதைப், பெண்ணிருக்கு மிடப்
பாலும் பிறையிருக்கு மவுலியுமாய்ப் பிரிக்கலாகா,
எண்ணிருக்குங் கணத்தொடுமா நந்தவனத் திருப்

பாரை யெங்கே காண்பார், பண்ணிருக்குமறைகளு மெண் கண்ணனுங்கண் ணனுமமரர் பலருந்தானே.

[கட்டளைக்கலித்துறை.]

பல்லாண்டுதம்மைப் படைத்தவத் தேவரைப் பாரப்பைம்பொன், வில்லாண்ட தோள்கொட்டி யெங்தையர்கோல விடம்பழுத்த, அல்லாண்டகண்டத் தெம்மாதிப்பி ரானவிழுத்தத்திலே, சில்லாண்டிருந்து சிவமாய்ச்செலுஞ்சிறு செந்துக்களே. (சஅ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

செந்தே ணெழுகும் பொழிற்காசி சிறுநுண்ணு சுப்பிற் பெருந்தடங்கண், பைந்தேணெழுகு மிடப் பாகர் படைவீடென்ப துணராய்கொல், வந்தேன் வளைந்தா யெமைப்பாவி மதனுவினேயே வளைந்த போர், உய்ந்தேகுவதுங் கரிதனற்கணுடையார் மழு வாட்படையாரே. (சக)

[மதங்கி, அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

படலைநறுங்கடுக்கைமுடிப் பரஞ்சுடரா ரிசைபாடிப் பசுந்தேன்பில்கி, மடலவிழ்பூம் பொழிற்காசி மணிமறுகில் விளையாடு மதங்கியாரே, உடலுமெமக் குயிருமொன்றே யோடரிக்கண் வாளிரண்டு மொழியவென்னை, தொடலைவளைத் தடக்கையின்வா ளிரண்டெடுத்து வீசிடநீர் தொடங்குமாறே. (நo)

[கலித்தாழிசை.]

தொடங்காமேபனிமலருந்தூவாமேநல்கும்
கடங்கால்களிற்றுரியார்காசிவளம்பாடி
விடங்கான்றகன்றுகுழைமேற்போய்க்குடங்கைக்
கடங்காதவுண்கணீராடுகபொன்னூசல்
அம்பொன்மலர்க்கொம்பன்னீராடுகபொன்னூசல்.

[நேரிசைவெண்பா.]

பொன்னந்தாதென்னமலர்ப்பூந்துறையிற்புண்டரிக
தன்னந்தாதாடுமவிமுத்தர் - இன்னமிர்தாம் [த்
முன்னங்கடுக்கைமுகந்துண்டார்நல்காரே
இன்னங்கடுக்கையிவட்கு. (நுஉ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

குன்றிரண்டு சுமந்தொசியுங் கொடியன்னீ ரவி
முத்தங் குடிகொண்டாகம், ஒன்றிரண்டு வடிவானூர்
திரள்புயத்து மார்பகத்து முமிழ்தேன்பில்கு, மின்
றிரண்ட தெனப்புரளும் பொலங்கடுக்கைத் தாமத்
தின் விரைத்தாதாடிப், பொன்றிரண்ட தெனவிருக்
கும் பொறிவண்டு செய்தவமென் புகலுவீரே(சுஊ)

[கொச்சகக்கலிப்பா.]

புகுமேமதிக்கொழுந்தும்பொன்மாலைப்போதும்
நகுமேகிளையுநகைத்தானமக்கென்னே
உகுமேலுயிர்காசியுத்தமமைக்காணத்
தகுமேயப்போதிதழித்தாரும்பெறலாமே. (நுச)

[இதுவுமது.]

ஆமோவவிமுத்தத்தையமேபெண்பழிவீண்
போமோவயிரவர்தஞ்சாதனமும்பொய்யாமோ
தேமோதுகொன்றைச்செழுந்தாமநல்காநீர்
தாமோதருவீருமதுபரந்தாமமே. (நுடு)

[கலிநிலைத்துறை.]

பரந்தாமத்தைப்பல்லுயிர்கட்குப்பாலிப்பார்
வரந்தாமத்தைத்தருவதைநீர்பின்வழங்காரோ
புரந்தாமத்திற்பொலிதருகாசிப்புரமானூர்
திரந்தாமத்தையெனப்புகலீரேந்திழையீரே. (நுசு)

[பாண், கேரிசை ஆசிரியப்பா.]

இழுமென்மழலையின்னமுதுறைப்பப்
பிழிதேனெழுக்கினெழுகுமின்னரம்பின்
வள்ளுகிர்வடிம்பின்வரன்முறைவருடத்
தெள்விளியெடுக்குஞ்சிறியயாழ்ப்பாண
வாழியகேண்மதிமாற்றமொன்றியானும்
ஏழிசைப்பாணன்மற்றிறைமகனலனே
பலவுடன்பழிச்சுவதொழிகமற்றம்ம
சிலபகல்யானுநின்னிலைமையனுகி
நலம்பாடறியாவிலம்பாடலைப்ப
நீர்வாய்ச்சிதலையுநூல்வாய்ச்சிலம்பியும்
சிலவிடமேய்ந்தசிறுபுன்குரம்பையின்
மசகமுமுலங்கும்வாய்ப்படைக்குடவனும்
பசையில்யாக்கைத்தசைகறித்துண்ண
வரும்பசிக்குணங்கியும்பெரும்பிணிக்குடைந்தும்
சாம்பல்கண்டறியாவாம்பிபூத்த
எலிதுயிலடுப்பிற்றலைமடுத்தொதுங்கிச்
சிறுசிரலறப்பெருமனைக்கிழத்தி
குடங்கையிற்றுங்கியகொடிற்றினள்குடங்கைக்
கடங்காவுண்கணறலைத்தொழுக
அழுகுரல்செவிசுடவிழுமநோய்மிக்குக்
களைகண்காணுதலமருமெல்வையின்
கடவுணல்லூழ்பிடர்பிடித்துந்தக்
குரைபுனற்கங்கைக்கரைவழிச்சென்றுங்குத்
தேம்பழுத்தழிந்தபூம்பொழிற்படப்பையில்
கடவுட்கற்பகக்கொடிபடர்ந்தேறி
வான்றொடுகமுகின்மடற்றலைவிரித்து
நான்றனதிசைதொறுநறுநிழற்கதலித்
தேங்கனிபழுத்தபூங்குலைவளைப்ப
அம்மலர்க்கொடியிற்செம்முகமந்தி

மூடவுப்பலவின்முட்புறக்கனியைப்
புன்றலைசுமந்துசென்றடுங்காட்சி
குடமிசைக்கொண்டொருகூன்மிடைகிழவன்
நெடுநிலைக்கம்பத்தின்வடமிசைநடந்தோன்
இறும்பூதுபயக்குறும்பணைமருதக்
கன்னிமதிலுடுத்தகாசிமாநகரம்
பெருவள்ளுரக்கவரசுவீற்றிருக்கும்
மழுவலனுயர்த்தவழனிறக்கடவுள்
பொன்னடிவணங்கியின்னிசைபாடலும்
அந்நிலைக்கண்ணேயகல்விசும்பொரீஇச்
சுரபியுந்தருவும்பெருவளஞ்சுரப்ப
இருமையும்பெற்றனன்யானேயுமத்
திருநகர்வளமைபாடியிருநிலத்
திருநிதிக்கிழவனேக்கறுப்பத்
திருவொடுபொலிகபெருமகிழ்சிறந்தே. (நுஎ)

[வண்டுவிடுதூது, அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

சிறைவிரிக்கு மதுகரங்கா டேம்பிழிபூம்பொழிற் காசித் திருநாடாளும், மறைவிரிக்குஞ் சிலம்படியார் திரள்புயத்துப் புரளுநறு மலர்ப்பூங்கொன்றை, நறைவிரிக்கு மிதழ்க்கரத்தா லூட்டுமதுவிருந்துண்டு நயந்து மற்றென், குறைவிரித்தோ ரிருவரிசை கூட்டுண்ணும் திருச்செவிக்கே கூறுவீரே. (நுஅ)

[கட்டளைக்கலித்துறை.]

கூற்றடிக்கஞ்சிக் குலையுநெஞ்சே யஞ்சல் கோச்செழியன், மாற்றடிக் கஞ்சு மிடப்பாகனேமள்ளர் கொன்றகருஞ், சேற்றடிக்கஞ்ச மலர்வயற்காசிச் சிவக்கொழுந்தைப், போற்றடிக்கஞ்சலி செய்பற்று வேறு புகலில்லையே. (நுகூ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

இலைமுகங்குழைத்த பைம்பூணேந்திள முலையோ
டாடு, மலைமுகங்குழைத்த காசிவரதர்கண் டிலர்
கொன்மாரன், சிலைமுகக்கணைக்கெம் மாவி செகுத்
துண விருந்ததிங்கட், கலைமுகம்போழ்ந்த காயங்
களங்கமாய் விளங்குமாறே. (சுo)

[கட்டளைக்கலித்துறை.]

விளங்கனி யொன்றெறி வெள்விடை யோடும்
விழிக்கணுழைந், துளங்கனி யப்புகுந் தாய்விரகா
னலத்துற்றதென்னும், வளங்கனிபண்ணை வயல்சூழ
விழுத்தவாணநறுங், களங்கனியென்றுமை கைக்கி
ளிபார்க்குங் கறைக்கண்டனே. (சுக)

[சந்தத்தாழிசை.]

கண்டமட்டு மிருண்டுபோதி பசந்துபாதி சிவந்து
ளார் காசிநாதர் கரத்துவைத்தகபால மொன்றல
தில்லையால், உண்டுகோடியின் மேலுமையர் பதம்
பெறக்கடவாரவர்க் கொவ்வொருத்தர் கரத்திலொ
வ்வொர் கபாலம் வேண்டுமதற்கெலாம், பண்டிருந்
தவிரிஞ்சன்மார் தலைமாலையுஞ் செலவாய்விடிற் பா
ரமென் றலைமேல்வருங் கொலெனுங் கவற்சியினுற்
பசுங், கொண்டல்வண்ணர் துயில்கொள்ளவுந் துயி
லார்பிதாமகனுனெனுங் கொள்கைகண்டும் விழைந்த
வாவவர்பதஞ்ச மீரகுமாரனே. (சுஉ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

கும்பமிரண்டு சுமந்தொசியுங் கொடிதுண்மருங்
கு லிறுமிறுமென், றம்பொற்பசுங் கொம்பன்னாளை
யாகத் தணைத்தவகிலேசர், செம்பொனிதழித் தெரி
யலையே சிந்தித்திருப்பத் திரண்முலையும், பைம்

பொ னுருவும்பீர்பூத்த பவளச்செவ்வாய்ப் பசுங்
கிளிக்கே. (சூஊ)

[கட்டளைக்கலித்துறை.]

கிள்ளைக்கமிர்தமொழிசாற் றிடுங்கிஞ் சுகவிதழ்ப்
பெண், பிள்ளைக்கிடந்தந்த காசிப்பிரான் பிறை யோ
டுமுடிக், கொள்ளைச்சிறைவண்டு கூட்டுணுங் கொ
ன்றையுங் கூடவைத்தார், வள்ளக்கலச முலைக் கங்
கையாளுயிர் வாழ்வதற்கே. (சூச)

[கலிவிருத்தம்.]

வாட்டடங்கண்மழைப்புனன்மூழ்கியே
சேட்டிளங்கொங்கைசெய்தவமோர்கிலார்
தோட்டிளங்கொன்றைசூடிப்பொனம்பலத்
தாட்டுவந்தவிமுத்தவாணரே. (சூடு)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

நாைமுதிர்ந்தனகண்கள் பஞ்சார்ந்தன நமன்றமர்
வழிக்கொண்டார், திாைமுதிர்ந்துட நிரங்கினதிரங்
கலை செயலிதுமடநெஞ்சே, உாைமுதிர்ந்தவர் குழா
த்தொடுமடைதியா லொழுகொளி முடிக்கங்கைக்,
காைமுதிர்ந்திடாக் கலைமதிமுடித்தவர் காசிநன்னகர்
தானே. (சூசு)

[வஞ்சித்துறை.]

நகரமாய்மறைச்
சிகரமானதான்
மகரமாயிளன்
நிகரில்காசியே. (சூஎ)

[கட்டளைக்கலித்துறை.]

இல்லொன்றெனவெ னிதயம்புக்காய்மத னெய்
கணைகள், வல்லொன்றுபூண்முலை மார்பகம்போழ்

வன மற்றென்செய்கேன், அல்லொன்றுகூந்த லணங்
காசோடுமொ ராடகப்பொன், வில்லொன்றுகொ
ண்டவி முத்தத்திலேநின்ற விண்ணவனே. (சுஅ)

[மருட்பா.]

விண்ணமிர்துநஞ்சாம்விடமுமமிர்தமாம்
உண்ணமிர்தநஞ்சோடுதவலால் - தண்ணென்
கடலொடுபிறந்தனபோலுந்தடமலர்க்
கடிநகர்க்காசியுண்மேவும்
மடல்விழ்கோதைமதர்நெடுங்கண்ணே. (சுகூ)

[வஞ்சிவிருத்தம்.]

கண்ணைடாவிகருத்துமாய்
உண்ணிறைந்ததொரொண்பொருள்
நண்ணுமாநகரானதால்
அண்ணலாரவிமுத்தமே. (எ0)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

முத்தாடி மடித்தலத்தோ ரிளஞ்சேயை யுலகீன்ற
முதல்வியோடும், வைத்தாடுவீர்பொதுவி னின்றுடி
மூமக்கிந்த வாரமென்னே, கொத்தாடுசடையொ
டுமா நந்தவனத்தே குறுந்தாணெடும்பூதத்தோ,
டொத்தாடுவீரடிகட் கெல்லோமும் பிள்ளைகளென்
றுணர்ந்திடீரே. (எக)

[சம்பிரதம், பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

உண்டகிலகோடியு முமிழ்ந்திடுவன் முகிலேழு
மொக்கப் பிழிந்துகடலே மூடன்வாய்மடித்திடுவன்
வடமேருமூலத் தொடும்பிடுங் கிச்சுழற்றி, அண்ட
பகிரண்டமு மடித்துடைப்பன்புவன மவையேழு
பிலமேழுமா யடைவடைவடுக்கிய வடுக்கைக்குலை
ப்பனிவை யத்தனையும் வித்தையலவாம், கொண்

டன்மணி வண்ணனும் முண்டகக்கண்ணனுங் குஞ் சிதச்செஞ்சரணமுங் குடிலகோமுரமுங் தேடியத லமுமண்ட கோளமுங் துருவியோடப், பண்டைம றையோலமிட வெளியினடமாடும் பரஞ்சுடர்பொ லிந்தகாசிப் பதியிலடையாமலிப் பல்லுயிர்த்தொ குதியும் பரமபதமடைவிப்பனே. (எஉ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

விரைகுழைக்கு மழைமுகில்காள் விண்டலர்தண் டுழாய்ப் படலிவிடலியென்ன, வரைகுழைக்கும் பொழிற்காசியணி ஙகருக்கேகுதிலறன்மென் கூந் தல், வரைகுழைக்கு முலைகுழைப்பக் குழைதிர டோ ளழகுமுடிவணங்கி யென்னக், கரைகுழைக்கு மலைகுழைத்த கண்ணுதற்கென் பேதைதிறங்கழறு வீரே. (எங)

[கட்டளைக்கலித்துறை.]

கழைக்கரும்பைக்குழைத் தான்மதவேளைக் கண த்திலம்பொற், குழைக்கரும்புங்குழைந் திட்டதந் தேகுளிர் தங்குதுளி, மழைக்கரும்பும்பொழிற் காசிப்பிரான்மலை யாண்முலைபோழ், முழைக்கரும் புற்றர வாட நின்றாடிய முக்கணனே. (எச)

[கட்டளைக்கலித்துறை.]

கண்ணஞ்சனத்தைக் கரைத்தோடு நீர்கடல் செ ய்யநின்றுள், உண்ணஞ்சனத்துக்கு மஞ்சவைத்தா ரும்ப ரோட்டெடுப்பப், பண்ணஞ்சநச்சமிர் தாக் கொண்ட காசிப் பரமர்பச்சைப், பெண்ணஞ்சநச் சர வார்த்துநின்றூடிமப் பிஞ்ஞகரே. (எடு)

[கட்டளைக்கலிப்பா.]

கருகுகங்குற்கரும்பகடீர்ந்துவெண்
கலைமதிக்கொலைக்கூற்றங்கவர்ந்துயிர்

பருகுதற்குக்கரத்தால்விரிநிலாப்
பாசம்வீசிவளைத்ததிங்கென்செய்கேன்
முருகுநாறுகுழற்பொலங்கொம்பனீர்
முத்தர்வாழவிமுத்தமுநெக்குடைந்
தருகுபத்தர்தஞ்சித்தமுங்கோயிலா
வுடையநாதற்குரைத்திடுவீர்களே. (எசு)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

உரைத்தநாண்மறைச் சிரத்துமைந்தவித் தவருள
த்தும் வண்டொருகோடி, நிரைத்தபூங்குழ னிரை
வளையவளொடு நின்றவருறைகோயில், குரைத்ததெ
ண்டிரைக் கங்கைமங்கையர் துணைக்கொங்கைமான்
மதச்சேற்றைக், கரைத்திருங் கடல்கருங்கடலாச்செ
யுங் காசிமாநகர்தானே. (எஎ)

[கட்டளைக்கலிப்பா.]

மானமொன்றுநிறையொன்றுநாணென்று
மதியமொன்றுகுயிலொன்றுதிங்குழற்
கானமொன்றுகவர்ந்துணுமாமதன்
கணைக்கிலக்கென்னுயிரொன்றுமேகொலாம்
வானமொன்றுவடிவண்டகோளமே
மவுலிபாதலமேழ்தாண்மலையெட்டும்
நானமொன்றுபுயமுச்சுடருமே
நயனமாப்பொலியும்மகிலேசனே. (எஅ)

[நேரிசைவெண்பா.]

அகிலாண்டமாயகண்டமானவகிலேசா
முகிலாண்டசோலையவிமுத்தா - நகிலாண்ட
சின்னவிடைப்பாகாதிருநயனஞ்செங்கமலம்
அன்னவிடைப்பாகாவருள். (எகூ)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

அருகுமதன் குழைத்தகழை தெறித்தமுத்தே
றுண்டெழுவண் டரற்றுமோசை, பெருகுசிறு ஈ
ணெலியென் றறிவழிந்து பேதுறுமிப்பேதைக்கென்
னும், உருகுபசும் பொன்னசும்பு தசும்புவிசும் பிரவி
யென வுடைந்துகஞ்சம், முருகுயிர்க்கும் பொலங்
குடமி விமானத்திற் பொலிந்தவவி முத்தனரோ. ()

[கட்டளைக்கலித்துறை.]

முத்திக்குவேட்டவர் மோட்டுடற்பார முடைத்
தலையோ, டத்திக்குஞ் சாம்பற்கு மோம்பினராலி
வை யன்றியப்பால், சித்திப்பது மற்றிலைபோலுங்
காசிச் சிவபெருமான், பத்திக்குக் கேவலமே பல
மாகப் பலித்ததுவே. (அக)

[கலிநிலைத்துறை.]

பல்வேறுருவாய்நின்றருள்காசிப்பதியுள்ளீர்
வில்வேறில்லைப்பூவலதம்பும்வேறில்லை
அல்வேறல்லாப்பல்குழலாரையலைக்கின்றீர்
சொல்வேறென்னேபாருமஞ்சன்றொழிற்றனே, ()

[கட்டளைக்கலித்துறை.]

தானென்றவர்மு னெளித்தோடித் தன்னையிழந்த
வர்முன், யானென்றுசென்றிடுங் காசிப்பிராயிடம்
பென்ப தென்போ, தானென்று விட்டொழிந்தார்
களிப் பாருவட் டாதவின்பத், தேனென் றடைந்த
வர்க்குண்ணக் கிடைப்பது தீவிடமே. (அஙு)

[கட்டளைக்கலிப்பா.]

தீவிடங்கொடுத்தேயமுதுண்டவத்
தேவருக்கொளித்துத்திரிகின்றநீர்

பாவிடும்மலர்ப்பஞ்சணைமேலிவள்
பவள்வாயமிர்துண்டாற்பழுதுண்டோ
நாவிடங்கொண்டொருவன்முகங்கர
நான்கினுநடிக்குந்துரகத்தைவிட்
டாவிடங்கொண்டருட்காசிவீதிக்கே
யாடல்செய்திடுமாநந்தக்கூத்தரோ. (அச)

[நேரிசைவெண்பா.]

ஆநந்தவல்லியுடனாநந்தக்கானகத்தே
ஆநந்தக்கூத்தாடருட்கடலே - ஆநந்தம்
கொள்ளத்திளைத்தாடுங்கூடாதேலிப்பிறவி
வெள்ளத்திளைத்தாடுவீர். (அடு)

[கலிவிருத்தம்.]

வீரமென்பதுவின்மதற்கேகுணம்
கோரமென்பதுகொண்டிருந்தாவதென்
ஈரமென்பதிலையிவர்க்கென்றதால்
வாரமென்பதிவாழ்விமுத்தரோ. (அசு)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

முத்துநிரைத்த குறுநகையீர் முளரிக்கணையான்
கணைகடிகைப், பத்துநிரைத்தா னினித்தொடுக்கிற்
பாவைக்கொருதிக் கிலைபோலும், ஒத்துநிரைத்த
வுடுநிரையோ டொன்றேபலவோ வெனவரும்பூங்,
கொத்துநிரைத்த பொழிற்காசிக் குழகற்கொருவர்
கூறீரே. (அள)

[கட்டளைக்கலித்துறை.]

கூற்றடிக்கஞ்சி முறையோவெனக்குல நான்மறை
யும், போற்றடிக்கஞ்சம் புகலடைந்தேமுனைப் போ
லவைத்தால், சேற்றடிக்கஞ்ச வயற்காசிநாத செரு

ப்படிக்கும்; மாற்றடிக்குந்தொண்டர் வில்லடிக்கும் புகன் மற்றில்லையே. (அஅ)

[கட்டளைக்கலிப்பா.]

இல்லையென்பதிலையோர்மருங்கிலே
யெவ்வறங்களுமுண்டோர்மருங்கிலே
கொல்லுகின்றதெழுதருங்கூற்றமே
கூறுமாற்றமெழுதருங்கூற்றமே
வில்லுமேற்றிடுநாணும்பொன்னகமே
விடுகணைக்குண்டுநாணும்பொன்னகமே
மல்லன்மார்பின்மணிமுத்தமென்பதே
வாசமையர்க்கவிமுத்தமென்பதே. (அக)

[கலிவிருத்தம்.]

என்பணிக்கும்பணியென்றிரந்தபோ
தென்பணிக்கும்பணிதிக்குமேக்கென்னூர்
என்பணிக்கும்பணியாயிருந்ததோர்
என்பணிக்குமின்பாமகிலேசர்க்கே. (கo)

[நேரிசைவெண்பா.]

கேயூரமூரக்கிளர்தோளகிலேசர்
மாயூரமூருமொருமைந்தற்குத் - தீயூரும்
அவ்வேலையீந்தாரடித்தொழும்புசெய்தொழுகும்
இவ்வேலையீந்தாரெமக்கு. (கக)

[அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

குருகைவிடுத்தாளெனக்குருகே கூறுய்சுகத்தை விடுத்தாளென், றருகுவளருஞ்சுகமேசென் றறையாய் நிறைநீர்தெளிந்துபால், பருகுமனமேயனம் விடுத்த படிசென்றுரையாய் படிவருளத், துருகுபசும்பொன் மதிற்காசி யுடையார் வரித்தோலுடையார்க்கே. (கஉ)

[இதுவுமது.]

உடுத்தகலையுமேகலையு மொழுகும்பணியும் விரும்பணியும், தொடுத்தவளையுங் கைவளையுந் துறந்தாளாவி துறந்தாலும், அடுத்ததுமதுபரந்தாம மதனலிதழிப் பரந்தாமம், விடுத்துவிடுவா ளலளெனப் போய் விளம்பீர்காசி வேதியர்க்கே. (கூகூ)

[நேரிசைவெண்பா.]

வேதத்துரகர்விரகவகிலேசர்
பாதத்துரகப்பரிபுரத்தார் - நாதரிவர்
சேவடிக்கண்டாரேதிறம்பிழைத்துத்தென்புலத்தார்
கோவடிக்கண்டாரேகுலந்து. (கூச)

[கட்டளைக்கலித்துறை.]

குலவளைக்கும்பழுக் காய்முழுத்தாறு கொழுங்கழுகின், தலைவளைக்கும்பொழிற் காசிப்பிரான்றடங் கோட்டுப் பைம்பொன், மலைவளைக்கும்புயத் தாண்மை யென்னுந்தெவ் வளைந்துகழைச், சிலைவளைத்துத்தன் படைவீ டமர்க்களஞ் செய்திடினே.(கூடு)

[சந்தத்தாழிசை.]

இடமருங்கினின் மருங்கிலாதவள் குடியிருக்கவு
முடியில்வே றிவளொருத்தியை யிருத்திவைத்து ம
திமோக மோகனிரூபமாய், நடமிடங்கிவண்மேலும்
வைத்துளநயந்தோர் பிள்ளைபயந்தநீர் நங்குலத்திரு
வைமருவினின்று பிறர்நாவளைக்கவிடமாகுமோ, கு
டமுடைந்ததெனவா னினங்கண்மடி மடைதிறந்து
பொழி பாலொடுங் கொழுமடற் பொதியவிழ்ந்து
கைதைசொரி சோறு மிட்டணி திரைக்கையால்,
கடல்வயிற்றினை நிரப்புகின்ற சுரகங்கை குண்டகழி
யாநெடுங் கன்னநீள்குடுமி மதில்களேழுடைய காசி
மவுமகிலேசரே. (கூசு)

[மடக்கு, பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.]

சரியோடொழுகுங் கரவளையே சரக்கோடொழு
குங் கரவளையே தையற்கனமேதிவிடமே தவழுங்
கனமே தீவிடமே, சொரிவதடங்காக் கண்ணீரே
துளிக்குந் தடங்காக்கண்ணீரே துயரோவதிதனந்தி
னமேசூரற் கழுத்தினந்தினமே, கருகிப்புலர்ந்த நா
வாயே கரைவந்திழியுநாவாயே கண்களுறங்காக்கழு
நீரே கடலேகழியே கழுநீரே, அரிவையிவளுக்குரு
கீரே யனத்தோடுறங்குங் குருகீரே யளியாரிதழிவன
த்தாரே யருளாநந்த வனத்தாரே. (கூஎ)

[எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.]

வனத்தினுமொர்பொற் பொதுமுகப்பினு நினைப்
பவர்மனத்தினு நடித்தருள் செய்வார், சினக்கயல்
விழிக்கடை கருக்கொள்கருணைக்கொடி திளைத்த
மருமத்தர் தமதிடமா, நனைக்கமலநெக்குடை தரக்
குடைதுறைச்சுர நதிக்கரையின் முட்டைகொலை
னைக், கனத்தபருமுத்தினை யணைத்தன மினத்தொடு
களிக்குமவி முத்தநகர் கருதீரே.

(இதுவுமது.)

கருமுகில் வெளுப்பவற விருளு மளகத்தினிவள்
கதிர்முலைமுகட்டணைய வணைமீதே, வருகிலொனிற்
செவியி லொருமொழி சொலச்சமையம் வருகென
வழைக்கிலுடன் வருவார்காண், சுரநதி சுருட்டும்
விரி திரைகளொரு முத்திமக டினைமுலைதிளைக்கு
மவர்மணநாளின், முரசொடுமுழக்குகுட முழவெ
னவிரைக்கவளை முரலுமவி முத்தநகருடையாரே.()

(நேரிசையாசிரியப்பா.)

உடைதிரைக்கங்கை நெடுநதித்துறையின்
வலம்புரியென்ன வாங்கிடம்புரிதிங்கள்

வெள்ளிவீழ்ன்ன விரிநிலாப்பரப்பும்
பொன்வீழன்ன புரிசடைக்கடவுள்
முடவுப்படத்த கட்வுட்பைம்பூண்
கறங்கெனச்சுழலுங் கால்விசைக்காற்ரு
துமிழ்தருகுருதித் திரடெறித்தாங்குத்
திசைதொறுந்தெறித்த திரண்மணிக்குலங்கள்
வானேறுகடுப்ப வெரிநிற்ரூக்கலுங்
கையெடுத்தெண்டிசைக் களிறும்வீரிடத்
தெய்வநாடகஞ்செய் வைதிகக்கூத்தன்
வரைபகப்பாயும் வானரக்குழாத்தொரு
கருமுகமந்தி கால்விசைத்தெழுந்து
பழுக்காய்க்கமுகின் விழுக்குலைபறித்துப்
படர்தருதோற்றஞ் சுடரோன்செம்மல்
தசமுகத்தொருவன் றிரண்முடிபிடுங்கி
விசையிற்பாய்ந்தென விம்மிதம்வீளைக்குந்
தடமலர்ப்படப்பைத் தண்டலைக்காசிக்
கடிநகர்புரக்குங் கண்ணுதற்செல்வன்
வேம்புங்கடிவுந் தேம்பிழியாகச்
செஞ்செவிகைப்பயான் றெரித்தசின்மொழி
அஞ்செவிமடுத்தாங் களித்தனனதனுல்
வேத்தவைவியப்ப விரைத்தேன்பில்கும்
தேத்தமிழ்தெளிக்குஞ் செந்நாப்புலவீர்
மண்மகள்கவிகைத் தண்ணிழறுஞ்சப்
புரவுபூண்டிந்திர திருவொடும்பொலிந்து
முடிவினுமுடியா முழுநலங்கொடுக்கும்
செங்கெறிவினவு திராயினின்னிசைப்
பாத்தொடுத்தடுத்த பரஞ்சுடரை
நாத்தழும்பிருக்க வேத்துமினீரே. (கஂ00)

காசிக்கலம்பகம் முற்றிற்று.

கணபதிதுணை.

திருவருணைக்கலம்பகம்.

சைவ-எல்லப்பநாவலரால்

அருளிச்செய்யப்பட்டது.

இஃது

பிழையறப்பரிசோதிக்கப்பட்டு,

சென்னபட்டணம்:

ஊ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகர வச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1884.

கணபதி துணை.

திருவருணைக்கலம்பகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

அன்னவயல்சூழருணையண்ணாமலையார்மேல்
மன்னுங்கலம்பகப்பாமாலைக்குத் - துன்னியசீர்
மெய்க்கோட்டுமேருவெனும்வெள்ளேட்டின்மீதெழுதும்
கைக்கோட்டுவாரணமேகாப்பு.

கட்டளைக்கலித்துறை.

சைவத்தின்மேற்சமயம்வேறில்லையதிற்சார்சிவமாம்
தெய்வத்தின்மேற்றெய்வமில்லெனுஞான்மறைச்செம்பொருள்
மைவைத்தசீர்த்திருத்தேவாரமூந்திருவாசகமும் [வாய்
உய்வைத்தரச்செய்தநால்வர்பொற்றாளெம்முயிர்த்துணையே.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இது எட்டடித்தரவு-க.

மணிகொண்டநெடுங்கடலில்விழிவளருமாதவனும்
அணிகொண்டபுண்டரிகமகலாதசதுமுகனும்
ஞானக்கண்ணதுகொண்டுநாடுமாறுணராதே
ஏனத்தின்வடிவாகியெனினத்தின்வடிவாகி
அடிதேடியறிவலெனவவனியெலாமுழுதிடந்தும்
முடிதேடிவருவலெனமூதண்டமிசைப்பறந்தும்
காணரியவொருபொருளாய்க்களங்கமறவிளங்குபெருஞ்
சோணகிரியெனநிறைந்தசுடரொளியாய்நின்றருள்வோய்.

இவை ஈரடித்தாழிசை-எ.

மலைமிசையிலிருப்பதற்கோமலைசிலையாவெடுப்பதற்கோ
மலையனையன்மகிழ்வதற்கோமலையுருவமெடுத்தனையே. (க)

இத்தலத்திலேதொழிலுமிருபிறப்போரறுதொழிலும்
தத்துவமுக்திருமேனிதரித்திலையேலியலாவே. (உ)

இருக்காதிசதுர்வேதமிசைப்பதுகின்பலபேதம்
ஒருக்காலுமொன்றுரைத்ததொன்றுரைப்பவறியாதே. (ங)

கருமுடிவைத்தருகாலகற்பமெலாங்கடக்கவுகின்
திருமுடியிற்பிறைசிறிதுந்தேயாதுவளராதே. (ச)

தானவனைக்கடிந்துமலர்ச்சதுமுகனையொழித்துமற்றை
வானவனையழித்துகின்கைமழுப்படைவாய்மழுங்காதே. (ஞ)

அண்டருக்குமுனிவருக்குமழலானகொடுவிடத்தைக்
கண்டமட்டுநுகர்ந்திடவுங்கண்டமட்டிற்கடவாதே. (ரு)

மூவாமைதனக்குகின்றன்முதனடுவீறிலாதமைக்கும்
சாவாமைபிறவாமைதமக்குமிவைசான்றன்றே. (எ)

இவை நாற்சீரோரடியிரண்டுகொண்ட அம்போதரங்கம்-உ.

தடவரை நடைகெழு தரமென வருமொரு
கடகரி யுரிவிரி கலியென மருவினை
படமுடை யரவொடு பகைபடு மூடுபதி
தடையற வடனுறை சடைநெடு முடியினை.

இவை மூச்சீரோரடி அம்போதரங்கம்-ச.

சிலையென மலையை வளைத்தனை
திரிபுர மெரிய நகைத்தனை
கலைமறை யிவுளி படைத்தனை
கதிரவ னெயிறு புடைத்தனை.

இவை இருசீரோரடி அம்போதரங்கம்-அ.

விதிசிரத்தினை, அகழ்கரத்தினை,
விடைநடத்தினை, பொதுநடத்தினை,
நதிதரித்தனை, மதிபரித்தனை,
நாள்களாயினை, கோள்களாயினை.

இவைபெயர்த்தும் ஈரடித்தாழிசை-ஈ.

பண்ணுநீசுவையுநீ பரிதியுநீபனிக்கதிர்நீ
பெண்ணுநீயாணுநீ பேதமுநீயபேதமுநீ. (க)

செங்காலிற்கருங்காலன் சிரமுருளவுதைத்தனையே
சங்காழிமுகுந்தனுக்குச் சங்காழிகொடுத்தனையே. (உ)

ஆராலுமளவிடுதற் கரியவுனையொருகரத்து
நீராலுமலராலு நெஞ்சுருகப்பணலாமே. (ஈ)

எனவாங்கு (இது தனிச்சொல்.)

இது பத்தடி நேரிசை ஆசிரியச்சுரிதகம்.

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
அழகிய நாயகி யருளுடை நாயகி
புழுகணி நாயகி பொருந்திய புனிதா
காசியி லிறந்துங் கமலையிற் பிறந்தும்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டும்
அரிதினிற் பெறும்பே றனைத்தையு மொருகால்
கருதினர்க் களிக்குங் கருணையை விரும்பி
அடைக்கலம் புகுந்தன னடியேன்
இடர்க்கடல் புகுதா தெடுத்தரு ளெனவே. (க)

நேரிசைவெண்பா.

வேதநுவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார்
சோதியிய மானனிவர் சோமனிவர் - ஆதலனும்

மண்ணுங்கா லும்புனலும் வானுமழ லுஞ்மிவர்
எண்ணுங்கா லெல்லா மிவர். (உ)

கட்டளைக்கலித்துறை.

எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச ரிவரசைவின்
அல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்த வங்காள்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே. (ஊ)

கலித்துறை.

போகம் விடுத்தே தாக மெடுத்தே புவிமீதே
யோகம் விளைத்தே யாக மினைத்தே யுழல் வீர்காள்
ஆகமவித்தார் மோக மவித்தா ரருணேசர்
கோக னகத்தா ளாக நினைத்தே குழைவீரே. (எ)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சூழையடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணையத்தர்
குளிர்வெற்பூடே
மழையடுத்த துளிநனைக்க மடிசுருக்கி மயிர்பொடித்து
வருந்துஞ் சேதா
தழையடுத்த விடையர்பற்று குழலிசைக்கு மனமுருக்கித்
தளருமாலை
பிழையடுத்த மொழியுரைத்த தலைவருக்கு மிகவிரக்கம்
பிறப்பியாதே. (ஏ)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

யாதவர் குலத்துநெடு மாதவன் மருப்புடைய
வேனமிரு கத்துருவமாய்
வேதமொழி பெற்றவய னேதிம மெனப்பறவை
வேடமு மெடுத்ததிலையோ

ஓதருணை வித்தகனை மூவரி லொருத்தனென
வோதியிடு மற்பமதியீர்
சிதமதி வைத்தமுடி பாதமல ராச்சிறிது
தேடுதனி னேத்தபரமே. (சு)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவையாடினு நதிகளாடினும்
படியெலாநடக் தடிகடேயினும்
சூரவராயினுங் கனலினின்றதன்
கொதிபொறுக்கினுங் கதிகிடைக்குமோ
அரவமாடுசெஞ் சடிலரங்கணு
ரமுதர்தாணினைந் தடியர்தம்மொடு
விரவி னீறணிந் தருணைசேர்வரோல்
வெற்றராயினு முத்தராவரே. (எ)

பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முத்தமிழ் முறைமுறை யன்பொடு
மப்பர்கவுணியர் சொல்சுந்தரர்
முப்பொழுது மெதிர்புகழ்ந்திடு முதுமூலார்
அத்தரருணையி னெடுந்திரை
தத்துதிருநதியின் மென்பெடை
யச்சமறவுடனனைந்துறை மடநாராய்
ஒத்தமனதொடு புணர்ந்தவர்
சற்றுமகல்வதிலை யென்றவ
ருற்றதுணையென விருந்தவ ருளம்வேரும்
எத்தனைகபட நினைந்தவர்
கைப்பொருள்கருதி நடந்தன
ரெப்படி யிறைவனை நம்புவ தினநாமே. (அ)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இனமகலுமருகர்மட மிசையிலிடு கனன்மதுரை
யிறைவனுடல் புகமொழிவரோ

கனகமுகபடகவள கரடதடவிகடமத
கரியின்மத மறநினைவரோ
வனமருவுமருமுதலி யொருமதலை தரவினிய
மதுரகவிமொழி முதல்வரோ
அனகரபினயரதுல ரமலரெம தருணகிரி
யடிகடம தடியவர்களே. (கூ)

தலைவன்விளுவுதல்-எழுசீர்க்கழிநெடில்
ஆசிரியவிருத்தம்.

அடியவர் சிந்தையி லினிதுறை சங்கர
ரருணைவ ளம்பதி யன்னரோ
படியினெ டுங்கரி யினையம தங்கொடு
பதறிந டந்திடு மின்னரோ
ஒடியு மருங்கென வுணர்கிலர் நின்றினி
யொருவச னஞ்சொல வொண்ணுதோ
கடிய சரங்களி னிலைஞரு டன்பல
கலகவிதம்பயில் கண்ணரோ. (கூ)

அம்மானை-மடக்குத்தாழிசை.

நாராயணனறியா நாதரருணேசருக்கு
வாரார்சிலைகலைமெய் மாதங்கமம்மானை
வாரார்சிலைகலைமெய்மாதங்கமாமாயின்
ஆராயுங்காலெடுப்பதையமன்றேவம்மானை
அன்னமறியாதெடுப்பதையமோவம்மானை. (கூ)

பாங்கிதலைவிக்குரைத்தல்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மானென்பார் கலையென்பார்
கைம்மலையென்பார் வழியேதென்பார்
ஏனென்பா ரிலையென்பார்
யானேந்து மாந்தழைநன்றென்பார்

ஊனென்பார் நிறையுந்தாரா
ருறையுந்தென் னருணைமானே
கானென்பார் குழலேவேந்தர்
கருத்தென்னே கருதுங்காலே. (கஉ)

புயவகுப்பு-ஆசிரியவண்ணவிருத்தம்.

கருணைமுகமண்டலத் தொளிர்மகரகுண்டலக்
கலன்மலிகவின்குழைக் - குறவாயிசைந்தன
களபமகில்குங்குமத் தளறுகுடிகொண்டுதட்
டியபுழுகணிந்துமெய்ப் - பனிநீர்துளைந்தன
கலைமதிமழுங்கிநத் தினமிருளடைந்துமுத்
தொளிகருகவெண்சுதைத் - திருநீறணிந்தன
கனலிகையரிந்துகட் பரிதியைமுனிந்துதக்
கணைமுடிதடிந்துமைத் - தலையேவழங்கின. (கஉவ)

இரணியனுரங்கிழித் தளவறுமதங்கொழித்
தெழுகரமடங்கலைத் - தடமார்பிடந்தன
இமயமடமங்கைபொற் புளகவிருகொங்கையிற்
சுவடுபடவின்பமுற் - றதிலேகுழைந்தன
இரவிகிரணங்கொழித் ததிசயமுடன்கிளைத்
தெழுபவளவன்பொருப் - பெனவேவளர்ந்தன
இதழியரவிந்தமுற் பலமகிழ்செருந்திகட்
குரவலரிசண்பகத் - தொடையானிறைந்தன. (கஉஉ)

தரியலர்புரங்கெடச் சுரர்நரர்பயங்கெடத்
தமனியநெடுஞ்சிலைச் - சிலைகாணைறிந்தன
தனுவலதருஞ்செயற் கமர்பொருசரந்தரச்
சரதமெனவந்தமற் - பொருபோர்புரிந்தன
சலசமலர்மண்டபச் சதுமுகவயன்றிருத்
தலையுடனிலங்குமுத் - தலைவேலுவந்தன
தடவிகடகும்பமத் தகதவளதந்தநற்
றறுகண்மதகுஞ்சரத் - துரிபோர்வைகொண்டன.(கஉஊ)

அருணகிரணங்களிற் பலமணிகொருங்கிசைச்
சரவமிளிர்கங்கணப் - பணியான்மலிந்தன
அனவாதமம்பலத் தினிடமிகந்தொழிற்
கபினயவிதங்கள்பெற் - றழகோடிருந்தன
அருமறைதெரிந்தசொற் புகலியிறைசெந்தமிழ்க்
கரசினெசுந்தரப் - பெருமாள்புகழ்ந்தன
அரிபிரமர்தங்களுக் கரியபதபங்கயத்
தருணையதிருங்கழற் - பெருமான்புயங்களே. (கஙு)

தலைவனைவேண்டல்

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புயந்தழுவுங்கண்ணியுஞ்செவ்விதழியேமால்
பூண்டகயற்கண்ணியுஞ்செவ்விதழியேமால்
வியந்துசொலினன்னதும்பொன்னிறமேயெங்கண்
மின்னிறமும்பொன்னிறமேபுயம்பெறுமல்
அயர்ந்திவள்வாடத்தகுமோவருட்கண்பாரீ
ரருணகிரிப்பெரியீரேயமலரோனல்
வயந்தவிழாவழகோநினக்கமுத்தி
வரந்தருவாரோமலைமேன்மருந்தனரோ. (கசு)

இரங்கல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலைமேன்மருந்த ரருணேசரன்று வலைவீசிநின்ற வலையே, அ
லைமேனிறைந்து வருமீனருந்தி யருகேயிடங்கொள் குருகே, மு
லைமேன்முயங்கு தலைநாளிலன்பர் மொழிசூண்மறந்த பிழை
யோ, தலைமேல்வணைந்த படியோவிருந்து தமியேன்வருந்து தக
வே. (கஞ)

தலைவியைப்புகழ்தல்

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தகனமுறுவலின்மதனைமுனிபவர் சடையிலணிபலதலையினர்
அகனலடியரோடுறையுமிறையவ ரருணைவளநகரிவையார்

நிகரிறனதடவமுதநிறைகுட நிலவுமுகபடம்விலகினுல்
ககனவமரருகரருமிகல்கொடு கலகமிடுவரிவ்வுலகிலே. (ககூ)

இதுவுமது.

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலகுகண்டகனுய்வருசலந்தரனு
ருடறடிந்திடுவார்கடல்விடங்கொளுவார்
குலவுசங்கரனுருணையங்கிரிசூழ்
குளிர்புனந்தனிலேகிளிகடிந்திடுவார்
மலர்முகஞ்சியேவடிவமுஞ்சியே
மகரமென்குழையேவருண மென்குழையே
முலையுமந்தரமேயிடையுமந்தரமே
மொழியுமாசுகமேவிழியுமாசுகமே. (கஎ)

இரங்கல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சுகமேசுகமேயிரும்வந்துபுனஞ்
சூழ்கின்றவுமைத்தினமித்தினையுட்
புகமேயவிடாதுகடிந்திடுமெம்
பொல்லாமையுமின்றுபொறுத்திடுமின்
மகமேருநெடுஞ்சிலையாளரண
மலையாரருணைபுரிமால்வரைமேல்
அகமேசெலுமாறுதுணிந்தினிதண்விட்
டகறன்பமுமன்பர்வரிற்சொலுமே. (கஅ)

இதுவுமது. அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லாரணத்திற்கறிவரியார்
சோணசலத்திற்சுகங்கடமைக்
கல்லாலெறிந்தபகைக்குவழி
காட்டாதொழிதல்கண்டாயே

கொல்லாவம்புஞ்சமர்க்களத்திற்
குனியாவில்லுங்கொண்டிருக்கும்
புல்லாடவனேயெமக்குறுதி
புகன்றருளெங்கேயகன்றாரே. (ககூ)

பிரிவுவிலக்கல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆரும்விரும்பியகல்விமேலாசையுமக்குளதாயிடின்
பாரூறவென்பொருபாவையாப்பாடியபாவலர்போலவே
நீரும்மருந்தமிழ்செப்பிடுநீர்மையறிந்திவணேகுவீர்
மேருநெடுஞ்சிலையத்தனார்வீறருணபுரிவெற்பரோ. (உ0)

காலம்-மடக்கு

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெற்றிமதன்போர்க்காயம்பிறைக்குங்காலம்
வெங்கனலேபோற்காயம்பிறைக்குங்காலம்
சற்றுமிருகரமென்னேசங்கணியாக்காலம்
தலைவர்துறைமறந்தென்னேசங்கணியாக்காலம்
கற்றைநெடுஞ்சடைமுடியாரடியார்மேன்முழுதுங்
கருணைநாட்டம்புரியுமருணைநாட்டுறையும்
பெற்றவிளந்தென்றன்மறுகிடத்தியங்குங்காலம்
பேதையேன்சிந்தைமறுகிடத்தியங்குங்காலம். (உ4)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காலிற்றுலங்குகதாலும்
கையிற்பொலிகூர்கதாலும்
சிலத்தரக்கனுரங்கொண்டீர்
திசைமாமுகனேச்சிரங்கொண்டீர்
மேலைப்புரத்தைகைத்தெரித்தீர்
வில்வேள்புரத்தைப்பகைத்தெரித்தீர்

சூலப்படையேன்மழுப்படையேன்
சுமந்தீரருணையமர்ந்தீரே. (உஉ)

மாலையிரத்தல்-மடக்கு

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அமர்ந்தருணைப்பதிவாழ்வீரே
யன்பர்களன்பினில்வாழ்வீரே
சுமந்தொளிர்சூலமெடுப்பீரே
தோளணிமாலைகொடுப்பீரே
இமந்தருவெண்மதிகாயாதே
யிருகணெடும்புனல்பாயாதே
கமழ்ந்தகுழற்கொடிவாடாதே
கங்குலுமிப்படிநீடாதே. (உங)

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீடாழிஞாலம்வானெடுதீகாலுலாவுமியாவையு
நீறுபகாலமாய்விடுகாள்
கோடாழிமால்பிதாமகனூருனகோடிவீழ்தலை
கோடுரபாரமீதுறவே
சூடாதமாலைசூடுவர்தோளோடுதோளைவீசுவர்
சோணசலேசர்சோபனமா
ஆடாதவாடலாடுவர்பாடாதபாடல்பாடுவ
ராராதவோகைகூருவரே. (உச)

புன்னகங்கண்டிரங்கல்-கலித்துறை.

கூத்தாடுமருணேசர்வாயன்பர்பொருளன்புகொண்டுன்னையும்
நீத்தார்கொனிழலாருமிலையாகுகின்றுய்நெடுங்காலமே
பார்த்தாலுமயலேகுளத்தாய்சலித்தாய்பசுந்தென்றலால்
பூத்தாய்பொன்னிறமாகவென்னுகமேயன்னபுன்னகமே. (உரு)

இரங்கல்-மடக்கு

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நாகமெடுத்தவரம்பானுர்
நாலுமறைக்குவரம்பானுர்
தோகையிடத்தவர்சேணுராய்
சோணகிரிப்பதிவாணுராய்
மாகமடுத்தவிளங்காவே
மன்னவனெண்ணம்விளங்காவே
கோகனகத்திமிருந்தேனே
கொண்கனைவிட்டுமிருந்தேனே. (உசு)

ஊசல்-மடக்கு

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருசரணச்சிலம்பாடவாடூசல்
லிளமுலைப்பொற்சிலம்பாடவாடூசல்
மருவுகலைமருங்கசையவாடூசல்
வரிவளைக்கைமருங்கசையவாடூசல்
அருமறைகளளவிடுதற்கரிதாமைய
ரருணகிரிப்பரமர்புகழடைவேபாடிப்
பொருமிருகட்கயலுலவவாடூசல்
புயமதனன்கயலுலவவாடூசல். (உஎ)

பாங்கிசொல்லுதல்

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஊசலுகைத்திடுவார்குன்றெதிர்கூவிடுவா
ரொண்டளங்கொளுவார்தண்டலைகொய்திடுவார்
ஆசில்புனற்குடைவாரம்மீனபந்துகழங்
காடிமகிழ்ந்திடுவார்கோடிமடந்தையரோ
ஈசர்விடைக்கொடியார்பூசைசெயற்கெளியா
ரோரருணைப்பதிசூழ்மேருவினிற்கவணை

வீசுதினைப்புனமேயாவனைத்தெளியேம்
வேலர்மனத்திடையேமாலிலைத்தவரோ. (உஅ)

மடக்கு - கலிவிருத்தம்.

மாலையென்பாங்கலத்தாரு
மறைநாறுங்கலத்தாரும்
கோலமன்னகலத்தாருங்
குறைவில்பரிகலத்தாரும்
மாலைவில்வேள்சலத்தாரு
மதர்த்தமதாசலத்தாரும்
மேலகலாச்சலத்தாரும்
விளங்கருணைசலத்தாரே. (உக)

தலைவியைப்புகழ்தல்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணவெளிதனிலுமொளிரருமலைமருக்தாய
வமலரதிருங்கழலினூர்
மருமலர்விரிக்துதிபெருகருணையம்பதியின்
மருவியமடந்தையிடையாம்
ஒருகொடியிலொன்றுகமுகொருபவளமொன்றுகுமி
ழொருமதியமொன்றுபிறைதான்
இருசிலையிரண்டுகணையிருபணையிரண்டுகுழை
யிருமுலையிரண்டுமலையே. (ஙo)

எழுதரிதென்றல்
எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலையாசனத்தர்மலைமயிலாசனத்தரெழு
மலையாநிலத்துவருவார்
அலையாசனத்தரொடுமமிர்தாசனத்தர்தொழு
மருணசலத்தர்வரையீர்

திருவருணைக்கலம்பகம்.

மூலியாணைகட்டியிடைவெளிதேர்கிறுத்திமதி
முகமாயமைத்தருகுலாம்
இலைவேல்பரப்பியினிதெழுதோளமைப்பனினி
யெழுதேனிருப்புமனமே. (கக)

இரங்கல்-சிலேடை-கட்டளைக்கலித்துறை.

மேலாடைதோற்றணிசங்காழிகைவிட்டுமென்சிலம்பின்
காலால்வருந்திநிலங்கீறுங்கோலத்தைக்கண்டிருந்தும்
ஆலாலமுண்டவரண்ணுமலையர்தமன்பர்க்கன்றி
மாலானவர்க்கிரங்காரிங்ஙனேயொருவன்கண்ணரோ. (கஉ)

நேரிசைவெண்பா.

கண்ணருக்கும்போதருக்குங்காண்பரிதாய்க்கண்பறித்த
திண்ணருக்குநன்றுய்த்தெரிந்ததே - விண்ணருக்காப்
போற்றுவாரண்ணுர்புரமெரித்தாரென்பிறவி
மாற்றுவாரண்ணுமலை. (கங)

இரங்கல்-கலிவிருத்தம்.

அண்ணு மலையத் தரடற்கிரிமேல்
எண்ணு மலையத் தவமெய்திலரால்
கண்ணு மலையத் தனைநீர்கலுழும்
விண்ணு மலையத் தரும்வெண்மதியே. (கச)

பாங்கன்துணிவு.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மதுவானிறைந்தகுழன்மடவார்நெருங்கருணை
மலைமேன்மருந்தர்வையில்
முதுநீரில்வந்தவரடையாளமென்றிறைவர்
முதலேமொழிந்தபடியே
இதுநாகமன்றுமுலையிதுபூகமன்றுகள
மிதுமேகமன்றளகமே

அதுநீலமன்றுவிழியதுசாபமன்றுதத
லதுகோபமன்றதரமே. (கடு)

நாரைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணைவெற்பினரயனிருக்கவுமரிபிழைக்கவுமாகவே
திருமிடற்றெருகருமைவைத்தவர்திருநெக்கயறேடியே
கருதுநெட்டிடலசைவறத்துயில்கபடநித்திரைநாரைகாள்
இருகணித்திரையிலையெனச்சொலவிறைவர்பக்கலிலேகுமே.

பாங்கிதலைவிக்குரைத்தல்-கட்டளைக்கலித்துறை.

ஏகார்புனத்துத்தழையாற்கரிபட்டதென்பரென்றும்
போகாதவூர்க்குவழிதேடுவார்புலிக்கான்முனியும்
நாகாதிபரூர்தொழுமருணைசலநாட்டிலிளந்
தோகாயணங்கனையாயவர்க்கேதுசொலத்தக்கதே. (கஎ)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொர்க்கமெனுமொருபதவியிருக்கமாலைத்
துளவணியுமரிபதவியிருக்கமேலை
நற்கயிலைமலையிருக்கநினைத்தோர்க்கெல்லா
நயந்தமுத்திநகரமொன்றேநல்காநிற்பீர்
பொற்கையினுலுமைவணங்கிப்பரிந்துபூசை
புரிந்துதவந்தெரிந்துதினம்புகழ்வோர்க்கெல்லாம்
எற்சூலவுபுகழருணையீசனுரே
யினிதளிக்கும்பதவிதனக்கென்செய்வீரோ. (கஅ)

சித்து-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வீரத்தையணிமழுவாருமைபங்காளர்
விளங்கருணைச்சித்தர்யாம்விளம்பக்கேளா
காரத்தையெமக்கிடுகஞ்சத்தையேகோ
கனகமெனக்காட்டிடுவோங்கரியோருக்குத்

தாரத்தைப்பொன்னுகவமைத்தோந்தம்பீ
தாம்பரமும்பொன்னுகச்சமைத்தோமிந்தப்
பாரத்தையாரறிவாரயனுகத்தைப்
பசும்பொனிறமாகவுமேபாலித்தோமே. (நகூ)

இதுவுமது

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாதமெமக்களித்தவருணேசனுர்க்கின்
பச்சிலைபொன்செய்திமையோர்பசிநோய்தீர
ஓதுகடைமருந்தளித்தசித்தரோம்யா
மொருபிடிசோறல்லதுகூலுண்டோவப்பா
மாதவர்தங்திருவாணைகரிகளெல்லா
மாதங்கமாக்குகிற்போமருந்தில்லாதே
ஏதமறநாகமொளித்தராவாச்செய்வோ
மிரும்பையும்பொன்னுகவுராத்திசைவிப்போமே. (சo)

தலைவியைப்புகழ்தல்

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இதழியந்தொடையருணையங்கிரியி
லிரதமுந்திவிடுவலவனே
பதியடைந்துமறுகினில்வசந்தனதி
படையெழுந்ததுபகருவேன்
புதியகொம்புசிலவளையிரண்டருகு
பொழியும்வெம்பகழிபோரரு
உதயதந்தமதகளிறுடன்கதலி
யுபயதண்டுவருகின்றதே. (சக)

ஒன்பதின் சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வரைக்கனகசாபசோணகிரிப்புனிதகாலகால
மதிக்குநெமோயர்போலவே

தாைக்குளினியாரியாவரவர்க்குமுனிலாமனீடு
தழற்சிகரியாகனீதியோ
விாைக்கமலவோடையாவர்புரத்தைமுனிபாணமாவர்
விரித்தகொடியாவரீதலால்
இரக்குமனேதாறுமேறிநடத்துமெருதாவர்மேவி
யிடத்திலுறைதேவியாவரோ. (சஉ)

கட்டளைக்கலித்துறை.

ஆனிடபக்கொடிசோணசலனென்றுமன்பர்மலர்
தானிடமுத்திதரும்பெருமானென்றுஞ்சம்புவென்றும்
கானிடவேடன்முன்னானிடவுண்டதுகண்டுமொரு
மானிடமானவனைத்தேவர்செய்வதென்வந்தனையே. (சஊ)

கலி-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தனையிருக்குமறைதுதிக்குமருணைநாதன்
சரணமலர்புகழ்களியேஞ்சுக்ரபூசை
வினையிருக்குமவர்க்கெளிதோவரிதானையோ
விதிவசத்தால்விவரமற்றவிதஞ்சொல்வேனே
பனையிருக்கநெடியகஞ்சாவிருக்கவீணே
பச்சையாலிலையுயின்றுன்பனையன்றேளி
யனையிருக்கப்பணிதுயின்றுன்மதுவாந்தெய்வ
வாழிவிட்டுப்பாற்கடன்மீதழுந்தினனே. (சச)

கலி-நேரிசைவெண்பா.

ஆனூர்கொடியாரருணபுரிக்களியேம்
வானுடனேனுமியற்றூர் - மேனுளில்
சும்மாகஞ்சாவிலையேதுளிடித்துத்தின்றுலும்
தம்மாகஞ்சாவிலையேதான். (சநி)

பிச்சியார்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாமணிவர்திரிசூலமெதிர்கண்டார்மேற்
சக்கரத்தைவிடுவர்சிவசமயத்தார்

காமுகையாண்டுகொளார்சிவநூல்கேட்பர்
கருத்தினின்மாறெரிசனமேகாட்டாகிற்பர்
ஆமையரவணிதொடையார்விடையார்வாழு
மருணகிரிவளகாட்டிலகங்கடோறும்
சேமநிதியெனவுலவும்பிச்சியார்தம்
திருப்பெயரைவெளியாக்கித்திரிகின்றீரே. (சசு)

இதுவுமது-மடக்கு கட்டளைக்கலிப்பா.

தில்லைமன்றுணடம்புரிபாதனார்
தேவராயர்திருவருணைக்குளே
மல்லைமல்லிகைசண்பகம்பிச்சியார்
மொய்த்தவார்குழன்மோகனப்பிச்சியார்
நல்லமேனியும்பொற்றிருவேடமே
நாடியிட்டதும்பொற்றிருவேடமே
இல்லையாயினுமிவ்விடையையமே
யேற்கவந்ததுமிவ்விடையையமே. (சஎ)

கார்கண்டு பாகனேடுசொல்லல்.

கட்டளைக்கலித்துறை.

அயங்காட்டியமறையார்விடையாளரருணவெற்பில்
புயங்காட்டியமணித்தேர்வலவாமுன்புபோனகொண்டல்
சயங்காட்டிக்கோபமுஞ்சாபமுங்காட்டித்தடித்திடித்துப்
பயங்காட்டினுலஞ்சுமேதனியேகின்றபைங்கொடியே. (சஅ)

நேரிசைவெண்பா.

பைங்கட்புலிக்குப்பரிபவத்தைக்காட்டிநர
சிங்கத்தினையடர்த்துச்சீறியே - வெங்கைப்
புழைக்குஞ்சரமுரித்துப்போர்க்குமருணைக்கே
தழைக்குஞ்சரபமொன்றுதான். (சக)

குறம்-பதினான்குசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

ஒன்றுமூன்றுநாமுரைக்கவந்தகேளுமரிவைமீ
ருதயமானசுளகுநெல்லுமொற்றைபட்டதாதலால்

கன்றுமானுமழுவுமாகவொருவர்வந்துதோன்றினர்
கண்டமட்டிலேகறுப்பர்கைக்கபாலரவரையும்
சென்றுநாடிலருணமீதுகாணலாகுநாமமும்
தேவராயரவரலாதுதெய்வம்வேறுகண்டிலேம்
நின்றுவாடுமிவடனுசையிடர்தவிர்ப்பராதலா
னீறுகொண்டுமூன்றிலோகைநெற்றிமீதிலெழுதுமே. (௬0)

இரங்கல்-இதுவுமது.

நெற்றிமீதுகண்படைத்தவும்மைமாரனெய்வனே
னீறணிந்தவரவிருக்கநெடியதென்றன்மூடுகுமோ
வெற்றியானதாளிருக்கமதியமும்மைநலியுமோ
விரவுகங்கலுமதுகண்கள்வெயிலின்மூன்புநிற்குமோ
கற்றையானகுழலியெந்தவுதவிகொண்டுபகைவெலும்
கருணைகூர்தெனருணமேவுகலியுகத்துமெய்யனோ
செற்றலார்கள்புரமெரித்தபுழுகணிப்ரதாபனோ
தேவராயரோசுகந்தனவசந்தராயனோ. (௬௪)

கார்காலம்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தினைப்போதுதானேதினைத்தாலுமேலோர்
சிறப்பானபேறீகுவோர்
வனத்தாடுசோணசலத்தூடுதீரா
மயிற்பேடைகாளோடைகாள்
வினைப்பாவியானேன்விழிப்பாயுநீரான்
மிகுத்தேறுகார்காலமே
தனித்தாவிசோர்வார்தமக்காலமேகீள்
சரற்காலமேகாலமே. (௬௨)

இளவேனில்-நேரிசை அகவற்பா.

காலையுமாலையுங்கைம்மலர்குவித்து
மாலுமயனும்வணங்குதற்கரியோன்

இமைக்குமுனுலகமியாவையும்படைத்தோன்
தனக்கொருதாயுந்தந்தையுமில்லோன்
பழவினைக்கயிற்றிற்பல்லுயிர்ப்பாவை
அழகுறநடிக்கத்திருநடம்புரிவோன்
வினைவலையறுக்குமெய்த்தவவேடன்
மனவலைப்பிணிக்குமான்மதநாதன்
பேருமறுபத்தாருயிரம்பொன்
மாருத்தியாகவசந்தவிநோதன்
அண்ணுமலையனதிருங்கழலன்
கண்ணுராமுதன்கைலைப்பொருப்பின்
மறலித்திசையின்மலயாசலமென
இருத்தியதிருத்திகொண்டிளங்கால்பரப்பிக்
காவுலைப்பல்லவக்கனனுவசைப்பக்
குறைவறுகுயில்வாய்க்குறட்டினிலடக்கிப்
பொறிதிகழரிக்கரியதனிடைச்சொரிந்துள்
இசைத்திடுமஞ்சரிப்பசைக்கோலசைத்து
மதவீரனுக்குவசந்தக்கருமான்
பனிமலர்ச்சாயகம்பண்ணிரீட்டினன்
இன்னமும்வந்திலர்கேள்வர்
புன்னையங்கருங்குழலன்னமென்னடையே. (நுங)

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அன்னியமாசடையாரும்பின்னியமாசடையாரு
மடிமாறநடித்தாருமூடிமாறனடித்தாரும்
உன்னுமறமொழிந்தாரும்பின்னுமறமொழிந்தாரு
மூகைத்திடுமோனேற்றுரும்மிகைத்திடுமோனேற்றுரும்
என்னகத்தாமுரியாருங்கொன்னகத்தாமுரியாரு
மெருக்கிதழிமணத்தாருமுருக்கிதழிமணத்தாரும்
வன்னிவடிவனத்தாருஞ்சென்னிவடிவனத்தாரும்
வருகருணைப்பதியாரும்பெருகருணைப்பதியாரே. (நுச)

சம்பிரதம்

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவைபொருக்கெழவுங்ககனம்வடுப்படவு
பரிதிவடக்கெழவுசிருதிகுணக்குறவும்
இரவுபகற்படவும்பகலிரவொத்திடவு
மெளிதினியற்றிடுவோமிவைசிலவித்தைகளோ
அரவமணிப்பணியானனலகிரிப்பெருமா
னருணகிரிக்கிணையாவவனிதலத்திடையே
கருதிமனத்தினிலேசிறிதுகினைத்தளவே
கதியையளித்திடுமோர்பதியுமுணர்த்துவமே. (நுடு)

கருணைச்சிறப்பு-நேரிசைவெண்பா.

உள்ளத்தின்ஞானமுயர்ந்தவிடத்தன்றியிருட்
பள்ளத்திலென்றும்படராதே - வள்ளல்
அருணசலப்பெருமானம்பிகையோர்பாகன்
கருணசலமாங்கடல். (நுசு)

பாண்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கங்கைவார்சடைப்பரமர்தென்னருணையிற்
கடைதொறுநீபாட
அங்கையாலிருசெவிபுதைத்தேத்துவோ
மருச்சுனன்றிருநாமம்
எங்கைமார்செவிபொறுக்குநின்னிசையெனு
மிடிக்குரான்மகிழ்வாரார்
மங்கைமார்செயலறிந்துகொள்பாணனே
மயிலெனப்புகழ்வாயே. (நுள)

தலைவியைப்புகழ்தல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புடைசெறித்தளிபாடுமிதழியத்தொடைமார்பர்
புலிபதஞ்சலிநாடுவார்

மடையிளங்கயமுவுமருணையங்கிரிமீது
மலரணங்கெனமேவுவார்
நடையுமிந்திரவேழமிருகையிந்திரதாரு
நயனமிந்திரநீலமே
இடையுமிந்திரசாலநுதலுமிந்திரசாப
மிதழுமிந்திரகோபமே. (நிஅ)

உருவெளி-கலிவிருத்தம்.

இந்திரகோபமாமிதழிபாகனூர்
செந்தமிழருணைநகர்தேருஞ்செல்லுமே
சந்திரரோகையுஞ்சமரவாளியும்
மந்தரமேருவும்வளைத்துகொண்டவே. (நுக)

தலைவியையெய்தல்-எழுசீர்க்கழிநெடில்
ஆசிரியவிருத்தம்.

கொண்டலணிகண்டர்நிறைகங்கையணிசெஞ்சடையர்
கொம்ரொருபங்கிலுறைவார்
அண்டபகிரண்டமளவங்கியெனின்றவதி
ருக்கழலர்தங்கருணையீர்
கண்டுளதுகொண்டன்மிசைதிங்களெழுகின்றதிது
கண்டதிலையுங்கண்முகமா
மண்டலமெனும்புதியதிங்கண்மிசைகொந்தள
மஞ்சுகுடிகொண்டவடைவே. (சூ0)

நேரிசைவெண்பா.

அடுத்தமதிச்சென்னியின்மேலம்பிருக்குமற்றோர்
இடத்திலேகாரியிருக்கும் - தடக்கையிலே
ஏந்துசிலைவிட்டிருக்குமெம்மருணைநாதனார்
போந்துபுரமெரித்தபோது. (சுக)

கார்காலம்-கலித்துறை.

போதற்குமரிதானவருணைசலத்தீசர்பொன்மேருவாய்
ஏதப்படும்பாவிமனமேபிரிந்தாரிதெண்ணூர்கொலோ

ஓதத்தினீரோடுகனலுண்டுபுயன்மீளவுமிழ்தன்மைபோல்
காதற்குண்மடவார்மெய்பொன்பூசுமின்வீசுகார்காலமே. ()

தலைவியைவேண்டல்-கொச்சகக்கலிப்பா.

கார்வந்தாலன்னகறைக்கண்டனுர்செங்கதிரோன்
தேர்வந்தாலும்பொழில்சூழ்தென்னருணைகன்னட்டில்
ஆர்வந்தாலுந்தணியாதன்னமன்னீரானுலும்
நீர்வந்தாலாசைகெருப்பவியுங்காணுமே. (சுக)

பனிக்காலம்-கலித்துறை.

காணம்பரந்தோலினுடையாளரருணேசர்கைலாசமேல்
தூணங்கணிகர்தோளருறைகின்றகருடுசொரியாததரோ
பூணங்கைவளைசிந்தமடவார்மனத்தேறுபுகைபோலவேள்
பாணங்களுதிர்கின்றதுகள்போலவுறைகால்பனிக்காலமே. ()

நேரிசைவெண்பா.

பண்ணிறந்தவாசவரிற்பல்கோடிமாண்டாலும்
எண்ணிறந்தவேதரிறந்தாலும் - கண்ணற்
கமைத்தவெலாமாண்டாலுமண்ணுமலையார்க்
கிமைப்பளவுங்காலமிலை. (சுருு)

தலைவனேவேண்டல்

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலகொளிபரந்துமாரன்விடுகணைதுரந்துதாடி
யிடுமிருகெடுங்கண்மாதரார்
இலகரியகொங்கைமீதுபழகுழுவிவந்துபாலின்
விழுவதெனவந்துசேர்கிலீர்
மலகரிகுறிஞ்சிதேசிவைரவிசுரும்புபாடும்
வயலருணைமங்கைபாகரே
பலமலர்கதம்பதாளிமிருகமதசுகந்தம்வீசுப்
பரிமளவசந்தராசரே. (சுசு)

மதங்கு.

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வசிகரம்வயங்குமபிநயபுசங்கராச
வலயமுமணிந்ததோளினூர்
அசலகுலமங்கைபாகர்பரிமளவசந்தராச
ரருணையின்வளங்கள்பாடியே
இசைபெறவரங்கினூடுபவுரிகொண்மதங்கியார்த
மிலகிவளர்கொங்கையானையே
திசைபெறவிருத்தயானைபிறகிடமுனிந்துபோர்செய்
திறலிபமனந்தமானவே. (சுஎ)

இதுவுமது-மடக்குச்சுட்டளைக்கலிப்பா.

நதியைச்சூடதிருங்கழனதனூர்
நம்பனருணபுரிவீதிமேல்
சதியிற்பாடிநடிக்குமதங்கியார்
தந்தவாசைதரிக்குமதங்கியார்
வதனத்தாற்சசிமண்டலமாறுமே
வந்திருந்தவிம்மண்டலமாறுமே
கதியிற்கொண்டதுமந்தக்கரணமே
கண்டபேர்க்கிலையந்தக்கரணமே. (சுஅ)

குறம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணமணிமூலைக்கிரிமேற்செங்கைவைத்தா
யாகையாலருணகிரியன்பன்மூதூர்
வருணமூலகண்ணுரப்பார்த்தாயுன்றன்
மகிழ்நனுங்கண்ணுரமுதன்வந்துகேளாய்
தரணியிலுன்றனைச்சேர்வன்முருகன்போலத்
தநயரையும்பெறுவையிவைதப்புமாயின்
திருநிறைவண்டார்குழலாய்குறமும்பாடேன்
சிறந்தகுறக்கூடையும்யான்றீண்டிலேனே. (சுகூ)

மறம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தீண்டரியமடப்பனையின்சருகைவாரிச்
சிற்றிரும்பாற்சுற்றிவரச்செருக்கிக்கூட்டி
நீண்டதுவஞ்சருண்டதுமாவனாந்துசுற்றி
நிருபமெனக்கொடுத்தெதிரேநிற்குந்தூதா
தாண்டவமாடும்பரனுரருணைநாட்டிற்
றருமறப்பெண்டனைவேண்டிச்சமரிற்போந்து
மாண்டவரேறியகோணல்வளைகணங்கள்
வருங்கல்வழிவாயினுமரங்கடாமே. (எ0)

மடக்குக் கலிவிருத்தம்.

மறைக்கவனப்பரியாரும்வளைக்கவனப்பரியாரும்
எறித்தவிரும்பிறையாருமெவரும்விரும்பிறையாரும்
பொறுத்தசினவிடையாரும்பொருந்துசினவிடையாரும்
அறத்தவளம்பதியாருமருணைவளம்பதியாரே. (எக)

கலித்துறை.

ஆரணிதுங்கனுரணிபங்கனருணைசன்
தாரணியஞ்சுங்காரணனஞ்சுந்தரியானேல்
வாரணமெங்கேசாரணமெங்கேமலர்மேவும்
பூரணமெங்கேநாரணமெங்கேபோவாரே. (எஉ)

தழை-கட்டளைக்கலிப்பா.

போந்தபோதகல்லுரியாடையார்
போர்வையாளர்புகழருணைக்குளே
ஈந்தசூதறுந்தழையையனே
யெங்கண்மாதமொடுத்துமகிழ்ச்சியாய்
மோந்தபோதுதுவண்டதுமெய்யிலே
மொய்த்தபோதுபுலர்ந்ததுகண்ணினீர்
பாய்ந்தபோதுநனைந்ததுமீளவும்
பார்த்தபோதுபசந்துமலர்ந்ததே. (எங)

இரங்கல்

மடக்கு எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலரிதழித்தொடைபான்மதியணிவித்தகனூர்
மலைமகளற்புதனூர்வயலருணைப்பதிசூழ்
குலவுமிடக்கழியேபலவுமிடக்கழியே
குறவையினக்கயலேயுறவுமெனக்கயலே
சலமிகுமுற்பலமேதளர்வதுமுற்பலமே
சருவுமனத்திடரோதழுவுமனத்திடரோ
இலைகொரிசற்பனையேயிவருரைசற்பனையே
யினியபனித்திரையேயினியிலகித்திரையே. (எச)

சுவடுகண்டிரங்கல்

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நித்தனம்பனருணைசலத்திருவை
நின்றுதேடியுழனெஞ்சமே
இத்தடஞ்சுரமடங்கவோவிதல
தில்லைவேறுமரமிதனிடை
அத்திநின்றவிடமவ்விடஞ்சிலைகொ
ளரசுநின்றவிடமுவ்விடம்
எய்த்துளஞ்சியிளவஞ்சிநின்றவிட
மிவ்விடஞ்சுவடுமேவுமே. (எடு)

மடல்விலக்கு-கலிவிருத்தம்.

ஏறுடையண்ணலாரோழைபாகனூர்
ஆறணிசென்னியாரருணைவெற்பரோ
கூறுருபெண்ணையேகூடவேண்டுவார்
வேறுருபெண்ணையேவெட்டுவார்கொலோ. (எசு)

தவம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வாய்ந்தகலமருந்தருந்தியரியயோக
வகைபுரிந்துவாயுவுள்ளேயடக்கினலும்

காய்ந்தவிருப்பூசியிலேதவஞ்செய்தாலுங்
காயம்வருந்திடுவதல்லாற்கதிவேறுண்டோ
ஆய்ந்தகுருமணிக்கைதந்தெழுத்தையோதி
யகமகிழ்ந்துசிவாகமத்தினடைவையோர்ந்தே
ஏய்ந்தருணாசலத்தைவலங்கொண்டாரன்றே
விமைக்குமுன்னேகைலமலையிலங்கொண்டாரோ. (எஎ)

மாலையிரத்தல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலங்கியதிங்களெழுந்தாலெங்கண்மின்வெங்கதிரென்பாள்
கலங்கினளாயினுமன்னுள்கட்கமலங்குவியாவோ
துலங்கியவெங்கதிர்தானேசோணகிரிப்பெருமானே
அலங்கலையென்றுகொடுப்பாயன்றதுவெண்மதியாமே. ()

நேரிசைவெண்பா.

ஆற்றுங்காற்கஞ்சத்தவர்தாமரைக்கண்ணர்
சாற்றுங்காற்கண்ணரவர்தந்தையார் - கீற்றுமதி
சூடும்பெருமானேச்சோணகிரிவித்தகனைத்
தேடுவதிங்கெப்படியோசேர்ந்து. (எக)

கட்டளைக்கலித்துறை.

சேணூர்திருவுடைச்செல்வனைக்காணிற்சிறப்புச்செய்து
பேணுதவருமுண்டோபுவிமீதிற்பெருத்தெழுந்து
சோணசலவடிவாய்வெளியாய்நின்றசோதிதனைக்
காணுதகண்ணனேச்சொல்வர்செந்தாமரைக்கண்ணனென்றே.

தவம்-நேரிசைவெண்பா.

என்றுமதிக்கண்ணுரிறைவரருணபுரியில்
நின்றுதவம்புரியாய்நெஞ்சமே - பொன்றிரளான்
மாதையாணுயிழைசூழ்மாதையாணீதுவண்டு
மாதையாணுமையென்சொல்வாய். (அக)

இடைச்சியார்

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லாடினுமக்கிரண்டுசுவையுண்டு
சுமந்திடுபாற்கலசமுமத்தணையாமீதும்
அல்லாமலிடையின்மிகவிளைத்துப்போனீ
ராயிருக்குமிடைமதியோவகந்தானே
புல்லாரென்பணிதொடையாரருணைநாட்டிற்
பொதுவர்குலமங்கையரோபுவிமேற்கண்டோம்
எல்லாருக்தனித்தனியேடெடுத்தக்காலு
மிரண்டுமூனையாமலகன்றேகுவீரே. (அஉ)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

வீரணைநல்கிமகமூறுசெய்தவிடைக்கொடியார்
காரணிகண்டரருணைசலத்திற்கலசங்கொண்டு
மோரதுகூறுமிடையினமானுக்குமுண்டகம்போல்
ஈரடிமெல்லினம்வல்லினமாகுமிருதனமே. (அஊ)

தலைவி யிளமை யுணர்த்தல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தடனுகமணிவெயிலும்பிறையுமிழு
நிலவுமெதிர்சடிலநாதன்
அடனுகெடுஞ்சிலையானசுரர்புர
மெரித்தபிரானருணைநாட்டில்
திடனுகமனையவரோதனஞ்சிறிதுங்
காணுதசிறியார்தம்மைக்
கடனுகநீர்வினவிப்பிணைதேடி
முறிதனையேன்கைக்கொண்டீரே. (அசு)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கையடைந்தமழுமானுஞ்செழுமானு
முழைமானுங்கயலுமானும்

மையடையந்தவிழிமானுமுடனுக
வருணேசர்வருகுவாரோ
மெய்யடைந்தறங்கருவிழிகளும்பஞ்
சடைந்துவரமிடற்றினூடே
ஐயடைந்துபடர்ந்துவரயமனடர்ந்து
தொடர்ந்துவருமன்றுதானே. (அடு)

தலைவன்சொல்லல்-நேரிசைவெண்பா.

அண்ணுமலையாரருணையனையீரும்மைக்
கண்ணுலஞ்செய்தான்கமலத்தோன் - எண்ணு
திணைக்கோலஞ்செய்தமுலையேந்திழையீரென்னை
மணக்கோலஞ்செய்தான்மதன். (அசு)

கொற்றியார்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மழலைமொழியிசையாலுங்கொடும்பார்வை
யதனுலுமயக்கமாகிச்
சுழலும்விடரவமெலாம்படமெடித்து
முன்னுடத்தோன்றினீரோ
அழலுருவமணிகரத்தருணகிரிவளநாட்டி
லளிவந்ததும்
குழலொருசற்றுண்டாயினெப்படியோவாட்டிடுவீர்
கொற்றியாரோ. (அஎ)

கொற்றியார்-கொச்சகக்கலிப்பா.

ஆரிதழிசூடுமருணேசர்கன்னுட்டில்
வாரிறுகுகொங்கைமலைசுமக்குங்கொற்றீரோ
பேரிருள்போய்நாமப்பிறைநிலவுகண்டொளிக்கச்
சூரியகண்ணில்லார்குழல்குறைத்தாரென்பாரோ. (அஅ)

வஞ்சித்துறை.

பாணர்மொழிகிறை
சோணைசலரடி

பேணுதவனுறு
மாணுரகமே. (அக)

வஞ்சி விருத்தம்.

நரகவாதையில்வன்பிறர்
தரணிமீதொருகொன்பெறர்
சுரருலோகமுமின்புறர்
அருணைநாயகரன்பரர். (கூ0)

வேற்றெழுலி வெண்டுறை.

அருணையதிருங்கழலராறணிசெஞ்சடையாளரரிவைபாகர்
கருணைநெடுங்கடலானபெருமானர்தாடொழுதார்கதியைநாடி
மரணமிலாவிமையவர்தம்வானுலகமன்றே [ன்
பொருணிறையுநான்மறையோர்புகலுமத்தாட்பூவே. (கூக)

இரங்கல்-கலித்துறை.

பூவுண்டவிடையாளரருணைசலத்தீசர்பொன்மேருவாய்
பாவுண்டபுகழாளர்பிரியேனெனச்சொன்னபருவத்திலே
காவுண்டுகுயிலுண்டுமயிலுண்டுகிளியுண்டுகனிதாவுதே
மாவுண்டுகுருகுண்டுதிருகுண்டமனனுண்டுமறவாமலே.(கூஉ)

வெறிவிலக்கு-கலிவிருத்தம்.

வாங்குவில்லோர்நுதல்வயங்குமாதரீர்
ஈங்கிவளொருவர்கையேட்டைவாங்கினுல்
ஆங்கடுவணிந்தவரருணைநாட்டிலே
நீங்கண்மையழிப்பதுநீதியல்லவே. (கூஙு)

தலைவியைப்புகழ்தல்-கட்டளைக்கலித்துறை.

அள்ளற்கடல்விடநீங்காதகண்டரருணைவெற்பிற்
பிள்ளைப்பிறையுஞ்சிலையுமொப்பானுதற்பேதைநல்லாள்
வள்ளற்குழைபொருகண்ணுக்குத்தோற்றம்பும்வாரியுங்
கள்ளக்கயலுமிராசியின்மீனுங்கடைப்பட்டதே. (கூச)

வலைச்சியார்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேவியிடமகலாதவருணகிரி
வளநாட்டிற்றெருக்கடோறும்
மாவிரதமுனிவலொமையல்கூரக்
கயல்கூறுமவலைச்சியாரே
காவிதிகழ்வாவியிலேமீன்பிடித்துவருவோரைக்
கண்டோங்கண்டோர்
ஆவியெலாம்பிடித்திழுக்குமுமைப்போல
வொருவரைக்கண்டறிந்திலோமே. (கூரு)

வலைச்சியார்-நேரிசைவெண்பா.

மேலாறணிசடையார்வீறருணைவீதியிலே
மாலாகவந்தவலைச்சியரோ - காலா
மிருவராலுங்காட்டும்யான்பிடிக்கக்காத
லொருவராலுந்தீருமோ. (கூசு)

செவிலி நற்றாயைத்தேற்றல்
எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒருவராலுமணுகாதநாளிலே
வுயிரினுனவொருகேள்வனுசையால்
மருவினலுமெனதாருநாளையே
வழிகடோறுமினிநாடிமீளவே
கருணைநீதிமனிபேணுமாதுடன்
கடல்களேழுமலையேழுமேழுமா
வருணர்சூழுமுலகேழுமேழுமா
வருணநாதர்சரபாவதாரமே. (கள)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாரிலங்குமறைமுடிவினடித்தருளுமருணேசர்
தமதுநாட்டில்

நாரியர்மேன்மனமகிழுமளியினங்காளொருவார்த்தை
நவிலக்கேளீர்
ஏரிருக்குங்கைதையெலாஞ்சோதிருக்கநீரிருக்கு
மிடங்கடோறும்
வேரிமலர்த்தேனிருக்கவிவர்கூழைவிரும்பிவந்தேன்
விழுங்கின்றீரே. (கூஅ)

தலைவியவயவ வருமைசொல்லல்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஏமகெடுஞ்சிலைவேத்தபெருமாளு
ரருணகிரியிறைவர்நாட்டிற்
றுமாமண்டபத்துறையுமடந்தையிடை
யெழுதவென்றூற்றலைவனுரே
மாமுயற்கொம்பினிலேதிவிசும்பலைப்
பறித்துமுனம்வடிவிலாதோன்
ஆமையிர்க்கயிறுகொடுதொடுத்தணிந்த
புதுமையினுமருமையாமே. (கூகூ)

தலைவிகையுறை யேற்றமைசொல்லல்
கட்டளைக்கலிப்பா.

ஆர்வலர்க்கழியாவரங்குவா
ரத்தனாருணபுரிவெற்பரோ
பார்வியப்புறநீர்தருமாமணி
பட்டபாடுபகர்ந்திடலாகுமோ
கார்குழற்குமுடிமணியாயிரு
கண்கண்மீதுறுகண்மணியாய்மூலை
சேர்தலுற்றபொழுதிருகுன்றிலுஞ்
சென்றுலாவுந்தினமணியானதே. (கஂஂ)

திருவருணைக்கலம்பகம்
மூன்றாம் பாகம் முற்றிற்று.

முருகையன் துணை.

திருவிரிஞ்சை

முருகன் பிள்ளைத் தமிழ்.

வரகவி-மார்க்கசகாயதேவர்

அருளிச்செய்தது.

இஃது

சென்னபட்டணம்:

ஊ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம்

என்னும்

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

சுக்கிலவரு.

சிவமயம்.

திருவிரிஞ்சைமுருகன்

பிள்ளைத்தமிழ்.

கணபதிதுதி.

சுந்தரனுந்தென்விரிஞ்சைத்தோகைமயில்வாகனன்மேற்
சந்தமுறும் பிள்ளைத் தமிழ்பாடச் – செந்தமிழ்சேர்
வாக்கெனக்கு நல்கி மதமா முகக்கடவு
ளுக்கமுடன் காப்பா னுவந்து.

பருவத்தொகை.

சாற்றரிய காப்புச்செங் கீரைதால் சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை – போற்றரிய
வம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே
பம்புசிறு தேரோடும் பத்து.

காப்புப்பருவம்.

திருவருள்.

திருக்கஞ்சவிருகரத்தி னபயவரதமுஞ்சேர்
திகழுமரகதமளித்த தெய்வசிகாமணியை
யருக்கன்சந்திரன்றவழும் புரிசைவிரிஞ்சையில்வா
ழாறுமுகத்தரசையெமை யாண்டவனைப்புரக்க
பெருக்கஞ்சந்ததமேவுஞ் சிவகாதனிடத்திற்
பிறந்தவொருசிறுபாலன் பெருங்காணிபெறவே
யிருக்கஞ்சன்முதலமரா ராகரவென்றேத்த
விளைத்தபிறைசூடுமுடி வளைத்தகிருவருளே. (க)

திருமுருகாற்றுப்படை.

மூடியாறுடையாய் குமராசிவ மோகூத்தேற்று
மூருக்காவசுரே சர்களாகிய காட்டைப்பாற்று
முனைவாகருணை கரனேமறை வாக்கிற்சாற்று
முடியாமுதலே தனியோதிம னுர்க்குப்பூட்டு
மடியார்துணையே யவர்பால்வினை யாட்டைகாட்டு
மருதேகனியே நறவேமுரு காற்றைக்கேட்கு
மரசேயெமதா ருயிரேயெமை யூத்தைக்காட்டி
லடையாதெறிகீ யருள்வாயென வாழ்த்திப்போற்றி
விடியாமலமா பைகளாமிரு மூர்த்துதிர்த்து
விழிநீர்தருமோ கிகள்சேர்தரு வீட்டுக்கேற்ற
வெளிமுவமுகா யுலகோரிடர் நீக்கப்பாட்டு
மிகவோதமுனு ளொருநேயனு ணக்கிற்றீட்டும்
வடிவேலுடனே வயல்சூழ்கர னுர்க்குட்டோற்று
மயிலேறியசேய் சிறுவாணுதன் மேற்பொற்பூத்த
மலைமான்முலையூ டியபாலொடு கூட்டிச்சாத்து
வளைபோன்மதிபோ லொளிசேர்திரு நீற்றுக்காப்பே.

மார்க்கசகாயசுவாமி.

சீரியவேலாயுதனைச் செவ்வேளைக்குகனைத்
தேவர்கள்சேனதிபதியைத் திருமயில்வாகனனைக்
காரியகாரணங்கடந்த கடவுளையெங்கோனைக்
கரபுரியிலாறுமுகச் சேவகனைக்காக்க
கூரியகொந்தளதேசத் தனபாலன்மகிழக்
குளிர்பிறையுஞ்சடைமுடியு மழுமானும்பணியும்
வாரியிருட்கடிமிடறு நுதல்விழியுமறைத்தே
மறைப்புரியில்வழித்துணையாய் வந்தருள்சேவகனே. ()

மரகதவல்லி.

அரவின்மணிகளு மருணகிரணமு மழியவொளிவி
டுதோற்றனை, யழகுபொழிதரு மினையகுமரனை யசுர

கொடிபொரு சீற்றனே---யபனுமலைவுறு மறையினிறுதி
யையமுதமொழிகொடு தேற்றனே, யடிமைபமிவர்கொ
டிமைபொடிபட முடிகியெழுமரு ளூற்றனே---விரவிய
ளியின முரலநறவுறு குவளைமலர்கமழ் நாற்றனே, விழி
களொருபதொ டெயமுடையனே மிருகமதமகில் சேற்
றனே---விருதுபெறுகரு தலர்களுடலுயிர் விடுதிபெற
வடி கூற்றனே, விபுதர்புகழ்கர புரியில்வருமறு முகனே
யணிதிரு நீற்றனே---யிரவிமதியழ னயனிபுரிபுர சரணி
கௌரிச டாகூரி, யிறைவிதிரிபுர தகனிமுனிவர்க ளி
தயமலரைவி டாக்கிளி ---யெழுகடலுமெழு புவியுமரு
ளியு மிளமைநலமழி யாக்குயி, விழிஞர்தொழிலது பு
ரியுமறிவில ரிடர்களிடியவ ராப்பிடி --- வளையிலுறைப
வள் கருணைமழைபொழி வதனிசடிலிம கோத்தமி, வ
டுகிபவதி குமரிசிவனிட மருவிநிறையக லாத்திரு---
வனசமலர்மகள் சகலகலைமகள் வழியடிமைவினை தீர்ப்
பவள், மலையின்மடமகள் வருணமரகத வலியமலியவ
ள் காக்காவே. (ச)

கங்கை.

எம்பாதக நீக்கியவேலவனை யிமையோரரசைக் கும
ரேசனையென் னிதயத்திருளைக் களையுங்குகனை --- யம்
பான்மொழி யம்மையளித்தருளு மமுதைக்கனியைக்
கானூர்தனில்வா ழடியார்பெரு வாழ்வையளித்தருள்க
---கம்பாநதி கோதமைகாவேரி காளந்திகோ தாவிரி
பாலிநதி கனகாநதி கண்டிகைகுண்டிகைசூழ்---பம்பா
நதி வானதிசீதைநதி பாஞ்சாலித போனதியேமுதலா
ம் பலவாநதியானபகீரதியே. (ரி)

கணபதி.

முந்திவருசூரனின மாளச்சிவந்தவனை முன்புகடநீர்
சுவற வேலேவுட்டசெங்கையனை, முண்டகனைநால்வின

வி வாதித்தபுங்கவனே மொய்ம்புபெற வேதொழுத கீரற்
கிரங்கினனே—யெந்தையையென் ஞவியையென் ஞவி
க்கருந்துணையை யென்சிரசிலோலமிடு பாதச்சதங்கை
யனே, யின்பமுருகேசனேமெய்ஞ் ஞானக்கொழுங்கனி
யை யெங்கள்கானூரின்மயி லோனைப்புரந்தருள்க—வ
ந்தரமெலாமதிர வாய்விட்டுமண்டிவரு மஞ்சலொலா
முறிய வால்சுற்றிமஞ்சுகனே, யங்கைகொடுதாவியத னீ
ராப்பிழிந்துகட லம்புவியெலாநெளிய வோடித்திரும்
பிவிட—மந்தரமெலாமசைய வேமுட்டியங்குலவு வன்
பரிதிதேர்முறிய வேகுத்திவெண்டரளம், வந்துலவுமே
ழ்சலதி நீர்வற்றவுண்டுமிழும் வண்டுகண்மதாசலம் தா
யுற்றிருந்தவனே. (சு)

வைரவன்.

ஒருகைமணி யொருகைகயி றொருகைசர மொருகை
சிலை யொருகைகட மொருகைவடிவாள் — பொருகழு
மு ளொருகைசிர மொருகையிவை யுடையகர புரிவடி
க னடிதுதிசெய்வா—முருகையரி மருகைமயின் முனி
யைமறை முதலியறு முகனையுமை மகனையடியா—ரிரு
ளகல வருகுகனே யெமையடிமை கொளுமரசை யினி
மையொடி புவுசெயவே. (எ)

திருவேல்.

மூடியொராறுடை யானையெம்மையனே முதல்வனைச்
செவ்வேளைப்—படியெலாம்புகழ் தேவனைவிரிஞ்சைய
ம் பதிமுருகனைக்காக்க—கொடியதானவர் குருதியிலா
டிவெங் குடலெனுந்தொடைசூடி — நெடியயாக்கையி
னிணமெலாமருந்திய வவன்கையினெடுவேலே. (அ)

திருமயில்.

தொண்டகவெ மைக்கொளுஞ்சிறு தோன்றலைச்
சதுர் வேதநூல், சொல்லுமாமணி வாயனைச்சுக மாயி

ருந்து மணங்கொளும்—வண்டுசேர்தரு நீபமாலையனை த்திருக்கர னூரில்வாழ், மரகதக்கொடி பெற்றசெஞ்சு டர் மணியையன்பொடு காக்கவே—யண்டகூடந டுங்க மால்வரை தூளியாகவத் தூளியா, லாழியேழுநி ரம்பி மேடுப டக்கலாபம டித்தெழுந்—தெண்டிசாமுக முங்க டைக்கணி மைக்குமுன்னமு லாவியே, யென்றுமாட லியற்றிவாழுவ னேறுகின்றம யூரமே. (கூ)

திருமுருகாற்றுப்படையும் - திருப்புகழும்.

அம்மைமுலையுண்டுவிளை யாடுமிளையோனெயமை யாட்கொண்டகுமரேசனே — செம்மையுளவாறுமுக னே த்திருவிரிஞ்சைவரு சேயைப்புரந்தருள்கவே — மும் மைமலமகலநக் கீரமுனிசொன்னதிரு முருகாறெனுந் தேறலு — மெம்மருணகிரிநாத தோதுபதிறை யிரந்தி ருகப்புகழ முதுமே. (கo)

பலதேவர்கள்.

கந்தனேவேளை விரிஞ்சையின்மேவு கடம்பனேமாது மையாண் — மைந்தனேவேலனே யெங்குமரேசனே வந்தி ருதாள்பணிவா — ரிந்திரர்வானவர் சந்திரசூரிய ரொண் டிசையோர்முனிவோர், செந்திருமார்பினர் விஞ்சைய ர்பாதலர் செங்கமலாசனரே. (கக)

காப்புப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

உம்பரசுரேசுர்புரி வாதனேயுரைத்தருள வுயர்கயிலை வாழ்பரமனர், யோகத்திலுன்னவெண் ணீறணியுதுதல் விழியி லோராறுபொறிகள் சிதற—வெம்பொறியெழுந்

தண்ட ரண்டம்பரந்துலவ விண்ணவர்களஞ்சிமலிவா
ழ்,வித்தகர்க்கோதவப் பொறிகடமைவாவென்று வெங்
கனலிதனியிதனிங்—சம்ப்ரமொடுசரவணந் தனில்விடு
தியென்னவத் தழலவன்கொண்டகலவத், தழல்வெம்
மையாற்கங்கை தனில்விடக்கங்கையுஞ் சரவணந்தனி
ல்வைத்திடச்—செம்பதுமமுகமாறு டன்குலவுகரணா
ர செங்கீரையாடியருளே, திருமுருகவரிமருக வரதகு
ருபரகுமர செங்கீரையாடியருளே. (க)

ஆரமாமுமைதாட் சிலம்பினவமணிசிதற வதனேயர
ணடிவொன்பா, னுயிழையராயவர் கருப்பந்தரித்துமை
யினருவிலைலவர்களருளும்—வீரவாகுவையுமடல் வீ
ரகேசரியையும் வீரமாகேந்திரனையும், வீரமாகேசனையு
ம் வீரபுரந்தரனையும் வீராக்கதனையுந்தோட். — டாரு
லாம்வீரமார்த்தாண்டனையும்வீரராந் தகனையும்வீரதீ
ரன், றன்னையுந்தம்பிய னெக்கொண்டுதோலாத சமரோ
விடிவேலினுற்—றீரராநிசிசரரை வென்றகரணாராளி
செங்கீரையாடியருளே, திருமுருகவரிமருக வரதகுரு
பரகுமர செங்கீரையாடியருளே. (உ)

ககனமுகடிருவியெழு மகமேருகிரியையொரு கன
கபம்பரமாகவே, கைக்கொண்டொராயிரக் கதிர்முடிச்
சேடனைக் கயிறுகவேசுருட்டிச் — சகலலோகமுமுறத்
தழுவியிடுகமடமது தன்னையொருகுழியாகவே, சங்கர
ர்மகிழ்ந்தருள வாவிகட்கிடையூறு சாராமலாடுகுமரா
—மகரதோரணமமுகு மாணிக்கமண்டபமும் வயிடூரி
யப்புரிசையு, மரகதக்கோயிலும் பவளநித்திலமருவி ம
தியின்மண்டலமளாவுஞ்—சிகரகோபுரமுமொளி தழை
யவாழ்கரணார செங்கீரையாடியருளே, திருமுருகவரி
மருக வரதகுருபரகுமர செங்கீரையாடியருளே. (ஊ)

பரவையையுறிஞ்சிவட குலகிரிகுலுங்கிடப் பாய்ந்
தண்டரண்டமெல்லாம், பயமெழவிழித்துவிழி களில
னல்கொழித்துரக பந்திமுடிதிண்டாடவே—தரணியி
னடந்துதிசை மதகரியுடன்பொருது தாவியாகாயமே
வித், தாரகையுதிர்த்தமரர் தாருவையழித்துவரு தகரி
னேறியகுமரனே—வரையில்குங்குமமரமு மணநாறு
சந்தனமு மதுவொழுகுபுன்னகமும், வாழையின்கனி
யுமணி யாரமுமுடன்கொண்டி மழைபொழியுமேகம
ளவாய்த்—திரையெறிந்தொருபாலி நதிவருங்கரனூர
செங்கீரையாடியருளே, திருமுருகவரிமருக வரதகுரு
பரகுமர செங்கீரையாடியருளே. (ச)

பங்கயத்திறையைமறை தூல்வினவியோமெனும் பத
வுண்மைசொல்லெனப், பண்டவன்றிண்டாடல் கண்
டுகுட்டித்தளை படுத்திவண்சிறையூடுவைத்—தங்கையி
ற்செபமாலை குண்டிகைதரித்தபய வரதத்தோடேகமு
கமா, யன்றமர்ந்தண்டரண்டங்களையுமுண்டாக்கு மை
யனேதுய்யவரசே —கொங்குடைச்சண்பகா டவியு
ளிளவாழைக் குருத்துமணிசேர்கரும்புங், குளிர்தா
ழையுங்கமுகு விடுபாளையுங்கனக கோபுரக்கொடியும
டவார்—செங்கையிற்கழலுமழை முகிலளவுகரனூர
செங்கீரையாடியருளே, திருமுருகவரிமருக வரதகுரு
பரகுமர செங்கீரையாடியருளே. (ரு)

வேறு.

மாசதுபொருந்தாத காசிபனுடன்கூடி மாயையரு
ளும்பாலராம், வாளரிமுகன்முரு காசுரனெனும்வேழ
மாமுகனெடுஞ்சூரனு—காசமளவுஞ்சீற சோமுகியெ
ழுந்தேமு காசினியுநொந்தேறவே, காவலதுகொண்
டான வானவர்புயந்தோடி காலமவரஞ்சாமலே—வீச

திரையம்போதி நீர்சுவறமஞ்சான வேடமொடெதிர்ந்
தோலமாய், மேருகிரியுந்தூளி யாகவருவெஞ்சூரர் வீ
முவிடுகெம்பீரனே — யாசறுவிரிஞ்சேச ரைருளிளங்
காளை யாடியருள்செங்கீரையே, யாறுமுகமுந்தோளு
மேரொழுகிளங்காளை யாடியருள்செங்கீரையே. (சு)

கோடிமணியந்தூணி ருடசுவரங்கூடி கோதையர்நட
ங்கூரவே, கோலமதனன்போலு மாடவர்கள்கண்டா
சை கூரவிடுவண்டோடியே — நாடியவர்மஞ்சான வோ
தியிலலங்கார நாண்மலர்முகந்தூதுவாய், நாதமவர்நெ
ஞ்சாசை யோதுதலெனும்பாலி நாடுடையகெம்பீர
னே — பாடிமறைகொண்டாட வாரமுதமுண்டார்கள்
பார்வைகள்சலந்தாவமா, பாதகமுறிந்தோட் மாதவொ
முந்கார பாரமுடனின்றுடவே — யாடியவிரிஞ்சேச ரை
ருளிளங்காளை யாடியருள்செங்கீரையே, யாறுமுகமு
ந்தோளு மேரொழுகிளங்காளை யாடியருள்செங்கீரை
யே. (எ)

தாறுடையபைம்பூக மாதவர்வரும்போது சாமரைதரு
ஞ்சோலைசூழ், தாழைமயிலின்சாயன் மாதரிடைமின
சோதி தானெனமலர்ந்தேடெலா — நாறுமணமுங்கூடி
நீறுபூனையன்பாளர் ஞானவிழியின்பாணிபோ, லுளும
ருவுந்தாது தேறல்சொரியும்பாலி நாடுடையகெம்பீர
னே — சீறுமரவம்பாதி மாமதிகருங்காவி சீதவனசந்தா
துசெந், தேனெழுகுமந்தாரை தாதகிசெழும்பூளை தே
வர்தலையென்பாமையோ, டாறணிவிரிஞ்சேச ரைருளி
ளங்காளை யாடியருள்செங்கீரையே, யாறுமுகமுந்தோ
ளு மேரொழுகிளங்காளை யாடியருள்செங்கீரையே.(அ)

மாரமதனன்தேரு மானையுமகிழ்ந்தேறு வாசியுமவ
ன்காளமும், வாளியுநெடுஞ்சோலை யீயாலவம்போடி

வார்சிலைதரும்பாரில்வாழ்—நாரைவனசந்தாவு மாரலி
யையென்றோடி நாடிநுகரும்போதெலா, நாவிலதில்வந்
தூறு தேனுநுகரும்பாலி நாடுடையகெம்பீரனே—பூர
ணிகொடுஞ்சூலி நீலியுமைகங்காளி பூமகடொழும்பூ
வைமால், பூவிலுறையுந்தேவன் மாமுனிகரன்றாய பூ
சைபுரியும்பாதனு — ராரணிவிரிஞ்சேச ஞரருளிளங்
காளை யாடியருள்செங்கீரையே, யாறுமுகமுந்தோளு
மேமொழிளங்காளை யாடியருள்செங்கீரையே. (கூ)

நீதிபெறுமன்பாளர் பாவவெயிலண்டாம னீழலரு
ளுந்சோலையே, நீடியகொடுஞ்சூர ராசியகருங்காடி நீ
றெழவெழுந்தீபமே — நாதமொடுகொண்டாடி வாரிரு
ளிரிந்தோட நாடொறுமெழும்பானுவே, ஞானியர்க
ளைஞ்சான கோயிலுமடங்காத ஞானநிறையம்பார
மே—மேதினியினைந்தாமை யேழ்பிறவியின்றி மேவி
டவிடுந்தோணியே, மேதியில்வருங்கால னைமையமி
ம்போது விடுதவசஞ்சீவியே—யாதியவிரிஞ்சேச ஞர
ருளிளங்காளை யாடியருள்செங்கீரையே, யாறுமுகமு
ந்தோளு மேமொழிளங்காளை யாடியருள்செங்கீரை
யே. (கூ)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

தாலப்பருவம்

கரியுரிகஞ்சுக மாகப்புலியதள் கடிகமழ்பட்டாகக்,
கனசடைமுடிமயிர் முடியாகச்சிவ கங்கையொர்பங்காக
ப்—பரிமளமதிகே கைகமடலாகப் பாம்பிருகுழையாக
ப், படிகனல்விழிபொட் டாகச்சூலம் பாணியில்வாளாக

த்—தெரியவிளங்கிய ஞான்மறையாகிய தேசியிலேயிமு
னுட், செட்டிதனக்கு வழித்துணையாய்வரு சேவகனுள
மகிழத் — தரியலருடலஞ் சாடியவேன்முனி தாலோ
தாலேலோ, சரவணபவகர புரியுறையறுமுக தாலோ
தாலேலோ. (க)

செங்கையிலிடுவளோ கலகலகலென்னச் செம்மூலைவட
மசையச், சிலையெனுதுதன்மட வனிதையர்குடைதரு
தெளிபுனனிறைவாவிப்—பங்கயமலரிடை யிடையிடுப
னிலம் பவளச்செவ்வானிற், பலபலமுழுமதி நிலவிய
வெனநிகழ் பாலித்திருநாடா—கங்கையுமரவு மிளஞ்சி
றுபிறையுங் கதிர்விடுகொக்கிறகுங், கடிகமழிதழியு ம
றுகுமெலும்புங் கனசடைமுடிசூடிஞ் — சங்கார்மகிழ்
வொடு தழுவியபாலக தாலோதாலேலோ, சரவணபவக
ர புரியுறையறுமுக தாலோதாலேலோ. (உ)

கீளகீளகடைசியர் மூலைகளிலொழுகிய களபநெடு
ஞ்சேற்றிற், கனவளையுழவர்க ளுழவெனவுழுதொளி
கான்றிடுவிதையெனவே—விளைவயலிடைவெண்டரள
ந்தூவிவி ரிந்தொளிர்தாரகைசூழ், வேள்குடையாமதி
போலதனூடு விளங்கியபாலடா — வளமலிமகளுமை
கௌரிபுராதனி மரகதவல்லிகையான், மார்பிலணைத்த
மு தந்தரவுண்டு மகிழ்ந்துவளர்ந்தணியும்—தளையவிழ்
நீபமுலாவுபு யாசலதாலோதாலேலோ, சரவணபவகர
புரியுறையறுமுக தாலோதாலேலோ. (ஊ)

வாவியுண்மேதியி னந்திவாரியுண் மழைசொரிக
ருமுகில்போல், வந்துபணிந்திட வாளையோர்கன்றென
மடிமுலைமேன்முட்டத்—தூவியபான்மல ரோடைநிறை
ந்தணை துன்றிவழிந்தோட்டச், சோபனமாயுமுமள்ளர்க
ள்கால்வழி தோறுமொதுக்கியிடப் — பூவிரைகமழும்

பழனத்தலையிற் புகுதச்சாலியெலாம், பொன்னிறமாகி
யெழுந்துவளர்ந்து பொலிந்தொளியொடுவானங்—தா
வியபாலிக ணுடையாதிப தாலோதாலேலோ, சரவண
பவகர புரியுறையறுமுக தாலோதாலேலோ. (சு)

நிலனெனுமொருகுல மடமகள்சிறுபயி ராயசிறுர்க
ளெலா, நின்றுவருந்தி யிடாமன்முலைப்பா னேயமொ
ழுவதுபோன்—மலைதருமருவி விளைந்துவரக்குற வா
ணரினங்களெலா, மகிழ்வுடனுடுகு நிஞ்சிநிலந்தனில்
வாழ்பசுமாமயிலா—பலபலமுனிவர்க ளடியினைபரவி
ப் பதமுடனிசைபாடப், பனிபடுசிறுபிறை யொளிய
துமிளிரப் பகிரதிமுடிமீதிற்—சலசலவெனநட் மிடும
வர்பாலக தாலோதாலேலோ, சரவணபவகர புரியுறை
யறுமுக தாலோதாலேலோ. (டு)

மந்திரமறியா யாகமமறியாய் மாமறைநூலறியாய், வ
ழிபடுவறியா யின்றுன்பூசை வழுவாவகைசெயவே—
மூந்தியகாணியை யொற்றிவையென்று மொழிந்திடு
ஞாகியர்த, முடிசிறியோனடி நீண்டவவன்கை முன்பு
தன்முடிநீண்டக்—குந்தியசிறுகா ஞைவாரச்சிவ கொ
ள்கையர்கொண்டாடக், கோதறுசீதள நீரபிடேகங் கு
றைவறவேபுரியச்—சந்திரமௌலி வளைத்தவர்பாலக
தாலோதாலேலோ, சரவணபவகர புரியுறையறுமுக
தாலோதாலேலோ. (சூ)

வேறு.

செந்தமிழ்மாமலர்தூவிய வஞ்சமிலாததபோதனர் சிந்
தையொராலயமாகிய சீமானே, செங்கதிராரமுதூறிய
வெண்கதிர்சூழ்தருமாமலை செண்டெனவேவிளையாடி
ய கோமானே—வெந்தழல்போல்வருதானவர் செங்க
றைவாரியின்மூழ்கிவெ றுங்குடன்மாலிகைசூடிய வே

லோனே, விஞ்சையர்கேசரர்வாசவ னும்பர்கண்மாதவ
ரோதிய மென்சிறுவாரிசமாமிரு தாளோனே—யந்த
ரமாயுழலாமலு னன்பர்களோடேனையாளும ருந்தினை
யேயமுதேகனி யேதேனே, யம்புயனுலறியாமறை யி
ன்பொருளானதுகாணுமோ ரஞ்சனமேயரசேயடி யார்
வாழ்வே — தந்தமதாசலமாமுக வெந்தைகணேசர்ச
கோதர சண்டமயூரகுணசல தாலேலோ, தண்டலைசூ
ழ்கரனூருறை யுங்குமாமுருகாசிவ சங்கரனரருள்பா
லக தாலேலோ. (எ)

அண்டர்களூர்குடியேறவு மண்டியசூர்பொடியாகவு
மங்கையிலாழியில்வேல்விடு மாசூரா, வைம்புலனை
ழலாமலு மந்தகனைப்பிடியாமலு மன்றடியேன்முடிசூடி
யசீர்பாதா—தெண்டிரைவாவியில்வாளைய முந்துகிலா
மதிமேவுசெ முங்கமுகாடவிதாவிய பானுடா, செங்கம
லாசனிதாமுமை கொங்கையிலூறியபாலமு துண்டழ
காய்விளையாடிய சீராளா—வண்டுமுகாரிதகாசிகு றிஞ்
சிவராளிபுபாள மகிழ்ந்திசையாயிவையோதிய தார்
மார்பா, மந்தரமோடொருமால்வரை வெஞ்சமர்கோலி
யதாமென வன்கலிரூனவைபாய்மலை வாழ்தேவா — த
ண்டமிழோதியபாவலர் சஞ்சிதவேழ்பவ வேர்களை ச
ண்டமயூரகுணசல தாலேலோ, தண்டலைசூழ்கரனூ
ருறை யுங்குமாமுருகாசிவ சங்கரனரருள்பாலக தா
லேலோ. (அ)

மந்தரமாமுலைமாதர்ம கிழ்ந்துறவாய்விளையாடிய ம
ண்டபமேடையின்மேலொரு தேரோடே, வந்தெழுமா
தவனர்பரி யங்கெழுவீணையிணைசை கிழ்ந்திருவார்
குழையேறவு நடவாதே—யந்தரமேவிடவாரமு தந்த
ருமாமகியானத தன்பிறகேவரவீரிய வேளாலே, னங்

கையில்வாளிகடெவிய ருந்தவயோகிகண்மீதுங டந்தம
ராடிய பாலிமகாநாடா—செந்திருவேரகமாடர வின்கி
ரியீசுரமாமலை செங்கழுநீர்மலையாடக மூதூரா, செந்தி
லணமுலைகூடலு டன்கமலாலயமேவிய செம்புயமாறுட
னூஅள தாளாளா—சந்திரசேகரியாயிநி கம்பரிகாரணி
தான்மகிழ் சண்டமயூரகுணசல தாலேலோ, தண்டலை
சூழ்கரனூருறை யுங்குமராமுருகாசிவ சங்கரனரருள்
பாலக தாலேலோ. (கூ)

பங்கயமோவரமோவுரு வைங்கணையோபிணையோப
ர வுங்கயலோகடிவோவடி வோவேலோ, பைங்கழுநீர்ம
லரோகரு குங்கடலோநமனேபல பண்பயில்சேர்சர
மோமத வேள்வாளோ—வெங்கொலையோகளவோவெ
னும் வஞ்சியராசையினலவர் வெங்கணையேபுகழ்வா
ரொடி கூடாதே, வெண்பொடிபூசியிடாவலு வஞ்சக
மூடர்கண்மேலினி வெண்கவிமாலையெனவது பாடா
தே—மங்கலமாகியநூலறி வுங்குலமானமுமாளவ ரும்
பசியாலடியேனிட ராழாதே, வண்கதிராதவனர்வெயி
ன் மஞ்சினையேநிகராகிம றைந்திடுவாழ்வெனுமாயையி
ல் வீழாதே—சங்கையிலாவினையேனையு னன்பரோடா
மூமனைகர சண்டமயூரகுணசல தாலேலோ, தண்டலை
சூழ்கரனூருறை யுங்குமராமுருகாசிவ சங்கரனரருள்
லக தாலேலோ. (கo)

தாலப்பருவம் முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

அண்டகூடச்சிகர மடையத்துலங்கியணி யானகமு
காடவியெலா, மாதவன்மணித்தேர் வரும்பொழுதுபட்

துணைவர்பொற்புய மலைக்கணியுமுத்தாரமே, மற்றுங்க
ற்றசுரு திப்பொருள்கலைப்பொருண்மணக்குமொருகு
ர்ப்பூரமே—நெக்குருகுசிட்டர்கள்கு ளித்திடவருட்பு
னலைத்தருளு நெட்டோடையே, நித்தமுதகிககு
ருநாயப்பரியிற்சுடர்நி கழ்த்தியமணிக்கோவையே—
குக்குடமுயர்த்தரு டிருக்காபுரத்திறைவ கொட்டியரு
ள்சப்பாணியே, கொட்டமொடெதிர்த்தவசு ரக்குழுவை
வெட்டுமுனி கொட்டியருள்சப்பாணியே. (சு)

புற்றரவுகச்சைனவி சைத்தவர்மழுக்கனல்பொ றுத்த
கமலப்பாணியார், புத்தமுதினேச்சுவர்க ளுக்குதவிருச்ச
துபொ சித்தகருணைப்பார்வையார் — வெற்றியிடபக்
கொடிப டைத்தவர்நடத்தொழில்வி னோத்தவிருபொற்
பாதனர், வித்தகர்வழித்துணைவர் பொற்புயமணைத்தவ
ள்வி ருப்பமுறுநற்பாலனே—சிற்றிடைவருத்துகி ரக்
கனதனத்தியர்தெ நித்தகளபச்சேறணிசூழ், தெற்றிகள்பு
லர்த்தமது ரத்தமிழ்மணத்திணைஞ் சித்தசர்மணித்தேர
தூர்—கொற்றமுளரற்கர புரத்தமுருகத்திறைவ கொட்
டியருள்சப்பாணியே, கொட்டமொடெதிர்த்தவசு ரக்கு
ழுவைவெட்டுமுனி கொட்டியருள்சப்பாணியே. (எ)

கைத்தலமழுப்பெறுக ணத்தவர்களுற்றகயி லைத்திரு
மலைச்சூழலோ, கட்டழகுபெற்றெளிப ரப்புமதமட்டு
டைய கும்பகமலர்ச்சோலையோ — வெத்தலமுமெப்பொ
ருளு மிப்படியெனச்சொன்மறை யிற்பொருளினப்பா
லுமோ, விக்குவிலெடுத்தமத னப்பொடிபடக்கணிலெ
நித்தவரிடப்பாகமோ — நித்தியமல்லதனுவெ னத்தவரி
லைக்கணினி னைப்பவர்மனக்கோயிலோ, நித்தமுமுனக்
கிடமெ னப்பாவுபத்தர்தொழு நித்தியகளிப்பாகவே —
கொத்தலர்வயற்கரபு ரத்தமுருகத்திறைவ கொட்டியரு

ள்சப்பாணியே, கொட்டமொடெதிர்த்தவசு ரக்குழு வைவெட்டிமுனி கொட்டியருள்சப்பாணியே. (அ)

கற்றவறிவிற்பெரிய வப்பனைமுருட்டறிவு கற்றவர்க ளற்றாணிலே, கட்டியுததிக்குள்விட வப்பொழுதவர்க் கதுக டக்கவருளேத்தாவுவா — பொற்புனல்மத்தமித ழித்தொடையெருக்கறுகி ருக்குமுடியெட்டாமலே, யெக்குமதலைக்குயரு முச்சியைவளேத்தவ பொடுக்கு மிளமைப்பாலனே—யுற்றிடுமுழத்தியர்மு கத்தில்விழி நித்திலமு திர்க்குளினப்பூவின்மே, லுற்பலமெனத்தி கழ்வ தற்குழவாவெற்றுளமு ருக்கவருமக்கோலவேள் —கொற்றவமர்முற்றியதி ருக்கரபுரத்திறைவ கொட்டி யருள்சப்பாணியே, கொட்டமொடெதிர்த்தவசு ரக்கு ழுவைவெட்டிமுனி கொட்டியருள்சப்பாணியே. (கூ)

அப்புடைவயற்கயல்கு தித்தெழுவதிர்த்தகம லத்தர ளநற்சோதியா, லற்றையிருளேக்கடிய மைக்குவளையிற் ழகள தைப்பொருதிடக்காமவேள் — செப்புமதிமுற்றி ருளி லுற்றதெனவட்டமுள செப்பிளமுலைப்பாவைமா ர், சித்தமுமயக்கவிடர் சித்தமுமுறப்பொருதி ருக்கர புரத்தேவனே — முப்பழமிதப்பமிபொ ரிக்கறிபருப்பு நெய் முளேத்துவரையிக்கோடுதேன், முக்கணவலப்ப மடை பிட்டுமதுரித்தவடை முப்பொழுதுபுட்டாமலே — கொப்புணல்வயிற்றிலடை யக்கொளுமவற்கிளவல் கொட்டியருள்சப்பாணியே, கொட்டமொடெதிர்த்தவ சுரக்குழுவைவெட்டிமுனிகொட்டியருள்சப்பாணியே.

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப்பருவம்

சிலையுந்திகழ் பிறையுந்தொழு சிறுவாணுதன்மடவார்
சிகரக்கன தனமொன்றிய செம்மாமணியொளியை
மலையின்மிசை யெழுமாதவ னென்றம்புயமலரும்
வயல்சூழ்கர புரிமேவிய மயிலேறியவரதா
கலையின்படி நடவாதகொ டுஞ்சூரையழிக்குங்
கனதோள்வலி பெறவேசிவ கயிலைக்கிரியுடையாண்
முலையுண்கனி வாயாலொரு முத்தந்தனையருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனையருளே. (க)

மாலானவர் பாலாழியுள் வளர்கின்றவளம்போன்
மழைமாமுகி றவழுந்துய மணிமேடையிலேறப்
பாலார்மொழி மடவாரொரி செம்பஞ்சுடல்பட்டே
பனிவான்மதி செம்மைப்படி பாலித்திருநாடா
வேலாவுமை பாலாசிவ சீலாவனுகூலா
வேதாசுரர் நாதாமயில் வீராகானூரா
மூலாகம வாயாலொரு முத்தந்தனையருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனையருளே. (உ)

கீரக்கவி பாயப்பல தென்னம்பழமடிவிற்
றிரளாய்விழ நெடுவாளைசி னத்தோடெதிர்நாடிப்
பாரப்புய முவித்திகழ் பலவைப்பொருதுதிரும்
பலவின்சுளை யுடனேவரு பாலித்திருநாடா
வீரப்பசு மயிலாகர புரிமேவியவரதா
விண்ணோர்தொழு மிறைவாசதுர் வேதப்பொருள்கமழ
மூரற்றிரு வாயாலொரு முத்தந்தனையருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனையருளே. (ங)

மற்றுருமொவ் வாமாதர்கண் மறுகெங்கு மிறைக்கு
மணமார்பனி நீரோடிவ யற்போயதுபாயப்

பொற்றூம மெனச்சாலிவ ளர்ந்தேறியபாலிப்
புனலவேலை யெனச்சூழ்கர புரிவாழிலையோனே
சிற்றூரமு தச்சோமன்மு டிச்சூடிநலஞ்சேர்
சேமேல்வரு மீசற்குப தேசந்தனியருளு
முற்றூகம வாயாலொரு முத்தந்தனியருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனியருளே. (ச)

கதிராணிறை செஞ்சாலியும் வயன்மேவுகரும்புங்
கனசங்கமு மதியுந்திகழ் கமுகாடவிமரனு
மெதிராதவ னெழுபோதல ருந்தாமரைமலரு
மெறிமுத்தம ளிக்குங்கர புரிவாழிலையோனே
யதிராவருண் முகிலேநில மழியாமதகளிறே
யறுமாமுக வரசேதொழு மடியார்பெருவாழ்வே
முதிராமணி வாயாலொரு முத்தந்தனியருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனியருளே. (ஞ)

வேறு.

அருணசலப்பதியை நினைவார்தமக்குமொளி யழியா
தபொற்சபையைநே, ரறிவார்தமக்குமொரு கமலாலய
த்திலுட லடைவார்தமக்குமலைநீர்—வருகாசியிற்சனன
மொழிவார்தமக்குமருண் மறைஞானமுத்திதமதூர்,
மறுகேநடக்கிலருள் புரிவார்வழித்துணைவர் மகிழ்வா
யணைக்குமரசே — குருமாமணிக்கிரண வெயில்வீசு
முச்சியது குவிகோபுரத்திலழகார், கொடிமேலிருக்கு
முழு மதிதேவரிட்டவொரு குடையாமெனத்திகழவே
—திருநாள்பெருத்தகர புரிவாழ்திருக்குமர திருவாயி
ன்முத்தமருளே, சிறுதாமரைக்குநிக ராமுகக்குழ
வி திருவாயின்முத்தமருளே. (சு)

உருகாமனத்திமிர முடையேனிரக்கமுட் டெருடு
கருக்குமுதவே, லுலகோர்பழித்தசெயல் புரிவேனிட

ர்க்கடலி னுழல்வேனிரக்கவெழுவேன்—மருவார்கறுத்
தகுழன் மடமாதர்கட்கடையின் மயலாலினைத்துமெலி
வேன், வழிபாடுமர்ச்சனைய மறியேனுளக்கமல மலர்மீ
திருக்குமுருகா—வருகார்வயற்குவளை யளிபாடியிட்ட
பொழு தழகாயொழுக்கியிடுதே, னடியாரிசைக்குருகி
விழிநீர்துளித்தருளு மதுவாமெனத்திகழவே — திரு
வார்செழித்தகர புரிவாழ்திருக்குமர திருவாயின்முத்
தமருளே, சிறுதாமரைக்குநிக ரறுமாமுகக்குழவி தி
ருவாயின்முத்தமருளே. (எ)

அரைமீதுகட்டுநவ வணிநாணுகெற்றிதனி லழகாய
பொற்சுடிகையோ, டணிநீறுமுத்துவட மிசைமார்புந
ற்செவியி லசைவாயபொற்குழையுநீள்—வளைவாரண
க்கொடியு மயில்வாகனப்பரியு மணநாறுசிற்றடியுமே,
மலமாயைவிட்டகல மறவாதபத்தருடன் வறியேனைவை
த்ததலைவா—விளைவாயொலித்தபுனல் மதகூடுபட்டதிர
விசையாகிமுட்டியிளநீர், விழுவேகுதித்ததிக வலைவா
ணைக்கறுவி வீசையாடியிட்டகபலசூழ்—திளைவாவி
யுற்றகர புரிவாழ்திருக்குமர திருவாயின்முத்தமருளே,
சிறுதாமரைக்குநிக ரறுமாமுகக்குழவி திருவாயின்மு
த்தமருளே. (அ)

தவநாவலிற்சடையன் மகவாயுதித்திறைவர் தடையா
ன்மணத்தொருவியே, தமிழ்பாடிநற்பரவை யொடுகூட
விட்டவிற றனையோதிகெற்குவையெலா—நவமாவழை
த்தருளி நிதியாகமட்சிலக ணதியூடுவிட்டபொருடா,
னலமார்குளத்தில்வர வருளானினைத்தமலர் நடமாடு
மொற்றிநகர்வா—ழுவடோளனைத்தரனை யொருதூது
விட்டருகி லலராறுதைக்கியடைவா, யவநாசியிற்கரவு
நுகர்சேயழைத்தருளு மவரோடுமுத்தகுகியோர்—சி

வதூரன்மணத்தகர புரிவாழ்திருக்குமர திருவாயின்மு
த்தமருளே, சிறுதாமரைக்குங்கை ரறுமாமுகக்குழவி தி
ருவாயின்முத்தமருளே. (கூ)

சதுமாமுகற்குங்கர் சிவஞாதர்பெற்றசிவ தருமாவுன
க்குமுறைநீ, தவருமலிப்பொழுது புரிபூசனைக்கிளை
யை கருகாணியொற்றிதரவே—யிதுதாய்தனக்குமொ
ழி யெனுஞாதிசட்கிசைய வியலாயுகைக்கவரனே, யி
னியேதுதிக்குமிலை யெனவாடுமப்பொழுதி லீளையாய்
மனக்கனவிலே—விதவேதியத்தலைவ னெனவாயுரைத்
தபடி விடிபோதுதற்சுதனீர், விடமூழ்கிடச்சுருதி ய
றிவோதியப்புமுடி விடவேசிரத்தைவளைவார்—திதமா
ய்வளர்த்தகர புரிவாழ்திருக்குமர திருவாயின்முத்தம
ருளே, சிறுதாமரைக்குங்கை ரறுமாமுகக்குழவி திருவா
யின்முத்தமருளே. (கo)

முத்தப்பருவம் முற்றிற்று.

வருகைப்பருவம்.



செந்தாமரையிற்சிறுசதங்கை சிலம்பக்குதம்பைக்
குழைமின்னச், செம்பொன்னரைஞாணெகிழ்ந்தொளி
ரச் சிகரக்குடுமி யிசைந்தசைய — வந்தாதரவின்மணி
வாயான் மழலைகாட்டி மரகதத்தாய், மடிமீதேறிமுலையு
ண்டு வளர்ந்துவிரிஞ்சைப் பதிவாழுங்—கந்தாவருகம
ணங்கமழுங் கடம்பாவருக வசுரேசர், காலாவருகபன்
னிரண்டு கையாவருக வழித்துணைவர்—மைந்தாவருக
மயிலேறு மன்னவருக வடியார்கள், வாழ்வேவருகதெ
ய்வசிகா மணியேவருக வருகவே. (க)

உருகாமனமுஞ்சிவஞான முணராவறிவுமுனதுபுக, ழோதாகாவுமோதக்கேட்டுவந்தேயினியதிபோலப்— பெருகாவிழியுமுடையேனைப் பிறவிக்கடலில் வீழாமற், பேணியெடுத்திங் கெனதுள்ளம் பிரியாவிரிஞ்சைப் பதிவாழ — முருகாவருக சதுர்வேத முதல்வாவருக வினைதீர்க்கு, முனைவாவருக மலராறு முகவாவருக திருமாலின்—மருகாவருக மயிலேறு மன்னுவருக வடியார்கள், வாழ்வேவருக தெய்வசிகா மணியேவருக வருகவே. (உ)

கண்ணுலனது திருவடியைக் கண்டாதரவு பெருகி பிரு, கையாற்றொழுதுன் றிருக்கோயில் காலால்வலஞ் செய் துனதுபுகழ்—பண்ணுலுருகிப் புகழ்ந்துகண்ணீர் பாயாவெனையுந் தாயாகப், பரிந்துவளர்க்கும் பெருங்கருணைபடைத்துவிரிஞ்சைப்பதிவாழு—மண்ணுல்வருக வுலகமுழு தாண்டாய்வருக கதிதருமெம், மையாவருக வாறுமுக வப்பாவருக விளங்குகதிர்—வண்ணுவருக மயிலேறு மன்னுவருக வடியார்கள், வாழ்வேவருக தெய்வசிகா மணியேவருக வருகவே. (ஊ)

பூந்தாமையின் மலருழக்கிப் புதுப்பூங்குவளை நறவருந்திப், பொய்கைக்கரையி லினிதேறிப் பொழிலிற் றுயிலு மேதியினங்—காந்தாரப்பண் ணளிபாடக் கேட்டுமுலையிற் சொரியும்பால், கரும்புக்கழகு பெறப்பாயக் கமழும்விரிஞ்சைப் பதிவாழுஞ்—சேந்தாவருக மரகதத்தின் சிறுவாவருக குறிஞ்சிநிலத், தேவாவருக விடரொழிக்குஞ் செல்வாவருக பசுங்கடம்பின்—மாந்தாணிந்து மயிலேறு மன்னுவருக வடியார்கள், வாழ்வேவருக தெய்வசிகா மணியேவருக வருகவே. (எ)

தேவேவருக திருவிரிஞ்சைச் சேயேவருக தெவிட்
டாத, தேனேவருக சுவையமுதத் தெளிவேவருக கதி
கொடுக்குங்—காவேவருக பெருங்கருணைக் கடலேவ
ருக கலைபொழியுங், காவேவருக மரகதத்தின் கண்ணே
வருக விண்ணோர்கள் — கோவேவருக பெரியகுணக்
குன்றேவருக வுபதேச, குருவேவருக சிவஞானக் கொ
முந்தேவருக வொருகரத்தின்—மாவேலெடுத்த பரப்பி
ரம வடிவேவருக வடியார்கள், வாழ்வேவருக தெய்வ
சிகா மணியேவருக வருகவே. (நு)

வேறு.

அரியவடவனையை நிறுவியெழுமதியை யடைகலை
னவரவு கயிறதா, வமுதமெனமுனிவ ரமரரரிபிரம ரசு
ரரிவர்கள்கடல் கடையுநா—ளெரியினுடல்கருக வரியி
னுடல்கருக விரவியுடல்கருக வுலகெலா, மெரியவெரி
புகையின் மறையவளர்திசையி னிபமதலறிவிழ வை
யெலாம்—விரியவெழுசலதி கமர்கள்படவருணன் மிக
வுமெலியமுகி லுருவுபோல், விரவியடர்தலொடு பரவி
யெழுகொடிய விடமுமமுதமென மிசையவே— கரிய
மிடறுடைய விமலரருள்குமர கருபுரியின்முருக வருக
வே, ககனமெனுமுகடி மதிரதனமிடி கலபமயிலிறை
வ வருகவே. (சு)

முனிவர்பரவியர கொனவமரர்தொழ முயலன்முது
குநெற நெறெனவே, முடியிலிளமதியு நதியுமசையம
றை முரலமுழுதுமுடல் புளகமா—யினியவரவுபுலி ப
ணியவடியர்மன மிளகிவிழிகண்மழை பொழியவே,
யிரவிலழகுபெற நடனமுடுகியிடு மிறைவரருள்குமர
வருகவே—புனிதவமுதமெனு நதியில்வருகயல்கள் பு
டையிலுழுமுழவர் வெருளவே, புதியகலிகனி யுதிர

வெழவுழுத புழுதிதனிலொழுகு மதுவினுற்—கனியு
மளறுபடு பழனமுடையசிவ கரபுரியின்முருக வருக
வே, ககனமெனுமுகடு மதிரநடனமிடு கலபமயிலிறை
வ வருகவே. (எ)

பழையவரவின்முது கொடியநடனமது பயிலவிர
ணியீன முனியவேழ், படியையமலரடியி னளவுசெயவ
மரர் பரியகலவமுது கடையவான்—மழையையொரு
மலையின் மறைவுசெயவிடையர் மனையிலளிதிருடி வலு
மையான், மருதுபொரவலகை முலையினமுதுகொள
வலவன்மகிழ்மருக வருகவே—யுழவருழுதுபயிர் மு
ழுதுமிடநறவ மொழுகுகுவளையெனு மலரின்மே, லு
லவிமதுரவிசை முரலுமளிகள்பெற வுதவியிடுவதென
வயலில்வாழ்—கழையின்விழுதரள மதியினிலவுதரு
கரபுரியின்முருக வருகவே, ககனமெனுமுகடு மதிரந
டனமிடு கலபமயிலிறைவ வருகவே. (அ)

அரையில்வடமசைய வழகுபெறுகுடமி யசையவு
மைமகிழ வருகவே, யலர்கொள்சரணவணி கலகலென
மழலை யமுதமொழுகியிட வருகவே — யினையுமுதகி
யது சுவறவயிலெவிம் மிளமையிடுகுமரன் வருகவே, யி
ளியகவிதைகொடு நினதுபுகழ்பரவி யெமதுவினைகள்
கெட வருகவே—வளைகொளரவமுயன் முசுவொடிரு
ளிமரை வருடைகரடிகலை கவரிமான், வழுவையுழுவை
யரி மறவர்குறவர்தின மருவுமலைகிழவ வருகவே—க
ரையினதியினலை பொருதுதரளமெறி கரபுரியின்முரு
கவருகவே, ககனமெனுமுகடு மதிரநடனமிடு கலபம
யிலிறைவ வருகவே. (கூ)

அனகையருள்பொழியும் விமலையழகொழுகு மமலை
யருள்குமர வருகவே, யசுரர்மகுடமணி சிதறவயில்

விசிறு மறுமுகவவருக வருகவே—பனகமௌலியரன் மகிழமறையிறுதி பகருமணியதர வருகவே, பரவி யெழுமுனிவர் பணியுமொளியுடைய பவளவிருசரண வருகவே—மனமுமொருமைபெற விழிகளருவியென வழியவுளமுருக வருகவே, மறலிதொடர்புகெட வெனியுனடியமொடி மருவியிடவருள வருகவே—கனகமதிலருண கிரணமெனநிலவு கரபுரியின்முருக வருகவே, ககனமெனு முகடி மதிரடனமிடு கலபமயிலினைவ வருகவே. (க0)

வருகைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

நீலவுணினர்க ணைவைநீயிவனு நீலவுண்ணினர்க ணைனவ, னேமியங்குவடு சூழ்வைநீயிவனு நேமியங்குவடு சூழ்பவ—னேலநீயரிய மானுளாயிவனு மென்றுமோரரிய மானுளா, னிருளுமாசினையொ ழிப்பைநீயிவனு மிருளுமாசினை யொழிப்பவ—னேலமாமலையி லெழுனவ நீயிவனு மொப்பிலாமலையி லெழுபவ, னுனக்கிவாறுகி காதலாலிவ னுனக்குலாவியமை யாகின்ற — லலு மாமயில ணுதற்கமுக வம்புலிவருக வருகவே, யமார் பரவுகர புரியனுளமகிழ வம்புலிவருக வருகவே. (க)

இன்னநீமலை வலஞ்செய்வாயிவ னிமைக்குமுன்னி லம்வ லஞ்செய்தோ, னெறிகதிர்க்கிடைவை நீயுமுச்சு டரிலிவனவன்கதி ராழிப்பவன்—மன்னிவாழ்மது முகம்படைப்பையிவன் மறுவிலாவது முகத்தினன், வருமகத்திரு ளொழித்திடாயிவனு மனவகத்திரு ளொழிப்ப

வன்—மின்னராவுகொளு முனைவுநீயிவனவ் விடவராவு ண்மயில் வாகனன், மேனிநீவளர்ந் தழிவையென்றுமி வன் மேனிதானுமழி யாதவ —னன்னதாயிவன் றனக் கொவ்வாயமுத வம்புலீவருக வருகவே, யமரர்பரவுகர புரியனுளமகிழ வம்புலீவருக வருகவே. (உ)

வரிசைகொண்டகுடை நீயதாகவிருண் மாவையூர்ம தனன் வாழ்வையு, மனமகிழ்ந்ததிக மைத்துனச்சரச வ ளமையாலொழிய மாற்றியே—யுரிமைகொண்டவவ ளை னையின்பிடரி லுன்னைவைத்தருளி நாடொறு, முனக்க வன்கவிகை யாயிடும்பதமு முதவினலுமிவ னுதவுவா ன்—பிரியமாயுனை விரும்பிவாவென வழைத்தபேறெவ ர்கள் பெற்றுளார், பெற்றியாலுனது பெற்றியேயினிய பெற்றிமாதவர்கள் காணுதற்—கரியகந்தன்விளை யாடுத ற்கமுத வம்புலீவருக வருகவே, யமரர்பரவுகர புரியனு ளமகிழ வம்புலீவருக வருகவே. (ஊ)

பத்தியாயுலகை வட்டமிட்டுவரு பரபரப்பினையு மா ற்றுவான், பழுதுபட்டகலை முழுதுமுற்றிலகு பண்பை யுந்தருவ னீதலா—னித்தமாயுடல முற்றிடுங்குறையை நீக்கியேகருணை நோக்குவா, னின்மலர்க்கருளு மூல மந்திரமு நின்செவிப்படவுமொழிகுவான்—றத்துசாக ரம தற்குளுஞ்சனன சாகரத்துமுகி யாமலே, தண்டை கிண்கிணிச தங்கைகொஞ்சுமிரு தாமரைப்பதமுமுத வுவா—னத்தன்வேலன்விளை யாடுதற்கமுத வம்புலீவரு கவருகவே, யமரர்பரவுகர புரியனுளமகிழ வம்புலீவ ருகவருகவே. (எ)

எண்ணிலாதபல புண்ணியங்களை யியற்றிநெஞ்சிலி ருளற்றபே, ரேத்தியேத்தியவ ரோலமிட்டலறி னுங்கி

டைக்கவரிதானவன்—விண்ணினூடுமறு வாயவுன்னை வடி வேலெடுத்தகரநீட்டியே, வேதவாய்மழலை யாலழைத்திடவு மேவிடாமலுமிருப்பதோ—பண்ணினுன் மதுர மாகவேகவிதை பாடுவார்வினைகளோட்டவே, பச்சைமாமயிலி லேறிவந்திருப தாம்புயந்தனையளித்திடு—மண்ணல்வேலன்விளை யாடுதற்கமுத வம்புலிவருக வருகவே, யமரர்பரவுகர புரியனுளமகிழ வம்புலிவருக வருகவே. (நி)

பங்கயாசனனை வேதமுண்பொருள்வ ராமைகண்டு முடி குட்டியே, பாததாமரையி னுலுதைத்திடர் படுத்தி வன்சிறையில் வைத்தல்போ—லிங்குநீயினிவ ராதிருந்திடி னெழிற்கரங்கொடு பிடித்துன்மே, லெழுந்தகோ பமொடு குட்டிவன்சிறையி லிடுவனின்றுனையு முண்மைகாண்—கொங்குலாவுமிரு தண்டையங்கழல்கள் குந்திநின்றுவிரல் சுட்டியே, கொஞ்சுவாய்மழலை மொழியினுலிவ னழைத்தசால்புகுறை யாமலே—யங்கைவேலன்விளை யாடுதற்கமுத வம்புலிவருக வருகவே, யமரர்பரவுகர புரியனுளமகிழ வம்புலிவருக வருகவே. (சு)

பந்தநீகொள விருந்தவஞ்சகர் பதுங்கவேபொருத் தறிவையே, பணிநாகரரி நம்பர்வந்தடி பணிந்தசால்பு தனை யறிவையே—யுந்திநீமுழு கிடும்பெருங்கடலை யுண்டவேலுடைய தறிவையே, யுன்கணேறுமர வங்களஞ்சிட வுறிஞ்சுதோகையுள தறிவையே—யிந்தநேரமி வனண்புகொண்டிபகை யின்றியேயினிமை யடைய லா, மெம்பிரானெமையு மன்பர்தங்களொ டிணங்கவே கருணை யருளினை—னந்தணீர்வயல் விரிஞ்சைபம்பதி யமர்ந்தவாறு முக முடையவே, லம்புலிவருக வென்ற னன்கடிகி யம்புலிவருக வருகவே. (எ)

எண்டிசாமுகரு மிங்கிதம்புகலு மிந்த்ரதேவனுல க
ருளவோ, வென்றுநீகுடை யெனும்பெரும்பதவி யின
பவேளுலகை யருளவோ—வண்டுபோலுமுரு நந்தனு
ங்கிதனில் வந்தவேதனுல கருளவோ, மந்த்ரவேதமு
னி தந்தையென்னவரு மஞ்சுரூபனுல கருளவோ — ச
ண்டவீரனொ நண்பனொன்பதின்மர் தங்களோடுறவு ந
ல்கவோ, தண்டைசேரிருப தங்களுன்சிரசு தங்கவோ
வெதுவு மறிகிலே—மண்டர்சூழ்திரு விரிஞ்சையம்பதி
யமர்ந்தவாறுமுக முடையவே, ளம்புலீவருக வென்ற
னன்கடுகி யம்புலீவருக வருகவே. (அ)

வன்பராவுனை விழுங்குதுன்பறு மருந்துநேயமுட
னுதவவோ, மங்கைபாகர்பெறு மந்தமந்தி மகிழ்ந்து
நின்செவியின் மொழியவோ—வுன்சரீரமரு வுங்களங்க
ம தொழிந்துதிரவருள் புரியவோ, வுன்றன்மேனியில
குங்கவின்கொள வொடுங்குகூனிமிர நினையவோ—வி
ன்பவாரமுத மும்பர்பங்கினிலி ருந்தமாபலனை யருள
வோ, வெங்களாலிவை தெரிந்திலேம்புகலி னின்றுநீ
பெறுவ தென்கொலோ—வன்பர்சூழ்திரு விரிஞ்சைய
ம்பதி யமர்ந்தவாறுமுக முடையவே, ளம்புலீவருகவெ
ன்றனன்கடுகி யம்புலீவருக வருகவே. (கூ)

இஞ்சிசூழருணை யுன்பனன்புற வியம்புபாடல்களை
யறியலா, மெங்கள்கீரன்மொழி யும்பசுந்தமிழெ னுஞ்
சொல்வேதநிலை தெரியலாம் — விஞ்சுசூர்களை வென்
றிடுந்திறல் விளம்புகாதைகளை வினவலாம், வெந்தபூதி
யை யணிந்ததொண்டர்கள் விரும்பவேகவிதை புகல
லாம்—வஞ்சமோடவரு தண்டையங்கழல் வணங்கலா
முலகை வலமதா, வந்துசூழ்வதிலு மின்றிவந்தனை வல
ஞ்செய்தேபிறவி யொழியலா—மஞ்சமார்வயல் விரிஞ்

சையம்பதி யமர்ந்தவாறுமுக முடையவே, எம்புலீவ
ருக வென்றனன்கடிகி யம்புலீவருக வருகவே. (கo)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

சிற்றிற்பருவம்.

வேதன்மூடியிற் பதிங்கமலம் விண்ணோர்சிரத்தி ல
ணிபதமம், விசயமயின்மே லெழுமுளரி விமலர்பு
யஞ்சேர் திருக்கஞ்சஞ்—சாதமொழிக்கு மம்புயமெங்
தலைமேலிருக்கும் புதுமளினங், தண்டைசதங்கை கிண்
கிணிசேர் சலசம்புயியிற் படலரமோ—காதம்புதிய ம
ணங்கமழுங் கடம்பாமுருகா கதிர்வேலா, கந்தாகுமரா
பெருங்கருணைக் கண்ணுவண்ணு கதியருளே—யாதண்
களப மணிமார்பா வடியேஞ்சிற்றி லழியேலே, யரசே
விரிஞ்சைப் பதிவாழ்வே யடியேஞ்சிற்றி லழியேலே.

வங்கத்தரங்கக் கடலன்று மாயக்கிரவுஞ்ச கிரியன்
று, வானத்துயரு மாவன்று மருவாருறையும் பதியன்
று—துங்கத்தசுரர் மூடியன்று தொலையாவமரர் சிறை
யன்று, துரகக்கொடுமா முகியன்று தொழுவார்பிறவி
த் துயரன்று—சங்கத்தவனுமலரோனுந்தவளாசலத்தி
ல வருவோனுஞ். சரணஞ்சரண மெனும்புதிய தண்
டைமுழங்குஞ் சிறுதாளா—லங்கைக்கதிர்வே லுடை
யோனே வடியேஞ்சிற்றி லழியேலே, யரசேவிரிஞ்சை
ப் பதிவாழ்வே யடியேஞ்சிற்றி லழியேலே. (உ)

பூக்தேயுலகம் புரப்பாளைப் பொய்யர்தமக்குக் கரப்
பாளைப், பொழியுங்கருணை விழியாளைப் பொற்புங்கற்பு

மழியாளைக்—கூத்தையுடையா னிடத்தாளைக் குவிமா முலைமேல் வடத்தாளைக், குறையாவெண்ணெண் கலை யாளைக் குளிர்சேரிமய மலையாளை — மாத்தேவருக் குந் தெளியாளை வணங்குமடியார்க்கெளியாளை, வரை யைச்சிலையா வளைத்தாளை மறைக்குமுதலாய் முளைத் தாளை—யாத்தேயாத்தே யெனுங்குமரா வடியேஞ்சிற் றி லழியேலே, யரசேவிரிஞ்சைப் பதிவாழ்வே யடியே ஞ்சிற்றி லழியேலே. (கூ)

பொய்யாவுளத்தி விருப்பாரைப் பொலியுங்கயிலைப் பொருப்பாரைப், பொருமாகரியை யுரிப்பாரைப் புர மூன்றெரிய வெரிப்பாரைக்—கையார்மறிமான் மழுவா ரைக் கமலாலயன்மா றெழுவாரைக், கனகசபையி ன டிப்பாரைக் கங்கைமுடியின் முடிப்பாரை—மையார்ம லத்தை யொழிப்பாரை மதவேளெரிய விழிப்பாரை, ம றவிருடுங்கப் பொருவாரை வழிக்குத்துணையா வருவா ரை—யையாவையா வெனுங்குமரா வடியேஞ்சிற்றி ல ழியேலே, யரசேவிரிஞ்சைப் பதிவாழ்வே யடியேஞ்சி ற்றி லழியேலே. (சு)

இம்மாநிலத்தை யளக்தானை யிகன்மாமருதம் பிளந் தானை, யிலங்காபுரியைக் கெடுத்தானை யிமையோர்க்க மிர்தங் கொடுத்தானைக்—கைம்மாவிடுக்கண் களைந்தா னைக் ககனமளவா வளர்ந்தானைக், கன்முல்விளவை யெ றிந்தானைக் கருதாருளத்திற் பிரிந்தானை — மைம்மாசு ணத்தி னடித்தானை வருபாரதத்தை முடித்தானை, வைய மனைத்து மயின்முனை வடத்தினிலையிற் றுயின்முனை— யம்மானம்மா வெனுங்குமரா வடியேஞ்சிற்றி லழியே லே, யரசேவிரிஞ்சைப் பதிவாழ்வே யடியேஞ்சிற்றி லழியேலே. (எ)

வேறு.

பசுமைமலர்த்கட களினமலித்திரள் படிவவனற்சொ
ரி கரிபோலே, பதுமநிறத்தினை யறுபதமுற்றுடல் பவ
ளமெனத்திகழ் வயலூடே—கரியமதுப்பொழி குவளை
களைச்சில களைகளெனக்களை மடமானர், கரகமலத்தி
னில் வளையொலிசித்தசர்களை களுரைத்தருள் கரணூரா
—நிகியினிருட்கண மெனுமுருவத்தொடு நிலவினையி
ற்றிருரு முயர்வான்மே, னிலவியசெக்கை யனையமயி
ர்த்தலை நிரையொடுமுக்கிர முடனேசூ — முசுரைவெ
ட்டிய வயிலுளசைத்தல வடியவர்சிற்றிலை யழியேலே,
யழகொழுகப்புழு கொழுகியபொற்புய வடியவர்சிற்றி
லை யழியேலே. (சு)

முதல்வரிணைப்பத மலர்கொடரக்கிய முனிவைரினை
த்தின மலையாதே, மொழிதியெனக்கழல் செறியுமலர்
ப்பத முளரிதனைப்பணி குதல்போலே—கதிர்மணியி
ட்டிழை கனகமதிற்றிகழ் கனவிடபத்தினை யடியூடே,
ககனமுகட்டினி லிருளையகற்றிய கலைமதியுற்றெழு க
ரணூரா—தகிபருகச்சுதர் மலரிலிருப்பவர் சனகரகத்தி
யர் புலவோர்மா, தவர்கள்வசிட்டரொ டடியர்துதித்தி
ரு சரணம்விருப்பொடு தொழவேதா—னதிமதரத்து
டன் மறைசொலுமுத்தம வடியவர்சிற்றிலை யழியேலே,
யழகொழுகப்புழு கொழுகியபொற்புய வடியவர்சிற்றி
லை யழியேலே. (எ)

மழையுறுவத்திரு வுருவுபடைத்தவன் மலரவனுற்றி
டு மிடமோவார், மதலைதனக்குயர் முடியைவளைத்தரு
ள் வரதர்வழிக்கொரு துணையாவோர் — கழலெழுதற்
கவர் வருபொழுதற்றிடு கலையகலப்பயி லுதல்போ
லே, கரியமணிக்கிர ணமுமதிற்கன கமுமருவித்திக
ழ்கரணூரா—பழனிதிருத்தணியருணாசலைக்கழிபழ

முதிர்பொற்கிரி யிலைவாயோர், பணிமலைசற்குரு மலை
யொடுபற்பல பனிமலையுச்சியி லுறைவோனே, யழ
லொளிகக்கிய வயிலுளகைத்தல வடியவர்சிற்றிலை யழி
யேலே, யழகொழுகப்புழு கொழுகியபொற்புய வடிய
வர்சிற்றிலை யழியேலே. (அ)

இரவிரதத்துள புரவிகடத்தளி யிடவுயர்பொற்றிரு
மதின்மேலே, யெழுதியசித்திர விடபமணிக்கொடி யி
மையர்கற்பக மலருடே—பொரவதனிற்பரி மளநறவத்
துளி புயலுலகத்தருண் மழைபோலே, பொழியவய
ற்றிகழ் பரிர்கடழைத்தெழு புகழைவிளக்கிய காணா
ரா—வரமருளித்தன கடியவருச்சியின் மலரடிவைத்த
கி மதமாரு, மருவலர்முப்புர மெரியநகைத்தடன் மத
னையெரித்தவவ் வரையாரு மரன்மகிழப்பொரு ளுரை
செயுமுத்தம வடியவர்சிற்றிலை யழியேலே யழகொழு
கப்புழு கொழுகியபொற்புய வடியவர்சிற்றிலை யழியே
லே. (கூ)

மழலைதனிற்சிவ மறைகண்முழக்கியு மணியைமுழ
க்கியு மணிவாயால், வயிரைமுழக்கியு மொருகுழலப
ற்றியு மகிழ்பறைகொட்டியு மணியாலே—யிழையுமலர்
ப்பத நடனமியற்றியு மிசைகள்பயிற்றியு மகிழ்காளை,
விரதமெனக்குல வரையைநடத்தியு மிறைவர்களிப்பது
பெறவேற்பார்—முழுதுமடிக்கடி யுலவியமைக்குல மு
தலைநடத்தியு மருவார்மேன், முனியுமருப்பிரு பிறை
திகர்க்கைக்கய முனியைநடத்தியும் விளையாடி—யழகிய
பொற்கர புரியுறையுத்தம வடியவர்சிற்றிலை யழியே
லே, யழகொழுகப்புழு கொழுகியபொற்புய வடியவர்
சிற்றிலை யழியேலே. (கo)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

சிறுபறைப்பருவம்

சந்தாசலம்பொருவு முலேசுமந்திழையெனத் தளரு
மிடையிந்திராணியுந், தடவிகடகரடகவ ளத்தவள
வொருநாலு தந்தவிறன்மாவுமணியு—மைந்தாருவுஞ்
சுரபி யும்படைத்திந்திரனு மம்மனேபெறக்கருணேயா,
லங்கைவேல்கோலாக வசுரர்முடிபந்தா வடித்துவிளே
யாடுமரசே—யெந்தாயெனப்பரவு தொண்டர்முடிமீதி
லணி யிருபாதமலர்கமழவே, யின்பமடவார்களுங் குழ
லினுங்காமமுறு மிளேஞர்தங்கொண்டைகளினுஞ்—
செந்தாழையின்புது மணங்குலவுகானூர சிறுபறை
முழக்கியருளே, திருமழலேமொழியினமறை பலபலமு
ழக்குமுனி சிறுபறைமுழக்கியருளே. (க)

சங்கியினுமந்தியினு முள்ளும்புறம்பினுஞ் சாகாவர
ம்பெற்றுமூ, தண்டமுழுதுந்தனது பெயர்நிறுவுமிர
ணியன் றன்னேகரசிங்கவடிவாய்—வந்துமணிவாசம் ப
டிக்கிடைகிடத்திமணி மார்புகீண்டொளியுகிர்னன், ம
ணிக்குடல்பிடுங்கியுகி ரந்தனேயருந்திய மாமேகவண்
ணன்மருகா—வந்தணருளைத்தருளு மாகமமுழக்கமு
முகமெனுமொழிவனிதைமா, ராடலின்முழக்கமும்
பாடலின்முழக்கமு மடியார்களோதியருளுஞ்—செந்த
மிழ்முழக்கமு முழங்குகானூராளி சிறுபறைமுழக்கி
யருளே, திருமழலேமொழியினமறை பலபலமுழக்கு
முனி சிறுபறைமுழக்கியருளே. (உ)

மத்தமதவாரணந் தன்னிழலேமாறென வளர்ந்துவி
சையிற்பாயமேன், மண்ணுருவியரவின்மணி தெரிதர
லுமற்றகன் மருப்பிற்சொரிந்தமுத்தும்—புத்திரவியுட
னமிய மொத்தடவியிருளெலாம் போகத்துரந்துதிக
முப், பூமகண்முலேக்கணியு மாரவடமெனவருவி புர

ளுமலையாளுமிறைவா—சத்தகிலவழுவாம லத்தமொரு சற்றுந் தளர்ந்துவெளிறுமலமுதங், தழுவுபதிஞமூயிர ங்திருப்புகழெனுந் தமிழ்மாலைசாற்றியருளிச்—சித்தி பெறுமருணகிரி நாதர்புகழ்கரனார சிறுபறைமுழக்கி யருளே, திருமழலைமொழியின்மறை பலபலமுழக்கு முனி சிறுபறைமுழக்கியருளே. (கூ)

மந்தமாருதரதமு மந்திமாலைக்களிறு மாசுகமெனுங் துரகமும், வளர்மதிக்கவிகையுந் திகைகடற்படகமு மைக்கோகிலக்காளமுங் — கந்தமாமோலையுஞ் சுரிகை யும்பெற்றிருரு கரும்பணிசுரும்புசிலைகாண், கமழுமல ர்வாளிகொண டுலகமேழும்பொருத காமமதவேணமை த்துனு — தந்திவாழ்பழனியங் கிரியினும்வெள்ளிமலை தன்னிலும்மருணதனிலுஞ்,சந்ததமுமுக்குவளை மலர் மருத்தணியாச் செருத்தணிதிருத்தணியினுஞ் — செந் திமாநகரினும் பயிலகுமரகரனார சிறுபறைமுழக்கிய ருளே, திருமழலைமொழியின்மறை பலபலமுழக்குமு னி சிறுபறைமுழக்கியருளே. (சு)

மலையைப்பிளந்தசுரர் மார்பைப்பிளந்துதிரை வாரி நீருண்டுமகவான், வாழ்வைப்புரந்தமரர் துன்பந்துர ந்துவட வரைபோலவருதாரகன்—றலையைப்பிளந்துபந் தாடிவேதாளபூ தங்கள்பசிதன்னைமாற்றிச், சண்டனணு காமலடி யாரிடர்துணிக்குமொரு தனிவேலெடுத்தவர சே — யலையிற்பொலிந்துவரு பாலியினில்வரும்வளை யாயிரம்வலிபிறிநு,முலைவிழமுட்டிவிளை யாடிவயலோ டிமிக வாரவாரித்துமதவேள்—சிலையைத்தடிந்துவந் துலவுகரனாராளி சிறுபறைமுழக்கியருளே, திருமதலை மொழியின்மறை பலபலமுழக்குமுனி சிறுபறைமுழக் கியருளே. (நி)

வேறு.

அகிர்த்திடுகுரல்களு நெறித்திடுபுருவமு மழற்பொ
றிவிழிகளுமா, யதுக்கியசிறுபிறை யெயிற்றெளிகளு
நடை யதிர்ச்சியுமணியணியாய் — விதிர்த்திடுபடைக
ளு மழைப்புயலுருவமு மிகுத்துளதலைக்களுமாய், வெ
ளிப்படுமசுரர்கள் சிரக்குவைபலபல விழப்பொருமொ
ருசதுரா — பொதுத்தனிலழகுற நடித்தவர்மழுவது
பொறுத்தவர்குறுகலர்வாழ்ப், புரத்தினையெரிபட நகை
த்தவர்மதனுடல் புகைத்தவரமர்களான் — முதுக்கொ
டிவிடங்கர் மிடற்றினரருள்குக முழக்குகசிறுபறை
யே, முழுத்தமிழ்தெரிகர புரத்தறுமுகமுனி முழக்
குகசிறுபறையே. (சு)

அருக்கனேமுறுவலே யுதிர்த்தெழுமதியுட லரக்கிய
வெமனிருதோ, ளறுத்தொருகுயில்கொடி கரித்தலே
விழவிழ வடித்தமரர்களுடனே — தருக்கொடுமகமது
வளர்த்தவன்மணிமுடி தறித்தவனகமனேயா, டரித்திடு
குழையற வடித்தடியவர்வினை தவிர்த்திடுமவர் துணைவா
— நெருப்பெழவிழிகளே விழித்தலகைகள்பல நிருத்த
மிடவெழுபார், நெளித்திடவருநடை படைத்திடுமசு
ரர்க ணினைக்குவை குவைபடவே — முருக்கியவடியயி
லெடுத்தருளியகையின் முழக்குகசிறுபறையே, முழு
த்தமிழ்தெரிகர புரத்தறுமுகமுனி முழக்குகசிறுப
றையே. (எ)

கருப்புவிலுடையவண் மலர்க்கணையுடையவள் க
டைக்கணிலருளுடையாள், கருப்புகுவினையினை யெடு
த்தவளடியவர் களித்திடவரமருள்வா — ளருப்புறுமணி
முலே யுறுத்திடவமலனே யணைத்தவளுலகமெலா, மளி
ததவளுயிர்களே வளர்த்தவடிநிபுர மழித்தவளிடரடை

யா—டிருச்சடைமிசைமதி முடித்தவள்பலகலை தெரித்தவளரியறியாள், சிறப்புளவரமது பெருத்தவளிடையது சிறுத்தவணிறையழியாண் — முருக்கிதழுமையவளித்தருள்குருபர முழக்குகசிறுபறையே, முழுத்தமிழ்தெரிகர புரத்தறமுகமுனி முழக்குக சிறுபறையே. (அ)

இளைத்திடுபவவினை குளித்திடுமடியரை யெடுத்திடுமொருபுணையா, யெதிர்த்திடுமசுரர்கண் முடித்தலையெனுமதி விடித்திடுமொருபடையா — யளப்பறவயனெழுதெழுத்தெனுமலினம தகற்றிடுமொருகலையா, யடித்தலங்கினபவ நிரப்பறவங்கி யளித்திடுமொருதருவாய்—விளக்கியவடியயி விருக்குமிளியவெழில் விரித்தொளிவிடுமுறையாய், விளைத்தெழுகடுகடை விடைச்சிவனுமையவள் விழிக்கணிமதுமலராய்—முளைத்தமரர்கள்பய மொழித்தருளியகையின் முழக்குகசிறுபறையே, முழுத்தமிழ்தெரிகர புரத்தறமுகமுனி முழக்குகசிறுபறையே. (கூ)

வடித்திடுகணையென மணிக்குழைகறுவிய மதர்த்திடுமிருவிழியான், மணத்தொளிபலவிடு மகிற்புகையிடுமது மலர்ச்செருகியகுழலா—லடிக்கடிவிடாறி வினைத்திருடிகள்கள வடக்கியமுறுவலினு, லடற்சிலைமதன்முடியசைத்திடலதுவென வசைத்திடுமலைமுலையா—லெடுத்திருகனதன முளைப்புடனனுகின மிளைத்திடுகொடியிடையா, விழுக்குடைமயலினை யளிப்பவர்வசமுறுமெமக்குள விடர்கெடவே — முடிச்சடையுடையவனளித்தருள்குருபர முழக்குகசிறுபறையே, முழுத்தமிழ்தெரிகர புரத்தறமுகமுனி முழக்குகசிறுபறையே.

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

சிறுதேர்ப்பருவம்

மாதரிருவிழியாகு மம்புக்குமதனவேள் வாளிக்கு நடுவாகியே, மாலாகுமருணகிரி நாதரருணைச்சிகரி வடவாசலிற்பயிலகம்—பாதமலர்பாடுநீ யென்னவடியே னுமெப் படிபாடவென்றவளவிற், பத்திதருமுத்திரகை யத்தியிறைவாவெனப் பாடென்றுசொல்லியியலாற்— பூதலமுமெங்கோயு மீடெறாவிற் பொறித்தவருளைத் தகவிதைப், புத்தமுதுபன்னிரு செவிக்குநிறையக்கொண்டு போதமுனளித்தருளினிற்—சீதளமலர்ச்சரண முதவுகரனூராளி சிறுதேருருட்டியருளே, செயசெயெனவமரர்தொழ வசுரர்மூடிசிதறுமுனி சிறுதேருருட்டியருளே. (க)

ஓராயிரம்பேரை வருட்த்திலொருகாளி லுண்கின்ற கற்கிமுகிதா, னென்றுகுறையாகியிடுமன்றுகீர்வர வோடிப்பிடித்தவனையுங் — காராயகுன்றத் தடைத்துரியகிக் கடன்றுறைமுடிக்கவகலக், கருதிமுருகாறவ ருளைத்தருளநீலக் கலாபமயிலேறியணுகிப் — பேரான குன்றந் திறந்திவுளிமுகிபைப் பிளந்துகீர்தமையும், பெரியவேல்கொண்டுபுனல் கண்டுசூளைமூழ்கிப் பிரான்முகலிகியின்மேவச்—சீராயதிருவருள புரிந்தக ரனூராளி சிறுதேருருட்டியருளே, செயசெயெனவமரர்தொழ வசுரர்மூடிசிதறுமுனி சிறுதேருருட்டியருளே. (உ)

மாகதக்கொடிதவஞ் செய்ததையுங்கரிய மாயவன் புரமானதும், வருகரனருச்சித்த துஞ்சதுமுகக்கடவுண் மாபூசைசெய்தவாறு—மொருவழித்துணையான தும்பரமர்பாகதிக் குதவியதுமொருபாலனுக், குச்சியை வளைத்ததுவு முத்தமவசிட்டருக் கோதியருள்புரியுமுருகா—வரதனக்கடலிலெழு மாயிரங்கதிருடைய வாதவர்தமக்கழகதா, யலர்தூவிமேன்மே லருகியமளிப்ப

தென வாகாயமுகடுமுட்டத் — திரைவிரிந்தெழுபாலி நதிவருங்கரணூர சிறுதேருருட்டியருளே, செயசெ யெனவமரர்தொழ வசுரர்முடிசிதறுமுனி சிறுதேருரு ட்டியருளே. (கூ)

வண்டியிருசுடராக வையகந்தேராக மாவாகநாலும மறையும், வானவர்களீனவரும் பரிவாரமாகமலர் வாழ்ப வன்பாகனைக் — கொண்டுமலைசிலையாக வரவுநாணுக மால் கோலாகவழலாகவாய், கோலிறகுசாலாக வெந்து மூப்புரமெரி கொளுந்தவெய்தவர்குமரனே—யண்டம ளவாகுமணி மேடைதனிலேறிமல ரளகமுகிலசையவ ழகா, யாரவடமசையவதி பாரமுலையசையவிடை ய சையமேகலைகளசையச்—செண்டுவிளையாடிமட மாதர் பயில்கரணூர சிறுதேருருட்டியருளே, செயசெயென வமரர்தொழ வசுரர்முடிசிதறுமுனி சிறுதேருருட்டி யருளே. (ச)

பந்தாடுமடவார்கள் விளையாடுதற்கேறு பாதசெம்ப ஞ்சுபதியப், பரியநிக்கிலமேடை பவளமாமேடையாய்ப் பரிதியின்கிரணமெனவே—நந்தாவெறிக்கவது கண் டிதழ்க்கதவுதனை களினந்திறக்கவதிலே, நறவொழுகி யோடியிட வயலின்பரப்பெலா நதியின்ப்ரவாகமாக— வந்தாரவாரமொடு பாலாறுடன்புகுத வாழையின்கனி கள்சிதறி, வரமள்ளர்தேனுடன் பால்பழம்புசியுமென வழிவந்தவர்க்கருளியே — சிந்தாகுலம்பொடி படுத்தி யருள்கரணூர சிறுதேருருட்டியருளே, செயசெயென வமரர்தொழ வசுரர்முடிசிதறுமுனி சிறுதேருருட்டிய ருளே. (ரு)

வேறு

விழிததும்பியபுனலின் முழுகிவந்தனைபுரியு மடி யார்களுக்குமுதமே, வினையெனுங்குவடுபொடி படஉட

ம்பயிலுமொரு மயில்வாகனக்கடவுளே—பழிசுமந்திடு மசுரர் முடியொடுந்தலைசிதற வடிவேலெடுத்தவரசே, பவமெனுங்கடலில்விழு மெனையுமன்பெனுமினிய கையேறவிட்டபுனையே—பொழிகரும்புயலனைய வினியவம்பிகைமுலைகள் பொழிபால்குடித்தகளிறே, புதிய செங்கமலமலர் சரவணந்தனின்மருவி விளையாடியிட்டவரசே—செழியசெந்தமிழ்குலவு திருவிரிஞ்சையின்முருக சிறுதேருருட்டியருளே, சிவசிதம்பரநடன மிடுதிகம்பரர்குமர சிறுதேருருட்டியருளே. (சு)

கனககிங்கிணிகள்கல கலகலென்றொலிபரவு மிருதாமைச்சரணனே, கடைபடுங்கடலிலெழு மமுதமுண்டவர்பரவு கருணைகாக்குஞ்சிலே—மனமுமைம்புலனுமொரு வழிசெலும்படியெனது மலமாசொழித்தகுகனே, வளர்சிலம்பிடைபொழியு மழையெனும்படிசொரியு மதவாரணற்கிளையனே—தனனதந்தனனவென வளிமுழங்கியகுவளை மணமாளிகைச்சதுரனே, தபனசெங்கதிருதய முலகறிந்துணரமுரல் சரணயுதக்கொடியனே—தினகரன்சசியளவு திருவிரிஞ்சையின்முருக சிறுதேருருட்டியருளே, சிவசிதம்பரநடன மிடுதிகம்பரர்குமர சிறுதேருருட்டியருளே. (எ)

முதியவம்புயனையொரு குடிலையின் பொருள்வினவி மூடமீதுகுட்டுமுனியே, முழுதுமன்பர்களிதய மலர்குளிர்ந்தலரவரு முதிராதபொற்பரிதியே—கதிபெறும்படியுலகு லுயிரெனும்பயிர்தழைய வருணீரொழுக்குமுகிலே, கயிலையம்பிகைமுலுக வதரமஞ்சனமுதவு மபிஷேகபொற்கலசமே—புதியசெந்தமிழ்மணமு மறையுடன்கலைமணமு மழியாமலர்க்குமுதனே, பொதியவந்தணனுருகி யுருகிவந்தனைபுரியு மறுமாமுகக்குழவியே—சிதைவிறண்டலைமருவு திருவிரிஞ்சையின்முரு

க சிறுதேருருட்டியருளே, சிவசிதம்பரநடன மிடுதிக
ம்பரர்குமர சிறுதேருருட்டியருளே. (அ)

உலகமுண்டிலகுகனே யொருபகந்தனிலளவு செயு
காரணற்குமருகா, வுதயசெங்கதிரனைய சரணபங்கய
மெனது முடிமேலழுத்துமுதல்வா — சலதிவெந்தலறி
யிட வரைபிளந்திடியவடி யயிலேவிவிட்டகலிவா, தவ
மெனும்பெருமையுள குறியவன்பெறவினிய தமிழ்நூ
லுரைத்தசதுரா—மலையினும்பெரியதன வினியவஞ்சி
யர்பயிலு மணிமாளிகைச் சிகரமேன், மரகதஞ்சிறுப
கலி லொளிதயங்கிடவகனே யிருண்மாலையுற்றதென
வே — சிலைமதன்சமர்குலவு திருவிரிஞ்சையின்முருக
சிறுதேருருட்டியருளே, சிவசிதம்பரநடன மிடுதிகம்
பரர்குமர சிறுதேருருட்டியருளே. (கூ)

அசுரெகிழ்ந்துருகியிரு விழிசலம்பொழியவுன திரு
தாடுதிக்கவறியே, னனுகினங்கலைமறைக ணெறிநடங்
திடல்வழுவி யகிபாதகத்தைகினைவே—னிகபரந்தனைய
றியு மலிவறிந்திடுமுனிவ ரிடநாடியுற்றுமருவே, னெ
னையுமன்பினர்களுட னடிமைகொண்டருளியெழு பவ
வேரொழிக்குமரசே—மகரகுண்டலமசைய முலைசுமந்
திடையசைய மலைபோலிருக்குமுலைமேன், மணிவட்
ங்களுமசைய களபகுங்குமவிரக மடவார்நிருத்தமிட
வாழ்—சிகரமண்டபமருவு திருவிரிஞ்சையின்முருக
சிறுதேருருட்டியருளே, சிவசிதம்பரநடன மிடுதிகம்
பரர்குமர சிறுதேருருட்டியருளே. (கo)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்

முற்றுப் பெற்றது.

வ

கணபதிதுணை.

வயித்தீசுவரன்கோயில்

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

தருமபுரவாதீனத்தைச்சேர்ந்த

காசிமடாலயம்

குமரகுருசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

வ.வு. புஷ்பரதசெட்டியாரால்

தமது

சென்னை

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1871.

வயித்தீசுவரன்கோயில்

முத்துக்குமாரசுவாமி

பிள்ளைத்தமிழ்

காப்புப்பருவம்

கணபதிதுதி.

பொன்பூத்த குடுமிப் பொலங்குவட் டிமவான் பொ
ருப்பிற் பிறந்து தவளப், பொழிநில்வு தவழுமுழு வெ
ள்ளிவே தண்டத்தொர் போர்க்களிற் றைப்புணர்ந்து,
—தென்பூத்த பாட்டளி துதைந்தபைங் கூந்தற் செழும்
பிடி பயந் தளித்த, சிறுகட் பெருஞ்செவிக் குஞ்சரக்
கன்றிரு செஞ்சரணை யஞ்ச லிப்பா,—மின்பூத்த
சிற்றிடைப் பேரமர்க் கட்சுடவுள் வேழங் கடம்பமி ப
டா, வெம்முலைக் கோங்கொண் டுழுதுழு துழக்கமு
கை விண்டுதண் டேன் றுளிக்குங்,—கொன்பூத்த தெ
ரியற் கடம்பணி தடம்புயக் குரிசிலைப் பொருசி லைக்
கைக், குமரனைக் கந்தபுரி முருகனைப் பரவுமென் கொ
ழிதமிழ்க் கவி தழையவே.

மகாவிஷ்ணு.

பூமேவு கற்பகப் பொங்கரிற் செங்கட் புலோமிசை
வளர்த்த கும்பப், புணர்முலைக் களியானை விசோயாபி ப

ன்னிரு பொருப்பனை விருப் பனைத்துங், — கோமேவு சாரற் குறச்சிறுமி மேல்வைத்த குழகனைக் கழகந் தொறுங், கொத்துமுத் தமிழ்மொய்த்த கந்தபுரி முத்துக் குமாரனைத்தனி புரக்க,—தேமேவு கடவுட் பொல ங்கிரி திசைக்கரிக டிகிரி கிரிகுல கிரியொடுங், திரியத் திரித்துமத் தெறியத் தடங்கடற் றெண்டிரை முகட்டு தித்த,—பாமேவு மதுரம் பழுத்தமுத மொழுகும் பசு ங்குதலை மழலையஞ் சொற், பங்கயச் செல்வியிரு கொ ங்கைக் குவட்டிவளர் பச்சைப் பசுங் கொண்டலே. (க)

வயித்தியநாதர்.

வேறு.

ஒருபுறத்துமர கதமிமைப்பவொளிர் மாமேருமற் றொரு மேருவைச் சாய்த்தென, வுலகளக்க நிமிர்வட பொருப்பையொரு தோளால்வளைத்த பிரானையத் திக் கன, லுமிழுமுக்குமிழ யிறிரித்துவரு வாய்வாண்ம ழுப்படை வீரனைப் பார்த்தனை, மிடலுமற்றொழிவி னறவினைத்துமெதி ரோடாதுடற்று கிராதனைக் கூக்கு ரல்,—விரிகடற்புட்வி முழுதுணச்சமையு மோர்காளை கட்டுபிர காபனைக் கார்க்கடு, விடமெடுத்தரிய திருமி டற்றிலிடு காமாரியைக் கவுமாரியைப் போற்றிரு, வி ழிமுனிற்கும்வடி வழகுடைக் கடவுண் மாமேகினி க்கு மணாளனைச் சூக்கும, வெளியினிற் பரமநடநவி ற்று திறல் வேளுர்வயித்திய நாதனைப் போற்றுதுங், —குரவுசெச்சையொடு நறவுயிர்ப்பவிரி தேனுறுவட

டெழு மார்பினைப் பேய்த்திரள், குரவையிட்டவுணர் தடிசுவைத்திடவொர் கூர்வேல்விடுத்த குமரனைப் பார்ப்பதி, குமரனைச்சமரி லுருமுகக் குளிறு காலாயுதக்கொடி யாளனைக் கோட்டிய, குறுநகைக்குமன முருகவெற்பவர்த மானெமிமற்பொரு தோளனைத் தாக்கிய,—திரண்மருப்பினமர் பொருகளிக்கடவுண் மாயினையப்புணர் காளையச்சாற்றிய, செழுமறைப்பொருளி னுவாவிரித்துமெனும் வேதமுடித்தலையின் மோதகைக் காய்ப்பொடி, திருவடித் துணையின் முடிபதித்தவடி வாறுதமெய்ப்புக ழாளியைப் பூட்டிய, சிறைவிடுத்தமரர் குறைமுடித்துதவு சேனபதிப்பெரு மாடனைக் காக்கவே. (உ)

தையனுயகி.

வேறு.

குழையடர்ந்துவடி கணைதுரந்துசெறி குமிழ்மறிந்தவிழி நவ்வியைக் கோட்டொடு, குவிடெறிந்தமுத கலசம்வென்றதட முலைசுமந்தமலை வல்லியைச் சேற்றெளிர், குமுதம்விண்டசுவை யமுதமுண்டினிய கொழுநர்கொஞ்சுசிறு கிள்ளையைத் தாட்டுணைச், சுறுகுதொண்டர்பிழை யறமறந்துபிறர் குணமிகழ்ந்ததக வில்லியைச் சேட்செலு,—மெழுபெரும்புவன முழுதொருங்குதவு மிறைவியென்றுமறை கையெடுத் தார்க்கவு, மிடைநுடங்குமட நடையிளங்குமரி யெனவிருந்தகன கள்வியைப் பூத்தவென், னிதயபுண்டரிக மலரிலெந்தையொடு மினிதமர்ந்தவொரு செ

ல்வியைப் பாற்கரு த, மிருவர்க்கண்களுக்கது வரியசெ
ஞ்சுடரி னிடமருங்குடைய தையலைப்போற்றுது,—
முழுதுணர்ந்துமுணர் வரியதொன்றையொரு மொ
ழியின்விண்டசிறு பிள்ளையைச் சூர்ப்பெயர், முதுபழ
ம்பகையை யறவெறிந்தவுணர் முதறடிந்ததனி வில்
லியைப் பாட்டவி, முரலவிண்டதரு நிழறொழும்பு
சூடி புகவழங்குகொடை வள்ளலைப் போற்றடி, முடியு
மின்றிவெறு வெளிசடந்துமறை முடிவினின்று நி
றை செல்வனைக் காத்தொறு,—மழலைவண்டிதட மலர்
குடைந்துபுது மதுவருந்திறு மல்லிகைச் சேக்கை
யின், வடபசுந்தமிழி னிசைபயின்றபெடை யொடுது
யின்றினிய செவ்வழிப் பாட்டினை, வருவிபஞ்சிபயி
றருமதங்கர்தெரு மாமுன்றுகெடி வைகறைப்போ
ய்ச்செழு, மலரிலஞ்சிதொறு முலவுகந்தபுரி மருவுக
ந்தனையெம் மையனைக் காக்கவே. (கூ)

கற்பகவிநாயகர்.

வேறு.

கடாமுமிழ் கைக்கதக் கிம்புரிக் கோட்டொரு, கரா
சல மிட்டமெய்க் கஞ்சுகிக் கேற்பவோர், —படாமணி
மத்தகத் தந்தியைத் தீர்த்தர்கள், பராவரு கற்பகக் கன்
றினைப் போற்றுதும்,—வடாது பொருப்பினிற் றுன்று
புத் தேட்கெதிர், மனோலய முற்றமெய்ப்பண்பினைக் கா
ட்டிய,—சடானன னேத்தலைச் சங்கமவைத் தாற்றிய, ச
டாயு புராதருட் கந்தனைக் காக்கவே. (சு)

திருமகள்.

வேறு.

மானிறக் கடவுடிரு மறுமார்பி னறவிரி வனத் துழா
யக் காடுமுழு, மாயிருள் வழங்குகன் மிருமாள்கைக்
கந்தண் மணிவிளக் கிட்டு மூட்டாட்,—கானிறைக் கு
ங்கமல வீட்டுக்கு நெட்டிதழ்க் கதவந் திறந்தளித்துங்,
காதன்மை காட்டிங் கவுத்துவத் துடன்வந்த கன்னிகை
யை யஞ்ச லிப்பா,—மீனிறப் புனரியை விழுங்குங் க
டற்றூனே வெள்ளமொடு கள்ள மனமு, மெய்யுமிரு ள
த்திரளு மவுணக் கருங்கங்குல் விடியக் கதிங் குரல்வி
டுக்,—தீநிறக் குடுமிவெண் சேவலையுயர்த்து வண்சி
றைமயிற் பரிநடாத்துஞ், சேவற்ப் பெருமாளே வேத
புரி வருமிளஞ் சேயைப் புரக்கவென்மே. (ரு)

கலிமகன்.

துறைபட்ட மறையவன் செந்நாப் படிந்துகன் சுதை
நிறஞ் சிதை வுறுமே, தொன்மறை கனிந்தூறு மன்ப
னீரூறலிற் றூத்துகி னனைப் புறுமே,—நறைபட்ட வெ
ண்டோட்டு நளினப் பொகுட்டெமது நன்னெஞ் செ
னைக் குடிபுகு, ஞானப் பிராட்டியைச் சொற்கடற் றெள்
ளமுதை நாத்தழும் பத் துதிப்பாஞ், — சிறைபட்ட க
ண்டிறைச் சித்தாமிர்தப் பெருந் தீர்த்தந் திலைக் காடி
ய, செஞ்சுடர்க் கடவுளும் வெண்சுடர்க் கடவுளிற்றெ
ள்ளமுத மயமாகலா,—னுறைபட்ட சுதைநிலவொ டிளா
வயிலு மளவளா யுண்ணச் சகோரம்வெஃகு, மோங்

கெயிற் பரிதிபுரி முருகனைச் சண்முகத் தொருவனைக் காக்க வென்றே. (சு)

பிரமன்.

வேறு.

பைங்காய்க் கமுகு செம்பழுக்காய்ப் பவள முதிர்ப் பக் கதிர்ச்செங்நெல், பனிமுத் துகுக்குஞ் சோணாட் டின் பரிசு பாடி ஞிமிறிரப்பக்,—கொங்கார்த் திறைக்கு நறைக் காந்தள் குறிஞ்சி மலரோ டணிக்தநறுங், கூந் சிப் பெருமாள் வேதபுரி குமரப் பெருமா டனைக் காக்க,—செங்காற் கருங்கட் பைந்தொடியார் சிற்றுய்ப் பாடிப் பெருங் குடியிற், றீம்பா றிருடிக் கட்டுண்டு தி ரியா வண்ணந் திருத்தாதைக்,—கங்காப் படங்கப் பா றயிர்நெ யருந்தேன் கடலோ டிருந்துண்ண, வகிலம் படைத்துத் தனக்கேற வன்னம் படைத்த பெருமாளே.

தேவேந்திரன்.

வேறு.

காஞறு கற்பகக் காவுமூ வுலகுமக் காவென நிழற் று மொற்றைக், கவிகையுங் குண்டிசைக் காவலும் பிற வுமூள காணியுங் காணிபாக,—வாஞறு கோட்டிமய மலைவயிறு வாய்க்கலை மகளுக்கு மணமகற்கு, மரு மகளை யுரியதன் றிருமக ளெனப் பெற்ற மாலடி களைத் துதிப்பாம்,—பாஞறு செஞ்நெற் பசுங்கதிர் கறித்துமெ ன் பைங்குவளை வாய் குதட்டும், பணைமருப் பெருமை மடிமடை திறந்தநீம் பாலாறு பங்கயச் செங்,—தே

ஞ்டன் கடவுள் வாஞறெனப் பெருகு சித்தா மிர்த ஞ் சிவபிரான், சீர்த்திப் பிரதாபங்கர் தினகர புரித்தே வ தேவனைக் காக்க வென்றே. (அ)

சத்தமாதர்கள்.

வே று.

பயிறரு முதுமறை நூலைத் தெரித்தவள் பகைதொ குபுரமெரிமூளச் சிரித்தவள், பனிவளை பகெடு வே லைப் பணித்தவள் படுகடல் புகையெழ வார்விற் குனி த்தவ,—ளெயிறுகொ டிழுதெழு பாரைப் பெயர்த்தவ ளெறிதருசூலிசம் விடாமற் றரித்தவ, ளிடுபலி கொளு மொர்கபாலக் கரத்தின ளெனுமிவ ரொழுவர்க டாளைப் பழிச்சுதுங்,—கயறரி சரவண வாவிக் களைக்குளை கழ லொடு பரிபுர மோலிட் டிடக்கட், களிறெடு களிறெதி ர்மோதத் திசைத்திசை கடுநடை யுளதக ரேறச் சமர்த் தனை,—முயறரு கறையொடு தேய்வுற்றிளைத்தொரு மூ முமதி குறைமதி யாகத் துகிற்கொடி, முகிறெடு கட் மதில் வேதப் பதித்தனு முதல்வனை யறுமுக வேளைப் புரக்கவே. (கூ)

முப்பத்துமுக்கோடி தேவர்கள்.

வே று.

முறுக்குடை நறைச்சத தளத்திரு மலர்த்தவிசு சொ ர்க்கத் தலத்தோடு சேஷசயனத்தையு, முடித்தலை யடி த்தலை பதித்தெதிர் துதித்தவர் தமக்குக் கொடுத்தனை மாதிரமொட்டையு,—மிறைப்பொழு தினிற்பொடி படுத்தருள் கொடுக்கவல சத்திக் கரத்தனை யூதியமெ

னத்தனே, யிருப்பினு நடப்பினு நினைப்பவ ரிருக்கவெ
மர் சித்தத் திருப்பானே யாறிருபுயத்தனே, — வெறுப்
பொடு விருப்பினை யறுத்தவ ருளத்துமலர் பத்மப் பத
த்தானே வேதபுரியிற்சினே, — விடைக்கொடி வலத்தினு ம
டக்கொடி யிடத்துமுள மூக்சட்டிருத்தாதை யார்பணி
குருக்களே, — மறைக்கிழ வனைத்தலை புடைத்துல கனை
த்தினையு மொக்கப் படைத்தானே மூவிருமுகத்தனே, ம
ருத்துவர் வசுக்கதிரு ருத்திர ரொளப்பொலியு மூப்பத்
து முக்கோடி தேவர்கள்புரக்கவே. (கo)

முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

இருக்கோ விடும்பரி புரக்கோல மூந்துகலி விட்ட
பொட் டிஞ்சுட்டியு, மெரிமணிப் பட்டமுங் கட்டுபொ
ன் னாகுஞாணு மிளஞாயி றுதயஞ் செயு, — முருக்
கோல முஞ்சூழி யக்கொண்டை யும்முச்சி யுச்சியும்
வாளிமுத்து, மொள்ளொளி ததும்புங் குதம்பையுங்
கண்டுகண் டோடாடிக் கண் களிக்கு, — மருக்கோல நீ
லக் குழற்றைய லாட்கரு மருந்தா யிருந்த தெய்வ, ம
கக்கோல மேமுதிர் கிழச்கோல மாய்க்குற மடந்தை
மூ னடந்து மற்றத், — திருக்கோல முடனொரு மணக்
கோல மானவன் செங்கீரை யாடியருளே, செத்துப் பி
றக்கின்ற தெய்வங்கண் மணவாள செங்கீரை யாடி ய
ருளே. (க)

கும்பாதி காரிய மெனத்தமை நிமித்தமாக் கொண்ட வகிலாண்டங் களின், குழுவுக்கு மற்றுத்த மிருவர்கு றியுந்தலைக் கூடினுந் தான்றனக்கச்,—சொம்பாதி யன் மைக் கனைத்துந் தன்மயமெனுஞ் சுருதிகரி யாவைத்து மச், சுருதிக்கு மெரிகூடர்ப் பரிதிக்கு மிரவிகுல தோ ன்றற்கு மிளவ லுக்குஞ்,—சம்பாதி யொடுநற் சாடாயு வுக் கும்பெருந் தவமுனிவ ரெழு வருக்குந், தண்ணி ளி சுரந்திட்ட தீராத வினைதீர்த்த தம்பிரான் றிருமே னியிற், செம்பாதி யுங்கொண்ட தையலு யகிகுமா செ ங்கீரை யாடி யருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வங்க ண் மணவாள செங்கீரை யாடியருளே. (உ)

கைக்கெட்டு மெட்டுக் களிற்றைப் பிடித்தக் களிற் றேடு முட்ட விட்டுக், ககனவட் டத்தினெடு பரிதிவ ட் டத்தைவளை திரிரிவட் டத்தி லிட்டு,—மூக்கட் டிரு த்தாதை கோதண்ட மென வைத்த வேதண்ட மாதண் டமா, மூகண்ட கூடங் திரிகூடத் தொடுஞ் சாடி மூரிக் கடாசல மவன்,—மெய்க் கிட்ட சட்டைக்கு நேரிட் டி டப் பட்ட மேகபடலத் துமொண்டி, மேல்கட லினைப் பெருங் கிழ்கடல் புகப்பெய்து விளையாட்டு வீரர்க ளொடுங்,—திக்கெட்டும் விளையாடி சேணுபதிக் கடவுள் செங்கீரை யாடி யருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வ ங்கண் மணவாள செங்கீரை யாடி யருளே. (ஊ)

மைவிழிச் செங்கமல வல்லிக்கு நேமியான் மணிமா ர்பு வாணிக்கு நான், மறைமுதலி செந்நாத் தடங்கைய

லாளோடும் வயித்தியக் கடவுளார்க்கு,—மெய்விரிக்கு
ங் தொண்ட ருள்ளத் தடத்திலெடு வேதச் சிரங் கடுப்
ப, வேதபுரி கந்தபுரி புள்ளு மெனப் பொலியும் வேளூ
ர திசைதிசை தொறுங்,—கைவருத் தரமகளிர் குரவை
யாட் டயர்பெருங் கயிலைத் தடஞ் சாரலுங், கனகா சல
த்தும்வள ரிமயா சலத்துமுயர் கந்த மாதன வெற்பு
னத்,—தெய்வதப் பிடியோடும் விளையாடு மழகளிறு
செங்கோ யாடி யருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வ
ங்கண் மணவாள செங்கோ யாடி யருளே. (ச)

மீனேறு குண்டகழி நீவாய் மடித்ததனி வில்லியா
ரிளவ லோடும், விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்க
ருணை வெள்ளமென வீற் றிருக்கு,—மானே றுயர்த்தி
ட்ட வையற்கு மம்மைக்கு மருமருந் தாகி நின்ற, வாதி
ப் பிரானென்று மும்முதற் கடவுளு மடித்தொழும் பா
ற்ற மற்றக்,—கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண்
குறிப் பறிந் தருகனைந்துன், குற்றேவல் செய்யக் க
டைக்கண் பணிக்கெனக் குறையிரந் தவடொண்டை
வாய்த்,—தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் செங்
கோ யாடி யருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண்
மணவாள செங்கோ யாடி யருளே. (ஞ)

வேறு.

செம்பொ னடிச்சிறு கிண்கிணி யோடு சிலம்புக ல
ந்தாடத், திருவரை யாஞா ணாமணி யோடுமொ
ளிர் திசழ்வை வடமாடப்,—பைம்பொ னசும்பிய தொங்

தி யொடுஞ் சிறு பண்டி சரிந்தாடப், பட்ட துதற்பொ
லி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக், —கம்பி
பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தா
டக், கட்டிய சூழியு மூச்சியு முச்சிக் கதிர்முத் தொடு
மாட, —வம்பவ ளத்திரு மேனியு மாடிட வாடுக செங்
கீரை, யாதி வயித்திய நாத புரிக்குக ணுடுக செங்கீரை.

குழையொடு குழையெதிர் மோதிக் காதணி குண்
டலம் வெயில்வீசக், குமுத விதழ்க்கனி வாயமு தூ
றிய குறுநகை நிலவூர, — முழுவயி ரப்புய வலயமு
முன்கை முகரியு மொளிகால, முத்த மரும்பி யென
க்குறு வேர்வு முகத்தி லரும்பியிடப்,—புழுதி யளைந்
த பசுந்திரு மேனிப் பொங்கொளி பொங்கியெழப், பு
ண்டரி கங்கண் மலர்ந்த விழிக்கடை பொழியருள் க
ரை புரள,—வழகு கனிந்து முதிர்ந்த விளங்கனி யாடு
க செங்கீரை, யாதி வயித்திய நாத புரிக்குக ணுடுக செ
ங்கீரை. (எ)

விரல்சுவை யுண்டு கனிக்கமு தூறிய மெல்லிதழ் பு
லராமே, விம்மிப் பொருமி விழுங்கழு தலறியுன் மெ
ன்குரல் கம்மாமே,—கரைவுறு மஞ்சன துண்டுளி சி
ந்திக் கண்மலர் சிவவாமே, கலுழ்க லுழிப்புன லருவி
படிந்துடல் கருவடி வுண்ணுமே,—யுருவ மணிச்சிறு
தொட்டி லுதைந்துநி ணெண்பக ரோவாமே, பொருதா
ளுந்தி யெழுந்திரு கையு மொருங்கு பதித்து நிமிர்ந்,
—தருள் பொழி திருமுக மசைய வசைந்தினி தாடுக

செங்கீரை, யாதி வயித்திய நாத புரிக்குக ணுங்க செங்கீரை. (அ)

மே வ லு.

கும்ப மதக் களி யானை யிரண்டே யொன்றே மைக், கொண்டல் விழிக்கயன் மீனுமிரண்டே கொண்டே கிச்,—சம்ப ரனேப்பொரு சேவகன் வந்தான் வந்தான் மூற், சண்டை கொளற்கென நேர்வரு பெண்பா லன் பாயே,—யம்பவ ளக்கொடி யேவளர் கொம்பே யென் றேநீ, யன்று புனத் துயிர் சோர்வது கண்டே முன் போதுங், — கும்ப மதத்தர் சகோதர செங்கோ செங்கீ ரை, கந்தபுரிக் கருணை நிதி செங்கோ செங்கீரை. (கூ)

திங்க ணுதற் றிரு மாதொடு நின்றே மன்றுடிஞ், செ ங்கண் விடைக் கொடி யோனருள் கன்றே யொன்றே யா,—யெங்க ளுளத்தமு தூறு கரும்பே யன்பாளர்க், கின்ப மளிக்கு மெய்ஞ் ஞான மருந்தே யெந்தாயின், —கொங்கலர் மைக்குழல் வாழ் பொறி வண்டே வண் டீதுங், கொந்தள கக்குற மான்வளர் குன்றே யென்றூ தும், — கங்கை மகட் கொரு கான்முளை செங்கோ செ ங்கீரை, கந்த புரிக் கருணை நிதி செங்கோ செங்கீரை.

முற்றிற்று

தாலப்பருவம்,

பில்லும் பசுந்தே னசும் பிருந்த பின்றூ ழளகத் தரம களிர், பேதைக் குறும்பு விளையாடும் பேரா யத்துச் சிறுமருங்கும்,—கொல்குங் கொடிபோய் துடங்கி யிட

வோங்கும் பளிக்கு நிலாமுற்றத், துயர்கு ளிகையின் மாகதத்தி ஞெளிகால் வீசத் தெளிவிசும்பிற்,—பல்கு ஞ் சுரபித் தரங்க நெடும் பாகீ ரதியின் கரைதிளைத்த, பசும்புல் லெனச்செந்நா வளைக்கும் பைம்பொற் றலங் கள் பலகோடி,—மல்குஞ் செல்வக் கங்க புரி வாழ்வே தாலோ தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்த முழு ம ணியே தாலோ தாலேலோ. (க)

தொடுக்குஞ் தொடை வெண்டுகிற் கொடிக டொடுநீ ர்ப் பரவை முகம் புழுங்கத், தோன்றும் பரிதி மணித் திண்டேர் தூண்டுங் கலின வாம்பரியை,—முடுக்குஞ் சுடர்ப்பொற் றலத்திழைத்த முழுநீ லத்தி ஞெழு கொ ளியின், முழுகுங் சடவுண் மாலி யானை முகிலிற் ரே ன்ற வகலிட நின்,—றடுக்குங் களிறென் றரமகளி யை யும் றிடத்தன்வெளிறு முடம்,பளறுபடிந்த தெனக் கங் கை யாற்றுப் பசும்பொ னசும்புபுனன்,—மடுக்குஞ் செ ல்வக் கங்கபுரி வாழ்வே தாலோ தாலேலோ, மலையாள்வ யிறு வாய்த்தமுழு மணியே தாலோ தாலேலோ. (உ)

நீற்றுஞ் சுதைவெண் ணிலவெ றிப்பத் திரண்மா ம ணிகள் வெயில்விரிக்குஞ், செம்பொற் றலத்துப் பே ர மர்க்கட் சிறியார் நறிய வகிற்புகையிட்,—டாற்றுங் கு ழற்காட் டிணைப் புயலென் முகி மயில்கண் டம்பவளத், தரும்பு கையைச் சகோரப்புள் ளருந்தவிரிந்த முழுங கைவின்,—றேற்றுநிலவுக் கிந்துசிலை யொளிர்மாளிகை யுஞ் சூளிகையு, முருகிப் பெருகுங்கலுழி வெள்ள மு

வமோ டுவரிக் கடற்புலவு,—மாற்றுங் கடவுட் கந்த புரி வாழ்வே தாலோ தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்த முழு மணியே தாலோ தாலேலோ. (சு)

கிளைக்குஞ் சகரர் தொட்டபெருங் கிடங்கென் றிட்ங்கர் மாவியங்குங், கீழ்நீரழுவக் குண்டகழிக் கெழுமு புனற்றெண் டிரைமேய்ந்து,—திளைக்குங் கமஞ்சூ னெடும் புயலைச் சிறுகட் பெருங்கைப் பகடென்றேர், செங்கட் களிறுபிளிறநிமிர் திகிரிகிரியென் றிவர்ந்துடல, மிளைக்கும் படிவிண் டொடர்நிவந்த வெழிற்பொற் புரி சைவிண்டுபதத், தேறுமேனி பொற்றருவுக் கிடுவே வியுமா யேழுலகும்,—வளைக்குங் கடவுட் கந்தபுரி வாழ்வே தாலோ தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்த முழுமணியே தாலோ தாலேலோ. (ச)

சோலைப் புறமுப்புடைக் கனிகடக்கு முடத்தெங் கிமைய வர்தந், தோன்றற்றிருவோ லக்கத்துத் தோகைமயிலி னடங்குயிற்று,—மேலக் கருங்கொங் தளவளகத் திளமா தருக்கு முதிர்வேனி, லிளைப்பாற் றுதற்குத் தாற்றுஞ் செவ் விளநீர் கொடுப்ப வீற்றுளைந்த,—காலப்புயலின் முகந் துடைக்குங் கமுகு பழுக்காய்ப் பவளமுடன், கதிர்முத் திட்டுச் செழும்பாளைக் கற்றைக் கவரி புடையிரட்டு,—மாலைப்பழனப் பரிதிபுரி வாழ்வேதாலோ தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்தமுழு மணியே தாலோ தாலேலோ. (ஞ)

வேறு.

மாலிம யத்து மட்டப்பிடி பெற்று வளர்த்த விளங்களி
றே, மழவிடையேதிரு மாமடி கட்செ னை வைத்த கவுத்
துவமே,—மூலமெ னக்குல நான்மறை யோலிடு மூழு
முதலேமூவா, முக்கட் கனிகனி யுஞ்சுவை யேதெளி மூ
த்திக் கொருவித்தே,—காலே யிளங்கதி ருக்கெதிர் மூ
திருங் கதிர்செம் பவளமுடன், கதிர்முத்திட்டு வணங்க
க் கன்னல் கொல் கமுகுகொ லெனவளருஞ்,—சாலி
வயற்றமிழ் வேளூரடிகே டாலோ தாலேலோ, சங்கத்த
மிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ. (சு)

கருமுகிலுக்கரி காமடிவார்ங் கண்டிருபறவைகடங்,
கண்களிபொங்கவொர் பறவை முடித்தலே காணுதுட்கு
வாப்,—பொருபுனலருவித் தலையின் மிசைத்தவழ் புது
மதிநிலவொழுகப், புள்ளுறிற்பொலி வெள்ளிமலைக்க
ட் பொன்மலை யைக்குவவு,—குருமணிவயிரப் புயமெ
ணமெட்டுக் குவடுஞ் சுவடுபடக், குத்திப்பொருமிரு
கோடு படைத்ததொர் கூந்தற்பிடி பெற்றுத்,—கருமொ
ரு தொந்திக் தந்திக்கிளையாய் தாலோ தாலேலோ, சங்
கத் தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ. (எ)

உண்ணெய்ழ் தொண்டரு ளத்திருள் சிந்திட வொ
ளிவிடு முழுமணியே, யுயர்மறை நூல்கலே முடிவின்
முடிந்திடு மொழுகொளி மரகதமே,—விண்ணெடு ம
ண்ணை விழுங்கி யுருட்கதிர் விரியுமிளஞ்சுடரே, மெ
ய்ப்புலன் மேய்ந்து சமைந்ததொர் வீட்டை விளக்கு

ம் விளக்கொளியே, — புண்ணிய நாறுமொர் பெண் களிகளியும் புனிதநறுங்களியே, புள்ளுரொன வெம துள்ளத் தடங்கிறை புக்கமுதக் கடலே, — தண்ணெளி பொங்கிய கருணை நிதியே தாலோ தாலேலோ, சங்கத் தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ. (அ)

வேறு.

தோலாத முத்தமிழ் நாவா மூவா மாவாமச், சூர்வே ரறத்தொடு வேலா நூலா நூலோ துஞ்ச, — சீலாமலக் கொடி பாலா கீலா மேலாகுங், தேவாதி பற்கொரு தே வா வோவா தேகூவுங்,— காலா யுதக்கெடி வீரு வே ரு வேறோறுங், காபாலி பெற்றரு மாரா வீரா போரா ளா,—சேலார் வயற்குரு கூரா தாலோ தாலேலோ, சே ணை பதிப்பெரு மாளே தாலோ தாலேலோ. ( )

ஊனு யுயிர்க்குயி ரானுய் தாலோ தாலேலோ, வோ தாதுணர்ந்திடு போதா தாலோ தாலேலோ,—வானவ ரு ட்கனு பானு தாலோ தாலேலோ, வாயாத சொற்சொ லு பாயா தாலோ தாலேலோ,—நானெனக்கரி தானுய் தாலோ தாலேலோ, நாதாதி கட்கனு பூதா தாலோ தா லேலோ,—தேனூர் பொழிற் குரு கூரா தாலோ தா லேலோ, சேனை பதிப்பெரு மாளே தாலோ தாலே லோ. (சு0)

முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

முடங்குங் கிளைப் பாவை வயிறுளைந் தின்றநறு முளரிப் பிராட்டிவைத்த, முத்தாடி பச்சைப் பசுங்கி

ள்ளே யெனமழலே முதிருமென் குதலைகற்பத்,— தொ
டங்குங்குறப்பாவை கற்றைக்குழற்கஞ்சி றாமமொடு
காமமிட்டுச், சுடிகைநுதல் வெயர்வுந் துடைத்தொழு
குகஸ்தூரி தூரியங்கொண்டு தீட்டிக்,— குடங்கைக்
கடங்கா நெடுங்கட் கடைக்கழகு கூரவஞ்சன மெழுதி
மென், கொங்கைத் தடத்தும் பசுங்களபமப்பியவள் கு
ற்றேவன் முற்றுமாற்றித்,— தடங்குங் குமப்புயங்
கொட்டிநட மிட்டவன் சப்பாணி கொட்டியருளே,
கையனையகிமருவு தெய்வநாயகன் மதலை சப்பாணிகொ
ட்டியருளே. (க)

மழைக்கொந்தளக்கலப மயிலினஞ் சாயனெடு மத
ரிக் கெண்டையுண்கண், மான்கன்றையமருலகு வாழ
ப் பிறந்திடு மடப்பிடியை வானவில்லைக், — குழைக்
குந் தடக்கைத் திருத்தாதை நீரொடு கொடுப்பக் குட
ங்கையேற்றுக், கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர்
நிற்பவக் கொம்புமின்கொடி யினெல்கி,— யிழைக்கு
ம் பசும்பொற் றசும்பென வசும்புபொன்னிளமுலைமு
கங் கோட்டிநின், றெய்யாமைநோக்கும் படைக்கட்க
டைக்கணைக் கின்னமுதமூற்றவின்பந்,— தழைக்கும்
பெருங்காதல் வெள்ளந்திளைத்தவன் சப்பாணிகொட்டி
யருளே, கையனையகிமருவு தெய்வநாயகன்மதலை சப்
பாணிகொட்டியருளே. (உ)

உண்ணிலா வுவகைத் தடங்கடல் படிந்திட்ட வும்ப
ருஞ்செங்களம்பட், டொண்பரிதியுடல் கிழித்தோடுங்
கடற்றானை யொளிறுவாளவுணர்குழுவுந்,—தெண்ணி

லாமதிநுதற்றெய்வப்பிணைக்கள்வாய்த் தேனமுதுமமுதவாரித், தெள்ளமுதுமுடனிருந் துண்ணப் பணித்திட்ட செங்கைவேலபைம்புனத்துப்,— பண்ணுலாமழலைப் பசுங்கிளவி யெயினர்பொற் பாவைவிழிவேலொடொப்புப், பார்க்குந் தொறுந்தலை கவிழ்த்து நின்றவடிருப்பவளத்து முத்தரும்புந்,— தண்ணிலாவுக்கொண் சகோரமென நின்றவள் சப்பாணிகொட்டியருளே, கையனுயகிமருவு தெய்வநாயகன்மதலை சப்பாணிகொட்டியருளே. (கூ)

மட்டுடைத்தெய்வக் குறப்பாவை திருவுருவின் மயிவிளஞ்சாயலுநிலா, மணிவடமறப்புடைத் திறுமாந்த கனதனவனப்புங்குறித்து நோக்கி,— யிடுகிடைப் பாவிக் கிளிப்பிழைப்பில்லை கொலெனத்திருவுளங்குழைந்தாங், கேந்திளங்கொங்கையை யிணைப்புயத்தேத்திநின் றெல்லாவுறுப்புநிற்கக்,— குடமுலைக்கேயிவள் குடிப்பிறப்புக்கியை குணங்கிடைத்ததுகொலென்றக், கோதைநெடுநாணெய்த, வலையவங்கட்குளகுணங்கனிதெரிக்குந்,— தடமலர்க் கைத்தலஞ் சேர்தொளிதுளும்ப வொரு சப்பாணி கொட்டியருளே, கையனுயகிமருவு தெய்வநாயகன்மதலை சப்பாணிகொட்டியருளே. (சு)

விண்ணெண்கட்புவன முட்டவுப்பட்டதேந்து வேங்துபொலிபாந்தள்வைப்பும், விரிநீர்வளைப்புமெழில் விஞ்சையரிருப்புமுகை விண்டுறைவிரிமுண்டகக்,— கண்ணன்றிருப்பதமு நான்முகக் கடவுள்பூங் கஞ்சமுங்

குவிசப்பிரான், கற்பகக்காவுதின் முண்டர்கடொழும் புக்கொர் காணியாலவைத்துமற்றத்,— திண்ணென்றடக் ணைவெஞ் சிலைவேடர்குடிகொண்ட சீறூரு மூரூர்தொ றுஞ், செந்தினைப்புனமூடு தண்சாரல் பிறவுமாஞ் சீத னக்காணிபெற்றத்,— தண்ணை ன்குறிஞ்சித் தலங்க லையளிப்பவன் சப்பாணிகொட்டியருளே, தையனயி மருவுதெய்வ நாயகன் மதலை சப்பாணிகொட்டியருளே.

வே று.

கடலைச் சுவறவடித்து மிடித்துக் கனவரைகுகள் க ண்டுங், கடிதிற் றிரிய வருப்பதை யொப்பக் காவுணக் கடலி,— னுடலிற்பெருகிய குருதிக் கடல்பிண வோங் கலொ டோங்கவமைத், தொட்டிய வொட்ட லரிற்பிற கிட்டவ ரொழியப் பிறரையலாக்,— கடவுக் காழியி ன்மத்தெறி தயிரிற் றக்து திரப்புனலிற், றசைகுடர் நி ணமொடு மூளைகுழம்பச் சமர்விளை யாடல்செயுங்,— குடுமிச்சுடர்வடி வேலைத் தொட்டவ கொட்டுகசப்பா ணி, கொழிதமிழ் வேத புரிக்குமரேசன் கொட்டுக சப்பாணி. (சு)

சமரிற்பட்டவர் வெட்டிய பூகத்தலைவர்க ணிற் பழு தற், முமரை நாயகன்வயிறுகிழித்துத்தங்தொழிறலைநி ன்றுங்,—கமரிற்குரிய மடக்கொடியாரை யலைத்தவர் ப ற்றியெயிற், றவணைனத்தமை யுணரார் கணவர்களார் ப்பில் வெடித்தபெருங்,—கமரிற்குருதிபிலத்தைநிரப்பி டுகளமெதிர்கண்டினியக், காவுணக்கடல் சூரொடுமா ளக்கடிதிற்றடிதியடற்,—குமரக்கடவு ளெனப்பணிவே

லவ கொட்டுக சப்பாணி, கொழிதமிழ்வேத புரிக்கும
ரோசன் கொட்டுகசப்பாணி. (எ)

அற்றவுடற்குறை யிற்றமுடித்தலே யங்கைத்தலம்வை
த்திட், டாடுபறந்தலே யோடுதிரப்புன லாறுகடத்துகெ
னுஞ்,— சிற்றலகைக்கொரு பேரலகைப்பெண் டோ
ழியக்கழியுஞ், திகிரிப்பரிசில் விடப்படுசுழியிற் றெரு
மரல்மட்பகைஞன்,— பற்றியதிரிகை திரித்துவிடத்
திரிபரிசெனவுஞ் சுழலும், பம்பரமெனவும் வரும்படி
யவுணர் படக்களவேள்வி செயாக்,—கொற்றமகட்புண
ருஞ்சுடர் வேலவ கொட்டுகசப்பாணி, கொழிதமிழ்
வேதபுரிக்குமரோசன் கொட்டுக சப்பாணி. (அ)

வேறு.

வளரிளவன்முலை மலைமகளுக்கொர் தவப்பேறே, ம
றிதினை பொரிமிர்கருணைகொழித்த பெருக்காறே,—
யளியுமினமு தெழுவெளியினில் வைத்த சுவைத்தே
னே, யறமுதுதவமொடு வளரவளர்த்திடு கற்றாயே,—
களிமயில்கடவி விணடைய முடுக்கிய புத்தேளே, கலை
மறையெனுமுரல் வரியளிமொய்த்த மலர்க்காவே,—
தெளிதமிழ்பழகிய மதவலி கொட்டுக சப்பாணி, தின
கரபுரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. (கூ)

கனியொடுசுவையமு தொழுகிய சொற்பயிறத்தாய்
வேள், கணையொடு பிணையென வுலவுகடைக்கண் மட
ப்பாவாய்,— நனைமலர் பொதுளியவெழிலி தழைத்த
குழற் கோதாய், நளிர்புன மிசைவளர்கலபம் விரித்த
மயிற்பேடே, — யெனவொரு குறமகளடிமுடி வைத்த

னமுத்தேவா, மிறைவரு முறைமுறை பணியவிருக்கு முதற்றேவே,— சினவிடையவர ருண்மழவிடைகொட் டுகசப்பாணி, தினகரபுரிவரு கனிமுதல் கொட்டுக சப்பாணி.

முத்தப்பருவம்.

குருகு நாறுசெந் தளிர்க்கைக் கொடிநுண் ணுசுப் பிற்கோட்டிமயக், குலப்பூங்கொம்பு நறவூழ்த்தகொழு ந் தாமரை யோடவிழ்ந்ததுழாய்ச்,— சருகுநாறு மு டைத்தலைபின்முமநாறு திரடிண்டோட், டாதையாருங் கண்டுகண்டுதடங் கண்களிப்பக்குரவுவிரிந்,— தருகு நாறுதிருமேனியந்தீங்குதலை மழலைகனிந், தமுதமூறு பசுந் தேறலசும்புகாறத் தெய்வமண,—முருகுநாறுஞ் செங்கனிவாய் முத்தந் தருகமுத்தமே, மும்மைத்த மிழ்தேர் கந்தபுரி முருகா முத்தந்தருகவே. (க)

நறவுவிரிந்த விரைத்தோட்டு நளினத் தொட்டிற்ற டமுலைப்பா, னல்லிவளர்த்த கைத்தாயர்நசைவாண்முக த்துமார்பகத்துங்,— குறுமெனடைய சிறுபசுங்காற் குருகிகதும்பவுகைத்துசில, குறும்புசெயத்தாணை மெனமென்கோல்கொண்டோச்சப்பெரும்புவன,நிறுவு மொருநின்பெருந்தன்மை நினைந்தாய்பொலக்கனிந்தமு து, மெக்கப்பசுந்தேனசும்பூற நெடுவெண் ணிலவு விரி ந்தகுறு,— முறுவலரும்புஞ் செங்கனிவாய்முத்தந்த

ருகமுத்தமே, மும்மைத்தமிழ்தேர்கந்தபுரிமுருகா முத்தந்தருகவே. (உ)

பொழியுங்கருணைப் பெருவெள்ளப்புனரி பெருகிய லையெறியப், பொங்கியெழுந்த பெருங்காதற் புளகீம் போர்ப்பப்போதுசெயும்,—விழியுமனமுங் குளிர்துங் க விரிநீர்ச்சடிலத்தொருவனிரு, வீணைக்குதவுந் திரு ச் செவிகள் விருந்தாட்டயர விளைகொழித்து,—வழி யுங்கொழுந்தேன் பிழிந்திட்டு மதுரவமுதுகுழைத் தூற்று, மழலைததும்பப் பழமறையை வடித்துத் தெளி ந்த வார்த்தை யொன்று,— மொழியும்பவளச்செங்க னிவாய் முத்தந்தருக முத்தமே, மும்மைத்தழிழ்தேர் கந்தபுரிமுருகாமுத்தந்தருகவே. (ஊ)

கலைப்பானிறைந்த முதுக்குறைவிற் கல்விச்செல்வர் கேள்விகலங், கனியக்கனிய வமுதூறுங் கடவுண்ம றையு முதற்சங்கத்,—தலைப்பாவலர்நீந் சுவைக்கனி யுந் தண்டேனறையும் வடித்தெடுத்த, சாரங்களிற்தூ ற்றிருந்தபசுந் தமிழ்நாறத் தடங்கைகொ,—லலைப்பா ய்புனற்றெண் கடல்வைப்பு மகிலாண்டமும்பன் முறை யீன்று, மழகுமுதிர முதிராவென் னம்மையமுது சூ ற்கொண்ட,—முலைப்பாலுறுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே, மும்மைத்தமிழ்தேர் கந்தபுரி முரு காமுத்தந் தருகவே. (எ)

புயலுண்டிருண்ட கொந்தளமும் பொன்னங்குழை யு மின்னகையும், புளகம்பொதிந்த விளமுலையும் புரு

வச்சிலையும் பொர்த்தடங்கட்,—கயலுங்கலப மயிலிய லுங் கன்னிப்புனத்தோர் பெண்ணமுதின், காமர்கலை னும்பன்னிரண்டு கண்ணன்முகந்துண்டின்னமுதி,—னியலுஞ்சுவைகல் லவியொடுநீத் தேக்கற்றிருந்தத் தாக்கணங்கி, னிழுமென்குகலை களிந்தூறு மிதழ்த்தேன்சுவைகண் டேமாப்பான்,—முயலுங்குமுதக் கனிவாயான் முத்தந்தருக முத்தமே, மும்மைத்தமிழ்தோர் கதபுரி முருகாமுத்தந்தருகவே. (ரு)

வேறு.

கோடுபடுகொங்கைக் குவட்டுக்கிளைத்திட்ட கொடியிடைக் கடைசியர்குழாங், குரவையிடி தழனியிற் கொண்டறியாத்தாவு குழவுப்பகட்டுவாளை,—சேடுபடுத்தே னிலத்துப் புனிற்றிளஞ் சேதாவயிற்றுமுட்டச், செங்கல்லெனத்தடவு மடிமடைதிறந்தூற்று தீம்பால் சினைக்கற்பகத்,—தேடுபடி தடமலர்த் தேனருவியொடுசொரிந் தேரியொடுகாவிரம்ப, விழுதுபடுகழனியுந் தெய்வமணநாறவேன் றின்சுவைமுதிர்ந்துவிளையுங்,— காடுபடுசெந்நெல்பைங் கன்னனிகர்புள்ளூர கவிவாயின் முத்தமருளே, சங்கைக்குமெடியவன் றங்கைக்குமொருமகன் கவிவாயின் முத்தமருளே. (கூ)

துளிதூங்கு மழைமுகிற் படலங்கிழிக்குந் துகிற் கொடிகள் சோலைசெய்யத், தோரணமுகப்பிற் றவழ்ந்தேறுகலைமதித் தோற்றத்தை யுறுகான்மதித்,—களிதூங்குதேனிறு மிதுகம்மின்வம்மினென் றழிரமுவார்ந்திற்கு, மங்கலார்கைகூப்ப வாடவர்பிழிந்தூற்று மள

வினபராதமிதென,—வொளிதூங்கு முகமதிக் மொழி பெள்கிலேன்விடுதி குயிரொன்று மெனவிட லுமவ், வு பிதிக்கடவுணர வுண்டமற்றவரினு முய்ந்தோமொழி ந்தோமெனக்,—களிதூங்கு மாடமலி கந்தபுரிவருமு ருக கனிவாயின்முத்தமருளே, கங்கைக்குநெடியவன் றங்கைக்கு மொருமகன் கனிவாயின்முத்தமருளே.(எ)

பூமருவுயிர்க்குங் கருங்கொங்களத்துவிரி பூந்துகட் படலமுமணம், பொங்கியகுறும்புகைப் படலமுங்கால மழை பொழிமுகிற் படலஞ்செயத்,—தாமரை முகச் சோதி யெழவெழுஞ்சிறுமுறுவ றண்ணிலவு செயவெ யில்செய்த், தழன்மணிக் கலனகனி நிதம்பமொடுவெம் முலை தடங்கடலு மலையுஞ்செயத்,—தேமருகுழற்கோ தை மயிலனீர்கோசிகன் செம்மலென வேறுபுவனஞ், செயவும்வல்லி னென மணந்திடை தணந்தவர்சொல் செ ஞ்சொற் பசுங்கிளிசொலக்,—காமருமனங்குழைய மா தர்பயில்வேளுர கனிவாயின் முத்தமருளே, கங்கைக் குநெடியவன் றங்கைக்கு மொருமகன் கனிவாயின் மு த்தமருளே. (அ)

வேறு.

மதியுருதியு மரவும்விரவு மௌலியொருவன் மூக்க ணும், வனசமுகமு மகமுமலர மழலையொழுகு சொற் சொலும்,—புதல்வவிமய முதல்வியருள்செய் புனிதவ மரர் கொற்றவன், புதல்விதழுவு கொழுகுறவர் சிறு மிகுடிசொள் பொற்புய,—கதிருமதியு மொளிரவொளி ரு மொளியவளிய கற்பகக், கனியிலினிய வுருவபருவ

மழையினுகவு சைத்தல,—முதிருமறிவி லறிஞருணரு முதல்வதருக முத்தமே, முனிவர்பரவு பரிதிபுரியின் முருகதருக முத்தமே. (கூ)

வடிவினழகு மெழுதவரிய புயமுகறிய செச்சையு, மருமம்விரவு குரவுமாயின் மணியுமணிகொள் கச்சையுங்,—கடவுமயிலு மயிலுமொழுகு கருணைவதன பத்மமுங், கமலவிழியும் விழியுமனமு மெழுதியெழு திநித்தலு,—மடிகளெனவு னடிகள்பணியு மடியரலது மற்றும்வே, றமர்குழுவு மகிலமறையு மறியுமயனு முற்றுநின்,—முடியுமடியு முணரவரிய முதல்வதருக முத்தமே, முனிவர்பரவு பரிதிபுரியின் முருகதருக முத்தமே. (கூ)

வருகைப் பருவம்.

செம்பொற்கருங்கழ லரிக்குரற்கிண்கிணி சிலம்பொ டகலின்கலினெனக், திருவாயி லாமணி கிணின் கிணி னெனப்பொலந் திண்டோளின் வளைகலிப்ப,—வம்பொற்பகட்டுமார் பிற்சன்னவீரமு மாரமுந்திருவி ல்வீச, வணிமகரகுண்டலம் பரிதிமண்டலமென்ன வ லர்கதிர்க் கற்றைசுற்றப்,—பைம்பொற்சுடர்ச்சுட்டி கட் டுசூழியமுடன் பட்டமொளி விட்டெறிப்பப், பங்கய மலர்ந்தமுக மண்டலந்தொறும் பனிமுறுவ னிலை வரும்பக்,—கும்பப்படாமுலை மலைப்புதல்வி செல்வக்

குமாரநாயகன் வருகவே, குரவுகமழ்தருகந்த புரியில
ருள்குடிகொண்ட குமரகுரு பரன்வருகவே. (க)

மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்டுகின் ம
டித்தல நினைப்பவம்மை, மணிவயிறு குளிரத் தவழ்ந்
தேறி யெம்பிரான் மார்பினிற் குரவையாடி,— முழவு
முதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனன் மோலிநீர்
பெய்தவித்து, முளைமதியை நெளியரவின் வாய்மடுத்
திளமானின் முதுபசிக் கறுகருத்தி,—விழவுமுதிர்செ
ம்மேனி வெண்ணீறுதூளெழ மிகப்புழுதி யாட்டயர்ந்
து, விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையமாடிக்,—குழவுமுதிர்செவ்விப் பெ
ருங்களிவரச்சிறு குறும்புசெய் தவன்வருகவே, குர
வுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுரு
பரன்வருகவே. (உ)

இருளற விமைக்குநின் றிருவுருவி னலர்சோதி யிள
ஞாயிறென முகையவிழ்ந், தேதிலிவி தாமரைக் காடுமு
கிழ்ந்தகைநில வெறிப்பவலர் குமுதவனமுங்,—கனைபுர
ள வலைமோது கடலைக் கலக்குமழ களிறென வுழக்கி
யொருநின், கண்மலர்கள் செம்மலர்க ளாகமோகப்பெ
ருங் கலவியங் கடலின்மூழ் தும்,—வெருளின்மட மே
க்கினீ ராமகளிருடனுடும் விளையாட்டெனத் தினைபொ
ருங். வெள்ளநீர்ச் சரவணப் பொய்கையந் தூமையினீ
ள் விரர்களெனுங் கோளரிக்,—குருளைகளொடும்புனல்
குடைந்து விளையாடிய குமாரநாயகன் வருகவே, குர

வுகமழ்தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுரு பரன்வருகவே. (கூ)

சட்டுண்ட படர்சடைக் காட்டெம் பிரான்வைத்த கலமதியொ டையநீயக், கவுரிதிரு முடியினித் திலமிட் டிழைத்திட்ட கதிர்ளம் பிறையிணைப்பத்,—தெட்டுண்ட போன்முழுத் திங்களென்றேக்கறுஞ் செழுமணிச்சூட்டுமோட்டிச், செம்பாம்பு பைவிரித் தாடுதலுமோடிநின் சிறுகறுங்குஞ் சிக்கிடு,—மட்டுண்ட பைங்குலக்காந்தளென் றணையவம் மாசுணம் வெருண்டோடலு, மணிமுடியி னகுதலையை மற்றெமை நகைத்தியான் மலரவன் றலைநிறுனங்,—குட்டுண்ட தறியாய்கொ லெனவிதழதுக்குங் குமாரகா யசன்வருகவே, குரவுகமழ்தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுரு பரன்வருகவே. (சு)

அங்கைத் தலத்தம்மை செங்கண்புதைத்தற் கடங்காமையா லெம்பிரா, னலர்விழிகள் பொத்தலு மிருட்படலமூடவுள் ளஞ்சிநின் றேங்கவேங்கிச்,—செங்கைத் தலங்கொண் டெடுத்தணைப்பாட்குந் திருத்தாதையார்க்குமுத்தந், திருமுகமொ ராறுங் கொடுப்பக் கதுப்பிற் றெறித்துமுத்தந் தருகெனுங்,—கங்கைக்கு நல்கா தெழுந்தலறி யோடலுங் கண்ணீர் துடைத்தெடுத்துக், கான்மலருநீவித்தன் மார்புறவணைக்குமக் கவுமாரியருண்மாரியிற்,—கொங்கைக் குடங்கொட்டி பாலருவியாடுங் குமாரகாயகன் வருகவே, குரவுகமழ்தருகந்த புரியிலருள்குடிகொண்ட குமரகுருபரன் வருகவே. (நி)

அம்புலிப் பருவம்

மண்டலம் போற்றுருவ மழுதமயமாய் முழு மதிக்க
டவு ளெனவருதலால், வானறுகலைமதிக் கப்பொங்கு
மானந்த் மாக்கடலிடைத் தோன்றுலாற்,—றண்டலில்
கொடிச்சிவாய்க் குழுதவிள்ளக்கரத் தாமரைமுகிழ்த்
திடுதலாற், சகலபுவனத்திலு முயிர்ப்பயிர் தழைப்பநற்
றண்ணளி சுரந்திடுதலாற்,—றண்டமதிநியொடு பொ
திந்தவேணிப்பரஞ் சோதிகட் பொறியாதலாற், முன்
றலிவ ளின்னெயொத் தளனு னினக்குமொரு தாயி
யிவன் போலில்லைகா,—ணண்டரண்டத்தொடகி லாண்
டம் படைத்தவனெ டம்புலியாடவாவே, யழகுபொலி
கந்தபுரி தழையவருகந்தனுட் னம்புலியாட்வாவே. (க)

சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந்
தோகைமேல் கொண்டருளினாய், தோற்றிமுன் பொங்
கிமலி போலவலி மோதமச் சோதிவேலியு முகந்தா
ய், — குற்றமில் குணத்தைக் குறித்தவிர வல்முகங்
கோடாதளித்தல் செய்தாய், கோகனக நாயகன் வரக்
கூவிடுங்குக் குடங்கொடிய தாக்வைத்தா, — யுற்றிடு
மிதழ்க்குமுதம் விண்டுதண் டேனுழுக வொளிகிலா
ஙகைமுகிழ்த்தா, யுன்செய்கை யெம்பிரான் றன்செய்
கை போலுமா லுனையுமிவ னெவ்வாறிரா,—னற்பொதி
களத்தவ னளித்தகும ரேசனுட் னம்புலி யாடவாவே,
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட் னம்புலி
யாடவாவே. (உ)

கங்கைமுடி யடிகட்கொர் கண்ணு யிருத்தியக் கண்
ணினுண் மணியிவன்காண், கலைகள்சில நிறைதிபின்

குறைதியிவ னென்றுமொண் சலிமூழுது நிறையநின் ரு,—னெங்குமிர வோனெனத் திரிதியிவ னடியவ ரெ வர்க்குமிர வினையொழித்தா, னிருநிலத் தங்குரிக் கு ம்பயிர் வளர்த்தியிவ னெவ்வுயிரும் வாழச்செய்தான், —பொங்கமுத மமுதா சனர்க்குதவி ஞயிவன் புத்தி முத்தியு மளித்தான், புவனம் படைத்தவிவ னின்னின் மிக் கானெனப் புகல்வதோர் பொருளன்றுகா,—ணங் கண்மறை யோலிட் டரற்றநின் றவனுட் னம்புலீ யாட வாவே, யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (ஈ)

பாயிருட் போதத் திருட்டன்றி யகவிருட் படலங் கிழிப்பதுணராய், பனிவிசும் பிற்பொலிவ தோன்றலா ற் புவனப் பரப்பெலாம் பொலிவதோராய், — சேயிதழ்க் குமுதங் திறப்பதல் லாலுளத் திருமலர் திறக்கவறி யாய், சிறைவிரி சகோரப் புளன்றியெவ் வுயிருங் திளை த்தின்ப மாரச்செயாய்,—நீயிவற் கொப்பன்மை செப்பு வ தெனிப்பரிசி னின்பெருந் தவமென் சொல்கே, னெடியவன் முதற்றேவர் குழுங்கிற் பவுரூன நினைத்த ழைத் தருளினன்கா,—ணுயிர மறைக்குமொரு பொரு ளா யிருப்பவனெ டம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (உ)

கருமன்னு பொன்னுலகு மண்ணுலகு மொக்கத் த லைத்தலை மயங்கத் தொகுஞ், சன்னிதி யடைந்தவர்க ள் பையுணீய் முற்றுந் தவிர்ந்தக மகிழ்ந் துதவிராக், —கருமன்னு மூழிப் பெரும்பிணியு மாற்றிடுதல் கண்

டனை யிருத்தியானின்,—கருமன்னுமூழிப் பெரும்பிணி யுமாற்றிடுதல் கண்டனை யிருத்தியானின், கயரோகமு டன்முயற் கறையுந்துடைத்திடக் கருதிடுதி யேலெம் பிரான், — றிருமுன்னரள்ளியிடு வெண்சாந்துமற்றைத் திருச்சாந்து நிற்கவற்றுச், சித்தாமிர்த்தத்தடத் தீர்த்தத் துறைக்குறுந் திவலியொன்றே யமையுமா, — லருவெ ன்னவுருவென்ன வன்றென்னநின்றவெனை டம்புலீயாட வாவே, யழகுபொலி கந்தபுரி தழையவருகந்தனுட ய ம்புலீயாடவாவே. (கூ)

ஒழியாதபுவனத் துயிர்க்குயிரதாய்நிற்ப தொருதெய் வமுண்டெனவெடித், துணையாலுணர்த்துவதை யொ ழியவெவரெவர்சட்கு மூன்கண்ணுளக் கண்ணதாம்,— விழியாகமுன்னின்று கண்ணளிசுரந்தவர்கள் வேண்டி யவரங் கொடுப்பான், மெய்கண்டதெய்வமித் தெய்வம ல்லாற்புவியில் வேறிலலியென் றுணர்தியாம்,—பொழி யாதப்யறங்கு புவனமுந்திசைபுகப் புத்தேள் பெரும் புவனமும், பொன்னுலகுமண்ணுலகு வெவ்வுலகுவே ண்டினும் பொருளன் றிவற்குமற்ற,—வழியாதவீடுங் க ரக்கடவனிவனுட் னம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழையவருகந்தனுட னம்புலீ யாடவாவே. ()

நெட்டிடைற்பைங்கட் கரும்பேய்கள்செம்மயிர் நிரைத் தூணம் வீக்கியார்த்து, நிற்குங்குறட்பூத மொன்றினை விடுத்துடலி னெடியபழு வென்புதெரியக்,—கட்டென ப்பிடியெனக் கொடுறுடைத்தடியெனக் கணநாதர் கடி கமுடுகிக், கடல்வாய்திறந்தெனப் பிலவாய்திறந்தலறு

காட்சிநீ காணுயலே,—மட்டுடைத்தூறுந் தடங்கமலன் முதலியோர் வாய்புதைத் தஞ்சிநிற்ப, வருகென்றழைத்திடவும் வாராதிருத்தியான் மற்றிவன் மூளிந்தாலுனக்,—கட்டதிக்கினிலுமொரு திக்கிலேயெமய்யனுட னம்புலீ யாடவாவே, யழகுபொலிகந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (எ)

குன்றைத்திறந்திட்ட குடுமிவேல்சூருயிர் குடித்திட்விடுத்துநின்முன், குண்டிகைக்கள்வனைக் குடுமித்தலைப்பசுங் குருதிபொங்கப் புடைத்தா,—னின்றைக்குழந்தையென்றெண்ணுது குலிசன்முத லெண்மரும்பிறரு மொருஞான், றெதிர்நின்றுடற்றியவர் பட்டபாட்டியா திருத்தியலே யதுகிடக்க,—முன்றக்கன்வேள்விக் களங்கொலைக்களமென்ன முடியமரர்மொத்துண்டாண், முழுமதிக்கடவுணீ யவமதிப்புண்டதை மொழிந்திடக் கடவதன்று,—லன்றைக்கணக்கின்றும் வந்திருக்கின்றதினி யம்புலீயாடவாவே, யழகுபொலிகந்தபுரி தழையவருகந்தனுட னம்புலீ யாடவாவே. (அ)

கள்ளும்பவக்கட லுழக்குமெனைமுத்தித் தடங்கரைவிடுப்பவனுனைத், தலையளிப்பான்வர வழைப்பவும்வரா விடிற் றண்ணளிசுரந்து கருணை,—வெள்ளங்கொழிக்குங் கடைக்கண்சிவப்பவிவன் வெகுளாதுவிடினுமழுது, விழிசிவப்பக்காணி விரவிபகைசாய்த்தவிள வீரன்பொறுப்பானலன்,—கள்ளம்பழுத்தகட் கடைசியர்சிறுர்திரைக் காவிரித்தண்டுறை தொறுங், கதிர்நித்திலங்குவிமணற்குன்றமெறியக் கலைமதிக்கலச வழுதை,—யள்ளு

ந்தடம்பணைச் சோணாடனிவனுடனம்புலீ யாடவாவே,
யழகுபொலிகந்தபுரி தழையவருகந்தனுட னம்புலீ யா
ட வாவே. (கூ)

தன்னெத்தெய்வச் சிறுருமிளவீரருந் தாணிழற்கீ
ழ் நிற்பவிச், சகதண்டமண்டல மடிக்கழியுநாளமரர் த
மையழக்காண்பவ னிவ, — னின்னைப்பொருட்படுத்
தொருவிரற்றலைசுட்டி நீள்கழற்றூ ளுதைந்து, நெடுமல
ர்க்கண்பிசைந் தழுதழுதழைத்தன னினக்கிதில்வியப்பி
ல்லைகாண்,—பின்னற்றிரைச்சுர நதித்தண்டுறைத்தேவர்
பேதைக்குழாங்க ளென்னப், பெருகுந்தடம்புனற் காவி
ரிப்பூவிரி பெருந்தண்டுறைச்சிறை விரித்,—தன்னக்கு
ழாந்திளைத் தாடுசோணாடனுட னம்புலீ யாடவாவே,
யழகுபொலிகந்தபுரி தழையவருகந்தனுட னம்புலீயா
ட வாவே. (கo)

சிற்றிற்பருவம்.

குறுமென்னடையு நெடுவெணிலாக் கோட்டுநகையு
ம் வாட்டடங்கண், குளிரமுகந்துண் டொளிர்சுட்டிக்
குஞ்சிதிருத்தி நறுங்குகலை, — முறுகுநறைத்தேன் க
னிபவள முத்துண்டுச்சி மோந்துகொண்டுன், முகமுந்
துடைத்து விளையாட முன்றிற்புறத்துப் பொன்றதும்பி,
—யிறுகும்புளகக் கும்பமுலை யெம்பிராட்டி விடுத்தது
மற், றிளையார்மறுக மறுகுதொறு மிடுக்கண்செயற்கோ
வெந்தாய்நின், — சிறுகிங்கிணிச்செஞ் சிறடியாற் சிறி

யேஞ்சிற்றில் சிதையேலே, செந்நெற்பழனப் புள்ளூ
ரா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (க)

கொழுநாண்மலர்க்கற் பகமுகைக் குரவுகாறு நறுங்
குஞ்சிக், கோமான்மகனே நங்கள்குலக் கொழுந்தே
யென்று குறையிரந்து,—தொழுவானவர்த முடிசூட்டு
ஞ் சோதி முடியிற் றுகளெழுகின், றுணைத்தாள்வண்டற்
றுறைப்புழுதித் தூளிபடினும் படிகசுடர்க்,—கழுவாம
ணியு நிலவுவிரி கதிர்நித்தலமு முமையம்மை, கண்ணி
லுறுத்த வடிகேணின் காலிலுறுத்தல் கடனன்றுற்,—
செழுநான்மறையின் பெருஞ்செல்வச் செருக்கேசிற்றி
ல் சிதையேலே, செந்நெற்பழனப் புள்ளூரா சிறியேஞ்
சிற்றில் சிதையேலே. (உ)

வழிக்குப்புறம்பா யாமிழைத்த வண்டன்மனைய வசு
ரேசன், வான்கூட்டுண்பா னடுக்கடலில் வகுத்தகொ
ன் றிகழாமே, — கொழிக்குஞ்சிறுமுற் றிலில்வாரிக்
கொடிவந்தடியே மனைமுன்றிற், குவியாகின்ற மணிக்கு
வையைக் குருகுபெயர்க்குன் றமுமன்றுற், — சுழிக்கு
ண்டகழி வாய்மடுப்பச் சுடர்வால்வளைத்தெண் டிரைக்க
ரத்தாற், சுரபிசொரிபான் மடையடைத்த சோற்றினை
நுங் கலந்தூட்டிச்,—செழிக்குந்தடங்கா விரிநாடா சிறி
யேஞ்சிற்றில் சிதையேலே, செந்நெற்பழனப் புள்ளூரா
சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (ஊ)

மூரிக்களிறே மழவிடையோ மூடுகிற்றெனைப்பார்த்
துழியுனது, முகத்தினழகெம் வடிக்கண்ணுன் மொண்

டுண்டனம்யா மென்றுமிகப்,—பாரித்தோங்கிப் பூரித்த பைம்பொற்புயத்தைக் கண்ணேறு, பட்டேமெனவு மடிகள்பகை பாராட்டுவதோர் பண்பன்றுல்,—வேரிக் கொழுந்தாற் றிளம்பாளை விரிபூங்கமுகும் பால்பாயும், வேழக்கரும்பு மிருட்பிழம்பை விழுங்கிக்கக்குஞ் சுடர்ப்பரிதித்,—தேருக்கெழில்செய் சோணுடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற்பழனப் புள்ளுரா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (ச)

பொன்னங்கொடிபோ னுடங்குமிடைப் புத்தேண்மகளிர் விளையாடப், புனமாளிகையுஞ் சூளிகையும் புதுக்கிக்கொடுத்தாய் பொதுஞான, — மெய்ந்நின்றவருள் விழிப்பாவை விளையாட்டயர வழியாக, வீடுங்கொடுத்தா யெம்மனையும் விடுத்துச்சென்றுன் மிகையுண்டோ, —பின்னுந்நிரைத்தீம் புனற்கங்கைப் பேராற்றுற்று நறைக்கோட்டுப், பெருங்கற்பகத்தின் கழுத்தொடியப் பிறழும்வாளைப் யகடிதைத்த, — தென்னம்பழம்வீழ் சோணுடா சிறியேஞ்சிற்றில் சிதையேலே, செந்நெற்பழனப் புள்ளுரா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (ரு)

கானக்குறப்பெண் குடியிருந்த கன்னிப்புனத்துத் தினைமாவுங், கமழ்தேன்றெளிவு மூண்டுசுவை கண்டாயென்றே மதுவல்லான்,—மீனத்தடங்க ணவண்மிச்சின் மிசைந்திட்டதுவு நசைமிக்கு, விரைத்தீங்குமுதத் தமுதடிகள் விருந்தாடியதும் விண்டோமோ,—கூனற் பிறையின் கோடுரிஞ்சுங் கொடிமாடத்து வெயில்விரிக்குங், குருமாமணியாற் சுரநதியிற் கொழுந்தாமரைகண்

மூறுக்குடைந்து, தேனக்கலருஞ் சோணடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செங்நெற்பழனப் புள்ளூரா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (கூ)

பிள்ளாமதிச்செஞ் சடைச்செருகும் பெருமானுக்கு முலகேழும், பெற்றதாய்க்கு நீயருமைப் பிள்ளையெனிலெம் பேராய,— வெள்ளமமைத்த சிறுசோறு வெண்டிலிடுகே மலதெளியேம், விளையாடிடத்துச் சிறுகுறும்பு விளைத்தாற்பொறுக்க விதியுண்டோ,— கள்ளவிழிச்சூ ரரமகளிர் காமன்கொடியேற் றெனவியப்பக், கற்பதருவிற் படர்ந்தேறு காமர்கொடிச்செங் கயல்பாயுங், — தெள்ளுபுனற்கா விரிகாடா சிறியேஞ்சிற்றில் சிதையேலே, செங்நெற்பழனப் புள்ளூரா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (எ)

மடல்வாய்விழுந்த குழற்பேதை யொருத்திதிருத்தும் பகிரண்ட,மணற்சிற்றிலையோர் கணத்தின்கண் மட்டித்தாடு மைந்தனருள்,—விடலாய்தமியேஞ் சிற்றின்முற்றும் விளையாட்டாக வொருநீயும், வீட்டாநிற்பத் தொடங்கினையால் விக்துமுளையும் வேறன்றே,—கடமாமருப்புஞ் சுடர்மணியுங் கதிர்நித்திலமு மகளிர்முலைக், களபத்தொடுகுங் குமச்சேறுங் கரைத்துவிடுத்தக் கடற்குட்டங்,—திடராச்செயுங்கா விரிகாடா சிறியேஞ்சிற்றில் சிதையேலே, செங்நெற்பழனப் புள்ளூரா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (அ)

வாமான்கலைப்பே ரகலல்குன் மடமானேக்கினரமகளிர், மகிழ்பூத்திருப்பப் புத்தேட்கு வந்தவிடுக்கண் மா

ற்றினையால்,—கோமானினைக்கப் பெருந்தேவர் குலமே யன்றி யடியேமுங், குற்றேவலுக்கா மகம்படிமைக் குடியாக்கொண்டாற் குறையுண்டோ,—காய்மாண்குலைச் செவ் விளநீரைக் கடவுட்சாதி மடநல்லார், கதிர்ப்பூண் முலையென் றேக்கறப்பைங் கமுகுகைவாண் முத்தரும்புந்,—தேமாம்பொழிற்றீம் புனலுடா சிறியேஞ்சிற்றில் சிதையேலே, செங்நெற்பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (கூ)

கருவீற்றிருந்த பெருங்கருணைக் கடைக்கண்பொழிய வீற்றிருக்குங், கடவுளீயே பகிரண்டங் கண்டாயெனின்வண் டடைகிடப்ப,—மருவீற்றிருந்த குழன்மகளிர் வண்டற்றுறைக்கு மணற்சிற்றின், மீனேகோலுவது மற்றடிகேள் வருக்குந்தொழிற்கு மாறன்றே,—குருவீற்றிருந்த மணிமாடக் கொடிமாநகரந் தொறுமலர்ந்த, கொழுந்தாமரைப்பூங் கோயிலிற்பல் கோடியுருவங்கொண்டுசெழுந்,—திருவீற்றிருந்த சோணாடா சிறியேஞ்சிற்றில் சிதையேலே, செங்நெற்பழனப் புள்ளூரா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (கo)

சிறுபறைப்பருவம்

ஊற்றும்பசுந்தே னுவட்டநெட்டிதழ்விரியு மொண்காந்தண் முச்சியுச்சி, யொருவனீ மும்முதற் கடவுளு மீசாப்பாற வுலகெலாந் தலையளித்துப்,—போற்றுந்திறத்தினப் பழமறைக்கிழவன் புரிந்தபகி ரண்டங்கடாம், புதுக்குவகடிப்பநெடு வெளிமுகட்டுக்குவரி புதுங்

லாக் கற்றையிட்டித்,—தூற்றும்பெயர்க்கரு முகிற்படா
த்தையும்வெண் முகிற்படாமாக்கி வீக்கித், தொடுகட்ற்
புவனப் பெருங்கட்டொடண்டச் சுவர்த்தலத்துக்கும்
வெள்ளை,—தீற்றுஞ்சுதைத்தவள மாடமலிவேலூர சி
றுபறை முழக்கியருளே, தென்கலைக்கும்பழைய வட
கலைக்குந்தலைவ சிறுபறை முழக்கியருளே. (க)

விளைக்கும்பெரும்புவன மொக்கக்கனைத்தகடை வெ
ள்ளஞ்சுருங்க வீங்கி, வேதண்டமெட்டிஞெமி மூதண்
டகூடத்தும் விளையாடியுலகமேழும்,—வளைக்குங்கருங்
கடல் பெரும்புறக்கடலோடும் வாய்மடித்தெதிரொப்ப,
வருபுனற்காவேரி வளநாடநாடொறு மதிக்கடவுளேறி
யேறி, —யிளைக்கும்பளிக்கறை முயற்கறையறக்காலு
மிளநிலாவெள்ள மூழ்கி, யெறிதிரைப்பாகீ ரநிப்புனல்
குடைந்திடு மிடைக்கொடி நகிற்கொடியெனத்,—திளை
க்குந்துகிற்கொடி முகிற்கொடிசெய்வேலூர சிறுபறை
முழக்கி யருளே, தென்கலைக்கும்பழைய வடகலைக்கு
ந்தலைவ சிறுபறைமுழக்கி யருளே. (உ)

இருளுந்தாங்கக் கருங்கடன்முகட்டெழு மிளம்பி
றையுயற்குழந்தைக், கேறவிடுமோடமென வான்மீன்
றடந்திரை யெடித்தெரியுநெடுமீ னெனத்,—தரளம்பதி
ந்திட்ட மணிமுறுவலவரோடு தருநிழற்செல்வ ருய்க்
குந், தமனியவிமானமும் வெயிற்கதிர்ப்போர்வையான்
றனியாழிதிசை யுருட்ட,—வுருளுங்கொடித்தேரும் வீ
ற்றுவீற்றெழில்புனைந் தோட்டுபொற்றெப்ப மென்ன,
வுலகேழுமலையெட்டு மொழுகுகதிர்விழுதுவிடு மொ

ண்ணிலாப்புணரி கோப்பத்,—திரளும்பளிக்குமாடங்கள்பொலிவேளுர சிறுபறை முழக்கியருளே, தென்கலைக்கும்பழைய வடகலைக்குந்தலைவ சிறுபறைமுழக்கியருளே. (கூ)

மொய்ம்பிற்பெரும்புவன மொக்கச்சுமக்கின்ற மோட்டாமைமூதுகுளுக்ஈ, முடவுப்படங்கிழிந் தரவரசிளையிர முடித்தலையு மூளைபொங்கக், கம்பக்கடாயானை யெட்டும்பிடர்த்தலை கழுத்தொடுமுரிந்து கவிழக், கதிர்மணிச்சூட்டுநெட் டரவெட்டும்வடவைக் கடிங்கனற்கண்பிதுங்க,—வம்பொற்றடம்புரிசை யெழுபெருந்தட்டுருவி யண்டகூடத் தளவலா, லவரவர்வழங்குகற் கிடலைக்கடையென வடிக்கேழ நிலையேழுமாஞ்,—செம்பொற்றிருக்கோபுரங்கள்பொலிவேளுர சிறுபறைமுழக்கியருளே, தென்கலைக்கும்பழைய வடகலைக்குந்தலைவ சிறுபறைமுழக்கியருளே. (சு)

தரிக்குஞ்சுடர்ப்பரிதி முழுமதிக்கடவுளொடு தடமதில்கட்டந்த கருகர், சாரவரிதாற்புவன கோடிகட்கொளி செயச் சதுமுகன்கற்பந் தொறும்,—விரிக்கின்றவிருசுடரு மொருவழித்தொக்கென வியன்கதிர்ப்படல மூடி, வீங்கிருள்விழுங்குசெம் மணிமாட நிலையுமொளி விளைபசுங் கதிர்வெண்புரி,—புரிக்குஞ்செழுந்தாளமாடமும் வெயிலினெடு பொழிநிலாப் போர்ப்பமுற்றும், போதுதெரியாமையிற் குழுதமொடுசதவிதழ்ப் போதுமே யிருபோதையுங்,—தெரிக்குந்தடம்பணை யுடுத்ததமிழ்வேளுர சிறுபறை முழக்கியருளே, தென்கலை

க்கும்பழைய வடகலைக்குருகலைவ சிறுபறைமுழக்கிய
ருளே. (கூ)

வேறு.

மழைமுகில்பிளிறு முழக்கெனவிரிசிறை மடமயி
னமகவ, மால்கட்லோலிடு மொலியெனவிரக மடந்
தையர் மனநெகிழப்,—பழமறையார்ப்பென வாகுதி
வேட்டெழு பண்ணவருண்மகிழப்,பரஞாதத்தொலியெ
ன வனுபூதிபலித்தவர் நெக்குருக,— யழலவிர்சோதி
யெமையனடஞ்செய வாயிரமங்கையிறை, ணைறு
வைத்திடு குடமுழவொடுசுட ராழியவன்கொட்டி,—
முழவெனவமரரு மூனிவருமார்ப்ப முழக்குக சிறுப
றையே, முத்தமிழ்பயில்பரி திப்பதிமுருகன் முழக்கு
க சிறுபறையே. (சு)

பெருவெளிமுகடிறந்திட் டண்டப்பித்திகைவெடி
யாமே, பேரண்டத்துளவேதண்டங்கள் பிதிர்ந்துதிரா
காமே,—குருமணிசிதறிய வெண்ணவுடுத்திரள் கொட்
டிண்டுதிராமே, குவடுபடுந்திசை செவிடுபடச்சிலர் கு
டர்கள்குழம்பாமே,—திருவிரலொடுகக கண்களினுஞ்
செங் குருதிதும்பாமே, சேயொளிநின்று துளும்பிட
நின்சிறு செங்கைவருந்தாமே,—மூருகலர்தாரவெரு
மூறை மெல்லமுழக்குக சிறுபறையே, முத்தமிழ்பயி
ல்பரிதிப்பதிமுருகன் முழக்குக சிறுபறையே. (எ)

வம்மினெனப்புல வோரையழைத்திடு வண்கொடை
முரசமென, வடகலைதென்கலை யொடுபயிலுங்கவி வா
ணர்களோடிவர, — வம்மென்மடப்பிடி பொன்னுலகின்

றவணங்கைமணம்புணரு, மணிகிளர்மணிமுர சென்ன வெமையஞ்டம்மை மனங்குளிரத்,—தெம்முனைசாய ச் சமர்விளையாடிச் செங்களவேள்வி செயுங், திறன்முர செனவிமை யவர்விழவயரச் செழுநகர்வீதிதொறு,— மும்முரசமுமதிர் காவிரிநாடன் முழக்குக சிறுபறை யே, முத்தமிழ்பயில்பரி திப்பதிமுருகன் முழக்குக சி றுபறையே. (அ)

வே று.

பெருகுசுவைக்தெளி நறவொழுகக்கனி கனியமு தே,பிடிநடைகற்றிடவடிகள் பெயர்த்திடுமடவனமே,— கருவரைகக்குட னுருகமிழற்றுமொர் கிளியரசே, க ருணைசெயத்தகு மலியனிடத்தெனு மொழிபுகலா,— வருளில்புனத்தவர் மகளிருபொற்பதம் வருடல்செயா, வவண்முனைதித்துங்கின் முடியின்முடித்திடு கரமலராற்,— பருவயிரப்புய சயிலன்முழக்குக சிறுபறையே, பரிதி புரிச்சிறு குமரன்முழக்குக சிறுபறையே. (கூ)

இழுமென் மொழித்தெளி தமிழின்வடித்திடு நவசர மே, யிதயவிருட்டற வுணர்விலுதித்திடு சுடரொளியே, —கழுவுமணிக்கல னடுவிலிழைத்திடு குலமணியே, க னிதருமுக்கனி யொடுவடிகட்டிய சுவையமுதே, யொ ழுகுறைச்செழு மலர்விரியக்கமழ் புதுமணமே, யு ருகுமுளத்தருள் பெருகியுவட்டெழு சலநிதியே,— பழமறைகட்கொரு முதல்வன்முழக்குக சிறுபறையே, பரிதிபுரிச்சிறு குமரன்முழக்குக சிறுபறையே. (கo)

சிறுதேர்ப்பருவம்

போரோடுபடைதுறந் துடலிறந்தோடுசெம் புனலோ
டவோடி நிமிரும், புணரிப்பெருந்தானை யவுணப்படை
த்தலைவர் பூதப்படைத்தலைவர் முன்,—முரோடவிழ்ந்தி
ட்ட குஞ்சிக்கிமைத்திட்ட தழல்விழிக்கெதிர் செலாத,
காலுக்குவாள்சோர் தடக்கைக்குராமனுக் காலிக்குவெ
லி தோலெனப், பிரோடுகொங்கைக் கணீரோடுவெள்
ளருவி பெருகக்கடைக்க ணிற்கும், பெய்வளையவர்க்
கோத வவர்விழிகடொறுமூளம் பேதையர்கள் கண்
டொறுமெனத்,—தேரோடுமொருபெருஞ் சிலையோடு
நின்றவன் சிறுதேருருட்டி யருளே, திருவளரவளர்கந்
த புரிவளரிளங்குமர சிறுதேருருட்டி யருளே. (க)

கம்பக்களிற்றுக் கடற்றானைவீரர்கட் கடையிற்சடை
க் கனலெழக், கண்டொட்டுணுஞ்சில மருட்பேய்களிங்
தெழு கடுங்குருதிவெள்ள மூழ்கிக்,—தும்பைத்தலைச்
செம் மயிர்ச்சிகையினைச்சுடு கனற்சிகையெனப் பதை
ப்பச், சூட்டிறைச்சிக்குச் சிணுங்குங்குறட்பேய்க்கொ
ர் சூர்ப்பேய்கொழுந்தசைகள் கோத்,—தம்பிற்சுடத்தா
ன் கவந்தமொடுதொந்தமிட் டாடும்பறந்தலை நிலத், தா
னைப்பிணக்குன்று மவுணப்பிணக்காடு மளற்றுபட்டொ
ழிய நின்றோர்,—செம்பொற்றடந்தே ருருட்டிவருசே
வகன் சிறுதேருருட்டி யருளே, திருவளரவளர்கந்த பு
ரிவளரிளங்குமர சிறுதேருருட்டி யருளே. (உ)

வண்டேறுசெந்நிறப் பங்கித்தலைக்கமல வனமூழ்கு
ருதி யாற்று, மாலியானைகையெடுத் தார்த்துநீர்த்தப்புண
ரி மகாமீனென நினைந்து,— கொண்டேகுசிறுகுடர்ப்

பெருவலியெடுத்தெறி குறட்பேய்நெடுஞ் சினமுறக், குறுகரிபிடித்தீர்ப்ப வலறுவதும்வீரர்தொடு கொலைசெ மியவுண ருயிரை, — யுண்டேகுவதுமொருவன் விட வோலிடுங்கரிக் குதவவருதிகரி யேய்க்கு, மொல்லென் பறந்தலை மறந்தலைக்கொண்டசூ ருக்கிட்டவிந்திர ஞா லத்,—திண்டேனையுருளாது நிற்கப்பணித்தவன் சிறு தேருருட்டி யருளே, திருவளரவளர்கந்த புரிவளரிள ங்குமர சிறுதேருருட்டி யருளே. (கூ)

பைங்கட்சிறைக்கால் கடைக்கால்செயக்கிரிகள் விரி சிறைபடைத் தெழுவபோற், படருந்தன்வேகத்தி னெ க்கப்பறக்கப் பறந்தலைச்செந் தலையறும்,—வெங்கட்ட யித்திய ருடற்குறைதலைக்குறை விளைந்துயிரினைத் தொடர்ந்து, மீச்செல்லமாச்செல் லெனச்செலப்பூம்மரி விண்டூர்ப்ப தெனவுடுவுகப்,—பொங்கற்கடற்குட்ட ம ட்டதிக்குந்தமிற் போர்செயப்பார் கவிழவெம், பொறி யுடற்சேடன் படந்தூக்கியார்க்கும் புகைப்படலம்வட வா முகச், செங்கட்பசுந்தோகை வாம்பரியுதைத்தவன் சிறுதேருருட்டி யருளே, திருவளரவளர்கந்த புரிவள ரிங்குமர சிறுதேருருட்டி யருளே. (சு)

நெய்வைத்தகூந்தற் பிடிக்குதவநாற்கோட்டு நிகளத் தடங் குன்றுவா, னிமிருங்கதிர்க்குலைச் செங்கெலைப் பாகுபடி நெட்டிலைக்கன்னல்கொ லெனைக்,—கைவைத் திடப்பரி முகஞ்செய்துவெய்யோன் கடும்பரியைமாட்பு க் கொளுங், கழனிவிரிகாவிரித் திருநாட்கற்பகக் கா ட்டிற்பிறந்து பிரியா,—மெய்வைத்தகாதன்மை யரமக

ளிர்போய வெள்ளங்கிளைத் தாடியோர், மென்னடைக் கேக்கற்ற பிடிபின்பிடிக்கமுலே வேழங்களுட னுலாவு ந்,—தெய்வப்பிடிக்குக் கிடைத்தொருமழகளிறு சி றுதேருருட்டி யருளே, திருவளரவளர்கந்த புரிவளரி ளங்குமர சிறுதேருருட்டி யருளே. (நு)

பற்றுவிற்காமன் கொடிப்படைக்கூலொம் படைவீ டுகயல் கடாவும், பழனங்களோவஸ்தர சாலிபூஞ்சோ லைப் பரப்பெலாங்காற் றேரொடுங்,—கொற்றவங்கங் குற்கடாயானையுங் கட்டுகூடமேயனினு மருகக், கோம கன்குடிகொண்ட சோணைசோணைடு குங்குமங்கொட் டுதிண் டோட்,—பொற்றடங்குன்றினிரு கொங்கைப் பொருப்புமொரு பூங்குழற்காடும் வெயில்கால், புனைம ணிக்கலையல்குன் மாக்கடலுமேந்தியோர் புனத்கின்க ண்மிக நுடங்குஞ்,—சிற்றிடைக்கொல்குமென் கொடி படரின்றவன் சிறுதேருருட்டி யருளே, திருவளரவ ளர்கந்த புரிவளரிளங்குமர சிறுதேருருட்டி யருளே.(ரு)

கோல்பாய்பசும்புண் ணசும்புகும்பத்தடங் குன்றுக வுண்மடைதிறந்து, கொட்டுதெட்டருவியொடு தேனரு வியுந்திரைகொழித்துடன் கோப்பமேதிப்,—பால்பாய் பெருக்காறு வட்டெழுகறன்றுனைப் பாவையொடுங் குடையுமப், பாகீரதிக்குநிகர் தண்டுறைதொறுந்திக்கு பாலர்மேற்படையெடுத்து,—வேல்பாய்நெடுங்கட் சட் டற்றுனையொடுமொருவன் மேற்செல்ல நாற்றிசையிலும், வெற்றிக்கயற்கொடி யெடுத்தெனவெடுத்தெறியும் வெ

ண்டினை கிழித்துவெடிபோஞ்,—சேல்பாய்தடம்பணையு
டுத்தகாவிரிநாட சிறுதேருருட்டியருளே, திருவளரவ
ளர்கந்த புரிவளரிளங்குமர சிறுதேருருட்டியருளே, ()

மீத்தந்தமாகத்து மேகத்தினைமுமு மீனிரியல்போ
கவுகளும், வெடிவாளாமதிய கிடைத்தூற்றுதெள்ளமு
த வெள்ளருவியாற் பசுந்தண், —காத்தந்தசண்பகப் பூ
வேரிமாரிசெய் காவேரியாயிரமுகக், கங்கையாகச்செ
ய்து மீட்டுநாற்கொட்டுவெங் களிறுபிளிறத்தாவிவான்,
பூத்தந்தகற்பகக் காட்டினையுழக்கிவிரி பொற்முகெழுப்
பிமற்றப், பூந்துகட்படலத்தி னுற்றெய்வநதியையும்
பொன்னிநதியாசச் செயுந், —தேத்தந்தகண்பணையு டு
த்தநீமபுனலை சிறுதேருருட்டி யருளே, திருவளரவ
ளர்கந்த புரிவளரிளங்குமர சிறுதேருருட்டி யருளே ()

கள்ளவிழ்நறுங்கொடிகள் கமுநிற்படர்ந்துபூங் கற்ப
கத்தும் படர்தலாற், காமன்பெருஞ்செல்வ மன்னவர்க
ள்குழுமியக் கமுகின்கமுக்கில் யாத்த,—வொள்ளொ
ளியசெம்மணிப் பொன்னூசல்பன்முறை யுதைந்தாட
வாடுந் தொறு, மொண்கமுகொடுந்துணர்ப் பைங்கற்ப
ககக்காடு மொக்கவசையத் தலையசைத்,—கள்ளிலையலங்
கல்வே லெம்பிரானைப்பாடி யாடுகின்றுனைத் தா, மலர்
மாரிபொழிவபோ லங்கற்பகத்தெய்வ மம்பொன்மலர்
மாரி தூர்க்குந்,—தெள்ளுதமிழ்விரிபுனற் காவிரித்தி
ருநாட சிறுதேருருட்டி யருளே, திருவளரவளர்கந்த
புரவளரிளங்குமர சிறுதேருருட்டி யருளே. (கூ)

வாராட்டுதடமூலைப் பாலொழுகிவழிவதென மணி
முறுவனிலவுகாலு, மழலைவாய்முத்துண்டு முச்சிமோ
ந்துந்திருமடித்தலத் திணிலிருத்திப்,—பாராட்டியுந்த
மது கண்மணிப்பாவைநின் படிவமாகக்காட்டியிப், பா
லொடிம்மிளையா டெனப்பணித்துந்தங்கள் பார்வைக
ளியாட்சியும்,—தாராட்டுமதிமுடித் தீராதவினைதீர்
த்த தம்பிரானுந்தம்பிரான், றழலுருவிலொருபாதி கு
ளிரவொருபுறநின்ற தையலையுமும்வைத்துச்,—சீராட்
டிவிளையாடு சேனபதிக்கடவுள் சிறுதேருருட்டியரு
ளே, திருவளரவளர்கந்த புரிவளரிளங்குமர சிறுதே
ருருட்டியருளே. (கo)

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

மதுரை

அங்கயற்கண்ணம்மை

அல்லது

மீனாக்ஷியம்மை

பிள்ளைத்தமிழ்

மூலபாடம்.

குமரகுருபரசுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்டது.

இஃது

திருத்தணிகை

சரவணப்பெருமாளையரவர்களால்

பதிப்பிக்கப்பட்டபிரதிக்கிணங்கப்

பார்வையிடப்பட்டு

ஊ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்:

1881.

உ

கணபதிதுணை.

மதுரை

மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்.

விநாயகக்கடவுள்.

கார்கொண்ட கவுண்மதக் கடைவெள்ள முங்கட்
கடைக்கடைக் கனலு மெல்லை, கடவாது தடவுக்
குழைச்செவி முகந்தெறி கடைக்கா றிரட்ட வெங்
கோன்,— போர்கொண்ட வெண்டோட் பொலன்
குவடு பொதியும்வெண் பொடிதுடி யடித்து வைத்
துப், புழுதியாட் டயராவொ ரயிராவ ணத்துலவு
போர்க்களிற் றைத்து திப்பாம்,—தார்கொண்ட ம
திமுடி யொருத்தன் றிருக்கண்மலர் சாத்தக் கிளர்
ந்து பொங்கித், தவழுமிள வெயிலுமழ நிலவுமள
வளவ்வாற் றண்ணென்று வெச்சென்று பொன்,—
வார்கொண் டணிந்தமுலை மலைவல்லி கர்ப்பூர வல்
லியபி ராம வல்லி, மாணிக்க. வல்லிமர கதவல்லி
யபிடேக வல்லிசொற் றமிழ் தழையவே.

காப்புப்பருவம்.

திருமால்.

மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று
மாசுணச் சூட்டு மோட்டு, மால்களிறு பிடர்வைத்த

வளொளி விமானத்து வாலுளே மடங்க ருங்கும்,—அணிகொண்ட பீடிகையி னம்பொன்முடி முடிவை த்தெ மையனெடு வீற்றிருந்த, அங்கயற் கண்ணமு தை மங்கையர்க் கரசியையெ மம்மனையை யினிது காக்க,—கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத் தோ டுதேங் கலுழிபாய்ந் தளறுசெய்யக், கழனிபடு கட வையிற் கமலத் தணங்கரசொர் கையணை முகந்து செல்லப்,—பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப் பணைத்தோ ளெருத்த லைப்பப், பழமறை கண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலே. (க)

பரமசிவன்.

சிகர வடவனை குனிய நிமிர்தரு செருவி லொரு பொரு வில்லெனக் கோட்டினர், செடிகொள் பறி தலை யமண ரெதிரெதிர் செலவொர் மதலைசொல் வையையிற் கூட்டினர், திருவு மிமையவர் தருவு மாவொலி செயவ லவர்கொள நல்குகைத் தீட்டி னர், சிறிய வெனதுபுன் மொழியும் வடிதமிழ் தெரி யுமவர்முது சொல்லெனச் சூட்டினர்,—பகரு மிசை திசை பரவ விருவர்கள் பயிலு மியறெரி வெள்வ ளைத்தோட்டினர், பசிய வறுகொடு வெளிய நிலவிரி பவள வனமடர் பல்சடைக் காட்டினர், பதும முத ல்வனு மெழுத வரியதொர் பனுவ லெழுதிய வைதி கப் பாட்டினர், பரசு மிரசித சபையி னடமிடு பரத பதயுக முள்ளம்வைத் தேத்துதும்,—தகர மொழு கிய குழலு நிலவுமிழ் தரள நகையுமெ மையனைப் பார்த்தெதிர், சருவி யமர்பொரு விழியு மறுகிடை தளர வளர்வதொர் செவ்விமுற் றுக்கன, தனமு மனனுற வெழுதி யெழுதரு தமது வடிவையு மெள்

ளிமட் டேற்றிய, தவள மலர்வரு மிளமி ஞெடுசத
தளமின் வழிபடு தையலைத் தூத்திரை,—மகரமெறி
கட லமுதை யமுதுகு மழலை பழகிய கிள்ளையைப்
பேட்டன, மடவ நடைபயில் பிடியை விரைசெறி
வரைசெய் புயமிசை வையம்வைத் தாற்றிய, வழுதி
யுடையகண் மணியொ டிலவுபெண் மணியையணி
திகழ் செல்வியைத் தேக்கமழ், மதுரமொழுகிய
தமிழி னியல்பயின் மதுரை மரகத வல்லியைக்
காக்கவே. (உ)

சித்திவிநாயகன்.

கைத்தல மோடிரு காடக் கனைத்திரை, கக்குகடா
முடைக் கடலிற் குளித்தெமர்,—சித்தம தாமொரு
தறியிற் றுவக்குறு, சித்திவி நாயக னிசையைப் பழி
ச்சுதும்,— புத்தமு தோவரு டழையத் தழைத்த
தோர், பொற்கொடி யோவென மதுரித் துவட்டெ
ழு,—முத்தமிழ் தேர்தரு மதுரைத் தலத்துறை,
முத்தன மேவுபெ ணரசைப் புரக்கவே. (ஊ)

முருகவேள்.

பமர மடுப்பக் கடாமெடுத் தூற்றுமோர் பகடுநட
த்திப் புலோமசைச் சூர்ப்புயல், பருகி யிடக்கற்
பகாடவிப் பாற்பொலி பரவை யிடைப்பத் மமா
தெனத் தோற்றிய,— குமரி யிருக்கக் கலாமயிற்
கூத்தயர் குளிர்புன மொய்த்திட் டசாரலிற் போய்
ச்சிறு, குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு கும
ரனே முத்தக் குமாரனைப் போற்றுதும்,—இமிழ்தி
ரை முற்றத் துமேருமத் தார்த்துமுள், ளெயிறுகு
ச்சுப் பணடவித் தாப்பிசைத், திறுக விறுக்கித்து
ழாய்முடித் தீர்த்தனே டெவருமதித்துப் பராபவத்

தீச்சுட,—அமுதுசெய் வித்திட் டபோனகத் தாற் சுட ரடருமிருட்டுக் கிரீவமட் டாக்கிய, வழகிய சொக்கற் குமால்செய்த தோட்டிக லமர்செய்கய ற்கட் குமாரியைக் காக்கவே. (சு)

நான்முகன்.

மேகப் பசுங்குழவி வாய்மடுத் துண்ணவும் விட் புலம் விருந்தயரவும், வெள்ளமுதம் வீசுங் கருந்தி ரைப் பைந்துகில் விரித்துடுத் துத்திவிரியும்,—நாகத்து மீச்சுடிகை நடுவட்கிடந்தமட நங்கையைப் பெற்றுமற்றந், நாகணைத் துஞ்சுதன் றந்தைக்கு வந் துதவு நளினக் குழந்தைகாக்க,—பாகத்து மாகதக் குன்றொன்றொர் தமனியக் குன்றொடு கிளைத்துநின் ற, பவளத் தடங்குன் றுளக்கண்ணதென்றப் பரஞ் சுடர் முடிக்குமுடிமூன்,—றுகத் தமைத்துப்பி னெ ருமுடிதன் முடிவைத் தணங்காசு வீற்றிருக்கும், அபிடேக வல்லியை யளிக்குல முழக்குகுழ லங்க யற் கண்ணமுதையே. (நு)

தேவேந்திரன்.

சுழியுங் கருங்கட் குண்டகழி சுவற்றுஞ் சுடர்வே ற்கிரிதிரித்த, தோன்றற் களித்துச் சுறவுயர்த்த சொக்கப் பெருமான் செக்கர்முடி,—பொழியுந் தர ங்கக் கங்கைவிரை புனல்கால் பாய்ச்சத் தழைந்து விரி, புவனந் தனிப்பூத் தருள்பழுத்த பொன்னங் கொடியைப் புரக்கவழிந்,—திழியுந் துணர்க்கற் பக த்தினை விதழ்த்தேன்குடித்துக் குமட்டியெதி,கொடு க்குஞ் சிறைவண் டுவட்டுறவுண் டிசைக்கக் கசைக்கு மதக்களுழிக்,—குழியுஞ்சிறுக ணேற்றுருமுக் குர ல்வெண் புயலுங் கரும்புயலுங், குன்றங் குலையவு கைத்தேறுங் குலிசத்தடக்கைப் புத்தேளே. (சூ)

திருமகள்.

வெஞ்சூட்டு நெட்டிடல் விரிக்கும் படப்பாயன்
மீமிசைத் துஞ்சு நீல, மேகத்தி னுகத்து விடுசுடர்ப்
படலைமணி மென்பர லுறுத்த நொந்து,—பஞ்சூட்டு
சீறடி பதைத்துமதன் வெங்கதிர் படுமிள வெயிற்கு
டைந்தும், பைந்துழாய்க் காடுவிரி தண்ணிழ லொ
துங்குமொர் பசுங்கொடியை யஞ்ச லிப்பாம்,—மஞ்
சூட் டகட்டுநெடு வான்முகடு துருவுமொரு மறை
யோதி மஞ்சலிக்க, மறிதிரைச் சிறைவிரியு மாயிரமு
கக்கடவுண் மந்தாகினிப் பெயர்த்த,—செஞ்சூட்டு
வெள்ளோ திமங்குடி யிருக்கும்வளர் செஞ்சடைக்
கருமி டற்றுத், தேவுக்கு முன்னின்ற தெய்வத்தை
மும்முலைத் திருவைப் புரக்கவென்றே.

கலைமகள்.

வெள்ளித் தகட்டுநெட் டேடவிழ்த் தின்னிசை
விரும்புஞ் சுரும்பர் பாட, விளைநறவு கக்கும் பொ
லன்பொகுட் டலர்கமல .வீட்டுக் கொழித் தெடுத்
துத்,—தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலி னன்பி
னைந் திணையென வெடுத்த விறைநூற், றெள்ளமுது
கூட்டுணுமொர் வெள்ளோதி மத்தினிரு சீறடி முடி
ப்பம் வளர்பைங்,—கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை
யொழுகுதீங் கிளவியுங் களிமயிற்குக், கிளரிளஞ் சா
யலு நவ்விக்கு நோக்கும்விரி கிஞ்சுகச் சூட்டரசன
ப்,—பிள்ளைக்கு மடநடையு முடனுடி மகளிர்க்கொர்
பேதைமையு முதவி முதிராப், பிள்ளைமையின் வள்
ளன்மை கொள்ளுமொரு பாண்டிப் பிராட்டியைக்
காக்க வென்றே. (அ)

காளி.

வடிபட்ட முக்குடுமி வடிவே றிரித்திட்டு வளைக
ருங் கோட்டு மோட்டு, மகிடங் கவிழ்த்துக் கடாங்
கவிழ்க்குஞ் கிறுகண் மால்யானை வீங்க வாங்கும்,—
துடிபட்ட கொடிநுண் ணுசுப்பிற் குடைந்தெனச்
சுடுகடைக் கனலிதூண்டுஞ், சுழல்கண் முடங்குளை
மடங்கலி யுகைத்தேறு சூரரிப் பிணவு காக்க,—பிடி
பட்ட மடநடைக் கேக்கற்ற கூந்தற் பிடிக்குழாஞ்
சுற்ற வொற்றைப், பிறைமருப் புடையதொர் களிற்
றினைப் பெற்றெந்தை பிட்டுண்டு கட்டுண்டு நின்,—
றடிபட்ட திருமேனி குழையக் குழைத்திட்ட வணி
மணிக் கிம்புரிக்கோ, டாகத்த தாகக் கடம்பாட வி
க்குள்விளை யாடுமொர் மடப்பிடியையே.

சத்தமாதர்கள்.

கடகளி றுதவுக பாய்மிசைப் போர்த்தவள் கவிகு
விதுறுகலின் வாரியைத் தூர்த்தவள், கடல்வயி றெ
ரியவொள் வேலினைப் பார்த்தவள் கடிகமழ் தரும
லர் தார்முடிச் சேர்த்தவள்,—இடியுக வடலரி யேறு
கைத் தார்த்தவள் எழுதரு முழுமறை நூலினிற் கூ
ர்த்தவள், எயிறுகொ டுழுதெழு பாரினைப் பேர்த்த
வள் எனுமிவரொழுவர்க டாண்முடிச் சூட்டுதும்,—
குடமொடு குடவியர் பாணிகைக்கோத்திடு குரவை
யு மலதொர்ப ணுழ்முடிச் சூட்டருள், குதிகொள நட
மிடு பாடலுக் கேற்பவோர் குழலிசை பழகளி பாடி
டக் கேட்டுடை,—மடலவிழ் துளபந ருவெடுத்
தூற்றிட மழகளி றெனவெழு கார்முகச் சூற்புயல்,
வரவரு மிளையகு மாரியைக்கோட்டெயின் மதுரை
யில்வளர்கவு மாரியைக் காக்கவே.

முப்பத்துமூவர்.

அமரில்வெங்கிடிம வுதியர்பின்னிடுமொ ரபயர்மு
ன்னிடுவ னத்தொக்க வோடவும், அளவுமெம்மு
டைய திறையிதென்னமுடி யரசரொண்ணிலரொர்
முற்றத்துவாடவும், அகிலமன்னரவர் திசையின் ம
ன்னரிவ ரமரரென்னுமுரை திக்கெட்டு மூடவும்,
அமுதவெண்மதியின் மரபையுன்னியுனி யலரியண்
ணன்முழு வெப்பத்து மூழ்கவும்,—குமரிபொன்னி
வையை பொருநைநன் னதிகள் குதிகொள்விண்ண
தியின் மிக்குக்குலாவவும், குவடுதென்மலையி னிகர
தின்மைசுரர் குடிகொள் பொன்மலை துதித்துப் பரா
வவும், குமரர்முன்னிருவ ரமரரன்னையிவள் கும
ரியின்னமுமெ னச்சித்தர்பாடவும், சூரவைவிம்மு
வர மகளிர் மண்ணிலெழில் குலவுகன்னியர்கள் கை
க்கொக்க வாடவும்,—கமலமுன்னியிடு மரசவன்ன
மெழு கடலிலன்னமுட னட்புக்கைகூடவும், கரிய
செம்மலொடு மிளையசெம்மல்விடு கருடன் மஞ்ஞை
யொடொர் கட்சிக்குளுடவும், கடவிவிண்ணரசு ந
டவும்வெம்முனைய களிறுகைம்மலைசெல் கொப்பத்
துவீழவும், கனகமன்னுதட நளினிதுன்னியிரு கம
லமின்னுமொரு பத்மத்துண்மேவவும்,— இமயமெ
ன்னுமனு முறைகொடென்னருமெ மிறையைநன்ம
ருகெ னப்பெற்றுவாழவும், எவர்கொல் பண்ணவர்
க ளெவர்கொன்மண்ணவர்க ளெதுகொல் பொன்னு
லகெ னத்தட்டுமாறவும், எழில்செய் தென்மதுரை
தழையமும்மூலையொ டெழுமெனம்மனோ னப்புக்
கொர்காவலர், இருவரொண்மர்பதி னெருவர்பன்னி
ருவ ரெனும்விண்ணவர்கள் முப்பத்துமூவரோ(கக)

காப்புப்பருவ முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

கீராட்டி யாட்டுபொற் சுண்ணங் திமிர்ந்தள்ளி
நெற்றியிற் றொட்டிட்ட வெண், ணீற்றினெடு புண்
டரக் கீற்றுக்கு மேற்றிடவொர் நித்திலச் சுட்டி சா
த்தித்,—தாராட்டு சூழியக் கொண்டையு முடித்து
த் தலைப்பணி திருத்தி முத்தின், றண்ணெளி தது
ம்புங் குதம்பையொடு காதுக்கொர் தமனியக் கொ
ப்புமிட்டுப்,—பாராட்டு பாண்டிப் பெருந்தேவி தி
ருமுலைப் பாலமுத மூட்டி யொருநின், பாணறுகு
முதங் கனிந்தூறு தேறறன் பட்டாடை மடிநனப்
பச்,—சீராட்டி வைத்துமுத் தாடும் பசுங்கிள்ளை
செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்ம
லை மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடி யரு
ளே. (க)

உண்ணிலா வுவகைப் பெருங்களி துளும்பநின்
றுன்றிருத் தாதைநின்னை, ஒருமுறை கரம்பொ
த்தி வருகென வழைத்திடுமு னேடித் தவழ்ந்து
சென்று,—தண்ணுலா மழலைப் பசுங்குதலை யமுதி
னிய தாய்வயிறு குளிர வூட்டித், தடமார்ப நிறை
குங் குமச்சே றலைந்துபொற் றோய் தடக்கை
பற்றிப்,—பண்ணுலா வடிதமிழ்ப் பைந்தாமம் விரி
யும் பணைத்தோ ளெருத்த மேறிப், பாசொளிய
மரகதத் திருமேனி பச்சைப் பசுங்கதிர் ததும்ப
மணிவாய்த்,—தெண்ணிலா விரியநின் றூடும் பசுந்
தோகை செங்கீரை யாடி யருளே, தென்னற்கு மம்
பொன்மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரை
யாடி யருளே. (உ)

சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டிச் சுவ
ர்க்கா னிறுத்தி மேருத், தூணென்று நாட்டு வெ

விழுகடு மூடியிரு சுடர்விளக் கிட்டு முற்ற,—எற்று புன லிற்கழுவு புவளப் பழங்கல மெடுத்ததடுக் கிப் புதுக்கூழ், இன்னமுத முஞ்சமைத் தன்னோ பன் முறை யிழைத்திட வழித்த ழித்தோர்,—முற்றவெ ளி யிற்றிரியு மத்தப் பெருஞ் பித்தன் முன்னின்று தொந்த மிடவும், முனியாது வைகலு மெடுத்ததடுக் கிப்பெரிய மூதண்ட கூட மூடும்,—சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை செங்கீரை யாடி யருளே, தென்னற்கு மம்பொன்மலி மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடி யருளே. (கூ)

மங்குல்படு கந்தரச் சுந்தரக் கடவுட்கு மழகதிர்க் கற்றை சுற்றும், வாணயன மூன்றுங் குளிர்ந்தமுத கலைதலை மடுப்பக் கடைக்க ணேக்கும்,—பொங்கு மதர் நோக்கிற் பிறந்தவா னந்தப் புதுப்புனரி நீத்த மையன், புந்தித் தடத்தினை நிரப்ப வழியடியர்பாற் போக சாகரமடுப்ப,—அங்கனெடு ஞாலத்து வித் தின்றி வித்திய வனேத்துயிர்க ளுந்த ளிர்ப்ப, வரு ணமடை திறந்துகடை வெள்ளம் பெருக்கெடுத் தலையெறிந் துகள வுகளும்,—செங்கயல் கிடக்குங் கருங்கட் பசுந்தோகை செங்கீரை யாடி யருளே, தென்னற்கு மம்பொன்மலி மன்னற்கு மொருசெல் வி செங்கீரை யாடி யருளே. (சு)

பண்ணரு வரிமிடற் றறுகான் மடுப்பப் பசுந்தே றலா றலைக்கும், பதுமபீ டிகையுமுது பழமறை விரி ந்தொளி பழுத்தசெந் நாவு மிமையாக்,—கண்ணரு மரகதக் கற்றைக் கலாமஞ்ஞை கன்முகி றதும்ப வேங்கும், கார்வையும் வெள்ளெனவொர் கன்னி மா டத்துவளர் கர்ப்பூர வல்லி கதிர்கால்,—விண் ணருமதிமுயற் கலைகிழிக் திழியமுத வெள்ளருவி

பாயவெடிபோய், மீளுந் தகட்டகட் டிளவாளை மோதமுகை விண்டொழுகு முண்டகப்பூந்—,தெண்ணீர் வருவிபாய் மதுரைமர கதவல்லி செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்மலி மன்னற்குமொருசெல்வி செங்கீரை யாடி யருளே. (நி)

(வேறு,)

முகமதி யூடெழு நகைநில வாட முடிச்சூ ழிய மாட, முரிபுரு வக்கொடி நுதலிடை சுட்டி முரிப்பொ டசைந்தாட,—இகல்விழி மகரமு மம்மக ரம்பொரு மிருமக ரமுமாட, இடுநா புரவடி பெயரக்கிண் கிணைனுங்கிண் கிணியாடத்,—துகிலொடு சோர் தரு கொடிநுண் மருங்கு றுவண்டு துவண்டாடத், தொந்தி சரிந்திட வுந்தி கரந்தொளிர் சூலுடை யாலிடைமற்,—றகில சராசர நிகிலமொ டாடிட வாடுக செங்கீரை, அவனி தழைந்திட மவுலி புனைந்தவ ளாடுக செங்கீரை. (சு)

தசைந்திடு கொங்கை யிரண்டல தெனவுரை தருதிரு மார்பாடத், தாய்வரு கென்பவர் பேதை மை கண்டு தடும்புபு னகையாடப்,—பசைந்திடு ஞால மலர்ந்தமை வெளிறியொர் பச்சுடல் சொல்லவுமோர், பைங்கொடி யொல்கவு மொல்கி நடங்கிய பண்டி சரிந்தாட,—இசைந்திடு தேவை நினைந்தன வென்ன விரங்கிடு மேகலையோ, டிடுகிடை யாடவியற்கை மணம்பொதி யிதழ்வழி தேறலினே,—டசைந்தொசி கின்ற பசுங்கொடி யெனவினி தாடுக செங்கீரை, அவனி தழைந்திட மவுலி புனைந்தவ ளாடுக செங்கீரை. (எ)

பரிமள மூறிய வுச்சியின் முச்சி பதிந்தா டச்சுடாபொற், பட்ட முடன்சிறு சுட்டியும் வெயிலொடு

பனிவெண் ணிலவாடத்,—திருநுதன் மீதெழு குறு வெயர்வாடத் தெய்வ மணங்கமழும், திருமே னியின் முழு மரகத வொளியெண் டிக்கும் விரிந்தாட க்,—கருவிளை நாறு குதம்பை ததும்பிய காது தழை ந்தாடக், கதிர்வெண் முறுவ லரும்ப மலர்ந்திடு கமலத் திருமுகநின்,—அருள்விழி யொடும் வளர் கருணை பொழிந்திட வாடுக செங்கீரை, அவனி தழைந்திட மவுலி புனைந்தவ ளாடுக செங்கீரை. ()

குருமணி வெயில்விட மரகத நிழல்விரி குன்றே நின்றாதும், குழலிசை பழகிய மழைமுகி லெழவெ முழ கொம்பே வெம்பாசம்,—மருவியபிணிகெட ம லைதரு மருமை மருந்தே சந்தானம், வளர்புவ னமு முணர் வருமரு மறையின் வரம்பே செம்போதி ற்,—கருணையின் முழுகிய கயறிரி பசியக ரும்பே வெண்சோதிக், கலைமதி மரபிலொ ரிளமதி யென வளர் கன்றே யென்றோதும்,—திருமகள் கலைமக டலைமகண் மலைமகள் செங்கோ செங்கீரை, தெளி தமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில் செங்கோ செங்கீரை. (கூ)

சங்கு கிடந்தத டங்கை நெடும்புய றங்காய் பங் காயோர், தமனிய மலைபடர் கொடியென வடிவு தழைந்தா யெந்தாயென்,—றங்க ணெடும்புவ னங்க டொழுந்தொறு மஞ்சே லென்றோதும், அபயமும் வரதமு முபயமு முடையவ ணங்கே வெங்கோப க்,—கங்குன் மதங்கய மங்கு லடங்கவி டுங்கா மன் சேமக், கயல்குடி புகுமொரு துகிலிகை யெனநின் கண்போ லுஞ்சாயற்,—செங்கய றங்குபொ லன் கொடி மின்கொடி செங்கோ செங்கீரை,தெளிதமிழ்

மதுரையில் வளருமொ ரிளமயில் செங்கோ செங் கீரை. (கo)

செங்கீரைப்பருவ முற்றிற்று.

தாலப்பருவம்.

தென்னன் றமிழி னுடன்பிறந்த சிறுகா லரும்பத் தீயரும்பும், தேமா நிழற்கண் டுஞ்சுமிளஞ் செங்கட் கயவாய்ப் புனிற்றெருமை,—இன்னம் பசும்புற் கறி க்கல்லா விளங்கன் றுள்ளி மடித்தலநின், றிழிபா லருவி யுவட்டெறிய வெறியுந் திரைத்தீம் புனற் பொய்கைப்,—பொன்னங் கமலப் பசுந்தோட்டுப் பொற்ரு தாடிக் கற்றைநிலாப், பொழியுந் தரங்கம் பொறையுயிர்த்த பொன்போற் ரெடுதோ லடிப் பொ லன்சூட்,—டன்னம் பொலியுந் தமிழ்மதுரை க் கரசேதாலோ தாலேலோ, அருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணழுதே தாலோ தாலேலோ. (க)

வீக்குஞ் சிறுபைந் துகிற்ரூகை விரியுங்கலாப மருங்கலைப்ப, விளையாட் டயரு மணற்சிற்றில் வீட் டுக் கூடிபுக் கோட்டியிருள்,—சீக்குஞ் சுடர்தூங் க முன்மணியின் செந்தீ மடுத்த சூட்டடுப்பிற், செழு ந்தாட் பவளத் துவாடுக்கித் தெளிக்ரு நறுந்தண் டேறலுலை,—வாக்குங் குடக்கூன் குழிசியிலம் மது வார்த் தரித்த நித்திலத்தின், வல்சி புகட்டி வடித் தெடுத்து வயன்மா மகளிர் குழாஞ்சிறுசோ,—ரூக் கும் பெருந்தண் பணைமதுரைக் கரசே தாலோ தா லேலோ, அருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணழு தே தாலோ தலேலோ. (உ)

ஓடும் படலை முகிற்படல முவர்நீத் துவரி மேய்ந் துகரு, ஆறுங் கமஞ்சூல் வயிறுடைய வுகைத்துக்

கடவுட் கற்பகபபூங், —காடுங் தரங்கக் கங்கைநெடு
ங் கழியு நீந்தி யமுகிறைக்குங் கலேவெண் மதியின்
மூயறடவிக் கதிர்மீன் கற்றைத் திரைத்துதறி, —மூ
டுங் ககன வெளிக்கூட முகடு திறந்து புறங்கோத்த,
மூங்கீ ருழக்கிச் சினவாளே மூரிச் சுறவினேடும் வி
ளே, —யாடும் பழனத் தமிழ்மதுரைக் காசே தாலோ
தாலேலோ, அருள்சூழ் கொண்ட வங்கயற்கண் ணை
முதே தாலோ தாலேலோ. (ஙூ)

ஊறுங் கரடக் கடத்துமுகந் தூற்று மதமா மட
வியர்நின், றுதறுங் குழற்பூந் துகளட்டங்க வோட வி
டித்த குங்குமச்செஞ், —சேறு வழுக்கி யோட்டறு
க்குங் திருமா மறுகி லரசர்பெருந், திண்டேரொது
ங்கக் கொடிஞ்சிநெடுஞ் சிறுதே ருருட்டுஞ் செங்க
ண்மழ, —வேறு பொருவே லிளேஞர்கட விவுளி க
டைவாய் குதட்டவழிந், திழியும் விலாழி குமிழி
யெறிந் திரைத்துத் திரைத்து நுரைத்தொருபே, —
ாறு மடக்குந் தமிழ்மதுரைக் காசே தாலோ தா
லேலோ, அருள்சூழ் கொண்ட வங்கயற்கண் ணைமு
தே தாலோ தாலேலோ. (சு)

வார்க்குன் றிரண்டு சுமந்தொசியு மலர்க்கொம்
பனேயார் குழற்றுஞ்சு, மழலேச் சுரும்பர் புகுந்துழ
க்க மலர்த்தா துகுத்து வானதியைத், —தூர்க்கும்
பொதும்பின் மூயற்கலேமேற் றுள்ளி யகளு முசுக்க
லேயின், துழனிக் கொதுங்கிக் கழனியினெற் சூட்டு
ப் படப்பை மேய்ந்துகதிர்ப், —போர்க்குன் றேறுங்
கருமுகிலே வெள்வாய் மள்ளர் பிணேயலிடு, பொரு
கோட் டெருமைப் போத்தினெடும் பூட்டியடிக்க
விடிக்குரல்விட், —டார்க்கும் பழனத் தமிழ்மதுரை

க் கரசே தாலோ தாலேலோ, அருள்சூற் கொண் டவங்கயற்கண் ணமுதே தாலோ தாலேலோ. (ஞ)

காரிற் பொழிமழை நீரிற் சுழியெறி கழியிற் சிறு குழியிற், கரையிற் கரைபொரு திரையிற் றலைவிரி கண்டலின் வண்டலினெற்,—போரிற் களிறை சே ரிற் குளிறை புனலிற் பொருகயலிற், பொழிலிற் சுருள்புரி குழலிற் கணிகையர் குழையிற் பொருக யல் போய்த், தேரிற் குமரர்கண் மார்பிற் பொலி தரு திருவிற் பொருவில்வரிச்,—சிலையிற் றிரள்புய மலையிற் புலவி திருத்திட வூழ்த்தமுடித்,—தாரிற் பொருதிடு மதுரைத் துரைமகள் தாலோ தாலே லோ, சங்கம் வளர்ந்திட நின்ற பொலன்கொடி தா லோ தாலேலோ. (சு)

சேனைத் தலைவர்க டிசையிற் றலைவர்கள் செருவிற் றலைவர்களாற், சிலையிற் றடமுடி தேரிற் கொடியொ டு சிந்தச் சிந்தியிடுஞ்,—சோனைக் கணைமழை சொ ரியப்பெருகிய குருதிக் கடலிடையே, தொந்த மிடு ம்பல் கவந்த நிவந்தொரு சுழியிற் பவுரிகொள,—ஆனைத் திரளொடு குதிரைத் திரளையு மப்பெயர் மீனைமுகந், தம்மனை யாடுக டற்றினை போல வடற் றினை மோதவெழுந்,—தானைக் கடலொடு பொலி யுந் திருமகள் தாலோ தாலேலோ, சங்கம் வளர்ந் திட நின்ற பொலன்கொடி தாலோ தாலேலோ(எ)

அமரர்க் கதிபதி வெளிறக் களிறெதிர் பிளிறக் குளிறியிடா, அண்ட மிசைப்பொலி கொண்ட லு கைத்திடு மமரிற் றமரிலெடும்,—கமரிற் கவிழ்தரு திசையிற் றலைவர்கண் மலையிற் சிறகரியும், கடவுட் படையொடு பிறகிட் டுடைவது கண்டு முகங்குளி

ராப்,—பமரத் தருமலர் மிலையப் படுமுடி தொலை யக் கொடுமுடிதாழ், பைம்பொற் றடவரை திரியக் கடல்வயி றெரியப் படைதிரியாச்,—சமரிற் பொரு திரு மகனைத் தருமயில் தாலோ தாலேலோ, சங்க ம் வளர்ந்திட நின்ற பொலன்கொடி தாலோ தாலே லோ. (அ)

முதுசொற் புலவர் தெளித்த பசுந்தமிழ் நூல்பா ழ்போகாமே, முளரிக் கடவுள் படைத்த வசுந்தரை கிழ்மே லாகாமே,—அதிரப் பொருது கலிப்பகை ஞ்றமிழ் நீர்நா டாளாமே, அகிலத் துயிர்க ளயர் த்து மறங்கடை நீணீர் தோயாமே,—சிதைவுற் றர சிய னற்றரு மங்குடி போய்மாய் வாகாமே, செழி யர்க் கபயரு மொப்பென நின்றுண ராதா ரோதா மே,—மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி தா லோ தாலேலோ, மலயத் துவசன் வளர்த்த பசுங் கிளி தாலோ தாலேலோ. (கூ)

தகரக் கரிய குழற்சிறு பெண்பிளை நீயோ தா யோன்வாழ், சயிலத் தெயிலை வளைப்பவ ளென்றெ திர் சீறுவீறுதா,—நிகரிட் டமர்செய் கணத்தவர் ங்திபி ராணை டேயோடா, நிலைகெட் டலைய வுடற் றவு டைந்தொ ராணை றுகாமே,—சிகரப் பொதி ய மிசைத்தவ ழுஞ்சிறு தேர்மே லேபோயோர், சிவனைப் பொருத சமர்த்த னுகந்தருள் சேல்போன் மாயாமே,—மகரத் துவச மூயர்த்தபொ லன்கொடி தாலோ தாலேலோ, மலயத் துவசன் வளர்த்த பசு ங்கிளி தாலோ தாலேலோ. (கo)

தாலப்பருவ முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

நாளவட் டத்தளிம னளினத் தொடுத்துத்தி நாக
ணையும் விட்டொ ரொட்டு, நாட்டத்த னும்பரம வீட
டத்த னுந்துஞ்சு கள்ளிருளி னுப்ப ணண்ட,—கோ
ளவட் டம்பழைய நேமிவட் டத்தினொடு குப்புற்று
வெற்பெட்டு மேழ், குட்டத்தி னிற்கவிழ மூதண்ட
வேதண்ட கோதண்ட மொடி சக்கர,—வாளவட்
டஞ்சுழல மட்டித்து நட்டமிடி மதுமத்தர் சுத்த
நித்த, வட்டத்தி னுக்கிசைய வொற்றிக் கனத்ததன
வட்டத்தை யொத்திட் டதோர்,—தாளவட் டங்
கொட்டு கைப்பாணி யொப்பவொரு சப்பாணி
கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ மதுரை
யில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டி யருளே(க)

பொய்வந்த நுண்ணிடை நுடங்கக் கொடிஞ்சிப்
பொலந்தேரொ டமர கத்துப், பொன்மேரு வில்
லியை யெதிர்ப்பட்ட ஞான்றம்மை பொம்மன்முலை
மூன்றி லொன்று,—கைவந்த கொழுநரொடு முள்
ளப் புணர்ச்சிக் கருத்தா னகத்தொ டுங்கக், கவிழ்
தலை வணக்கொடு மூலைக்கண்வைத் திடுமொரு க
டைக்கணைக் கழுத மூற்ற,—மெய்வந்த நாணினெ
டு நுதல்வந் தெழுங்குறு வெயர்ப்பினெ டியிர்ப்பு
வீங்கும், விம்மிதமு மாய்நின்ற வுயிரோவ மென
வூன்று விற்கடை விரற்கடை தழீஇத்,—தைவந்த
நாணினொடு தவழ்தந்த செங்கைகொடு சப்பாணி
கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ மதுரை
யில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டி யருளே. ()

பூமரு வெடிப்பமுகை விண்டதண் டலையின்ற
பூனநறுந் தளிர்கள் கொய்தும், பொய்தற் பிணக்க

ளொடு வண்டற் கலம்பெய்து புழுதிவிளை யாட்ட யர்ந்தும்,—காமரு மயிற்குஞ்சி மடவனப் பார்ப்பி னொடு புறவுபிற வும்வ ளர்த்தும், காந்தள்செங் கம லத்த கழுநீர் மணந்தெனக் கண்பொத்தி விளையா டியும்,—தீதமரு பசுங்கிள்ளை வைத்துமுத் தாடியுந் திரள்பொற் கழங்காடியும், செயற்கையா னன்றியு மியற்கைச் சிவப்பூறு சேயிதழ் விரிந்த தெய்வத்,—தாமரை பழுத்தகைத் தளிரொளி துளும்பவொரு சப்பாணி கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டி யருளே. (ஈ)

விண்ணளிக் குஞ்சுடர் விமானமும் பரநாத வெளியிற் றுவாத சாந்த, வீடுங் கடம்புபொதி காடுந் தடம்பணை விரிந்ததமிழ் நாடு நெற்றிக்,—கண்ணளிக் குஞ்சுந் தரக்கடவுள் பொலியுமறு காற்பிட மும்மெம் பிரான், காமர்பரி யங்கக் கவின்றங்கு பள்ளியங் கட்டிலுந் தொட்டி லாகப்,—பண்ணளிக் குங்குதலை யமுதொழுகு குமுதப் பசுந்தேற லூற லாடும், பைங்குழவி பெருவிரல் சுவைத்துநீ பரு கிடப் பைந்தேறலூறுவண்கைத்,—தண்ணளிக் கமலஞ் சிவப்பூற வம்மையொரு சப்பாணி கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந் தகொடி சப்பாணி கொட்டியருளே. (ச)

சேலாட்டு வாட்கட் கருங்கடற் கடைமடை திற ந்தமுத மூற்று கருணைத், தெண்டிரை கொழித்தெ றிய வெண்டிரை நெருப்பூட்டு தெய்வக் குழந்தை யைச்செங்,—கோலாட்டு நின்சிறு கணைக்காற் கிட த்திக் குளிப்பாட்டி யுச்சிமுச்சிக், குஞ்சிக்கு நெ ய்போற்றி வெண்காப்பு மிட்டுவளர் கொங்கையி

ற் சங்குவாக்கும்,—பாலாட்டி வாயிதழ் நெரித்தூட்டி யுடலிற் பசுஞ்சுண்ண முந்தி மிர்ந்து, பைம்பொற் குறங்கினிற் கண்வளர்த் திச்சிறிய பரூஉமணித் தொட்டி லேற்றித்,—தாலாட்டி யாட்டுகைத் தாமரை முகிழ்த்தம்மை சப்பாணி கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டி யருளே. (கு)

வானத் துருமொ டுடுத்திரள் சிந்த மலைந்த பறந்தலையின், மண்ணவர் பண்ணவர் வாளின் மறிந்தவர் மற்றவர் பொற்றொடியார்,—பானற் கணையு முலைக்குவடும்பொரு படையிற் படவிமையோர், பைங்குடர் மூளையொடும்புதி துண்டு பசுந்தடி சுவைகாணுச்,—சேனப்பந்தரி னலகைத் திரள்பல குரவை பிணைத் தாடத், திசையிற் றலைவர்கள் பெருநா ணையத்தச் சிறுநா ணெலி செய்யாக்,— கூனற்சிலையி னெடுங்கணை தொட்டவள் கொட்டுக சப்பாணி, குடைநிழ லிற்புவி மகளே வளர்த்தவள் கொட்டுக சப்பாணி. (சு)

சமரிற் பிறகிடு முதியரு மபயருமெதிரிட் டமராடத், தண்ட தரன்செல் கரும்பக டிந்திரன் வெண்பகடோடு டையாத்,—திமிரக் கடல்புக வருணன் விடுஞ்சுற வருணன் விடுங்கடவுட், டேரி னுகண்டெழ வார்வில் வழங்கு கொடுங்கோல் செங்கோலோ,—இமயத் தொடும்வளர் குலவெற் பெட்டையு மெல்லைக் கல்லினிதீ இ, மண்டிசையுந்தனி கொண்டு புரந்து வடாது கடற்றுறைதென்,—குமரித் துறையென வாடு மடப்பிடி கொட்டுக சப்பாணி, குடைநிழ லிற்புவி மகளே வளர்த்தவள் கொட்டுக சப்பாணி. (எ)

ஒழுகிய கருணை யுவட்டெழ வைத்தவ ருட்பார் வைக், குளநெகி ழடியர் பவக்கடல் வற்றவ லைத் தோடிக்,—குழையொடு பொருது கொலைக்கணை யைப்பிணை யைச்சீறிக், குமிழொடு பழகி மதர்த்த கயற்கண்ம டப்பாவாய்,—தழைகெழு பொழிலின் மூசுக்கலை மைப்புய லிற்பாயத், தவழிள மதிகலை நெக்குகு புத்தமு தத்தோடே,—மழைபொழி யிம ய மயிற்பெடை கொட்டுக சப்பாணி, மதுரையில் வளரு மடப்பிடி கொட்டுக சப்பாணி. (அ)

சென்றிடு வாளிகள் கூளிகள் காளிகள் ஞாளியி லாளியெனச், செருமலை செம்மலை முதலியர் சிந்தச் சிந்திட நந்திபிரான்,—நின்றில னுடலு முன்னழ கும்மவன் பின்னழ குங்காணு, நிலவுவிரிந்திடு குறு நகை கொண்டு நெடுங்கயி லைக்கிரியின்,—முன்றிலி னுடன் மறந்தம ராடியொர் மூரிச் சிலைகுனியா, முரிபுரு வச்சிலை கடைகுனி யச்சில முளரிக் கணை தொட்டுக்,—குன்றவி லாளியை வென்ற தடாதகை கொட்டுக சப்பாணி, குடைநிழ லிற்புவி மவளைக ளர்த்தவள் கொட்டுக சப்பாணி. (கூ)

செழுமறை தெளிய வடித்தத மிழ்ப்பதி கத்தோ டே, திருவரு ளமுது குழைத்துவி டுத்தமு லைப் பாலால்,—கழுமல மதலை வயிற்றைநி ரப்பிம யிற் சேயைக், களிறெடும் வளர வளர்த்தவ ருட்செவி லித்தாயே,—குழலிசை பழகி முழுப்பிர சத்திர சத்தோடே, குதிகொளு நறிய கனிச்சுவை நெக்க பெருக்கேபோல்,—மழலையி னமுதுகு சொற்கிளி கொட்டுக சப்பாணி, மதுரையில் வளரு மடப்பிடி கொட்டுக சப்பாணி. (கo)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப்பருவம்.

காலத் தொடுகற் பனைகடந்த கருவுலத்துப் பழ
ம்பாடற், கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுண்
மணியே யுயிரால,—வாலத் துணர்வி னீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த, மலர்க்கற்
பகமே யெழுதாச்சொன் மழலை ததும்பு பசுங்குத
லைச்,—சோலைக் கிளியே யுயிர்த் துணையாந் தோன்
ரூத் துணைக்கோர் துணை யாகித், துவாத சாந்தப்
பெருவெளியிற் றுரியங் கடந்த பரநாத,—மூலத்
தலத்து முளைத்த முழு முதலே முத்தந் தருகவே,
முக்கட் சுடர்க்கு விருந்திடு மும் முலையாய் முத்தந்
தருகவே. (க)

உருகி யுருகி நெக்குநெக்கு ளுடைந்து கசிந்திட்
டசும் பூறும், உழுவ லன்பிற் பழவடியா ருள்வைத்த
டத்தி லூற்றெடுத்துப்,—பெருகு பரமா னந்தவெ
ள்ளப் பெருக்கே சிறியேம் பெற்றபெரும், பேறே
யூறு நறைககுந்தற் பிடியே கொடி நுண் ணுசுப்
பொசிய,—வருகுங் குமக்குன் றிரண்டேந்து மலர்
ப்பூங் கொம்பே தீங்குழலின், மதுரங் கனிந்த பசு
ங்குதலை மழலை யருமபச் சேதாம்பன்,—முருகு வி
ரியுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே, முக்
கட்சுடர்க்கு விருந்திடுமும் முலையாய் முத்தந் தரு
கவே. (உ)

கொழுதி மதர்வண் டுழக்கு குழற் கோதைக் கு
டைந்த கொண்டலுகின், குதலைக் கிளிமென் மொ
ழிக் குடைந்த குறுங்கட் கரும்புங் கூன்பிறைக்
கோ,—டுழுதபொலன்சீ றடிக்குடைந்த செந்தாம
ரையும் பசுங்கழுத்துக், குடைந்த கமஞ்சூற் சங்கு
மொழு கொளிய கமுகுமழகு தொய்யில்,—எழுது
தடந்தோட் குடைந்த தடம் பணையும் பணைமென்

மூலைக்குடைந்த, இணைமா மருப்புந் தருமுத்துன் றிருமுத் தொவ்வா விகபரங்கள்,—முழுதுந் தரு வாய் நின்கனி வாய் முத்தந் தருகமுத்தமே, முக் கட் சுடர்க்கு விருந்திடுமும் மூலையாய்முத்தந் தரு கவே. (சு)

மத்த மதமாக் கவுட்டொருநான் மருப்புப் பொ ருப்பு மிசைப் பொலிந்த, வானத் தரசு கோயில்வ ளர் சிந்தா மணியும் வடபுலத்தார்,—நத்தம் வளர வளகை யர்கோ னகரில் வளரும் வான்மணியும், களினப் பொகுட்டில் வீற்றிருக்கு ங்கை மனைக் கோர் விளக்க மெனப்,—பைத்த சுடிகைப் படப்பா யற் பதுமநாபன் மார்பில் வளர், பரிதி மணியு மெம க்கம்மை பணில வாழி வேயீன்ற, — முத்த முகந்த நின்கனிவாய் முத்தந் தருக முத்தமே, முக்கட் சுட ர்க்கு விருந்திடுமும் மூலையாய் முத்தந் தருகவே.()

கோடுங் குவடும் பொருதரங்கக் குமரித் துறை யிற் படுமுத்தும், கொற்கைத் துறையிற் றுறைவா ணர் குளிக்குஞ் சலாபக் குவான்முத்தும்,—ஆடும் பெருந்தண் டுறைப் பொருனை யாற்றிற் படுதண் ணிலாமுத்தும், அந்தண் பொதியத் தடஞ்சார லரு வி சொரியுங் குளிர்முத்தும்,—வாடுங் கொடிநுண் ணுசுப்பொசிய மடவமகளி ருடனுடும், வண்டற் றுறைக்கு வைத்துநெய்த்து மணந்தாழ் நறுமென் புகைப் படலம்,—மூடுங் குழலாய் நின்கனிவாய் முத்தந் தருக முத்தமே, முக்கட் சுடர்க்கு விருந் திடுமும் மூலையாய் முத்தந் தருகவே. (ஞ)

வேறு.

பைவைத்த தத்திப் பரூஉச்சுடிகை முன்றிற் பசு ங்கொடி யுடுக்கை கிழியப், பாயிருட் படலங் கிழித்

தெழு சுடர்ப்பரிதி பரிதிக் கொடிஞ்சி மான்றேர்,—மொய்வைத்த கொய்யுளை வயப்புரவி வாய்ச்செல்ல முட்கோல் பிடித்து நெடுவான், முற்றத்தை யிருள்பட விழுங்குந் துகிற்கொடி முனைக்கணை வடிம்பு நக்கா,—மைவைத்த செஞ்சிலையு மம்புலியு மோட நெடு வான்மீன் மணந்துகந்த, வடவரை முகந்தநின் வயக்கொடி யெனப்பொலியு மஞ்சிவர் வளாக நொச்சித்,—தெய்வத் தமிழ்க்கூட றழையத் தழைத்தவ டிருப்பவள முத்த மருளே, சேல்வைத்த வொண் கொடியை வலம்வைத்த பெண்கொடி திருப்பவள முத்தமருளே. (சு)

பின்னற் றிரைக்கடன் மதுக்குட மறத்தேக்கு பெய்முகிற் காருடலம் வெண், பிறைமதிக் கூன்குயக் கைக்கடைஞ் சொடுபுடை பெயர்ந்திடை நுடங்க வொல்கு,—மின்னற் றடித்துக் கரும்பொற் றொடிக் கடைசி மெல்லியர் வெரீஇப் பெயரவான், மீன்க ணம் வெருக்கொள்ள வெடிவரால் குதிகொள்ளும் விட்புலம் விளைபுல மெனக்,—கன்னற் பெருங்காடு கற்பகக் காட்டுவளர் கடவுண்மா கவளங் கொளக், காமதே னுவுகின்று கடைவாய் குதட்டக் கதிர்க் குலை முதிர்ந்து விளையுஞ்,—செந்நெற் படப்பைமது ரைப்பதி புரப்பவ டிருப்பவள முத்தமருளே, சேல் வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொ டி திருப்பவள முத்தமருளே. (எ)

சங்கோ லிடுங்கடற் றுனைக்கு வெங்கிடு தராபதி கண் முன்றி றார்த்த, தமனியக் குப்பையுந் திசை முதல்வர் தடமுடித் தாமமுந் தலைம யங்கக்,—கொங்கோ லிடுங்கைக் கொடுங்கோ லொடுந்திரி குறும்பு ன் கொடிச்சுறவுநின், கொற்றப் பதாகைக் குழாத்

திணெடு மிரசிதக் குன்றினுஞ் சென்று லாவப்,—பொங்கோல வேலைப் புறத்திணெ டகத்தினிமிர் போராழி பரிதி யிரதப், பொங்காழி மற்றப் பொருப்பாழி யிற்றிரி புலம்பப் புலம்பு செய்யச்,—செங்கோ றிருத்திய மூடிச்செழியர் கோமக டிருப்பவள முத்த மருளே, சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி திருப்பவள முத்த மருளே. (அ)

வேறு.

பருவரை முதுபல வடியினி னெடுநில நெக்க குடக்கனியிற், படுநறை படுநிறை கடமுடை படுவ கடுப்பவுவட் டெழவும்,—விரிதலை முதலொடு விளை புல முலையவு முக்கி யமுட்சு றவின், விசையினின் வழிநறை மிடறெடி கமுகின்வி முக்குலை நெக்கு கவும்,—கரையெறி புணரியி னிருமடி பெருகுத டத்து மடுத்தகடக், களிறெடு பிளிறிட விகலிய முகிலினி ரட்டி யிரட்டியமும்,—மூசதிர் கடிநகர் மதுரையில் வளர்கிளி முத்த மளித்தருளே, முழுதுல குடைய தொர் கவுரியர் குலமணி முத்த மளித்தருளே. (கூ)

புதையிருள் கிழிதர வெழுதரு பரிதிவ ளைத்த கடற்புவியிற், பொதுவற வடிமைசெய் திடுவழி யடியர் பொருட்டலர் வட்டணையிற்,—றதைமலர் பொதுளிய களியளி குமிறுகு முற்றிரு வைத்தவளச், சதகள முளரியின் வனிதையை யுதவுக டைக்கண் மடப்பிடியே,—பதுமமொ டொழுகொளி வளையுகின லினமு கத்து மிடற்றுமுறப், பனிமதி யொடுசுவை யமுதமு துதலொடு சொற்குத லைக்கணிறிஇ,—முதுதமி முததியில் வருமொரு திருமகண் முத்தம

ளித்தருளே, முழுதுல குடையதொர் கவுரியர் குல மணி முத்த மளித்தருளே. (க0)

முத்தப்பருவம் முற்றிற்று.

வருகைப்பருவம்.

அஞ்சிலம் போலிட வரிக்குரற் கிண்கிணி யரற்று செஞ் சீறடி பெயர்த், தடியிடுந் தொறுநின் னலத்த கச் சுவடுபட் டம்புவி யரம்பை யர்கடம் —மஞ்சு தஞ் சளகத் திளம்பிறையு மெந்தைமுடி வளரிளம் பிறையு நாற, மணிநூ புரத்தவிழு மென்குரற் கோ வசையு மடநடைக் கோதொ டர்ந்துன்,—செஞ்சி லம் படிபற்று தெய்வக்கு ழாத்திணெடு சிறையோ திமம்பின் செலச், சிற்றிடைக் கொல்கிமணி மேகலை யிரங்கத் திருக்கோயி லெனவெ னெஞ்சக்,—கஞ்ச முஞ் செஞ்சொற் றமிழ்க்கூட லுங்கொண்ட காமர் பூங் கொடி வருகவே, கற்பகாடவியிற் கடம்பாட விப்பொலி கயற்க ணுயகி வருகவே. (க)

குண்டுபடு பேரகழி வயிறுளைந் தின்றடைங் கோ தையும் மதுர மொழுகுங், கொழிதமிழ்ப் பனுவற் றுறைப்படியு மடநடைக் கூந்தலம் பிடியு மறுகா ல்,—வண்டுபடு முண்டக மனைக்குடி புகச்சிவ மண ங்கமழ விண்ட தொண்டர், மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட மாணிக்க வல்லி வில் வே,—டுண்டுபடி மதிறுதற் றேறுகையொடு மளவில் பல தொல்லுரு வெடுத் தமர்செயுங், தொடுசிலை யெனக்கனை முகடுமுட்டிப்பூந் துணர்த்தலை வணங் கி நிற்குங்,—கண்டுபடு கன்னல்பைங் காடுபடு கூட ற் கலாப மாமயில் வருகவே, கற்பகா டவியிற் கட ம்பா டவிப்பொலி கயற்க ணுயகி வருகவே. (உ)

முயல்பாய் மதிக்குழவி தவழ்சூ லடிப்பலவின்
முட்பொதி குடக்கனிவாயோடு, முடவுத் தடந்தாழை
முப்புடைக் கனிசிந்த மோதிரீ ருண்டி ருண்ட,—
புயல்பாய் படப்பைத் தடம்பொழில்க ளன்றியேழ்
பொழிலேயு மொருங்க லைத்துப், புறமூடி மண்டச்
சுவர்த்தல மிடித்துப் புறக்கடன் மடுத்துழக்கிச்,—
செயல்பாய் கடற்றூனை செங்களங் கொளவம்மை
திக்குவிச யங்கொண் டகாள், தெய்வக் கயற்கொடி
க டிசைதிசை யெடுத்தெனத் திக்கெட்டு முட்ட
வெடிபோய்க்,—கயல்பாய் குரம்பணை பெரும்பணை
த் தமிழ்மதுரை காவலன் மகள் வருகவே, கற்பகா
டவியிற் கடம்பா டவிப்பொலி கயற்க ணையகி வரு
கவே. (சு)

வடம்பட்ட நின்றுணைக் கொங்கைக் குடங்கொ
ட்டு மதுரவமு துண்டு கடைவாய், வழியும்வெள்
ளருவியென நிலவுபொழி கிம்புரி மருப்பிற் பொரு
ப்பி டித்துத், தடம்பட்ட பொற்றூது சிந்துரங் கும
ப்த் தலத்தணிவ தொப்ப வப்பிச், சலராசி யேழுந்
தடக்கையின் முகந்துபின் றூனீ ரானிரப்பி,—மூட
ம்பட்ட மதியங் குசப்படை யெனக்ககன முகடு
கை தடவியுடுமீன், முத்தம் பதித்திட்ட முகபடா
மெனவெழு முகிற்படா கெற்றிசுற்றுங்,—கடம்பட்
ட சிறுகட் பெருங்கொலைய மழவிளங் களிறீன்ற பி
டி வருகவே, கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொ
லி கயற்க ணையகி வருகவே. (சு)

தேனெழுகு கஞ்சப் பொலஞ்சீ றடிக்கூட்டு செ
ம்பஞ்சி யின்குழம்பால், தெள்ளமுது திறைக்கும் ப
சுங்குழவி வெண்டிங்கள் செக்கர்மதி யாக்கை பொ
ரும்,—வானெழுகு துங்கத் தரங்கப் பெருங்கங்கை

வாணிநதி யாச்சி வபிரான், மகுடகோ டீரத் தடிச் சுவ டழுத்தியிடு மரகதக் கொம்பு கதிர்கால்,—மீ ளெழுகு மாயிரு விசும்பிற் செலுங்கடவுள் வேழத் தின் மத்த கத்து, வீற்றிருக் குஞ்சே யிழைக்கும் பசுங்கமுகு வெண்கவரி வீசும் வாசக்,—காளெழு கு தடமலர்க் கடிபொழிற் கூடல்வளர் கவுரியன் ம கள் வருகவே, கற்பகா டவியிற் கடம்பா டவிப் பொலி கயற்க ணுயகி வருகவே. (சு)

வேறு.

வடக்குங் குமக்குன் றிரண்டேந்தும் வண்டன் மகளிர் சிறுமுற்றில், வாரிக் குவித்த மணிக்குப்பை வானு றடைப்ப வழிபிழைத்து,—நடக்குங் கதிர் பொற் பரிசிலா நகுவெண் பிறைகைத் தோணியதா, நாண்மீன் பரப்புச் சிறுமிதப்பா நாப்பண் மிதப்ப நாற்கோட்டுக்,—கடக்குஞ் சரத்தின் மதநதியுங் கங் கா நதியு மெதிர்கொள்ளக், ககன வெளியுங் கற்பக ப்பூங் காடுங் கடந்து கடல்சுருங்க,—மடுக்குந்திரை த்தண் டுறைவையை வளநாட் டரசே வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வரு கவே. (சூ)

சுண்ணங் திமிர்ந்து தேனருவி துளைந்தா டறுகா ற் றும்பிபசுங், தோட்டுக் கதவந் திறப்பமலர்த் தோகை குடிபுக் கோகைசெயுங்,—தண்ணங் கமலக் கோயில்பல சமைத்த மருதத் தச்சன்முழு, தாற் றுக் கமுகு நாற்றியிடுந் தடங்கா வணப்பந் தரில்வீ க்கும்,—விண்ணம் பொதிந்த மேகபடா மிசைத் தூக் கியபன் மணிக்கொத்து, விரிந்தா லெனக்கா னிமிர்ந்துதலை விரியுங் குலைநெற் கற்றைபல,—வண் ணம் பொலியும் பண்ணைவயன் மதுரைக் காசே

வருகவே, மலயத் துவசன் பெற்ற பெரு வாழ்வே வருக வருகவே. (எ)

தகரக் குழலி னறையுநறை தருதீம் புகையுந் திசைக் களிற்றின், றடக்கை நாசிப் புழைமடுப்பத் தளருஞ் சிறுதுண் மருங்குல் பெருஞ்,—சிகரக் களபப் பொம்மன் முலைத் தெய்வ மகளீர் புடையிரட்டுஞ், செங்கைக் கவரி முகந்தெறியுஞ் சிறுகாற் கொசிந்து குடிவாங்க, — முகரக்களிவண் டடைகிடக்கு முளரிக் கொடிக்குங் கலைக்கொடிக்கு, முருந்து முறுவல் விருந்திடுபுன் மூர னெடுவெண் ணிலவெறிப்ப,—மகரக் கருங்கட் செங்களிவாய் மடமான் கன்று வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே. (அ)

தொடுக்குங் கடவுட் பழம்பாடற் ரொடையின் பயனே நறைபழுத்த, துறைத்தீந் தமிழி னெழுகு நறுஞ் சுவையே யகந்தைக் கிழங்கை யகழ்ந்,—தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமைய, விமயப் பொருப்பில் விளையாடு மிளமென் பிடியே யெறிதரங்கம்,—உடுக்கும் புவனங் கடந்து நின்ற வொருவன் றிருவுள் ளத்திலழ, கொழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே மதுகரம் வாய,—மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே, மலயத் துவசன் பெற்ற பெரு வாழ்வே வருக வருகவே. (கூ)

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற் பிடியே வருக முழுஞானப், பெருக்கே வருக பிறைமௌலிப் பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்,—விருந்தே வருக மும்முதற்கும் வித்தே வருக வித்தின்றி, விளைக்கும் பரமானந்தத்தின் விளைவே வருக பழமறையின்,—

குருந்தே வருக வருள்பழுத்த கொம்பே வருக தி
ருக்கடைக்கண், கொழித்த கருணைப் பெருவெள்
ளங் குடைவார் பிறவிப் பெரும் பிணிக்கோர்,—
மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளியே வருக
வே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக
வருகவே. (கo)

வருகைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

கண்டுபடு குதலைப் பசுங்கிளி யிவட்கொரு கலா
பேத மென்ன நின்னைக், கலைமறைகண் முறையிடுவ
கண்டோவலாதொண் கலாநிதி யெனத்தெரிந்தோ,
—வண்டுபடு தெரியற் றிருத்தாதை யார்மரபின்
வழிமுத லெனக்கு றித்தோ, வளர்சடை முடிக்கெங்
தை தண்ணறுங் கண்ணியா வைத்தது கடைப்பிடி
த்தோ,—குண்டுபடு பாற்கடல் வருந்திருச் சேடி
யொடு கூடப் பிறந்த தோர்ந்தோ, கோமாட்டி யிவ
ணின்னை வம்மெனக் கொம்மெனக் கூவிடப் பெற்
றுயுனக்,—கண்டுபடு சீரிதன்றுதலா லிவளுடனம்பு
லீயாட வாவே, ஆணிப்பொன் வில்லிபுணர் மாணி
க்கவல்லியுட னம்புலீ யாட வாவே. (க)

குலத்தோடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக் கு
டித்துச் சுவைத்து மிழ்ந்த, கோதென்று மழல்
விடங் கொப்புளிக் கின்றவிரு கோளினுச் சிட்ட
மென்றும்,—கலத்தோடு மூடிக் களங்கம் பொதிந்
திட்ட கயரோகி யென்று மொருநாள், கண்கொண்
டு பார்க்கவுங் கடவதன் றெனவிக் கடற்புலி யெடுத்
திகழவிட்,—புலத்தோடு முடுமீன் கணத்தோடு
மோடுகின் போல்வார்க்கு மாபாதகம், போக்குமிப்

தலமலது புகலில்லே காண்மிசைப் பொங்குபுனல் கற்பகக்கா,—டலைத்தோடு வையைத் துறைப்படி மடப்பிடியொடம்புலீ யாடவாவே, ஆணிப்பொன் வில்லிபுனர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (உ)

கிற்றுமதி யெனநிலவு தோற்றுபரு வத்திலொளி கிளர் நுதற் செவ்வி வவ்விக், கெண்டைத் தடங் கணி லொருவிட் டிறைஞ்சக் கிடந்தது முடைந்த முதம்விண்,—டேற்றுபுது வெண்கலே யுடுத்துமுழு மதியென வுதித்தவமை யத்து மம்மை, யொண்மு கத் தொழுகுதிரு வழகைக் கவர்ந்துகொண் டோ டினது நிற்க மற்றை,—மாற்றவ லொடுங்கேள்வர் மெளலியி லுறைந்தது மறந்துனே யழைத்த பொழு தே, மற்றிவள் பெருங்கருணே சொற்றிடக் கடவ தோ மண்முழுதும் விம்மு புயம்வைத்,—தாற்று முடி யரசுதவு மரசிளங் குமரியுட னம்புலீ யாட வாவே, ஆணிப்பொன் வில்லிபுனர் மாணிக்க வல் லியுட னமபுலீ யாடவாவே. (ஈ)

விண்டலம் பொலியப் பொலிந்திடுதி யேலுனது வெம்பணிப் பகைவிழுங்கி, விக்கிடக் கக்கிடத் தொக்கிடர்ப் படுதிவெயில் விரியுஞ் சுடர்ப் பரிதி யின்,—மண்டலம் புக்கனே யிருத்தியெனி னெள் ளொளி மழுங்கிட வழுங்கிடுதிபொன், வளர்சடை க்காட்டெந்தை வைத்திடப் பெறுதியேன் மாசு ணஞ் சுற்ற வச்சம்,—கொண்டகண் டுஞ்சா திருப் பது மருப்பொங்கு கோதையிவள் சிறடி கணின், குடர்குழம் பிடவே குமைப்பதும் பெறுதியெங் கோமாட்டி பாலடைந் தால்,—அண்டபகி ரண்ட மு மகண்டமும் பெறுதியா லம்புலீ யாட் வாவே,

ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (ச)

எண்ணில்பல புவனப் பெருந்தட்டை யூடுருவி யிவள்பெரும் புகழ்நெடு நிலா, எங்கணு நிறைந்தி டுவ தங்கதனின் மெள்ளநீ யெள்ளவு மொண்டுகொ ண்டு,—வெண்ணிலவு பொழிவது கிடைத்தனே மடு த்திவள் விழிக்கடை கொழித்த கருணை, வெள்ளந் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி விளைப்பதும் பெற்றனே கொலாம்,—மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது னிடத்தம்மை வைத்திடுஞ் சத்தி யேகா ண், மற்றொரு சுதந்தர நினக்கென விலைக்கலை மதி க்கடவு ணீயு முணர்வாய்,—அண்ணலங் களியானை யரசர்கோ மகளுட னம்புலீ யாடவாவே, ஆணிப் பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (ஞ)

முன்பும்ப ரரசுசெய் பெரும்பாவ முங்கோப மூரிமாத் தொடர் சாபமும், மும்மைத் தமிழ்ச் செ ழியன் வெப்பொடு கொடுங்கூனு மோசித்த வித்த லத்தின்,—றன்பெருந் தன்மையை யுணர்ந்திலைகொ ல் சிவராச தானியாய்ச் சீவன்முத்தித், தலமுமா ய்த் துவாதசாந் தத்தலமு மானதித் தலமித் தலத்த டைதியேல்,—மன்பெருங் குரவற் பிழைத்தபாவமு மற்றை மாமடிக ளிடுசா பமும், வளரிளம் பருவ த்து நரைதிரையு முதிர்கூனு மாற்றிடப் பெறுதி கண்டாய்,—அன்பொன் புருகக் கசிந்திடு பசுந்தே னெ டம்புலீ யாட வாவே, ஆணிப்பொன் வில்லிபு ணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (ஞ)

கும்பஞ் சுமந்தமத வெள்ளநீர் கொட்டுங் கொடு ங்களி றிடும்போர் வையான், குடிலகோ டீரத் திருந்

துகொண் டங்ஙலார் கொய்தளிர்க் கைவருடவுஞ்—,
செம்பஞ் சுறுத்தவும் பதைபதைத் தாரழற் சிகை
யெனக் கொப்பு ளிக்குஞ், சீறடிகள் கன்றிச் சிவந்
திடச் செய்வதுந் திருவுளத் தடையாது பொற்,—
றம்பஞ் சுமந்தீன்ற மானிட விலங்கின் றனிப்புதல்
வனுக்கு வட்டத், தண்குடை நிழற்றுநினே வம்மெ
ன வழைத்தன டழைத்திடி கழைக்க ரும்பொன்,—
றம்பஞ் சுடன்கொண்டமகரக் கொடிக் கொடியொ
டம்புலீ யாட வாவே, ஆணிப்பொன் வில்லிபுணர்
மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (எ)

துளிதூங்கு தெள்ளமுத வெள்ளருவி பொழியு
நின்னென்மரபு தழைய வந்து, தோன்றிடுங் கௌ
ரியர் குலக்கொழுந் தைக்கண்டு துணைவிழியு மன
மு நின்று,—களிதூங்க வளவளாய் வாழாம லுண்
ணமுது கலையொடு மிழந்து வெறுமட், கலத்திடு
புதுக்கூ ழினுக்கிரவு பூண்டொரு களங்கம்வைத்
தாயிதுவலால்,—ஒளிதூங்கு தெளிவிசும் பினினின்
னெ டொத்தவ னெருத்தன் கரத்தின் வாரி, உண்
டொதுக் கியமிச்சி னள்ளிருளி லள்ளியுண் டோடு
கின் றுயென் செய்தாய்,—அளிதூங்கு ஞிமிறெழுந்
தார்க்குங் குழற்றிருவொ டம்புலீ யாட வாவே,
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (அ)

மழைக்கொந் தளக்கோதை வம்மினென் றளவி
னீ வந்திலை யெனக்க டகலும், வாண்முகச் செவ்வி
க் குடைந் தொதுங்கினவ னெதிர் வரவொல் கியோ
ப ணிகள்கோ,—ளிழைக்குங்கொல் பின்னுடர்ந்
தெனவஞ்சி யோதாழ்த் திருந்தனன் போலு மென
யா, மித்துணையு மொருவாறு தப்புவித் தோம்வெ

குளி னினியொரு பிழைப் பில்லைகாண்,—டழைக்
கும் துகிற்கொடி முகிற்கொடி திரைத்துமேற் றலம்
வளர் நகிற்கொடி களைத், தாழ்குழலு கீவிதுதல்
வெயர்வுந் துடைத்தம்மை சமயமிது வென்ற லுவ
லிட்,—டழைக்குந் தடம்புரிசை மதுரைத் துரைப்
பெணுட னம்புலீ யாடவாவே, ஆணிப்பொன் வில்
லிபுனர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாடவாவே.

ஏடகத் தெழுதாத வேதச் சிரத்தர சிருக்கு
மிவள் சிறடிகணின், னிதயத் தடத்தும் பொலிந்த
தவர் திருவுளத் தெண்ணியன் றேக படமா,—நாட
கத் தைதொழி னடிக்கும் பிரான் றெய்வ நதியொ
டு முடித்தல் பெற்றுய், நங்கையிவ டிருவுள மகிழ்ச்
சிபெறி லிதுபோலொர் நற்றவப் பேறில்லை காண்,—
மாடகக் கடைதிரித் தின்னரம் பார்த்துகிர் வடிம்
புதை வருமந்நலார், மகரயாழ் மழலைக்கு மரவங்க
ணுண்டுகில் வழங்கக் கொழுங்கோங் குதூங்,—கா
டகப் பொற்கிழி யவிழ்க்கும துரைத்திருவொ டம்
புலீ யாட வாவே, ஆணிப்பொன் வில்லிபுனர் மா
ணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (கo)

அம்புலிப்பருவ முத்திற்று.

அம்மானைப்பருவம்.

கரைக்குங் கடாமிரு கவுட்குட முடைந்தூற்று
களிறுபெரு வயிறு தூர்ப்பக், கவளந் திரட்டிக்
கொடுப்பதென வுஞ்சூழ்ந்தொர் கலிமதிக் கலச வ
முதுக்,—கிரைக்குஞ் பெருந்தேவர் புன்கண் டுடை
த்திட வெடுத்தமுத கலசம் வெவ்வே, நீந்திநிவ
தெனவுமுழு முத்திட் டிழைத்திட்ட வெறிபந்தர்
நிரையென்னவும்,—விரைக்குந் தளிர்க்கைக் கொழு

ந்தா மரைத்துஞ்சி மீதெழுந் தார்த்த பிள்ளே, வெள் ளோதி மத்திரளி தெனவுங் கரும்பாறை மீமிசைச் செஞ்சாந் துவைத்,—தகைக்குந் திசைக்கைவெள் ளருவிவை யைத்துறைவி யம்மானே யாடி யருளே, ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம் மானே யாடி யருளே. (க)

திங்கட் கொழுந்தைக் கொழுந்துபடி படர்சடை ச் செருகுதிரு மணவாளன்மேற், செழுமணப் பந் தரி லெத்தெறியு மமுதவெண் டிரளேயிற் புரளு மறுகாற்,—பைங்கட் சுரும்பென விசும்பிற் படர்ந் தெழும் பனிமதி மிசைத்தா விடும், பருவமட மா னெனவெ னம்மனேநி னம்மனேப் படைவிழிக் கயல் பாய்ந் தெழ,—வெங்கட் கடுங்கொலைய வேழக்கு ழாமிதென மேகக் குழாத்தை முட்டி, விளையாடு மழகளிறு கடைவாய் குதட்டமுகை விண்டவம் பைந்து கோத்த,—அங்கட் கரும்பேந்து மபிடேக வல்லிதிரு வம்மானே யாடி யருளே, ஆகங் கலந்தொ ருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம்மானே யாடி யரு ளே. (உ)

கள்ளூறு கஞ்சக் கரத்தூறு சேயொளி கலப்பச் சிவப்பூறியும், கருணைப் பெருக்கூற வமுதூறு பார் வைக் கடைக்கட் கறுப்பூறியும்,—நள்ளூறு மறுவூற கற்றுமுக மதியில்வெண் ணகையூறு நிலவூறியும், நற்றாள வம்மனேயொர் சிற்குணத் தினேமூன்று நற் குணங் கதுவல் காட்ட,—உள்ளூறு களிதுளும் பக் குரவ ரிருவீரு முற்றிடு துவாத சாந்தத், தொரு பெரு வெளிக்கே விழித்துறங் குந்தொண்ட ருழு வலன் பென்பு ருகநெக்,—கள்ளூற வுள்ளே கசிந் தூறு பைந்தேற லம்மானே யாடி யருளே, ஆகங்

கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை
யாடி யருளே. (கூ)

குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி
குயின்றவம் மனை நித்திலங், கோத்தவம் மனைமுன்
செலப்பின் செலுந்தன்மை கோகனக மனையாட்டி
பாற்,—கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேக
வது கண்டுகொண் டேபு முங்குங், காய்கதிர்க் கட
வுளும் பின்றொடர்வ தேய்ப்பக் கறங்கருவி தூங்க
வோங்கு,—மலைபட்ட வாரமும் வயிரமும் பிறவுமா
மாமணித் திரளோவாரி, மறிதிரைக் கையா லெடுத்
தெறிய நாற்கோட்டு மதகளிறு பிளிறி யோடும்,—
அலைபட்ட வையைத் துறைச்சிறை யனப்பேடை
யம்மானை யாடி யருளே, ஆகங் கலந்தொருவர் பா
கம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடி யருளே. (சு)

தமரான நின்றுணைச் சேடியரி லொருசிலர் தடக்
கையி னெடுத்தாடுநின், றரளவம் மனைபிடித் தெ
திர்வீசி வீசியிட சாரிவல சாரி திரியா —நிமிராமு
னம்மனையொ ராயிர மெடுத்தெறியு நிரைநிரைய
தாய்க் ககனமேல், நிற்கின்ற தம்மைநீ பெற்றவகி
லாண்டமு நிரைத்துவைத் தது கடிப்ப,—இமிரா
வரிச்சுரும் பார்த்தெழப் பொழிலூ டெழுந்தபைந்
தாதல கெலாம், இருள்செயச் செய்துநின் சேனப
ராகமெனு மேக்கமள காபுரிக்கும்,—அமராவ திக்
குஞ்செய் மதுராபு ரித்தலைவி யம்மானை யாடி யரு
ளே, ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடி யருளே. (டு)

உயிரா யிருக்கின்ற சேடியரின் மலர்மீ துதித்தவ
ளெதிர்த்து நின்னை, டொட்டியெட் டிப்பிடித் திட்

டவம் மனைதேடி யோடியா டித்திரியநீ,—பெயரா
திருந்து வினை யாடுவது கண்டெந்தை பிறைமுடி
துளக்க முடிமேற், பெருகுசுர கங்கைதுளை பொங்
கலம் மானையப் பெண்கொடியு மாடன் மான,—
வெயரா மனம்புழுங் கிடுமமரர் தச்சனும் வியப்பச்
செயுந்த வளமா, மேடையுந்தண்டரள மாடமுந்
தெண்ணிலா வீசத் திசைக்க ளிறெலாம்,—அயிரா
வதத்தினை நிகர்க்குமது தைத்தலைவி யம்மானை யாடி
யருளே, ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடி யருளே. (சு)

வேறு.

முத்த மழுத்திய வம்மனை கைம்மலர் முளரிம னை
ங்கமழ, மொய்குழல் வண்டுகின் மைவிழி வண்டின்
முயங்கி மயங்கியிடக்,—கொத்து மணித்திர ளிற்
செயு மம்மனை குயிலின் மிழற்றியநின், குழலி னி
சைக்குரு கிப்பனி தூங்கு குறுந்துளி சிந்தியிட,—
வித்துரு மத்தி லிழைத்தவு நின்கை விரற்பவ ளத்
தளிரின், வினைதரு மொள்ளொளி திருடப் போவ
து மீள்வது மாய்த்திரிய,—அத்தன் மனத்தெழு திய
வுயி ரோவிய மாடுக வம்மனையே, அழகு தழைந்த
கல் யாண சவுந்தரி யாடுக வம்மனையே. (எ)

விளரி மிழற்றளி குமிறு குழற்கொடி வீசிய வம்
மனைபோய், விண்ணி னிறைத்தெழு வதுக னந்தி
ரு மேனிய தானவருக்,—கினில வுமிழ்பரு முத்தி
ன் கோவை யெடுத்தவர் திருமார்புக், கிடுவ கடுப்
பவு மப்பரி சேபல மணியினி யற்றியிடும்,—வள
ரொளி விம்மிய வம்மனை செல்வது வானவி லொத்
திடவும், மனனெக் குருகப் பரமா னந்த மடுத்த
திருத்தொண்டர்க்,—களிகனி யத்திரு வருள்கனி

யுங்கனி யாடுக வம்மனையே, அழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக வம்மனையே. (அ)

கைம்மல ரிற்பொலி கதிர்முத் தம்மனை கைமுத் தொளிதோயக், கண்டவர் நிற்கப் பிறர்சிலர் செங் கைக் கமலச் சுடர்கதுவச்,—செம்மணி யிற்செய் திழைத்தன வெனவுஞ் சிற்சிலர் கட்கடையின், செ வ்வியை வவ்விய பின்கரு மணியிற் செய்தன கொல் லெனவும்,—தம்மன மொப்ப வுரைப்பன மற்றைச் சமயத் தமைவுபெறூர், தத்தமி னின்று பிதற்றுவ பொருவத் தனிமுதல் யாமென்பார்க்,—கம்மனையா யவர் தம்மனை யானவ ளாடுக வம்மனையே, அழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக வம்மனையே. ()

ஒள்ளொளி மரகத மும்முழு நீலமு மொண்டர ளத்திரளும், ஒழுகொளி பொங்க விழைத்திடு மம் மனை யொருமூன் றடைவிலெடாக்,—கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவகண்ணுதல் பாற்செலகின், கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர் காமர் கருங் குயிலும்,—பிள்ளைவெ ளோதிம மும்முறை முறை யாற் பெருகிய காதலிமேற், பேச விடுப்ப கடுப்ப வணைத்தொரு பெடையோ டரசவனம்,—அள்ளல் வயற்றுயின் மதுரைத் துரைமக ளாடுக வம்மனையே, அழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக வம்மனை யே. (கo)

அம்மானைப்பருவம் முற்றிற்று.

நீராடற்பருவம்.

வளையாடு வண்கைப் பொலன்சங் கொடும் பொ ங்கு மறிதிரைச் சங்கோலிட, மதரரிக் கட்கயல் வரி

க்கய லொடும்புரள மகரந்த முண்டு வண்டின்,—கிளையாடு நின்றிருக் கேசபா சத்திஞெடு கிளர்சை வலக்கொத் தெழக், கிடையாத புதுவிருந் தெதிர் கொண்டு தத்தமிற் கேளிர்க டழீஇக் கொண்டென த்,—தளையாடு கறையடிச் சிறுகட் பெருங்கைத் தடக்களி றெடுத்து மற்றத், தவளக் களிற்றிஞெடு மூட்டவிட் டெட்டுமத தந்தியும் பந்தடித்து,—விளையாடும் வையைத் தடந்துறை குடைந்து புது வெள்ளநீ ராடி யருளே, விடைக்கொடி யவர்க்கொ ருகயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடி யருளே. (க)

நிரைபொங் கிடுஞ்செங்கை வெள்வளை கலிப்ப நகை நிலவுவிரி பவளம் வெளிற, நீலக் கருங்குவளை செங்குவளை பூப்பவற னெறிகுழற் கற்றை சரியத்,—திரைபொங்கு தண்ணந் துறைக்குடைந் தாடுவ செழுந்தரங் கக்கங் கைநுண், சிறுதிவலை யாப்பொ ங்கு மானந்த மாக்கட நிலைத்தாடு கின்ற தேய்ப்பக், கரைபொங்கு மறிதிரைக் கையாற் றடம்பணைக் கழ னியிற் கன்னியர்முலைக், களபக் குழம்பைக் கரைத் துவிட் டள்ளற் கருஞ்சேறு செஞ்சே றதாய்,—விரைபொங் கிடத்துங்க வேகவதி பொங்கு புது வெள்ளநீ ராடி யருளே, விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடி யருளே. (உ)

பண்ணுறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி பாசொளி விரிப்ப வந்தண், பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப் பருமுத்த மரக தமதாய்த்,—தண்ணுறு மல்லற் றுறைச்சிறை யனங்களி தழைக்குங் கலாமஞ் ஞையாய்ச், சகலமுங் நின்றிருச்

சொருபமென் றேலிடுஞ் சதுமறைப் பொருள்
வெளியிடக்,—கண்ணுறு குழலியர் குடக்கொங்கை
பொங்குசெங் களபமுங் கத்தூரியும், கர்ப்புரமு
மொக்கக் கரைத்தோடி வாணியுங் காளிந்தி யுங்கங்
கையாம்,—விண்ணுறு மளவளாய் விளையாடு வை
யைபுது வெள்ளநீ ராடியருளே, விடைக்கொடி ய
வர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ
ராடி யருளே. (கூ)

தூங்கு சிறை யறுகா லுறங்கு குழ னின்றுணைத்
தோழியர்கண் மேற்குங் குமம், தோயும் பனித்து
றைச் சிவிறிவீ சக்குறுந் துளியெம் மருங்கு மோ
டி,—வாங்குமலை வில்லியார் விண்ணுரு வனேந்தவர்
வனேந்திடு திகம்ப ரஞ்செவ், வண்ணமாச் செய்வ
தச் செவ்வான வண்ணொடு மஞ்சள்விளை யாட
லேய்ப்பத்,—தேங்குமலை யருவிநெடு நீத்தத்து மா
சுணத் திரள்புறஞ் சுற்றி யீர்ப்பச், சினவேழ மொ
ன்றொரு சுழிச்சுழல்வ மந்தரந் திரைக்கடன் மதித்
தன் மானும்,—வீங்குபுனல் வையைத் தடந்துறை
குடைந்துபுது வெள்ளநீ ராடி யருளே, விடைக்
கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடி யருளே. (ச)

துளிக்கும் பனித்திவலை சிதறக் குடைந்தாடு து
றையிற் றுறைத்த மிழொடும், தொன்மறை தெளிக்
குங் கலைக்கொடி யெனுந் தூணத் தோழிமூழ் கிப்
புனன்மடித்,—தொளிக்கும் பதத்துமற் றவளென
வனப்பேடை யோடிப்பிடிப்ப தம்மை, யொண்பரி
புரத்தொனியு மடநடையும் வெளவின துணர்ந்து
பின் றொடர்வதேய்ப்ப,—நெளிக்குந் தரங்கத் தட
ங்கங்கை யுடனெட்டி நித்திலப் பந்தாடவும், நிரை

மணித் திரளின் கழங்கா டவுந்தன் னெடுந்திரைக் கையெடுத்து,—விளிக்கும் பெருந்தண் டுறைக்கட வுள் வையைநெடு வெள்ளநீ ராடி யருளே, விடைக் கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடி யருளே. (சு)

வேறு.

துங்க முலைப்பொற் குடங்கொண்டு தூநீர்ந்தி விளையாடுந், துணைச்சே டியர்கண் மேற்பசும்பொற் சுண்ணமெறிய வறச்சேந்த,—அங்கண் விசும்பி னின்குழற்காட் டதுகாற் சுரும்ப ரொழுந்தார்ப்ப, தையன் றிருமே னியிலம்மை யருட்கட் சுரும்பார்த் தெழன்மானச்,—செங்க ணிளைஞர் களிக்காமத் தீமூண் டிடக்கண் டிளமஞ்ஞீர், செழுமென் குழற் கூட்ட கிற்புகையாற் றிரள்காய்க் கதலி பழுத்து நறை,—பொங்கு மதுரைப்பெருமாட்டி புதுநீ ராடி யருளுகவே, பொருனைத் துறைவன் பொற்பாவாய் புதுநீ ராடி யருளுகவே. (சூ)

இழியும் புனற்றண் டுறைமுன்றி லிதுவெம் பெரு மான் மண்சுமந்த, இடமென் றலர்வெண் கமலப் பெண் ணிசைப்பக் கசிந்துள் ளுருகியிரு,—விழியுஞ் சிவப்ப வானந்த வெள்ளம் பொழிந்து நின்றனை யால், மீண்டும்பெருக விடுத்த வற்கோர் வேலையிடு தன் மிகையன்றே,—பிழியு நறைக்கற் பகமலர்ந்த பிரச மலர்ப்பூந் துகண்மூழ்கும், பிறைக்கோட் டயி ரா வதங்கூந்தற் பிடியோ டாடத் தேனருவி,—பொழியும் பொழிற்கூ டலிற் பொலிவாய் புதுநீ ரா டி யருளுகவே, பொருனைத் துறைவன் பொற்பா வாய் புதுநீ ராடி யருளுகவே. (எ)

மறிக்குங் திரைத்தண் புனல்வையை வண்ட லிடு மண் கூடைகட்டி, வாரிச் சுமந்தோர்க் கம்மைது னை மணிப்பொற் குடத்திற் கரைத்துற்றும்,—வெ றிக்குங் குமச்சே றெக்கரிடும் விரைப்பூங் துறைமண் போலொருத்தி, வெண்பிட்டிடவு மடித்தொருவன் வேலை கொளவும் வேண்டுமெனக்,—குறிக்கு மிடத் திற் றடந்தூநீர் குடையப் பெறினக் கங்கைதிருக் கோடரத்துக் குடியிருப்புங் கூடாபோலும் பொல ன் குவட்டுப், பொறிக்குஞ் சுறவக் கொடியுயர்த்தா ய் புதுநீ ராடி யருளுகவே, பொருனைத் துறைவன் பொற்பாவாய் புதுநீ ராடி யருளுகவே. (அ)

வேறு.

சொற்கொடி யோடு மலர்க்கொடி கொய்துகொடு த்த விரைத் தொடையும், சுந்தரி தீட்டிய சிந்துர மும்மிரு துங்கக் கொங்கை களின்,—விற்கொடி கோட்டிய குங்கும முங்குடை வெள்ளங் கொள்ளை கொள, வெளியே கண்டுநின் வடிவழ கையன்வி ழி க்கு விருந்துசெய,—இற்கொடி யோடு கயற்கொடி வீர னெடுத்தகருப்புவிலும், இந்திர தனுவும் வண ங்க வணங்கு மிணைப்புரு வக்கொடிசேர்,—பொற் கொடி யிமய மடக்கொடி வையைப் புதுநீ ராடுக வே, பொருனைத் துறையொடு குமரித் துறையவள் புதுநீ ராடுகவே. (கூ)

கொள்ளைவெ ளருவி படிந்திடு மிமயக் கூந்தன் மடப் பிடிபோல், கொற்கைத் துறையிற் சிறைவிரி யப்புனல் குடையு மனப்பெடைபோல்,—தெள்ள மு தக்கட னடிவிற் றேன்றுசெ ழுங்கம லக்குயில் போல், தெய்வக் கங்கைத் திரையூ டெழுமொரு செம்பவ ளக்கொடி போல்,—கள்ளவிழ் கோதைய

ர் குழலிற் குழலிசை கற்றுப் பொற்றருவிற், களி
நற வுண்ட மடப்பெடை யோடி கலந்து மூயங்கிவ
ரிப்,—புள்ளுறை பூம்பொழின் மதுரைத் துறைமக
ள் புதுநீ ராடுகவே, பொருநைத் துறையொடி கும
ரித் துறையவள் புதுநீ ராடுகவே. (கo)

நீராடற்பருவ முற்றிற்று.

ஊ ச ற் ப ரு வ ம்.

ஓள்ளொளிய பவளக் கொழுங்கான் மிசைப்பொ
ங்கு மொழுகொளிய வயிர விட்டத், தூற்றுஞ் செ
ழுந்தண் ணிலாக்கால் விழுந்தனைய வொண்டரள
வடம்வீக் கிடும்,—அள்ளிட வழிந்துசெற் றெளிது
ளும் புங்கிரண வருணரத் நப்ப லகைபுக், காடுநின்
றேற்றமப் பரிதிமண் டலம்வள ரும்பெருஞ் சுட
ரை யேய்ப்பத்,—தெள்ளுசுவை யமுதங் கனிந்தவா
னந்தத் திரைக்கடன் மடித்து முழக்குஞ், செல்வச் செ
ருக்கர்கண் மனக்கமல நெக்கபூஞ் சேக்கையிற் ப
ழைய பாடற்,—புள்ளொளி யெழக்குடி புகுந்தசுந்
தரவல்லி பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச்
சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச
லாடி யருளே. (க)

விற்பொலிய நிலவுபொழி வெண்ணித் திலம்பூ
ண்டு விழுதுபட மழக திர்விடும், வெண்டரள வூச
லின் மிசைப்பொலிவ புண்டரிக வீட்டிற் பொலிந்
து மதுரச்,—சொற்பொலி பழம்பாடல் சொல்லுகி
ன் றவளுநின் சொருபமென் பதுமி னிலாத், தூற்
றுமதி மண்டலத் தமுதமா யம்மைநீ தோன்றுகின்
றதும்வி ரிப்ப,—எற்பொலிய வொழுகுமுழு மாணி

க்க மணிமுகப் பேறிமழை முகிறவழ் வதவ், வெறி சுடர்க் கடவுடிரு மடியிலவன்மடமக ளிருந்துவிளை யாட லேய்க்கும்,—பொற்புரிசை மதுரா புரிப்பொ லி திருப்பாவை பொன்னூச லாடியருளே, புழுகு நெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொ ன்னூச லாடியருளே. (உ)

உருகிய பசும்பொன் னசும்பவெயில் வீசுபொன் னூசலே யுதைந்தாடலும், ஒண்டளி ரடிச்சுவ டுறப் பெறு மசோகுநற வொழுகு மலர் பூத்துதிர் வது ன்,—றிருமுனுரு வங்கரந் தெந்தையார் நிற்பது தெ ரிந்திட நமக்கிது வெனுச், செஞ்சிலைக் கள்வனெரு வன்றெடை மடக்காது தெரிகணைகள் சொரிவ தே ய்ப்ப,—எரிமணிகுயின்றபொற் செய்குன்றுமழகதி றெறிப்பவெழு செஞ்சோ தியூ, டிளமதி யிமைப்ப துன் றிருமுகச் செவ்விவேட் டெழுநாத்தலைத்த வ மவன்,—புரிவது கடுக்குமது ராபுரி மடக்கிள்ளை பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர் திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி யருளே. (ஊ)

கங்கைமுடி மகிழ்நர்திரு வுளமசைந் தாடக் கலந் தாடு பொன்னூ சலக், கடவுடிரு நோக்கத்து நெக் குருகியிடைன் கடைக்கணைக் கத்து மற்றச்,—செங் கண்விடை யவர்மனமு மொக்கக் களைந்துருகு செ ய்கையவர் சித்த மேபொற், றிருவூச லாவிருந் தாடு கின்றுயெனுஞ் செய்தியை யெடுத் துரைப்ப,—அங் கணெடு நிலம்விடர் படக்கிழித் தோடுவே ரடியிற் பழுத்த பலவின், அளிபொற் சுளைக்குடக் கனியு டைந் தூற்றுதே னருவிபிலமேழு முட்டிப்,—பொ

ங்கிவழி பொழின்மதுரமதுனைநா யகிதிருப் பொன் னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வ ழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி யருளே.

சேர்க்குஞ் சுவைப்பாட லமுதொழுக வொழுகு பொற் றிருவூசல் பாடி யாடச், சிவபிரான் றிருமுடி யசைப்பமுடி மேற்பொங்கு செங்கணர வரசகிலம் வைத்,—தார்க்கும் பணுடவி யசைப்பச் சராசரமு மசைகின்ற தம்மனே யசைந், தாடலா லண்டமு மக ண்டபகி ரண்டமு மசைந்தாடு கின்ற தேய்ப்பக்,— கார்க்கொந் தளக்கோதை மடவியர் குழற்கூட்டுகம ழ்நறும் புகைவிண் மிசைக், கைபரந் தெழுவதுரு மாறிரவி மண்டலங் கைக்கொள விருட்படலம் வா ன்,—போர்க்கின்ற தொக்குமது ராபுரி மடக்கிள்ளை பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர் திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி யருளே. (நு)

தேர்க்கோல மொடுகின் றிருக்கோல மும்கண்டு சிந்தனே புழுங்குகோபத், தீயவிய மூண்டெழுந் காமானலங் கான்ற சிகையென வெழுந்து பொங்கு ங்,——தார்க்கோல வேணியர்த முள்ளமென வே பொற் றடஞ்சிலையு முருகியோடத், தண்மதி முடி த்ததும் வெள்விடைக் கொண்மணி தரித்ததும் வி ருத்த மாகக்,—கார்க்கோல நீலக் கருங்களத் தோ டொருவர் செங்களத் தேற்ற லமர, கட்கணே துரக் குங் கரும்புருவ வில்லொடொரு கைவிற் குனித்து நின்ற,—போர்க்கோல மேதிரு மணக்கோல மான பெண் பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி. யருளே. (சூ)

குழியும் பசுங்கன் முசுக்கலை வெரீஇச்சிறு குறு
ம்பலவி னெடிய பாரக், கொம்பொடி படத்துங்கு
முட்புறக் கனியின் குடங்கொண்டு நீந்தன் மடை
வாய்,—வழியுங் கொழுந்தே னுவட்டெழு தடங்கா
வின் வள்ளுகிர்க் கருவி ரற்கூன், மந்திக ளிரிந்தே
கும் விசையினில் விசைந்தெழு மரக்கோடு பாய
வயிறு,—கிழியுங் கலேத்திங்க ளெழுதருவி தூங்குவ
கிளேத்துவண் டுழுபைந் துழாய்க், கேசவன் கால்
வீச வண்டகோ ளகைமுகடு கீண்டுவெள் ளருவி
பொங்கிப், பொழியுந் திறத்தினே நிகர்க்குமது ரைத்
தலேவி பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச்
சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச
லாடி யருளே. (எ)

ஒல்குங் கொடிச்சிறு மருங்கிற் கிரங்கிமெல் லோ
திவண் டார்த் தெழப்பொன், னூசலே யுதைந்தாடு
மளவின்மலர் மகளம்மை யுள்ளடிக் கூன்பிறை தழீ
இ,—மல்குஞ் சுவட்டினே வலம்புரிக் கீற்றிதுகொல்
வாணியென்றசதி யாடி, மணிமுறுவல் கோட்டினின்
வணங்கா முடிக்கொரு வணக்கநெடு நாண்வ ழங்க
ப்,—பில்குங் குறும்பனிக் கூதிர்க் குடைந்தெனப்
பிரசநா றைம்பாற்கிளம், பேதையர்களூட்டுங் கொ
ழும்புகை மடித்துமென் பெடையொடு வரிச்சுரும்
பர்—, புல்குந் தடம்பணே யுடித்தமதுரைத்தலேவி
பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்
திருவழகினுக் கொத்தகொடி பொன்னூசலாடிய
ருளே. (அ)

கொன்செய்த செழுமணித் திருவூச லரமகளிர்
கொண்டாட வாடுந் தொறுங், குறுமுறுவ னெடுநி
ல வருந்துஞ் சகோரமாய்க் கூந்தலங் கற்றை சுற்று

ங்,—தென்செய்த மழலைச் சுரும்பராய் மங்கைகின் செங்கைப் பசுங்கிள் ளையாய்த், தேவதேவன் பொ லிவ தெவ்வுருவு மாமவன் றிருவுருவின் முறைதெ ரிப்ப,—மின்செய்த சாயலவர் மேற்றலத் தாடிய வி சைப்புனலி னருவி குடையும், வெள்ளானை குங்கு மச் செஞ்சேறு நாறமட மென்பிடியை யஞ்சி நிற்கு ம்,—பொன்செய்த மாடமலி கூடற் பெருஞ்செல் வி பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக் கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி யருளே. (கூ)

இருபதமு மென்குரற் கிண்கிணியு முறையிட் டி சைத்திடு மரிச்சி லம்பும், இறுமிறு மருங்கென் றிர ங்குமே கலையும்பொ னெழுதுசெம் பட்டு வீக்குந், —திருவிடையு முடைதார மும்மொட் டியாணமு ஞ் செங்கைப் பசுங்கிள் ளையுந்,திருமுலைத் தாளவுத் தீயமும் மங்கலத் திருநாணு மழகொ ழுக்கின்,— றருள்பொழியு மதிமுகமு முகமதியி னெடுநில வரு ம்புகுறு நகையு ஞான, ஆனந்த மாக்கடல் குடைந் தகுழை மகரத்தொ டமராடு மோட ரிக்கட்,— பொருகயலும் வடிவழகு பூத்தசுந் தரவல்லி பொ ன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி ய ருளே. (கo)

ஊசற்பருவ முற்றிற்று.

ஆ டருவம்பத்துக்குத் திருவிருத்தம் கூ.

மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்

முற்றிற்று.

சிவமயம்.

ஆதிபுரி

வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ்.



வித்துவான் - கனகசபைத்தம்பிரான்

அவர்கள்

- அருளிச்செய்தது.

இஃது

ஊ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

சென்னை

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1871.

கணபதி துணை.

ஆதிபுரி
வடிவுடையம்மை
பிள்ளைத்தமிழ்.

குணலயவிநாயகர் துதி.

பூமேவு திருமாது மணிமார்பி லுறைகின்ற
புயல்வண்ண நெடுமாயனும்
புகழ்பெற்ற கலைமாது மறைநாவி லுறைகின்ற
புத்தேளு மலர்தன்றிய
காமேவு கற்பகப் பொன்னுலகி லுறைகின்ற
காவலனு முனிவோர்களுங்
கருத்திலுறை வித்தேவல் செய்யுங் குணலயக்
களற்றின்மல ரடிபணிகுவாம்
தேமேவு கொன்றைச் செழுந்தேன் மொளிக்குந்
தியாகப்பிரான் வேணியாஞ்
செங்கொண்டல் கண்டுகண் டுள்ளங் களிக்குமொரு
தெய்வமட மயிலேயடியார்
பாமேவு மாதிபுரி வைகுகிளி யைப்புலவர்
பன்னுதிரி புரசுந்தரப்
பாவையைக் கருணைமழை பொழிவிழிக் கொண்டலைப்
பரவுதமிழ் தழைகவென்றே.

காப்புப் பருவம்.

திருமால்.

நீர்பூத்த செக்கர்ச் சடாமகுட மேல்வைத்த
நிலவினைக் கண்டுமலரு
நெடியவிழி யுற்பல மணந்தமுக மதியினெடு
நின்மலன் விழித்திங்களுஞ்
சூர்பூத்த வெண்வினை தமித்தவிழி யிரவியுஞ்
சூழ்ந்துமுன் னின்றளவளாய்த்
துன்னவெழில் கொண்டுதிரு வொற்றிமா நகரிலுறை
சுந்தரியை யினிதுகாக்க
சீர்பூத்த மறையண்ணன் மணிநா வகங்கொண்ட—
தேவிபுல் வோரிடமெலாஞ்
சென்றுவிளை யாடவய வீரரிட மெல்லாஞ்
சிறந்துவிளை யாடவிசையை
தார்பூத்த மருமத்து மலர்மாது முலகெலாஞ்
சார்ந்துவிளை யாடமுழுதுந்
தண்கட லுறங்கியு முயிர்த்தொகை யளிக்குமொரு
சக்கரச் செங்கைமுகிலே. (க)

பரமசிவன்.

அருமறைக்குமுய ரமரருக்குமய னரிதமக்குமறி யாத
பொற்றூட்டினை, யறையுமுப்பொழுது மறலுகுத்துவிழு மல
ர்பதித்தணிசெய் வார்கண்முற்காட்டியு, மமரர்கற்பகமு ம
ணிநிகிக்குலமு மமிழ்தமற்றையவும் வீசுகைப்பூத்தனி, லரு
வருப்புடைய வுடைதலைக்கலனெ யகிலமட்டவுண வார்தரச
சாத்தியு—மிருநிலத்தவரை நிறைச்சுகக்கடலி னிடைவிடுத்த
மறை வாயின்மிக்கார்த்திடு, மிருணிறக்கடலி னுயிரனைத்து

முள மிணையவுற்றவிட மாதரத்தூட்டிய, மினிமைமிக்கமதி பு
னல்பதித்தசடை யிடையழற்கணர மாலையைச்சூட்டிய, மிம
யநற்கயிலை யெழில்கொளொற்றியென வெனவளத்துறை
தியாகைப்போற்றுது—மருமலர்க்குழலு மொளிறுதற்சிலை
யு மதர்விழிக்கயலு மூசலித்தாழ்த்திய, வடிகுழைச்செவியு
மூறுவனித்திலமு மலர்முருக்கிதழு நாசியிற்றாக்கிய, மணிகு
யிற்றனியும் வளர்கழுத்தணியும் வரிபுயத்தணியும் வால்வளை
க்கூட்டமும், வனசமொத்தகர தலமூமுற்பலமென் மணிவி
ரற்செறியு மோதிரத்தீட்டமும் — விருதெடுத்தனைய வெழு
தெழுத்திலுடி மிகுவினைக்கலவை யாடுறச்சாத்திய, மிளிர்
மூலத்தரள வடமுமிட்டிடையின் விரவுபொற்கலையு மாடக
த்தாக்கிய, விலையிடற்கரிய பரிபுரப்பதமும் விழிகளிப்பவெ
தி நோவெளித்தோற்றிய, விமலவுத்தமியை வடிவுடைக்கொ
டியை விடையுயர்த்தகவு மாரியைக்காக்கவே. (உ)

விநாயகர்.

தேவரருந்துங் கலிமதியைத் தெவிட்டாதருந்த விடைவகி
ர்ந்து, செவ்வாய்க்கடையி லொருபிளவைச் சேர்த்தோர்பிள
வும் பிடித்ததுபோன்—மூவர்விழையும் பெருங்கருணை முகத்
தோர்மருப்பு மொருமருப்பு, மூளரிக்காத்து மழகெறிக்கு
முக்கட்களிற்றி னடிபணிவாங்—காவல்புரிய நெடியோனைக்
கமலத்தவிசின் முதியோனைக், காய்ந்துநிறுவும் பழையோ
னைக் காதற்குழவி யெனவளர்க்கும்—பாவமகன்ற பராபரை
யைப் பண்ணம்பணைத்த வருளாளைப், பரவும்பதும புரத்தா
ளைப் பறம்பின்மகளைப் புரக்கவே. (ஈ)

சுப்பிரமணியர்.

சிலம்புசதங்கை கலக்லெனத் தெருவில்விளையாட் டயரி
ளமைச், செவ்விகடக்கு முனந்தேவர் சேனுபதியாய்ச் சய
சூரன் — குலம்பற்பலவுஞ் சிலதினத்திற் கொன்றுகுவித்து

விண்ணுலகங், குடியேற்றியபன் னிருதடந்தோட் குமரப் பெருமாள் சரண்பணிவா—நலம்பல்லுயிர்க்கு மினிதருள நளிமாலிமயத் தடஞ்சிலம்பி, னறுநீர்ப்பசும்பொற் சுனைபூத்த நளினமலர்ச்சேக் கையிலிருந்த—வலம்புமணிநூ புரச்செ மூந்தா ளன்னப்பெடையை யெழில்கொழிக்கு, மாதிபுரிவா ழ்த்திருபுரசுந் தரவாரணங்கைப் புரக்கவே. (சு)

பிரமன்.

ஒருகாற்கமலத் தடங்கண்ணு னுந்திக்கமலத் திடைப்பிறந்த வுரிமையானு மற்றொருகா லுவணமுயர்த்தோன்றனிவிழுங்கி யருகாவிழைவினீன்றெடுத்த வாண்மையானும்பிதாமகனென் றகிலமுழுது மெடித்தேத்து மன்னக்கொடியோ னனிபுரக்க மூருகாரிதழிச்சடைமௌலி மூதல்வர்க்கன்னையாய்மகளாய் மூத்தாளாகி யிளையாளாய் முயங்குமனையாய் முழுதுலகும் பெருகாதரவி னுயிர்த்தளித்துப் பிறழாத்தெய்வக் கன்னியை யென்—பிழையுந்தொலைப்ப வாதிகர் பேணிவாழ்சுந் தரித னையே. (இ)

இந்திரன்.

மடல்விண்டவிழ்ந்த நறுவாச மலர்க்கற்பகமு மிருநிதியு மாசற்றயர்ந்த தாமணியும் வற்றுச்செருத்தற் சுரபியுநின் றிடர்விண்டவிழ்ந்துவிழவெவர்க்குமிரப்பதளிப்பக்கடைவிழி லேவித்துரக்கங் காவல்புரி யேந்தற்கடவு ணனிபுரக்க [யா வுடல்விண்டவிழ்ந்த சீரடியார்க் குயர்ந்தவீடுந் தருவாதி யோனாம்பொருளு மெப்பொருளு முலகோர்தமக்கு மெளிதி தவி—யடல்விண்டவிழ்ந்த கெடுஞ்சூலத் தமலனடியில் வீற்றி ருப்ப, வலர்ந்தவுலகுளாம் வீற்றிருக்கு மாதிபுரிசுந்தரிதனையே.

